ணன் அவளைக் குழந்தைப் பருவம் முதல் அறிந்தவனாதலின், நிதானித்துப் பார்த்து அவளே யென்று உணர்ந்து கொண்டான் என்பது பெறப்படும்.

மறை மறைவா யிருப்பது; வேதம் இரகசியமாக வைக்கக்கூடிய தாதலின் இப்பெயர் பெற்றது; இஃதிறு கெட்ட தொழிற்பெயர்; ஆகுபெயராய் வேதத்தை யுணர்த்தி நிற்று. கொடி, கொம்பு என்பன தமயந்திக்கு ஆகு பெயர்கள். மேல்-ஏழனுருபு; இதற்கு முன்னிடம் என்று பொருள் கொள்ள வேண்டும்; இங்ஙனமின்றி மேல் விழுந்து என்பதற்கு ஒருவர் மீதொருவர் வீழ்ந்து எனப் பொருள் கூறுவாருமுளர்; இச்செய்கை இவர்க் கிடையில் நடப்பது ஒழுக்கத்திற்கு விரோதமாதலின் பொருந்தாதென்க. கொம்பும் என்பதிலுள்ள உம்மை-இறந்தது தழுவிய எச்சப் பொருளது.

சேதி அரசன் முதலியோர் தமயந்தியைத்
தெரிந்து கொள்ளுதல்.

313. மங்கை விழிநீர் மறையோன் கழல்கழுவ
அங்கவன்றன் கண்ணீ ரவளுடன்மேற்—பொங்கக்
கடல்போலுங் காதலார் கையற்றார் தங்கள்
உடல்போலு மொத்தா ருயிர்.

(இ-ள்.) (மேற்கூறியபடி இருவரும் விழுந்தழும்போது) மங்கை-தமயந்தியினுடைய, விழிநீர்-கண்ணீரானது, மறையோன்-அவ் வேதியனுடைய, கழல்-பாதங்களை, கழுவ-அலம்ப, அங்கு-அவ்விடத்தில், அவன் தன்-அப்பிராமணனுடைய, கண்ணீர்-விழிநீரானது, அவள்-அத் தமயந்தியின், உடல் மேல்-தேகத்தின்மேல், பொங்க-அதிகரித்துச் சொரிய, (அவ்விருவர் செய்கைகளையும் பார்த்தவுடனே தமயந்தியை இன்னவளென உணர்ந்து) கடல் போலும்-சமுத்திரம் போல அதிகரித்த, காதலார்-ஆசையை யுடையவர்களாகிய சேதி அரசன் முதலான சுற்றத்தார்கள், கையற்றார்-துக்கத்தைத் தாங்கும் சாமார்த்திய மற்றவர்களாய், (அதாவது: தளர்ச்சி யுற்றவர்களாய்) தங்கள் உடல் உயிர்போல்-தங்களுடைய உடலையும் உயிரையும் போல, (அதாவது தங்கள் உடலும் உயிரும் ஒன்று சேர்ந்திருப்பதுபோல,) ஒத்தார்-தமயந்தியிடம் நேசம் பொருந்தி யிருந்தார்கள்; [எ-று.]

அந்தப் பிராமணன் வீமராஜனிடம் இருப்பவனென்பதைச் சேதி அரசன் முதலியோர் உணர்ந்திருந்தார்களாதலின் அவன் அவ்வாறு தமயந்தியைக் கண்டு அழுத மாத்திரத்தில் அவள் தமயந்தி யென்பதை யுணர்ந்து அவளுடைய நிலைமையைக் குறித்து

உண்டான துக்கத்தால் தளர்ந்து பின் தெளிந்து அவள் மீது அன்புடையவர்களாய் அவளோடு பொருந்தி யிருந்தார்கள். தமயந்தி பிராமணனின் பாதத்திற்கு முன்னே விழுந்தழுததால் அவளுடைய கண்ணீர் அவனுடைய பாதங்களின் மேல் விழுந்து அவற்றைக் கழுவியது. பிராமணன் முதலில் தரையில் விழுந்து பின்னர் எழுந்து தமயந்திக்கு மேல் தலை குனிந்து நின்றழுதபடியால் அவனுடைய கண்ணீர் அவள் மீது சொரிந்தது. சேதி அரசன் முதலியோர் தமயந்திக்கு நெருங்கிய சுற்றத்தாராதலின் அவர்களை "உடல் போலுங்காதலார்" என்றார் ஆசிரியர். உடல் உயிர் ஆகியவற்றின் சேர்க்கை மிகவும் அன்புடையதாதலின் அந்தப் பற்றுதலைப் போன்ற அன்பைத் தமயந்தியின் மேல் செலுத்தக்கூடிய அச்சுற்றத்தாரை "உடல் உயிர்போல் ஒத்தார்" என்றார் புலவர்.

அங்கு-அசை யெனினுமாம். தன்-அசை. "உடல் போலும் ஒத்தார் உயிர்" என்பதை, 'உடல் உயிர்போலும் ஒத்தார்' என மாற்றுக. போலும் என்பதில் உம்-அசை. முன்னே சேதி அரசி தமயந்தியைத் தன்னிடம் இருத்தி ஆதரித்து வந்தாளென்பதனால் அவ்வரசனும் அவள்போலவே தமயந்தியின் இருப்பை ஏற்று அவளை ஆதரித்து வந்தானென்பது தானே அமையும்.

பார்ப்பான் சேதிராசனுக்குத் தமயந்தியின்
நிலைமையைச் சுட்டிக் காட்டிக் கூறுதல்.

314. மாரி பொருகூந்தன் மாதராய் நீபயந்த
காரிகைதான் பட்டதுயர் கண்டாயோ—சோர்குழலும்
வேணியாய் வெண்டுகிலும் பாதியாய் வெந்துயருக்
காணியாய் நின்றா ளயர்ந்து.

(இ-ள்.) (அவ்வாறு தமயந்தியை எல்லோரும் அறிந்துகொண்டபின்பு அவ்வேதியன் சேதி அரசியை நோக்கி அவளுக்குத் தமயந்தியைச் சுட்டிக் காட்டி) மாரி-மேகத்தை, பொரு-நிகர்த்திருக்கின்ற, கூந்தல்-அளகபாரத்தையுடைய, மாதராய்-அழகு பொருந்திய பெண்ணே!, நீ பயந்த-நீ பெற்ற, காரிகை-அழகுள்ள இப்பெண்ணாகிய தமயந்தி, பட்ட-கெட்டதற்கு ஏதுவாகிய, துயர்-துன்பத்தை, கண்டாயோ-அறிந்தனையா?, (இவள் அத்துயரத்தால்) சோர்-தொங்குகின்ற, குழலும்-கூந்தலும், வேணியாய்-சடையாகி, வெண்துகிலும்-சுத்தமான வெள்ளை வஸ்திரமும், பாதியாய்-இரண்டாக அறுபட்டதில் பாதியாகி, வெம்-வெம்மையாகிய, துயருக்கு-துன்பத்திற்கு, ஆணியாய்-எல்லையாய், (அதாவது: இருப்பிடமாய்) அயர்ந்து-சோர்ந்து, நின்றாள்-நின்றனள், (என்று கூறினன்); [எ-று.]

எல்லோரும் தமயந்தியை இன்னவளென்று உணர்ந்து கொண்ட பிறகு அந்தப் பிராமணன் சேதி யரசிக்குத் தமயந்தியைச் சுட்டிக்காட்டி "மாதே! நினது குமாரத்தி அடைந்திருக்கும் துன்பமான நிலைமையைப் பார்த்தனையா? குழலும் சடையாய்த் துகிலும் பாதியாய்த் துக்கத்திற் கிடமாய் நின்றாள் இவள்" என்று கூறினான். சேதி அரசி தமயந்திக்குச் சிற்றன்னை யாதலின் அவளை அவ்விடத்தே 'நீ பயந்த காரிகை' எனவும் கூறினான். ஒருவர்க்குரிமையானவர்கள் அவரைப் பெறாதவர்களா யிருப்பினும் அவர்களைப் பெற்றோராகக் கூறுதல் மரபு.

பொருதல்-என்னுந் தொழிற்பெயர் தல்லீறு கெட்டுப் பொரு என நின்றது, பொருதல்-நிகர்த்தல்; பொரு கூந்தல் என்பதற்குப் பொருதலையுடைய கூந்தல் என்று பொருள் விரிக்கவேண்டும். மாதர்-அழகு; அதனை யுடையாள் மாதராள். காரிகை-அழகு; இது பண்பாகு பெயராய்த் தமயந்தியை உணர்த்தி நின்றது. படுதல்-கெடுதல்; சிக்குதல் எனினுமாம்; சிக்குதல்-அகப்படுதல், காண்டாயோ என்பதில் ஓ-வினாப் பொருளில் நின்றது; இரக்கப் பொருளதெனினுமாம். "குழலும் வேணியாய் துகிலும் பாதியாய் நின்றாள்" என்பதில் சினைவினைகள் முதலொடு முடிந்தன. உம்மைகள் எண்ணுப் பொருளன. "ஆணியாய்" என்பதற்கு அச்சாணிபோல் என்று பொருளுரைத்தலுமுண்டு; அச்சாணியானது தேர் முதலியவற்றைத் தாங்கிக் கொண்டிருப்பது போலத் தமயந்தியும் துன்பங்களைத் தாங்கிக் கொண்டிருப்பதால் இஃதவளுக்கு உவமையாயிற்று.

சேதி அரசி தமயந்தியை உணர்ந்த பின்
துக்கப்படுதல்.

315. தன்மக ளாவ தறியாத் தடுமாறுப்
போன்வடிவின் மேலழுது போய்வீழ்ந்தாள்—மென்மலரைக்
கோதிப்போய் மேதி குருகெழுப்புந் தண்பணைசூழ்
சேதிக்கோன் றேவி திகைத்து.

(இ-ள்.) (அவ்வாறு வேதியன் கூறிய மாத்திரத்தில்) மென்மலரை-(நீரிலிருக்கும்) மெல்லிய மலர்களை, கோதிப்போய்-கொம்புகளால் வகிர்ந்து கொண்டேபோய், மேதி-எருமைகள், குருகு-(அம்மலர்களின்மே லிருக்கும்) நாரைகளை, எழுப்பும்-எழுப்பி விடுகின்ற, தண்-குளிர்ச்சி பொருந்திய, பணை சூழ்-மருதநிலம் சூழ்ந்த, சேதி-சேதி நாட்டிற்கு, கோன்-அரசனது, தேவி-மனைவியானவள், (தமயந்தி) தன்மகளாவது-தன் புத்திரியா யிருப்பதை, அறியா-அறிந்து, தடுமாறு-(வருத்தத்தால் மனங்கலங்கி, திகைத்து மயங்கி)

போய்-(தமயந்தியின் சமீபத்தில்) சென்று, அழுது-அரற்றி, (அவளுடைய) பொன்வடிவின் மேல்-பொன்போன்ற வடிவத்தையுடைய தேகத்தின்மேல், வீழ்ந்தாள்-வீழ்ந்தாள்; [எ-று.]

சேதி அரசன் மனைவி தமயந்தியைத் தன் மகளென்று அறிந்தவுடனே அவளுடைய பரிதாப நிலைமையைக் குறித்துண்டான துக்கத்தினால் மனங்கலங்கி அழுது அவள் மேல் விழுந்தாள். "மென்மலரைக் கோதிப் போய் மேதிகுரு கெழுப்பும் தண்பணை சூழ் சேதி" என்றதனால் அந்நாடு மருதநில வளம்மிக்க தென்பது புலப்படும்.

வடிவம் தேகத்தை யுணர்த்தி நின்றது. பொன்வடிவு என்பதை உவமைத் தொகைப் புறத்துப் பிறந்த அன்மொழித்தொகையெனக் கொண்டு தமயந்திக் கேற்றினும் அமையும்.

சேதிமன்னன் தமயந்தியை அவள்
தந்தையிடம் அனுப்புதல்.

316. கந்தனையுங் கன்னியையுங் காண்டாயி னுஞ்சிறிது
தன்றுயரந் தீர்ந்து தனியாறத்—தந்தை
பதியிலே போக்கினான் சேதியர்கோன் பண்டை
விதியிலே போந்தாளை மீண்டு.

[இ-ள்.] (அதன் மேல்) சேதியர்கோன்-சேதி நாட்டாருடைய அரசன், பண்டை-பழமையான, விதியிலே-தலை விதியினாலே, (அவ்வாறு வறுமைப் பட்டுத் தன்பதிக்கு) மீண்டு-திரும்பி, போந்தாளை-வந்தவளாகிய தமயந்தியை, கந்தனையும்-குமாரனையும், கன்னியையும்-மகளையும், காண்டாயினும்-பார்த்தாவது, சிறிது-கொஞ்சம், தன்துயரம்-தன்னுடைய துக்கம், தீர்ந்து-நீங்கி, தனி-தனியாக, ஆற-மனம் ஆறும்படி, தந்தை-அவளுடைய தகப்பனது, பதியிலே-நகரத்திற்கு, போக்கினான்-போகும்படி செய்தான், (அதாவது அந்நகரத்திற்கு அனுப்பினான்); [எ-று.]

சேதி நகரத்தரசர், "இவளோ தன் நாயகனையும் பிள்ளைகளையும் பிரிந்த துக்கத்தால் மிகவும் மனங்கலங்கி யிருக்கிறாள்; ஆதலின் இவளை வீமன் பதிக்கனுப்பி விட்டால் தன் பிள்ளைகளைப் பார்த்தேனும் இவள் மனந்தேறியிருப்பாள்; வேதியனும் இவளை அழைத்துச் செல்ல வந்திருக்கின்றான்; நாம் இப்பெண்ணை அங்கனுப்பி விடுதலே தகுதி" என்று துணிந்து தமயந்தியை வேதியனுடனே அந்நகரத்திற்கு அனுப்பி விட்டான்.

கந்தன்-கருணைக் குரியவன்; கந்தம்-கருணை, அதற்குரியவன்-கந்தன்; புத்திரன் கருணையைச் செலுத்தத் தக்கவனாதலின் இப்பெயர் பெற்றான்; இனி முருகனுடைய பெயர் உவமையாகு பெயராய் இப்புத்திரனுக்கு வந்ததெனினும் அமையும். இன்னும் இதனைத் தெலுங்கு மொழி யென்றும் இசைச் சொல்லாய்த் தமிழில் வந்த தெனவும் கூறுவதுமுண்டு. சிறிது குறிப்புமுற்று; வினையெச்சமாகி வினையுரியாய் நின்றது. பதியில் உருபு மயக்கம்.

தமயந்தியைக் கண்டு வீமன் நகரத்திலுள்ளார்
அவளிடம் வந்து கூடுதல்.

317. கோயிலு மந்தப் புரமுங் கொடிநுடங்கும்
வாயிலு நின்று மயங்கியவே—தீயகொடுங்
கானுள மக்களையுங் கைவிட்டுக் காதலன்பின்
போனாள் புகுந்த பொழுது.

(இ-ள்.) (அவ்வாறு சேதி அரசன் தமயந்தியை வீமன் பதிக்கனுப்பிய பின்பு அவள் அங்குப்போய்ச் சேர்ந்தாள், அப்படி) தீய-தீமையாகிய, கொடும்-கொடுமை பொருந்திய, கான்-வனத்தை, ஆள-ஆளும்படி, (அதாவது காட்டில் நடந்து வரும்படி) மக்களையும்-பிள்ளைகளையும், கைவிட்டு-தன் பக்கத்திலிருந்து நழுவவிட்டு, (அதாவது அவர்களை வேதியனுடன் அனுப்பி விட்டு) காதலன் பின்-ஆசைக்குரியவனாகிய நாயகன் பின்னே, போனாள்-(அவனே தனக்குரியவனென்று நினைத்து) சென்றவளாகிய தமயந்தி, புகுந்த பொழுது-அந்நகரத்தில் நுழைந்த காலத்தில், (அவளைக் காணும் பொருட்டு), கோயிலும்-வீமராஜனுடைய அரண்மனையி லுள்ளவர்களும், அந்தப்புரமும்-அந்தப் புரத்திலுள்ள இராஜ ஸ்திரீகளும், கொடி நுடங்கு-துவஜங்கள் அசைந்து கொண்டிருக்கின்ற, வாயிலும்-அரண்மனை வாயிலில் உள்ளவர்களும், நின்று-அவளிடத்தே வந்து நின்று, மயங்கிய-கூடி ஒன்றாகக் கலந்தார்கள், (அதாவது எல்லோரும் தமயந்தியினிடம் வந்து கூடினார்கள்; [எ-று.]

தமயந்தி அந்நகரத்திற் புகுந்தவுடனே அவள் வரவை உணர்ந்து அவளைப் பார்க்கவேண்டுமென்ற அவாவினால் அரண்மனையி லுள்ளவர்களும் அந்தப் புரஸ்திரீகளும் அரண்மனை வாயிலிலுள்ள ஜனங்களும் அவளிடத்தே வந்து கூடினார்கள் என்பது இதன் கருத்து. முன்னரே தமயந்தியின் பிள்ளைகள் அங்குப் போய்ச் சேர்ந்ததன் மூலம் அவளுக்குற்ற துயரத்தை அந்நகரமாந்தர்கள் உணர்ந்திருந்தார்க ளாதலின் இப்பொழுது அவள் அங்கு வந்ததை அறிந்தவுடனே அவளைக் கண்டு அவளுடைய துயரத்தை விசாரித்து அவளுக்குத் தேறுதல் கூறித் தங்கள்

அன்பை வெளிப்படுத்தும் பொருட்டு அங்ஙனம் வந்து அவள் அருகே கூடினார்கள்.

கோயில், அந்தப்புரம் வாயில் என்பன இடவாகு பெயர்களாய் அவ்வவ்விடங்களிலுள்ள மனிதர்களை யுணர்த்தி நின்றன. கோயில் என்பது இராஜ மாளிகையில் அந்தப்புரம் நீங்கலாக மற்றைய விடங்களைக் குறித்து நின்றது. கோயில் அந்தப்புரம் வாயில் என்றதற் கேற்ப மயங்கிய என்ற அஃறிணை முடிபே வந்தது. மக்களையும் என்பதிலுள்ள உம்மை உயர்வு சிறப்புப் பொருளது. மற்றைய உம்மைகள் எண்ணுப் பொருளன. தமயந்தியை "மக்களை யுங்கைவிட்டுக் காதலன்பின் போனாள்" என்றது அவளின் கற்புயர்வை விளக்குதலின் பொருட்டெனக. ஏ-அசை.

தமயந்தியைக் கண்டு வீமன் நகரத்திலுள்ள மாந்தர் வருந்துதல்.

318. அழுவார் விழுவா ரயிர்ப்பா ருயிர்ப்பார்
தொழுவார் தமரெங்குஞ் சூழ்வார்—வழுவாத
காமநீ ரோதக் கடல்கிளர்ந்தா லொத்ததே
நாமவேல் வீம னகர்.

[இ-ள்.] (அவ்வாறு எல்லோரும் கூடியவுடனே) தமர்-அத் தமயந்தியின் சுற்றத்தார், அழுவார்-அழுகின்றவரும், விழுவார்-(துக்கத்தால் கீழே) விழுகின்றவரும், அயிர்ப்பார்- (தமயந்தியைப் பார்த்து இவள் தமயந்திதானோ அல்லது வேறு பெண்ணோ என்று) சந்தேகிப்பவர்களும், உயிர்ப்பார்-(தமயந்தியின் நிலைமையைப் பார்த்து) பெருமூச்சு விடுகின்றவரும், தொழுவார்-(தமயந்தியை) தொழுகின்றவரும், எங்கும் சூழ்வார்-அவளைச்சுற்றி எல்லாப் பக்கங்களிலும் சுற்றிக் கொள்பவருய், (ஆனார்கள்; அவ்வாறானதனால்) நாம-அச்சத்தை தருகின்ற, வேல்-வேலாயுதத்தையுடைய, வீமன் நகர்-வீமராஜனது பட்டணமானது, வழுவாத-நீங்காத, காமம்-விருப்பமென்னும், நீர்-ஜலம் நிறைந்த, ஓதம்-அலைகளையுடைய, கடல்-ஒரு சமுத்திரமானது, கிளர்ந்தால் ஒத்தது-பொங்கியதை நிகர்த்து ஆரவாரம் மிகுந்ததாயிற்று; [எ-று.]

தமயந்தி வந்ததை யுணர்ந்து ஜனங்கள் வந்து கூடியவுடனே அவளுடைய சுற்றத்தார்களில் சிலர் அவளைப் பார்த்து அழுவாராயினர்; சிலர் விழுவாராயினர்; சிலர் சந்தேகிப்பாராயினார்; சிலர் பெருமூச்சு விடுபவராயினார்; சிலர் தொழுவாராயினார்; சிலர் அவளைச் சுற்றிக் கொள்பவராயினார்; அவ்வாறு ஆனதனால் அந்நகரம் சமுத்திரம் பொங்கினாற் போன்று ஆரவாரம் மிகுந்ததாயிற்று. தமயந்தி

யின் இயற்கை உருவம் மாறுபட்டிருந்ததால் அவளைப் பார்த்த சிலர் இவள் தமயந்திதானோ இல்லையோ என்று சந்தேகித்தார்கள். அதனாலேயே ஆசிரியர், "அயிர்ப்பார்" என்றார்.

தொழுவார் என்பதற்குத் தமயந்தி அங்கு வந்து சேர்ந்ததற்காகத் தெய்வத்தை வணங்கினார்கள், என்று பொருள் உரைப்பினும் அமையும். இவர்களுக்குத் தமயந்தியின் மீதேற்பட்ட அன்பே இவர்களை இவ்வாறு கூடிப் பற்பல செய்கைகளை இயற்றச் செய்ததாதலின் இவர்கள் கூடியதை "காமநீரோதக்கடல் கிளர்ந்தாலொத்ததே நாமவேல் வீமனகர்" என்று கூறினார் புலவர். இனி "காமநீரோதக்கடல்" என்பதற்கு, விருப்பத்தையுடைய ஜலம் நிறைந்த அலைகள் பொருந்திய சமுத்திரம் எனவும் பொருளுரைக்கலாம். ஆனார்கள் என்பது இசை யெச்சமாக வருவித்துரைக்கப்பட்டது. அழுவார், விழுவார் முதலியவைகளை இறந்த காலம் எதிர்காலமாக மாறி, இயல்பினால் வந்த கால வழுவமைதிகளாய் அமைந்தன எனினுமமையும்; அங்ஙனங்கொள்ளுமிடத்து அவற்றை அழுதார் விழுந்தார் என்று விரிக்க வேண்டும். "கிளர்ந்தாலொத்தது" என்பதில் ஆல்-அசை; கிளர்ந்தது என்பது துவ் விகுதி குறைந்து அகரந் தொகுத்தலாய் நின்றது. ஏ-அசை. நாம்-அச்சம்; அகரச் சாரியை பெற்று நாம என நின்றது. தமர் என்பதில் தாம்-பகுதி, அர்-விகுதி, விகாரத்தால் பகுதி குறுகி நின்றது.

தமயந்தி தந்தையைக் கண்டு
வருந்துதல்.

319. தந்தையைமுன் காண்டலுமே தாமரைக்க ணீர்சோரியச்
சிந்தை கலங்கித் திகைத்தலமந்—தெந்தாயான்
பட்டதே யென்னப்போய் வீழ்ந்தாள் படைநெடுங்கண்
விட்டநீர் மேலே விழ.

(இ-ள்.) (அவ்வாறு எல்லோருங் கூடி வருந்தி நிற்கும்போது தமயந்தி தன் தந்தையைக் கண்டாள்; அங்ஙனம்) தந்தையை - தன் பிதாவை, முன்-எதிரிலே, காண்டலும்-பார்த்த மாத்திரத்தில், தாமரை-தாமரை மலர் போன்ற, கண்-கண்களில், நீர்சொரிய-நீரானது சிந்த, சிந்தைகலங்கி-மனக் கலக்கமுற்று, திகைத்து-மயங்கி, அலமந்து-துன்பமுற்றுச் சுழன்று,(அவ் வீமராஜனை நோக்கி), எந்தாய்-எனது தந்தையே, யான் பட்டதே - நான் சிக்கி வருந்திய துன்பத்தை அந்தோ என்னென்று சொல்வேன், என்ன - என்று சொல்லி, படை-வேலாயுதத்தை நிகர்த்த, நெடும்-நீண்ட, கண்-கண்கள், விட்டநீர்-சொரிந்த நீரானது, மேலே விழ - அவன் மேலே விழும்படி,

போய் - அவன் சமீபத்திற்சென்று, வீழ்ந்தாள் - அவன் அடியிலே விழுந்தாள்; [எ-று].

தமயந்தி தந்தையைக் கண்ட மாத்திரத்தில் துக்கம் சகிக்காமையால் அழுது அவனடியில் விழுந்தாளென்பது இதன் கருத்து. காண்டலும்-வினையெச்சம். எந்தை என்பது விளியுருபேற்று எந்தாய் என வந்தது. பட்டதே என்பதற்குப் பின் இசை யெச்சமாகச் சில வாக்கியங்கள் கூட்டி முடிக்கப்பட்டன. துக்கம், சந்தோஷம் முதலியவை அதிகரிக்கு மிடத்து இங்ஙனம் பயனிலையின்றிச் சில வாக்கியங்களைக் கூறி விட்டு விடுதல் தமிழ் வழக்குக்களு ளொன்று. இவ்வகையாகக் கூறுமிடங்களில் குறைவுபட்டு நின்ற வாக்கியங்களே பின்வரும் வாக்கியங்களையும் பயனிலை முதலியவற்றையும் உணர்த்தி நிற்கும். இங்ஙனம் வருவதை ஜீவக சிந்தாமணி முதலிய சங்க காவியங்களுள் மிகுதியுங் காணலாம். பட்டதே என்பதிலுள்ள ஏ-அசை.

அழுது விழ்ந்த தமயந்தியைப் பார்த்து அவளுடைய
தந்தையும் தாயும் சுற்றத்தாரும் வருந்துதல்.

320. செவ்வண்ண வாயாளுந் தேர்வேந் தனுமகளை
அவ்வண்ணங் கண்டக்கா லாற்றுவரோ—மெய்வண்ணம்
ஓய்ந்துநா நீர்போ யுலர்கின்ற தோத்ததமர்
நீந்தினார் கண்ணீரி னின்று.

(இ-ள்.) செவ்வண்ணம்-சிவந்த நிறமுடைய, வாயாளும் - வாயையுடையவளாகிய வீமன் தேவியும், தேர்வேந்தனும்-இரதத்தையுடைய அரசனாகிய வீமனும், மகளை - தம் புத்திரியாகிய தமயந்தியை, அவ்வண்ணம்-அவ்விதமாக, (பரிதாபமான நிலைமையில்) கண்டக்கால்-பார்த்தால், ஆற்றுவரோ - (அதனால் தங்களுக் கேற்படுந் துயரத்தைச்) சகிப்பார்களோ, (ஒருபோதும் சகிக்க மாட்டார்கள்; அவர்கள் மிகுதியும் துக்கத்தையடைந்தார்கள்; அதனால் அவர்களுடைய) மெய்வண்ணம் - உடம்பின் தன்மை, (அதாவது உடலின் செய்கை), ஓய்ந்து-சோர்வுற்று, நா-நாவானது, நீர்போய்-நீர்ப்பசையற்று, உலர்கின்றது-அடிக்கடி உலர்கிறதாயிற்று, ஒத்த - (அவர்களுக் கனுகூலமாகப்) பொருந்திய, தமர்-சுற்றத்தார்கள், கண்ணீரில்-தங்கள் கண்களிலிருந்தும் வடிந்த நீரிலே, நின்று-நிலைபெற்று, நீந்தினார்-நீந்தினார்கள்; [எ-று.]

அவ்வாறு தமயந்தி அழுது தந்தையின் பாதத்தில் விழுந்த மாத்திரத்திலே அத்தந்தையும் அவன் மனைவியும் அங்ஙனம் வீழ்ந்த தங்கள் புத்திரியைப் பார்த்துத் துயரஞ் சகிக்காமையால் மிகவும் வருந்தினார்கள். அதனால் அவர்களுடைய தேகஞ் செயலற்றுப் போ

யிற்று. நா வறண்டு போயிற்று. அவர்களுடைய சுற்றத்தார்களும் அவளைக் கண்டு வருந்திக் கண்ணீர் விட்டழுதுகொண்டு அந்நீரின் மீது நீந்தி நின்றார்கள் என்பதாம்.

ஆற்றுவரோ என்பதிலுள்ள ஓகாரம் எதிர்மறைப்பொருளது; ஆதலின் அதன் பின்னர் 'ஒருபோதுஞ் சகிக்கமாட்டார்கள்' என்பன முதலிய வாக்கியங்கள் இசை எச்சமாக வருவித்துரைக்கப் பட்டன. இனி ஆற்றுவரோ என்பதையே எதிர்மறை எச்சமெனக் கொண்டு இங்ஙனம் பொருள் வரைதலும் அமையும். துக்க மிகுந் தாருக்கு வெப்பம் அதிகரிக்குமாதலின் நாவறண்டு போதலியற்கை. அதனாலேயே தமயந்தியின் தாய் தந்தையர்க்கு நாவறண்ட தென்க. சுற்றத்தார்களின் கண்களில் நீர் அதிகரித்து ஒழுகித் தேக முழுவதையும் நனைத்துக் கொண்டிருந்தபடியால் அவரது அழுகையின் மிகுதி தோன்ற அவர்களைக் 'கண்ணீரில் நீந்தினர்'' என்றார் ஆசிரியர்.

தமயந்தியின் தாய் அவளை நோக்கிப் புலம்புதல்.

321. பனியிருளிற் பாழ்மண்ட பத்திலே உன்னை
நினையாது நீத்தகன்ற போது—தனியேநின்
றென்னினைந்தா யென்செய்தா யென்றுப் புலம்பினாள்
பொன்னினைத்தாய் நோக்கிப் புலர்ந்து

[இ-ள்.] (அப்படி எல்லோரும் வருந்திக் கொண்டிருக்கும் போது) தாய்-தமயந்தியின் தாயானவள், பொன்னினை-இலக்குமியை நிகர்த்த தமயந்தியை, நோக்கி-பார்த்து, புலர்ந்து-(துயரத்தால்) வாடி, பனி-அஞ்சுகின்ற, இருளில்-இருட்டில், பாழ்மண்டபத்திலே-பாழான மண்டபத்திலே, உன்னை-உன்றனை, நினையாது-சிந்தியாமல், நீத்து-விட்டு, அகன்றபோது-(நின்கணவன்) நீக்கிச் சென்றகாலத்தில், தனியே நின்று-(நீ) தனிப்பட்டு நின்று, என் நினைந்தாய்-என்ன நினைத்தாயோ!, என்செய்தாய்-என்ன செய்தனையோ?, என்று-என்று வினவி, புலம்பினாள்-கதறி அழுதாள்; [எ-று.]

மேற்கூறியவாறு எல்லோரும் கூடிப் பற்பலவிதமாக வருந்தும் போது, தமயந்தியின் தாயானவள் தனியே அவளைத் தழுவிக் கொண்டு அவள் முகத்தைநோக்கி, ''மகளே! நின் கணவன் உன்னை, அச்சமிகுந்த இருளில் அந்தக் காட்டின் பாழ்மண்டபத்தில் தனி யாக விட்டுச் சென்ற காலத்தில், நீ என்ன நினைந்தாயோ! என்ன செய்தனையோ!'' என்று புலம்பினாள் என்பது இதன் கருத்து. எல் லோரினும் தாய்மிக்க அன்புடையவளாதலின் தமயந்தி காட்டில்

தனிப்பட்டபோது மிகவும் மனம் பதைத்து வாடியிருப்பா ளென்பதை நினைத்து இவ்வாறு அவளை அடிக்கடி கேட்டழுதாளென்க.

பனி இருள்-வினைத் தொகை; 'பனி இருள்' என்பதற்கு 'பனி மிகுந்த இருள்' எனவும் பொருளுரைக்கலாம் தமயந்தியை நளன் காட்டில் நினையாமற் சென்றதாவது: தான் பிரிந்து சென்றால் அவள் ஆபத்துக்குள்ளாகி வருந்துவாளென்பதை ஆலோசியாமற் சென்றதாம் நினையாது தமயந்தியை நீத்தகன்றது நளனே யாதலின், 'நின்கணவன்' என்ற சொல் குறிப்பால் வருவித்துரைக்கப்பட்டது. நினைந்தாய், செய்தாய் என்பவற்றில் இரக்கப் பொருள் தரும் ஓகாரம் தொக்கி நின்றது. என்றே இது சொல்லெச்சம்; இதைச் செய்யா வென்னும் வாய்பாட்டு வினையெச்சம்; என்பினுமாம்.

இவ்வாறு எல்லோரும் துக்கப்பட் டழுதபின்பு ஒருவாறு மனந்தேறித் தமயந்திக்கும் தேறுதலான மொழிகளைக் கூறினார்கள். அதனால் தமயந்தி சற்று விசனம் தணிந்தவளாய்த் தன்னுடைய நாயகனைக் காணவேண்டுமென்னும் சிந்தனையுடன் அங்குத் தங்கியிருந்தாள்.

இரண்டாவது

கலிதொடர் காண்டம்

முற்றுப் பெற்றது.

மூன்றாவது

கலிநீங்கு காண்டம்.

கலிநீங்கு காண்டம் என்பதற்குக் கலிபுருஷன் நளனை விட்டு நீங்கின சரித்திரங் கூறும் பாடல்களின் கூட்டம் என்பது பொருளாம். கலிதொடர் காண்டம் என்பதற்குக் கூறியதுபோலவே இதற்கும் சொற்றொடர் கூறுக.

காப்பு.

விஷ்ணுதுதி.

1. மூலப் பழமறைக்கு முன்னேயுங் காணலாம்
காலிக்குப் பின்னேயுங் காணலாம்—மால்யானை
முந்தருளும் வேத முதலே எனவழைப்ப
வந்தருளுஞ் செந்தா மரை.

(இ-ள்.) மால்-பெரிய, யானை-கஜேந்திர னென்னும் யானையானது, அருள்-கிருபையால், முந்தும்-முதன்மை பெற்றிருக்கின்ற, வேதமுதலே-வேதத்திற் கூறப்படும் முதற்பொருளே, என-என்று; அழைப்ப-கூப்பிட, வந்து அருளும்-அப்பொழுதே வந்து கிருபை செய்து அதனைக் காப்பாற்றிய, (ஆதிமூலக் கடவுளின்) செந்தாமரை-சிவந்த தாமரை மலர் போன்ற பாதங்களை, மூலம்-எல்லாவற்றிற்கும் ஆதிகாரணமாகிய, பழமறைக்கு-பழமையான வேதத்துக்கு, முன்னேயும்-முதலில் உள்ள பிரணவத்திலும், காணலாம்-பார்க்கலாம், காலிக்கு-புவியில் ஜனித்துள்ள பசுக்கூட்டத்திற்கு, பின்னேயும்-பின்னாகவும், காணலாம்-பார்த்தல் கூடும்; [எ-று.]

கஜேந்திர னென்னும் யானையானது முதலையினிடம் அகப்பட்டுக் கொண்ட காலத்தில் "நாம் எல்லாவற்றிற்கும் முதன்மையாகிய கடவுளின் பெயரைச் சொல்லி அவனை அழைத்தால் அந்தப்பெயருடையவன் எவனோ அவனே வந்து நம்மைக் காப்பான்" என்று கருதி 'ஆதிகாரணப்பொருளே' என்று பொருள் படும் 'ஆதிமூலமே' என்ற பெயரைச்சொல்லி அக்கடவுளை அழைத்தது. அப்பொழுது விஷ்ணுவே ஓடோடியும் வந்து முதலையைச் சங்கரித்து அந்த யானையைக் காத்தருளினார். இந்த யானை பெயரிட்டவரை அழைத்ததற்கேற்ப இவரே வேதத்தின் முதற்பொருளாய் விளங்

குபவராவர். பின்னர் இவர் கிருஷ்ணாவதார காலத்தில் சீலார்த் தமாகப் பசுக்கூட்டங்களை மேய்த்துக்கொண்டு அவற்றின் பின்னே திரிந்தனர். ஆதலின் இவருடைய பாதங்களைப் "பழமறைக்கு முன்னேயுங் காணலாம் காலிக்குப் பின்னேயுங் காணலாம்" என்றார் ஆசிரியர். யாவும் வேதவொழுங்கின்படியே நடைபெறுகின்ற வாத லின் அதனை எல்லாவற்றிற்கும் முதன்மையாகக் கொண்டு "மூலப் பழமறை" என்றுங் கூறினார். வேதத்தின் முதலில் இருப்பது பிரணவம்; விஷ்ணு அந்தப் பிரணவ சொரூபியே யாதலின் யானை அவரை "வேதமுதலே" என்று அழைத்தது. இந்த வேதத்தின் முதற்பொருளே மற்றைய எல்லாவற்றிற்கும் முதற்பொருளாம். அதனால் இதற்கு ஆதிமூலம் என்னும் பெயரும் ஏற்பட்டது என்ப.

முன்னேயும் பின்னேயும் என்பவற்றிலுள்ள ஏகாரங்கள் சாரி யைகள். முன்னதிலுள்ள உம்மை - எதிரது தழுவிய எச்சப் பொருளது; பின்னதிலுள்ளது இறந்தது தழுவியதாம். "மூந் தருளும்" என்பதை "அருள் முந்தும்" என மாற்றிக் கொள்ளல் வேண்டும். விஷ்ணு அருளினால் முன்னுற்றதைக் கஜேந்திரன் சரிதையால் உணரலாம். தாமரை-பாதங்களுக்கு உவமையாகு பெயர். இதிற் கூறப்படும் சரித்திரங்கள் விஷ்ணுவைச் சார்ந் தவைகளே யாதலின் செந்தாமரை என்பது அவருடைய பாதங் களையே உணர்த்தி நின்றது. இவர் எல்லாமாய் நிற்பவராதலின் இவருடைய பாதங்களுக்குப் பெருமையுஞ் சிறுமையுங் கூறப் பட்டன; பெருமையாவது மறைக்கு முன் விளங்கியது; சிறு மையாவது காலிக்குப்பின் விளங்கியது. இச்செய்யுளால் இக்காண் டம் இனிது முடிதற்பொருட்டு ஆசிரியர் விஷ்ணுவைத் துதித்தா ரென்க.

சிவன் துதி.

2. போதுவார் நீறணிந்து பொய்யாத வைந்தெழுத்தை
ஓதுவா ருள்ள மேனவுரைப்பார்—நீதியார்
பெம்மா னமரர் பெருமா னொருமான்கை
அம்மானின் றுடு மரங்கு.

(இ-ள்) போது-உரிய காலங்களில், வார்-நண்மையாகிய, நீறு அணிந்து-விபூதியை நெற்றி முதலிய அவயவங்களில் தரித்து, பொய்யாத-பொய்த்துப்போகாத, (அதாவது மெய்ப்பலனைத் தரக் கூடிய) ஐந்தெழுத்தை-பஞ்சாக்ஷரமாகிய மந்திரத்தை, ஓதுவார்-சொல்லுகின்றவர்களுடைய, உள்ளம்-நெஞ்சகமானது, நீதியார்-சத்தியம் பொருந்தியவர்களுடைய, பெம்மான்-தலைவனும், அமரர்-

தேவர்களுடைய, பெருமான்-அரசனும், (ஆகிய) ஒரு மான்-ஒப் பற்ற மானைத்தாங்கிய, கை-கையையுடைய, அம்மான்-எவர்க்குந் தந்தை யென்னும் சிவபெருமான், நின்று-நிலைபெற்று, ஆடும்-ஆடு கின்ற, அரங்கு-நர்த்தனசாலை, என-என்று, உரைப்பார்-பெரியோர் சொல்லுவார்.

விபூதி அணிந்து பஞ்சாக்ஷரத்தை ஜெபிப்பவர்களுடைய உள்ளமே சிவபெருமான் நின்றாடும் நர்த்தனசாலை யென்பது இதன் கருத்து. இங்ஙனங் கூறியதனால் சிவபெருமான் பஞ்சாக்ஷர மந்தி ரத்தால் அவரைத் துதிப்பவர்களுடைய உள்ளத்தில் எப்பொழு தும் குடிகொண்டிருப்ப ரென்பது பெறப்படும். போது என்பதற்கு மலர் எனப் பொருள் கொண்டு அக்கடவுளுக்கு அர்ச்சிக்கப்பட்ட புஷ்பங்களையும் நீற்றையும் அணிந்து எனப்பொருள் கொள்ளினும் அமையும். நீதியார் என்பதைச் சிவனுக் கடையாகக் கொண்டு நீதி பொருந்திய கடவுள் எனப் பொருளுரைப்பினும் அமையும்; சிவபெரு மான் நீதி பொருந்தியவர்களிடத்திலும் தேவர்களிடத்திலும் தரி சனந் தந்து அவர்க்குத் தலைவராய் விளங்குவாராதலின் அவரை "நீதியார் பெம்மான் அமரர் பெருமான்" என்று கூறினார் ஆசிரியர். அம்மான் என்பதற்கு அந்தப் பெரியவன் எனப்பொருள் கோடலு மொன்று; அங்ஙனங்கொள்ளுமிடத்து மஹா என்னும் வட சொல் மான் எனத்திரிந்து அகரச் சுட்டோடு வந்ததெனக் கொள்க. இத னால் ஆசிரியர் தாம் எடுத்தகாரியம் இனிது முடிதற் பொருட்டுச் சிவனைத் துதித்தா ரென்க.

(முற்காண்டத்திற் கூறியபடி தமயந்தியின் செய்கை அங்ஙன மிருப்ப இது முதல் அவளை விட்டு நீங்கிச் சென்ற நளன் செய்கை கூறப்படுகின்றது.)

காட்டுத் தீயிற் சிக்கி வருந்திய கார்க்கோடகன்
அபயமிட் டழைக்க நளன் அவனிடஞ்
செல்லுதல்.

322. மன்னா உனக்கபய மென்னா வனத்தீயிற்
பன்னாக வேந்தன் பதைத்துருகிச்—சொன்ன
மொழிவழியே சென்றான் முரட்கலியின் வஞ்சப்
பழிவழியே செல்கின்றான் பார்த்து.

[இ-ள்.] (தமயந்தி மேற்கூறியபடி தந்தை நகரத்தில் சேர்ந் திருக்க அவளைப் பாழ்மண்டபத்தில் விட்டு நீங்கிச் சென்ற நளன் காட்டு வழியாகப் போய்க் கொண்டிருக்கும்போது) முரண்-பகை மையுடைய, கலியின் - கலிபுருஷனுடைய, வஞ்சம்-சூழ்ச்சியாகிய,

பழிவழியே-பழிபொருந்திய வழியிலே, செல்கின்றான்-அவ்வாறு நடக்கின்றவனான அந்நளன், பன்னக வேந்தன்-சர்ப்பராஜனாகிய கார்க்கோடகனென்பவன், வனத்தீயில்-காட்டுத்தீயிலே, (நடுவில் அகப்பட்டு) பதைத்து-உடல் துடித்து, உருகி-மனங்கலங்கி, (அத்தருணத்தில் தன்னை நோக்கி) மன்னா-அரசனே!, உனக்கு அபயம்-உனக்கு நான் அடைக்கலம், என்னா-என்று, சொன்ன-உரைத்த, மொழிவழியே - வார்த்தையின் வழியிலே, பார்த்து-அவனுடைய நிலைமையை நோக்கி, சென்றான்-அந்த ஸர்ப்பராஜன் இருக்குமிடத்துக்குப் போனான்.

நள்ளிரவில் நடுக்காட்டிலுள்ள மண்டபத்தில் தமயந்தி தூங்கும்போது அவளைத் தனியே விட்டுச்சென்ற நளன், வழியில் கார்க்கோடகனென்கிற நாகம் காட்டுத்தீயிலகப்பட்டு வருந்தித் தன்னை நோக்கி "அரசனே! உனக்கு நான் அடைக்கலம்" என்று கூவ, அக்குரலைச் செவியிலேற்று அக்குரல் உண்டான விடத்தை நோக்கிச் சென்றனன் என்பது இதன் கருத்து. நளன் நீதி தவறாதவனாயிருந்தும் கலி புருஷன் தன் மனதைக் கெடுத்துவிட்டபடியால் அவனுடைய மாயையிற் சிக்கி அவன் எண்ணப்படியே சூதாடி அரசிழந்து தயை தாக்ஷிண்யங்களை விட்டு மனைவியையும் பாழ்மண்டபத்திற் போட்டுச் சென்றனனாதலின் அவனை, 'கலியின் வஞ்சப் பழிவழியே செல்கின்றான்' என்றார் ஆசிரியர்; இதுபோலவே கலிதொடர் காண்டத்திலும், "பொய் மலர்ப் பூங்கோதை பிரியப் பிரியாத, செம்மையுடை மனத்தன் செங்கோலான் பொய்மை, விலக்கினானெஞ்சத்தை வேறாக நின்று, கலக்கினான் வஞ்சக்கலி" என்றும், "வஞ்சக் கலி வலியால் வயவேந்த னெஞ்சத்து, உதித்ததே வேறோருணர்வு" என்றும் "உயர்வேந்த னெஞ்சம், வலித்ததே தீக்கலியால் வந்து" என்றும் கூறினார். இப்படியெல்லாம் நளனையும் தமயந்தியையும் கலி வருத்தியதற்குக் காரணம் அவளைத் தமயந்தி மணஞ்செய்து கொள்ளவில்லை என்ற எண்ணத்தாலேற்பட்ட பகைமையே ஆதலின், அப்பகையையுடைய கலியை 'முரண்கலி' என்றும் கூறினார்; கலிதொடர் காண்டத்திலும் 'காய்கலி' எனக் கூறியிருத்தல் காண்க. இனி, நளன் அந்நாகத்தினிடம் சென்றதும் உருமாறிப் போகின்றபடியால், இவ்வாறதற்கு நளனை அங்குப் போகும்படி செய்தவன் கலிபுருஷனே என்பது தோன்ற இங்ஙனம் ஆசிரியர், "கலியின் வஞ்சப் பழிவழியே செல்கின்றான்" எனக் கூறினாரெனினும் அமையும்; இங்ஙனங் கொள்ளுமிடத்து "செல்கின்றான்" என்பதை முற்றெச்சமாகக் கொண்டு, "செல்கின்றவனாய்ச் சென்றான்" என முடிக்கவேண்டும், கார்க்கோடகன் என்பான் வாசுகி, அநந்தன், தக்ஷகன், சங்கபாலன், குளிகன், பதுமன், மகா

பதுமன், கார்க்கோடகன் என்ற எட்டு மகாநாகங்களில் ஒருவனாத லின், 'பன்னக வேந்தன்,' எனப்பட்டான்.

அ + பயம் = அபயம்; இது பயமின்மை யென்று பொருள் படும்; பயமின்மை இங்கு அதனுடைய பொருளின் மேனின்றது; 'நான் உனக்கு அபயம்' என்றதனால், 'நான் உனக்குப் பயமற்ற பொருள்' அதாவது: நின்னிடத்தே 'நிர்ப்பயமாயிருக்கக்கூடிய பொருள்' என்பது போதரும்; இதன் உட்பொருள்கள் 'என்பயத்தை நீக்கி என்னை நீ ஆதரித்து நின் சொந்தப் பொருளாக்கிக் கொள்' என்பதாம். அபயம் வடசொல், வநம், வஞ்சநம் என்ற ஆரிய மொழிகள் வனம், வஞ்சம் எனத்திரிந்து வந்தன. பன்னகம்-பந்நக மென்ற வடமொழித்திரிபு; பந்நகம் என்பது பத்நகம் எனப்பிரிந்து 'கால்களால் நடவாது' என்று காரணப் பொருள்படும்; 'கால்களின்றி மார்பால் ஊர்ந்து செல்வது' இதன் கருத்து. இனிப் 'பன்னகம்' என்பதை, 'பல்நாகம்' எனப் பிரித்து 'நச்சுப் பற்களையுடைய நாகம்' எனப் பொருள் கோடலுமொன்று. மன்னு-மன்னன் என்பதன் ஈற்ற யல் திரிந்தவிளி. என்னு-உடன்பாட்டு இறந்தகால வினையெச்சம். சொன்ன-பெயரெச்சம்; இதில் இன்-இறந்தகால விடைநிலை; முதல் தொக்கது. 'பழிவழி' வினைத்தொகை, செயப்பாட்டுவினைப்பொரு ளது; இனி இரண்டனுருபும் பயனும் தொக்க தொகையாய்ப், 'பழியையுடைய வழி' எனவும் விரிக்கப்படும்; ஏ-இரண்டும் அசை கள்; பிரிநிலைப்பொருளன எனலுமாம். செல்கின்றான் தெரிநிலை வினையாலணையும் பெயர்; பார்த்து - என்பது எண்ணி என்னும் பொருளில் நின்றது. மன்னு என்னு என வந்தது, ப்ராஸம் என்னும் சொல்லணியாம்.

காட்டுத்தீயில் அகப்பட்ட கார்க்கோடகனை
நளன் காணுதல்.

323. ஆருந் திரியா வரையிருளி னங்ஙனே
சோர்குழலை நீத்த துயரோடும்—வீரன்
திரிவானத் தீக்கானிற் செந்தீயின் வாய்ப்பட்
டெரிவானைக் கண்டா னெதிர்.

[இ-ள்.] (அங்ஙனம் போய்) ஆரும்-எவரும், திரியா - சஞ் சரிக்கக்கூடாத, அரை இருளின்-பாதி இரவில், அங்ஙனே-முற் கூறிய அந்த விதமாகவே, (அதாவது: பாதித்துணியோடு பாழ் மண்டபத்திலிருந்து வந்தபடியே), சோர்குழலை - சோர்கின்ற கூந்தலையுடைய தமயந்தியை, நீத்த-பிரிந்ததனாலேற்பட்ட, துய ரோடும்-துக்கத்துடனே, திரிவான்-அலைந்துகொண்டிருப்பவனாகிய, வீரன்-வீரபுருஷனான நளன், அத்தீக்கானில்-அந்தத் தீயவனத்தில்,

செம்தீயின் வாய்ப்பட்டு-சிவந்த அக்கினியின் நடுவில் அகப்பட்டு, எரிவானை-எரியத் தொடங்கினவனை கார்க்கோடகனை, எதிர்-நேரில், கண்டான்-பார்த்தான்; [எ-று.]

மனைவியாகிய தமயந்தியைப் பிரிந்ததனால் ஏற்பட்டு அக்கினியைப்போல மனத்தை வெதுப்பிக்கொண்டிருந்த துயரத்துடனே கொடிய கானகத்தில் அலைந்து திரிந்த வீரனாகிய நளன் மேற்கூறியபடி சென்று, காட்டுத் தீயில் அகப்பட்டு எரியுந் தருணத்திலிருந்த கார்கோடகனை எதிரில் கண்டான் என்பது இதன் கருத்து. மனத்துயரம் நெருப்பைப் போன்று சுடுவதாதலின், அதனைச் செய்யுளில் நெருப்பனையதெனக் கூறாவிடினும் உரையில் அதுபோன்றதெனக் கூறப்பட்டது. தீக்கானில் மனைவியைப் பிரிந்த துயரமாகிய நெருப்பானது மனத்திற் பற்றி எரிய அதனிடைப்பட்டு வருந்திய நளன், காட்டுத் தீயிலகப்பட்டு வருந்திய கார்க்கோடகனைக் கண்டான் என ஒரு சமத்காரக்கருத்து இதில் காண்க. அகத்தீயுட் சிக்கியவன் புறத்தீயுட்பட்டவனைக் கண்டானென்க. நளன், தன் மனதில் பற்றியெரிகின்ற துயரத்தையும் அத்தருணம் கருதாது நெருப்பிடைப் பட்டவனைக் காத்தற்கு விரைந்து சென்றான் என்றதனால் அவனுடைய அருட் பெருமை விளங்கும்; அவன் இங்ஙனம் தன் துயரைச் சகித்துப் பிறன் துயர்க் கிரங்கினமையால், வீரன் எனப்படுவானாதலின், அவனை, 'வீரன்' என்றார் புலவர்; இங்குக்குறித்தது தயாவீரமெனப்படும். 'வீரன் திரிவான்' என்றதனால், இயற்கையில் வீரனாகவுள்ளவன் விதிவசத்தால் இவ்வித நிலைமையை அடைந்தான் எனக் கவி இரங்கியதும் ஒருவகையில் தோன்றும்.

ஆர்-யார் என்பதன் மரூஉ; இதில் யாவினா எஞ்சாமைப் பொருளது; இதனீற்றும்மை-முற்றுப் பொருளது; உயர்வு சிறப்புப் பொருள தெனினுமாம். திரியா-ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சம்; இருள்-ஆகுபெயராய் அதனையுடைய இரவை யுணர்த்திற்று. இன்-ஏழாம் வேற்றுமைச் சொல்லுருபு. "ஆருந்திரியா அரையிருள்" என்றதனால் நள்ளிரவின் வன்மை விளங்கும்; இங்ஙனமே, "நீயவனமுந் துயின்று திசைதுயின்று, பேயுந்துயின்ற தாற் பேர்யாமம்" என்று கலிதொடர் காண்டத்திலும் கூறினார் ஆசிரியர். 'அங்ஙனே' எனச் சுட்டினது, முன் நடந்த கதையைக் குறித்தது; இச்சுட்டு சகித்தற்கருமையையும் விளக்கும். அங்ஙன்-அங்ஙனம் என்றதன் விகாரம்; இதனீற்றேகாரம் இரக்கப்பொருளது. சோர்குழல்-வினைத்தொகைப்புறத்துப் பிறந்த அன்மொழித்தொகை; இங்குக் கூந்தலுக்குச் சோர்வு, மயிர்க்கற்றை மிகுதியாலேற்பட்ட இயற்கைச் சோர்வும், நாடிழந்து வனம் புகுந்து

வருத்தியதால் அவிழ்ந்ததுமாம். நீத்த-பெயரெச்சம் இது காரணப்பொருளது; சங்குசுட்ட சுண்ணாம்பு, ஓடிவந்த இளைப்பு, வீழ்ந்தகாயம் என்பவற்றிற் போலக் கொள்க. துயரோடும் என்பதில் உம் இசை நிறைப் பொருளில் வந்தது. திரிவான், எரிவான் தெரிநிலை வினையாலணையும் பெயர்கள். கான்-கானகம் என்ற வடமொழித்திரிபு. செந்தீ என்பதில் தீக்குச் செம்மை இயற்கையடை; இனம்விலக்க வந்ததன்று; (நன்-பொது 50)ஆம் சூத்திரம் பார்க்க. வாய்-ஏழனுருபு, இன்-சாரியை.

நளன் அருகிற் செல்ல, வர பலத்தால்
தீ அடங்குதல்.

324. தீக்கடவுள் தந்த வரத்தைத் திருமனத்தில்
ஆக்கி யருளா லரவரசை—நோக்கி
அடைந்தா னடைதலுமே யாரழலோ னஞ்சி
யுடைந்தான் போய்ப் புக்கா னுவந்து.

[இ-ள்.] (அவ்வாறு பார்த்த நளன்) தீக்கடவுள் - அக்கினி தேவன், தந்த-தனக்குக் கொடுத்த, வரத்தை-வரத்தினை, திரு-சிறப்புற்ற, மனதில் ஆக்கி-மனதிலே கொண்டு, அருளால்-கிருபையுடனே, அரவு அரசை-அந்தச்சர்ப்ப ராஜனை, நோக்கி-(மேற்கூறியவாறு நோக்கியதோடு மேலும் அவனுடல் குளிரும்படி) பார்த்து, அடைந்தான்-அவனருகிற் போய்ச் சேர்ந்தான், அடைதலுமே-அவ்வாறு சேர்ந்த மாத்திரத்திலே, ஆர்-நிறைந்த, அழலோன்-அக்கினி வடிவமாகிய தீக்கடவுள், அஞ்சி-பயந்து, உடைந்தான்-மன வுறுதி கெட்டவனாய், உவந்து-(நளனது மனவுறுதிக்கும் அருட்டிறத்துக்கும்) மகிழ்ந்து, போய்-அவ்விடத்தைவிட்டு அப்புறஞ் சென்று, புக்கான்-சேர்ந்தான், (அதாவது, அவ்வரசனை விட்டு விலகிப்போய் விட்டான்); [எ-று.]

நளன் தன்பொருட்டுத் தமயந்தியிடம் தூது சென்றதற்கு மகிழ்ந்து அக்கினி முன்னே அவனுக்கு வரங்கொடுத்திருந்தானாதலின்; அவன், பாம்பை அக்கினியினின்றும் விலக்கிக் காக்கக் கருதிச் சென்றதற்கு மாறாகத் தான் நடக்கலாகாதெனக் கருதி இங்ஙனம் அந்நளன் சமீபத்திற் சென்ற மாத்திரத்தில், விலகி விட்டான். அக்கினி அஞ்சியதாவது : தான் கொடுத்த வரத்தைக் கருதாமல் விரோதஞ் செய்தால் பாவம் வருமென்று பயந்தான். மனத்திற்குத் திரு, ஆபத்துக் காலத்திலும் நல்ல சிந்தனை நீங்காதிருத்தல்.

ஆக்குதல்-உண்டுபண்ணல்; அஃதிங்கே கொள்ளுதற் பொருளில் நின்றது. உடைந்தான்-முற்றெச்சம்; இனி இதனை வினை

முற்றுகக் கொண்டு, "அழலோன் அஞ்சி உடைந்தான் போய்ப் புக்கான் உவந்து" என்ற தொடருக்கு, "அக்கினிதேவன் பயந்து மனந்தளர்ந்து விலகினுன்; அது கண்டு நளன் சந்தோஷித்து அருகிற்போய்ச் சேர்ந்தான்" எனப்பொருள் விரிப்பினும் அமையும். நளன் முதலில் அரவரசைச் சாதாரணமாகப் பார்த்தான், பின்னர் அக்கினியில் தகிக்கப்படும் அவன் குளிர்ச்சியடைய வேண்டுமென்று அவ்வக்கினி கொடுத்த வரத்தைச் சிந்தித்து நோக்கினுன். அடைதலும்-உம்மீற்று இறந்தகால வினையெச்சம்; இதில் து, அல்-சாரியைகள்; இதனீற்றில் வந்த ஏகாரம் விரைவுப்பொருளது. ஆரழலோன்-வினைத்தொகை; இதனை, 'தணிதற்கரிய அழலோன்' எனப் பொருள் விரிப்பின் இது பண்புத்தொகையாம்; அங்ஙனங் கொள்ளுமிடத்து, அருமை யென்னும் பண்புப் பெயர், மை யீறு கெட்டு, ஆதிநீண்டு, இடைஉகரங்கெட்டு, ஆர் என நின்றதென்க. புக்கான் என்பதில், 'புகு' என்ற குறிவினைப்பகுதி ஒற்றிரட்டி இறந்த காலங் காட்டிற்று. இனி 'தீக்கடவுள் தந்த வரத்தை' என்பதிலுள்ள அத்துச்சாரியையைத்தள்ளி இதனை, 'வரந்தந்த தீக் கடவுளை' எனமாற்றி, "தீக்கடவுள் தந்த வரத்தைத் திருமனத்தில் ஆக்கி அருளால் அரவரசை நோக்கி அடைந்தான்" என்ற தொடருக்கு, "முன்னே தனக்கு வரமளித்த அக்கினிதேவனை மனத்தில் சிந்தித்து அவனருளால் சர்ப்பராஜனிடம் சேர்ந்தான்" எனப் பொருள் கோடலுமொன்று. இங்ஙனங்கொண்டு மற்றவற்றைச் சேர்த்து முடிக்கலாம். "முன்னொரு காலத்தில் தனக்கு வரங்கொடுத்தருளிய பழையசிநேகத்தைப் பாராட்டி நளன் அக்கினியின் சமீபத்திற்சேர, அத் தீக்கடவுள், தனக்கவன் தூது சென்றது குறித்தும், தான் அவனுக்கு வரங்கொடுத்தது கருதியும் அவன் விஷயத்தில் தாக்ஷிணியங்கொண்டு தணிந்தான்" என்பது இவ்வுரையிற் பொதிந்துள்ள தெளிந்த கருத்தாம்.

இங்குக் கூறியபடி நளன் அருகில் வந்தவுடன் தான் தணிந்து போவதாக அக்கினி, வரங்கொடுத்தா னென்பது சரித்திரத்தில் கூறப்படவில்லை;

"அங்கி யமுத நீ ரம்பூ வணியாடை
யெங்குநீ வேண்டினைமற் றவ்விடத்தே—சங்கையறப்
பெற்று யெனவருண னுகண்ட லன்தருமன்
மற்றேனு மீந்தார் வரம்."

என்று கூறிய சுயம்வரகாண்டப் பாடலால், நளன் வேண்டியபோது நெருப்பைப் பெறும்படி அக்கினி தேவன் வரங்கொடுத்தா னென்பது மட்டுமே விளங்குகிறது. பாரதத்திலும் நளன் நினைத்தபோது நெருப்பைப் பெறும்படியாகவும் ஜ்யோதிர்லோகம் அடையும்படி

யாகவும் இருவரங்களை அக்கினி அவனுக்குக் கொடுத்தனனென்னும் விவரமே கூறியுளது. நைடதத்திலும்,

"மிடல்கெழு மேழக மேற்கோளு மேலோன்
உடைதிரை வேலையி னின்னமு தோப்ப
மடிதலில் வெங்கன லின்றியும் வாளா
அடிசி லடுந்தொழில் விஞ்சை யளித்தான்"

என்று அந்நூலாசிரியர், "நளனுக்கு நெருப்பின்றிச் சமையல் செய்யும் வித்தையினை அக்கினி கொடுத்தான் என்னும் விவரத்தை விளக்கி யிருக்கின்றார். இவை இங்ஙன மிருப்பினும் இந் நூலாசிரியர் இங்கு, "தீக்கடவுள் தந்த வரத்தைத் திருமனத்தி லாக்கியடைந்தான் அடைதலுமே, ஆரழலோன் அஞ்சி யுடைந்தான்" என்றதனாலும், நைடத நூலாசிரியர், "தழலருள் வரத்தால், எழுவினீள் கரத்தா லெடுத்தழற் புறத்திட்டான்" என்று பின்னர் கூறியிருத்தலானும், அக்கினி மேற்கூறியபடி வரங்கொடுத்த காலத்தில், நளன் அருகில் வந்தவுடன் தான் தணிவதாகவும் வரமளித்தான் என்றும்; இவ்விஷயத்தை இவ்வாசிரியர்கள் முன்னே சுருங்கச் சொல்லல் என்னும் அழகு பற்றி சுருக்கிக் கூறிப் பின்னர், 'விளங்க வைத்தல்' என்னும் அழகு பற்றி விளங்கவைத்தார்களென்றும் கொள்ளவேண்டும். இனி இதனை, 'உரைத்து மென்றல்' என்ற தந்திர வுத்தியின் பாற்படுத்தி, முன்னே சொல்ல வேண்டிய விடத்துச் சொல்லாமல் சுருக்கி இவ்விடத்திற் சொல்லி இதனால் அவ்விஷயத்தை ஆசிரியர் பெறவைத்தாரெனக் கோடலு மொன்று; இங்ஙனம் ஆசிரியர்கள் நூல்களில் கூறும் மரபுண்டு. இஃதன்றியும், "அங்கியமுதநீர்." என்ற பாடலில், 'நீ வேண்டிய விடத்தில் நெருப்பைப் பெறுவாய் என்று வரமளித்தான்" என்றதில் அருத்தாபத்தியால், "நீ வேண்டாத விடத்து நெருப்பு நீங்கப் பெறுவாய்" என்பது தானே அமையும். ஆதலின், இதுபற்றியும் அக்கினி வேண்டாதபோது தணிவதாகவும் வரங்கொடுத்தானென்பது அமையும். பாரதத்திலும் நைடதத்திலும் உள்ளவற்றிற்கும் இக்கருத்தே.

கார்க்கோடகன் தன்னைக் காக்கும்படி நளனை வேண்டல்.

325. வேத முனியொருவன் சாபத்தால் வெங்கானில்
ஆதபத்தின் வாய்பட் டழிகின்றேன்—காதலால்
வந்தெடுத்துக் காவென்றான் மாலை மணிவண்டு
சந்தெடுத்த தோளானைத் தான்.

(இ-ள்.) (அவ்வாறு நளன் பார்த்ததும் அக்கினி தேவன் நீங்கின தருணத்தில் அந்த நாகராஜன்) மாலை-மலர்மாலையிலே,

மணி-அழகிய, வண்டு-வண்டுகள், சந்து-இசையை, எடுத்த-உயர்த்திப் பாடிய, தோளானை-புயங்களையுடைய நளனை, (நோக்கி) ஒரு வேத முனிவன்-வேதத்தை யுணர்ந்த ஒரு முனிவன், (இட்ட) சாபத்தால்-சாபத்தினால், வெம்-வெவ்விய, கானில்-இக்காட்டில், ஆதபத்தின் - அக்கினியின், வாய்ப்பட்டு - இடத்திலகப்பட்டு, அழிகின்றேன்-நான் கெடுகின்றேன், (ஆதலால் நீ) காதலால்-அன்போடு, வந்து-என் சமீபத்தில் வந்து, எடுத்து-என்னைத் தூக்கி, கா என்றான்-காப்பாற்றக் கடவாயாக என்று சொன்னான்; [எ-று.]

நளனைச் சமீபத்திற் கண்டவுடனே கார்க்கோடகன், தனக்குற்றதைக்கூறித் தன்னைக் காப்பாற்றும்படி வேண்டினான். அந்தச் சர்ப்பராஜனுக்கு ஒரு முனிவனிட்ட சாபத்தால் இத்தீங்கு நேர்ந்தது.

சாபம்-பெரியோர் சீற்றமொழி. வெம்-மையீறுகெட்ட பண்புப்பெயர்; பெயரெச்சமுமாம். ஆதபம்-வடசொல்; ஆதபம் என்பதற்குச் சூடு என்பது நேர் பொருள்; இஃதாகு பெயராய் இதனையுடைய நெருப்பை யுணர்த்தி நின்றது. தோளில் மாலை அணியப்பட்டிருக்கும்; அதில் தேனையுண்ணற்கு வண்டுசேர்ந்து பாடும்; 'வண்டு சந்தெடுத்ததோள்' என்பதிலுள்ள, 'எடுத்த' என்னும் பெயரெச்சம் காரணப் பொருளது; 'சந்தெடுத்ததோள்' என்பது, 'சங்கு சுட்ட சுண்ணாம்பு' என்பதுபோல அமைந்தது. தான்-அசை. "மாதர் முலைக்குவட்டின் சந்தெடுத்த தோளான்" எனவும் பாடபேதமுண்டு.

தன்னை அக்கினியின்று மெடுத்து வெளியில்
விடும்படி கார்க்கோடகன் நளனை வேண்டல்.

326. சீரியாய் நீயெடுப்பத் தீமை கெடுகின்றேன்
கூறுந் தழலவித்துக் கொண்டுபோய்ப்—பாரில்
விடுகென்றான் மற்றந்த வெந்தழலால் வெம்மைப்
படுகின்றான் வேல்வேந்தைப் பார்த்து.

(இ-ள்) (மேலும்) அந்த வெந்தழலால்-அந்த வெவ்விதாகிய அக்கினியினால், வெம்மைப்படுகின்றான் - வெப்பத்தை யடைந்து கொண்டிருக்கின்றவனான கார்க்கோடகன், வேல்-வேலாயுதத்தைத் தரித்த, வேந்தை-நளமகாராஜனை, பார்த்து-நோக்கி, சீரியாய்-சிறப்புள்ளவனே!, நீ யெடுப்ப-நீ என்னை இந்த அக்கினி யின்றும், எடுப்பதனால், தீமை கெடுகின்றேன்-ஏற்பட்ட துன்பம் நீங்கப்பெறுவேன், (ஆதலால்) உறும் - மிகுதியாகின்ற, தழல் - நெருப்பை, அவித்து-தணித்து, கொண்டு போய்-என்னை எடுத்துக் கொண்டு

போய், பாரில் - வெற்றிடமாகிய வேறு பூமியில், விடுக என்றான் - விடுவாயாகவென்று சொல்லி வேண்டினான்; [எ-று.]

முன்னே நளனை நோக்கி என்னைக் காப்பாயாக என்ற நாகராஜன் மீண்டும் நீ அக்கினியினின்றும் எடுப்பாயானால் என்னுடைய துன்பம் நீங்கும்; ஆதலால் நீ இந்த அக்கினியை அவித்து என்னை இவ்விடத்தினின்றும் எடுத்துக் கொண்டுபோய் வேற்று இடத்தில் விடுவாயாக என்று கூறினான் என்பது இதன் கருத்து. "நீ யெடுப் பத் தீமை கெடுகின்றேன்" என்றது இரட்டுற மொழிதல் என்னும் யுக்தியால் எனது கொடிய சாபம் நீங்கப் பெறுவேன் என்ற பொருளையும், இக்காட்டுத் தழலால் உண்டான தீமை நீங்கப் பெறுவேன் என்னும் பொருளையும் ஒருங்கே உணர்த்தி நின்றது; நாகராஜன் ஒரு முனிவனிட்ட சாபத்தால் இத்தீமைக் குள்ளாயினான் என்பது இந்நூல் 325-ம் செய்யுளால் உணரப்படும்.

கெடுகின்றேன்-இது தெளிவினால் எதிர்காலம் நிகழ்காலமாக மாறி வந்த காலவழுவமைதி. சீரியாய் - சீரியான் என்பதன் ஈறு திரிந்தவிளி; இதில் இ-சாரியை. 'தீமைகெடுகின்றேன்' என்றதில் தீமை என்ற அஃறிணைச் சொல் 'கெடுகின்றேன்' என்ற உயர் திணைத் தன்மை ஒருமை முற்றைக் கொண்டது; இது தொடர்பு பற்றிச் சார்த்தி முடிக்கப் பட்டதனாலாகிய திணை வழுவமைதி; "உயர்திணை தொடர்ந்த பொருள் முதலாறும் அதனொடு சார்த்தி னத்திணை முடிபின" (நன்-பொ-26) என்பது விதி. கூறும் என்ற தெரிநிலைப் பெயரெச்சத்தில் மிகுதியை யுணர்த்தும் உரிச்சொல் லாகிய கூர் - பகுதி, விடுகென்றான் - என்பதில் அகரம் தொக்கது. அந்த-அகரச் சுட்டின் மரூஉ. படுகின்றான் - வினையாலணையும் பெயர். வேல்-வெல்வது; இது காரணக்குறி. வேந்து - உயர்திணைப் பொருள் தரும் அஃறிணைச் சொல்; அரசு, அமைச்சு, தூது, ஒற்று என்பனவும் இது போன்றனவே யாம். பார்த்து-வினையெச்சம்.

நளன் கார்க்கோடகனை எடுத்துச்
செல்லுதல்.

327. என்றுரைத்த வவ்வளவி லேழுலகுஞ் சூழ்கடலும்
குன்றுஞ் சுமந்த குலப்புயத்தான்—வென்றி
அரவரசைக் கோண்டகன்று ரணியந் தன்னில்
இரவரசை வென்று னெடுத்து.

(இ-ள்.) என்று உரைத்த - என்று கார்க்கோடகன் சொன்ன, அளவில்-அந்தக் காலத்தில், ஏழு உலகும்-சப்த தீவுகளையும், சூழ்-அவற்றைச் சூழ்ந்த, கடலும்-சப்த சமுத்திரங்களையும், குன்றும்-மலைகளையும், சுமந்த-தாங்கிய, குலம்-மேன்மையாகிய, புயத்தான்-

புஜங்களையுடையவனும், இரவு அரசை - இராத்திரிக்கு அரசனான சந்திரனை, வென்றான் - (தன் முக காந்தியினாலும், எல்லோரையும் மகிழ்வித்தலாலும்) ஜெயித்தவனுமான நளன், வென்றி-வெற்றி பெற்ற, அரவு அரசை-அந்த சர்ப்பராஜனை, எடுத்துக்கொண்டு தூக்கிக்கொண்டு, ஆரணியந்தன்னில்-அந்தக் காட்டில், அகன்றான்-அவ்விடத்தைவிட்டு நீங்கிப்போயினான்; [எ-று.]

அவ்வளவில் எடுத்துக் கொண்டு அகன்றான் என இயைக்க. நளன் சப்த தீவுகளையும் கடல்களையும் மலைகளையும் தோள்களால் சுமத்தலாவது அவற்றிலுள்ள உயிர்களை யெல்லாம் தன்தோள் வல்லமையால் பகைகடிந்து பாது காத்தலாம்; இங்ஙனமே "பன்ன கஞ்சுமந்த வைப்போர் தோளினிற் பரிக்குமன்னர் மன்னன்" என்று நைடத ஆசிரியருங் கூறினார். சப்த தீவுகளாவன—ஜம்பு, பிலக்ஷம், சால்மலி குசம், கிரௌஞ்சம், சாகம், புஷ்கரம், என் பனவாம்; இவை முறையே, உப்பு, கருப்பஞ்சாறு, கள், நெய், தயிர், பால், சுத்த ஜலம் என்பவற்றின் மயமான ஏழு கடல்களாற் சூழப்பட்டன என்று புராணங் கூறும். ஏழ் என்பதைக் குன்றுக் கும் கூட்டலாம்; ஏழு பர்வதங்களாவன: கைலாசம், இமயம், மந்தரம், விந்தியம், நிஷதம், ஏமகூடம், நீலகிரி என்பனவாம்; இவைகள் சப்தகுல பர்வதங்க ளென்றுஞ் சிறப்பித்துக் கூறப்படும். "ஏழுலகம் சூழ்கடலும் குன்றுஞ் சுமந்த குலப்புயத்தான்" என் பது நளன் உலகமுழுவதிலும் தனியரசாட்சி செலுத்திய சக்கர வர்த்தி என்பதை விளக்கும். குலம் என்பது இலக்கணையால் உயர் வுக்கு ஆயிற்று. சந்திரன் இராக்காலத்தில் மிகுந்து பிரகாசிப்பவ னாதலால் "இரவரசு" எனப்பட்டான். நளன் துன்பங்களை யடைந்த அக்காலத்தும் சந்திரனுக்கு மேற்பட்ட அவனுடைய முகதேஜஸானது குறையாமல் விளங்கிற்று; அது குறித்தே ஆசிரியர் அவனைச் 'சந்திரனை வென்றான்' என்றுரைத்தனர்.

லோகம், புஜம், இராஜா, அரண்யம், ராத்ரி என்ற ஆரிய மொழிகள் உலகு, புயம், அரசு, ஆரணியம், இரா என விகாரப் பட்டு வந்தன. வென்றி-தொழிற் பெயர்; வெல்-பகுதி, றி-விகுதி, லகரம் னகரமானது-சந்தி விகாரம். அகன்றான் என்ற முற்றில் அகல்-பகுதி. ஆரணியந்தன்னில் என்பதில் தன்-சாரியை. வென் றான்-வினையாலணையும் பெயர்.

பின்னரும் கார்க்கோடகன் நளனை
வேண்டியது.

328. மண்ணின்மீ தென்றனைநின் வன்றாளா லொன்றுமுதல்
எண்ணித் தசவென் றிடுகென்றான்—நண்ணிப்போர்

மாவலான் செய்த உதவிக்கு மாறாக
ஏவலாற் றீங்கிழைப்பே னென்று.

[இ-ள்.] (அவ்வாறு நளன் கார்க்கோடகனை எடுத்துச் சென்ற போது அவன்) போர்-யுத்தத்தில், மா-யானையைப்போல, வலான்-வல்லமை யுடையவனான நளன், நண்ணி-சமீபத்தில் சேர்ந்து, (என்னிடத்தே அன்புகொண்டு) செய்த-இயற்றிய, உதவிக்கு-உபகாரத்திற்கு, மாறாக-எதிராக, ஏவலால்-அவனுடைய கட்டளையினால், தீங்கு-தீமையை, இழைப்பேன்-அவனுக்குச் செய்வேன், என்று-என்று நினைத்து, (நளனை நோக்கி), நின்-உன்னுடைய, வல் தாளால்-வலிமையான பாதங்களினால், (அதாவது அடிகளை எடுத்து வைப்பதனால்), ஒன்று முதல்-ஒன்று முதலாக, எண்ணி-அடி எண்ணிச் சொல்லி, (பத்தாவது அடிவந்தவுடன்) தசஎன்று-தசஎன்று சொல்லி, மண்ணின் மீது-பூமியின் மேல், என்தனை-என்னை, இடுக என்றான் - போடுவாயாக வென்று வேண்டினான்; [எ-று.]

நளனால் காட்டுத் தீயினின்றும் எடுத்துக் காப்பாற்றப்பட்ட கார்க்கோடகன், அவனுக்குப் பிரதிஉபகாரஞ் செய்ய விரும்பி, "இந் நளனோ தன் இயல்பு குன்றி எங்கேனும் தங்கி ஜீவிக்கும் பொருட்டுப் பரதேசி போலச் செல்கின்றானாதலின், இவன் இந்த இராஜ வடிவத்தோடு சென்றால் பகையரசரால் இவனுக்குத் தீங்குண்டாகும்; மேலும் இவனை எவரும் அடிமை யாளாகச் சேர்க்கமாட்டார்கள்; அதனால் இவனுடைய ஜீவனத்துக்குங் கஷ்டமுண்டாகும்; ஆதலின் இவனைக் கடித்து நம்முடைய விஷத்தால் இவனுடைய உருவத்தை மாற்றிவிட்டால் அது இவனுக்கு இக் காலத்தில் எதற்கும் அநுகூலஞ் செய்வதாயிருக்கும்; பின்னர் இவனுக்கு இக் கஷ்டகாலம் நீங்கும்போது வேண்டுமானால் இப்போதேற்படும் விகாரரூபத்தை மாற்றி விடலாம்" என்று கருதினான். அவன் எண்ணப்படியே அது ஒரு வகையில் நன்மையான காரியமாயிருந்தாலும் மற்றொரு வகையில் தீங்குடையது போல் தோற்றுவதால் அதை ஒருவகைத் தந்திரத்தால் நளனுடைய சம்மதத்தைப் பெற்றுக்கொண்டு செய்தால் தீங்காகாதென்று அக் கார்க்கோடகன் கருதினான். அதனாலேயே அவன் நளனிடத்தில் "ஒன்றுமுதல் எண்ணித் தசவென்று இடுக" என்றான். 'தச' என்பது ஆரியத்தில் பத்து என்னும் எண்ணுப் பெயரும், 'கடி' என்னும் பொருளைத் தரும் ஏவல் ஒருமை வினைச் சொல்லுமாகும். ஆதலின் நளன் தச என்று சொன்னமாத்திரத்தில் கடி என்னும் பொருளை அநுசரித்து அவன் ஏவலைப் பெற்றதாகப் பாவித்து அவனைக் கடிக்கலாமென்பது கார்க்கோடகன் கருத்து. இவ்விரு

வருக்கும் கிர்வாண பாஷையிலேயே சம்பாஷணை நடந்ததாதலின் அப்பாஷையில் உள்ளபடியே ஒன்று முதல் பத்துவரையில் உள்ள எண்களை ஏகம், த்வி, திரி, சது, பஞ்ச, ஷட், ஸப்த, அஷ்ட, நவ, தச என்று முறையே சொல்லி அடி எண்ணித் தச என்பது வந்தவுடன் தன்னைக் கீழே போட்டுவிடும்படி கார்க்கோடகன் வேண்டினனென்க. நளன் பாதத்திற்கு வன்மையாவது அதில் விழுந்து அடைக்கலம் புகுந்தவர்களைப் பாதுகாக்குந் திறனும்.

'போர் மாவலான்' என்பதற்கு,போர்க்குரிய குதிரையை அல்லது யானையை நடத்துதலில் வல்லவனென்றும், போர்க்குரிய குதிரையை அல்லது யானையையுடையவல்லமைபெற்றவன் என்றும் வேறுவகைப் பொருள்களும் உரைக்கலாம்; நளன் அச்வஹ்ருதயம் என்கிற குதிரை வித்தையிலும் தேர்ந்தவனாதலின் அவனைக் குதிரையை நடத்துதலில் வல்லவன் என்றலே மிகவுஞ் சிறப்புடைத்து. 'மா' என்ற மிருகப் பொதுபெயர் இங்குச் சிறப்பினால் யானையையும் குதிரையையும் உணர்த்திநின்றது. 'யானையுடைய படை காண்டல் முன் இனிதே' "படைதனக் கினியானை வனப்பாகும்" என்றபடி யானை சேனைக்குச் சிறந்து நிற்றலால் அதனைப் 'போர்மா' என்றும், குதிரை நால் வகைச் சேனைகளுள்ளும் தான் ஓர் அங்கமாவதன்றி மற்றோர் அங்கமாகிய தேரினையும் நடத்தத்தக்க கருவியாயும் இருத்தலால் அதனையும் "போர்மா" என்றும் ஆசிரியர் கூறினர். என்தனை என்பதில் தன்-சாரியை. நண்ணி-இரட்டுற மொழிதல். போர்-பொரு என்ற முதனிலை திரிந்த தொழிற் பெயர். உதவி-இகரவிகுதி பெற்ற தொழிற் பெயர்; மாறு-எதிர்; அதாவது: ஈடு. தீங்கு-குவ்விகுதி பெற்ற பண்புப்பெயர்; 'இடுகென்றான்' என்பதில் அகரந்தொக்கது தொகுத்தல் விகாரம்.

சர்ப்ப ராஜன் சொல்லியபடியே
நளன் தசவென்று சொல்லுதலும்
அவன் நளனைக் கடித்தலும்.

329. ஆங்கவன்று னவ்வா றுரைப்ப வதுகேட்டுத்
தீங்கலியாற் செற்ற திருமனத்தான்—பூங்கழலை
மண்ணின்மேல் வைத்துத் தசவென்று வாய்மையால்
எண்ணினான் வைத்தான் எயிறு.

(இ-ள்.) ஆங்கு-அவ்விடத்தில், அவன்-அந்தக் கார்க்கோடகன், அவ்வாறு-அவ்விதமாக, உரைப்ப-சொல்ல, அதுகேட்டு-அந்த வார்த்தையைக் கேட்டு, (அதன்படியே செய்யத் துணிந்தவனாய்) தீகலியால்-தீங்குள்ள கலிபுருஷனால், செற்ற-வெல்லப்பட்ட, திருசிறப்புள்ள, மனத்தான்-மனத்தையுடையவனாகிய நளன், பூங்

அழகிய தனது பாதங்களை, மண்ணின்மேல் வைத்து-பூமியின்மேல் வைத்து அடி அளந்து, வாய்மையால்-வாயினாலே, தச என்று எண்ணினான்-தச என்று கணக்கிட்டுச் சொன்னான்; (அவ்வாறு தசவென்று சொன்னவுடனே, கார்கோடகன்) எயிறு-தன்னுடைய பற்களை, வைத்தான்-நளனுடைய தேகத்தில் சேர்த்தான் (அதாவது) பற்களால் அந்த நளமகாராஜனைக் கடித்தான்; [எ-று.]

காட்டுத் தீயினிடைப்பட்டுத் துடித்து வருந்திய கார்க்கோடகனை அதினின்றும் நீக்கி எடுத்து நளன் பூமியிலிடப் போகுந் தருணத்தில் அவன் தந்திரமாகத் 'தச என்று சொல்லி இடு' என்றதை நளன் ஆலோசித்து 'இவன் ஏன் இப்படிச் சொல்லச் சொல்கின்றான்; இதில் ஏதோ சூது இருக்கின்றது' என்று அதிலுள்ள நுட்பத்தை அறியக்கூடியவனாயிருந்தும் கலி அவனுடைய மனத்தைத் தன் வசப்படுத்தி மயக்கத்துக் குள்ளாக்கி யிருந்தமையின் அறியாமற் போயினான். இதுபற்றியே ஆசிரியர் அவனை இங்குத் 'தீங்கலியாற் செற்ற திருமனத்தான்' என்று கூறினார்.

ஆங்கு-அங்கு என்றதின் நீட்டல். 'தீக்கலி' என்பது செய்யுள் விகாரம் பற்றி மெலித்தலாய்த் 'தீங்கலி' என வந்தது. இது எதுகைப் பொருத்தத்தை நோக்கி வந்ததென்க. செற்ற-பெயரெச்சம், இதில் செறு-பகுதி; ஒற்று இரட்டி இறந்தகாலங் காட்டிற்று. 'பூக்கழல்' என்பது அழகாகிய பாதம் எனப் பொருள் கொள்ளுமிடத்துப் பண்புத் தொகையும், அழகையுடைய பாதம் எனக்கொள்ளுமிடத்து இரண்டாம் வேற்றுமை உருபும் பயனும் உடன்தொக்க தொகையும், மலர்களிற் சிறந்த தாமரை மலர்போன்ற பாதம் எனக் கொள்ளுமிடத்து உவமைத் தொகையும் ஆம். பூ+கழல்=பூங்கழல்; பூப்பெயர் முன்னின மென்மையுந் தோன்றும்" (நன்-உயி-பு-50) என்ற சூத்திர விதிப்படி பூப்பெயர் முன் இன மெல்லெழுத்து தோன்றிற்று. "வாய்மை" என்பதில் மை பகுதிப்பொருள் விகுதி; இதற்கு வாய் என்று பொருள்; இனி வாய்மையால் என்பதற்குச் சத்தியத்தினால் எனப்பொருள் கோடலுமுண்டு; சத்தியமாவது கபடமில்லாதிருத்தலாம். தான்-அசை.

பாம்பு கடித்தலால் நளனது உடம்பு
விகாரப்படுதல்.

330. வீமன் மடந்தை விழிமுடியக் கண்டறியா
வாம நெடுந்தோள் வறியோருக்—கேமங்
கோடாதா ரகம்போற் குறுகிற்றே மெய்ம்மை
விடாதான் றிருமேனி வேந்து.

(இ-ள்.) (அவ்வாறு கார்க்கோடகன் நளனைக் கடிக்கவே) மெய்ம்மை-சத்தியத்தை, விடாதான்-கைவிடாதவனாகிய அந்நள னுடைய, திருமேனி-அழகிய தேகம், வெந்து-எரிந்து, வீமன்-வீம ராஜனுடைய, மடந்தை-பெண்ணாகிய தமயந்தியின், விழி-கண்கள், முடிய-பூரணமாக, கண்டு அறியா-பார்த்து அறியாத, வாமம்-அழகி னையுடைய, நெடுந் தோள்-அந்நளனது நீண்ட தோள்கள், வறியோ ருக்கு-தரித்திரர்களுக்கு, ஏமம்-பொன்னை, கொடாதார்-கொடுக்கா தவர்களுடைய, அகம்போல்-வீட்டைப்போல (அதாவது வறுமை யடையும் ஏழைகளுக்கு இரங்காதவர்கள் வீட்டில் நடக்கும் இல் வாழ்க்கையைப்போல), குறுகிற்று-குறுகிப்போயின; [எ-று.]

கார்க்கோடகன் நளனைக் கடித்தவுடனே அவனுடைய விஷத் தால் நளனது தேகம் வெந்து தோள்கள் சுருங்கின என்பது இதன் கருத்து. நளன் தோள்களை வீமன் மடந்தை விழிமுடியக் கண்டறி யாமையாவது அவற்றின் அழகைப் பார்த்தும் அளவிட முடியா மையாம். இத்தகைய அழகிய தோள்களும் கார்க்கோடகன் கடித்த மாத்திரத்தில் சுருங்கின வென்றமையால் அவனுடைய விஷக்கொடுமையின் மிகுதிப்பாடு நன்கு விளங்கும். தரித்திரர் களுக்குப் பொன்னைக் கொடாத உலோபிகளின் இல் வாழ்க்கை குறுகுதலாவது புண்ணியம் குறைந்து பாபம் மிகுதலால் செல்வங் கெட அது தாழ்ந்து போதலாம். நளனை 'மெய்ம்மை விடாதான்' என்றது அவன் புஷ்கரனோடு சூதாடிக் கலியின் வஞ்சனையினால் தோல்வியடைந்து ஐஸ்வரியங்களை யெல்லாமிழந்து நகரத்தை விட்டு வெளியேறியபோது அந் நகர மாந்தர்கள் 'நீ எங்களை விட்டுப் போதல் கூடாது' என்று மறுத்தும் கேளாமல் "வேலை கரையிழந் தால் வேதநெறி பிறழ்ந்தால், ஞாலமுழுது நடுவிழந்தால் சீலம், ஒழிவரோ செம்மை யுரைதிறம்பாச் செய்கை, அழிவரோ செங் கோலவர்" என்று சொல்லித் தன்வாக்குப் பிசகாமல் சத்தியத்தை நிலைநிறுத்தினவனாய் அரசாட்சியை விட்டு நீங்கினமை முதலிய வற்றைப் பற்றிக் கூறியதாம் என்க. இங்ஙனமே ஆசிரியர் இவனைப் "பொய்யடையாச் சிந்தைப் புரவலன்" என்பர். "வறியோர்க்கு ஏமங்கொடாதாரகம் போல் நெடுந்தோள் குறுகிற்று" என்றது உவமையணியாம்; ஆசிரியர் தாம் இயற்றும் நூல்களில் எவ்விதத் திலாவது நீதிகளை விளக்கிச் செல்லுதல் இயல்பாதலின் இங்குப் புலவரும் நளனுடைய உடம்பு விகாரமடைந்ததற்கு உவமை கூறிய தன் மூலம் தரித்திரர்களுக்குப் பொன் கொடாத உலோபிகளின் வாழ்வு குறையும் என்ற நீதியை விளக்கிக்காட்டினார்.

வீமன்-பீமன் என்ற வடசொற்றிரிபு; பகைவர்க்குப் பய[த்] தைத் தருபவனென்று காரணப்பொருள் தரும். தோள்-ஆகு[...]

பொருமை; அதற்கேற்பக் குறுகிற்று என்னும் ஒருமை முற்றைக் கொண்டது; இனித் தோள் என்பதை ஒருமையாகக்கொண்டு 'வாம நெடுந்தோள்' என்பதற்கு இடப்பக்கத்துத் தோள் என்று பொருள் கூறுவாருமுளர். வறியோர்-வறுமையை யுடையவர், இதிலுள்ள பண்புப்பெயர், மையீறு கெட்டு இடை உகரம் இகர மாயிற்று. ஏமம்-ஹேமம் என்ற வடசொற்றிரிபு. இதற்கு இன்ப மென்றும் பொருள் கூறலாம். அகம் என்பது ஆகுபெயராய் அதிலுள்ள வாழ்க்கையை யுணர்த்தி நின்றது. வேக எனவரும் எச்சம் இங்கு வெந்து எனத் திரிந்து நின்றது. ஏ-ஈற்றசை, இரக்கப் பொருளதெனினுமாம்.

நளன் கார்க்கோடகனை நோக்கி
'நீ என்னைக் கடித்தது எதன்பொருட்டு'
என்று வினவுதல்.

331. ஆற்ற லரவரசே யாங்கென் னுருவத்தைச்
சீற்றமோன் றின்றிச் சினவெயிற்றால்—மாற்றுதற்கின்
றென்கா ரணமென்றா னேற்றமரிற் கூற்றழைக்கும்
மின்கா லயின்முகவேல் வேந்து.

(இ-ள்.) (அவ்வாறுனவுடனே) ஏற்று-(பகைவர்களை) எதிர்த்து, அமரில் - போரில், கூற்று - எமனை, அழைக்கும்-(அவர்களின் உயிரைக் கொண்டுபோதற் பொருட்டு) அழைக்கின்ற, மின் கால்-மின்னல் போன்ற ஒளியைக் கக்குகின்ற, அயில்முகம்-கூர்மை யான நுதி பொருந்திய, வேல்-வேலாயுதத்தை யுடைய, வேந்து-நளமகாராஜன் (கார்க்கோடகனை நோக்கி), ஆற்றல்-வல்லமை யுடைய, அரவு அரசே- சர்ப்பராஜனே, சீற்றம்-(என்மேல் ஏற் படும்) கோபம், ஒன்று இன்றி-சிறிதும் இல்லாமல், (அதாவது என் மேல் பகை ஒன்றுமில்லாமலிருக்கும்போதே) சினம் எயிற்றால்-கொடுமையுள்ள விஷப்பல்லினால், இன்று-இப்பொழுது (கடித்து), என் உருவத்தை-என்னுடைய வடிவத்தை, மாற்றுதற்கு-வேறு படுத்துவதற்கு; என் காரணம்-காரணம் யாது, என்றான்-என்று அதனை நோக்கி வினவினான்; [எ-று.]

எனக்கும் உனக்கும் ஒரு பகையு மில்லாதிருக்கப் பகைகாரனுக்குச் செய்வதுபோல் நீ என்னைக் கடித்து உன்னுடைய விஷத்தினால் எனது வடிவத்தை ஏன் இங்ஙனம் மாற்றினாய் என்று நளன் கார்க்கோடகனை வினவினான் என்பது இதன் கருத்து. தன்னைக் 'கடி' என்று சொல்லும்படி செய்து அதன்படியே கார்க்கோடகன் கடித்த தந்திரத்தை எண்ணி நளன் அக்கார்க்கோடகனை நோக்கி 'ஆற்றல் அரவரசே' என்றழைத்தான் என்க. உயர்ந்தோர் தாம்

பிறர்க்குச் செய்த உதவியைத் தாமே கூறுதல் பெருந்தன்மையன்றாதலால் நளன் கார்க்கோடகனிடத்தில், 'நான் உனக்கு உயிருதவி செய்திருந்தும் நீ எனக்கு ஏன் இத்தகைய கொடிய காரியத்தைச் செய்தாய்' என்று தன் உபகாரத்தைக் குறிப்பிட்டுக் காட்டாமல் "சீற்றமொன்றின்றி என் உருவத்தை மாற்றுதற்கின்றென் காரணம்" என்று வினவினன். இதனால் நளன் தற்புகழ்ச்சியை விரும்பாதவன் என்பது பெறப்படும். நாகத்தினது இயற்கையான சிறப்பை அதன் பல்லின்மேலேற்றிச் 'சினவெயிறு' என்றார் ஆசிரியர்; இங்ஙனம் கூறுவது உடையவனது பண்பை உடைமையின் மேல் ஏற்றிக்கூறும் உபசார வழக்கெனப்படும். யுத்தத்தில் எதிரிகளைத் தவறாது கொல்லும் வேலாயுதமுடையான் என்பதை 'ஏற்றமரில் கூற்றழைக்கும் மின்கால் அயில்முகவேல் வேந்து' என்றார் புலவர்; சொல்லவேண்டிய கருத்தை இங்ஙனம் வேறுவகையாகச் சொல்வது பிறிதினவிற்சியணி வகையின் பாற்று எனப்படும்.

ரூபம், சமரம் என்ற ஆரிய மொழிகள் உருவம், அமர் எனச் சிதைந்து வந்தன. சீற்றம்-தொழிற்பெயர். இதில் சீறு-பகுதி, அம்-விகுதி, றகர ஒற்று மிக்கது விரித்தல் விகாரம். சினம்-தொழிற்பெயர்; இதில் சின-பகுதி, அகரம்கெட்ட அம்-விகுதி; இது பகைக்கும் உக்கிரத்துக்கும் ஆகு பெயராம். இன்றி-எதிர்மறைக் குறிப்பு வினையெச்சம். இன்று-நிகழ்காலம் உணர்த்தும் இடைச்சொல். ஏற்று என்பதில் ஏல்-பகுதி. கூற்று-பிராணிகளின் உடலையும் உயிரையும் வெவ்வேறாக்குபவன். 'ஏற்றமரிற் கூற்றழைக்கும்' என்ற தொடர் பிராசம் என்னும் சொல்லணி யுடையதாம். கால்-வினைத்தொகை. என்-எவன் என்னுங் குறிப்புமுற்றின் திரிபு. ஆங்கு-அசை.

கார்க்கோடகன் நளனைக்
கடித்ததற்குத் தக்க காரணங்
கூறுதல்.

332. காயுங் கடகளிற்றாய் கார்க்கோ டகனேன்பேர்
நீயிங்கு வந்ததி யானினைந்து—காயத்தை
மாறாக்கிக் கொண்டு மறைந்துறைதல் காரணமா
வேறாக்கிற் றென்றான் விரைந்து.

(இ-ள்.) (அவ்வாறு நளன் வினவியவுடன் கார்க்கோடகன் அவனை நோக்கி) காயும் - கோபிக்கின்ற, கடம் - மதம்பொருந்திய, களிற்றாய்-யானையுடையவனே, என்பேர்-என்னுடைய நாமமானது, கார்க்கோடகன்-கார்க்கோடகன் என்பதாகும், யான்-நான், நீ யிங்கு வந்தது-நீ இவ்விடத்திற்கு வந்த காரணத்தை, நினைந்து - எண்ணி,

காயத்தை - உன்னுடைய தேகத்தை, மாறாக்கிக்கொண்டு - வேறாக மாற்றிக்கொண்டு, மறைந்து-ஒளிந்து, உறைதல் காரணம்ஆ-நீ வாசஞ்செய்யும் பொருட்டாக, விரைந்து - விரைவு கொண்டு, (நான் உன்னைக்கடித்து) வேறு ஆக்கிற்று-(உன் வடிவத்தை) வேறாக்கியது, என்றான்-என்று கார்க்கோடகன் கூறினான்; [எ-று.]

மேற்கூறியபடி வினவிய நளனுக்குக் கார்க்கோடகன் "நீ என்னுயிரைக் காப்பாற்றி எனக்கு மிக்க உபகாரமே செய்தாய்; அத்தகைய நினக்கு நான் அபசாரஞ் செய்யத் துணியேன்; நான் இவ்வாறு செய்ததற்குத் தக்க காரணமுண்டு. இது என்னாற் செய்யப்பட்ட பிரதி உபகாரமேயாகும். எங்ஙனமெனில் பகைவரை ஜெயித்து சக்கரவர்த்தியாய் உலக முழுவதையும் ஆட்சிபுரிந்த நீ, கெட்டகாலத்தால் ஐஸ்வரியத்தைக் கைவிட்டு இவ்வாறு திரியும்போது உனது உண்மை வடிவத்துடன் சஞ்சரிப்பாயானால், உனக்குப் பகைவர் தீங்கு செய்வர். மேலும் நீ எவ்விடத்திற்கும் செல்ல நாணுவாய். நீ உருவம் மாறித்திரிந்தால் நினக்கு அத்தீங்கும் நாணமும் ஏற்படமாட்டா. ஆதலின் உனக்கு அவ்விரண்டும் நேராதிருக்கும் பொருட்டே நான் இவ்வாறு உன்னைக் கடித்து உன்னுடைய உருவத்தை மாற்றினேன்" என்றான் என்பது இதன் கருத்து. 'நீ இங்குவந்தது யான் நினைந்து' என்பதற்கு 'உன் வரலாற்றை நான் அறிந்து' என்பது பொருளாம். இனி இதற்கு 'நீ என்னிடத்தே கருணைகொண்டு உதவி செய்ததை எண்ணி' எனவும் வேறொரு பொருளுரைக்கலாம்.

'யான்' என்னும் எழுவாய் 'வேறாக்கிற்று' என்னுந் தொழிற்பெயரைப் பயனிலையாகக் கொண்டது; இவ்வாறு வரும் முடிபை 'பாவேப்ரயோகம்' என்பர் வடநூலார்; அதாவது: கர்த்தாப் பெயர் தொழிற்பெயரால் முடிவது. இனி 'வேறாக்கிற்று' என்பதை எழுவாயாகக் கொண்டு 'ஆம்' என்னும் பயனிலை வருவித்துரைத்து முடித்தலுமுண்டு. யான் நினைந்து வேறாக்கிற்று என இயையும். ஆக்கிற்று-பிறவினை இறந்தகாலத் தொழிற்பெயர்; இதில் 'று' விகுதி, "யானை அறிந்தறிந்தும் பாகனையே கொல்லும்" என்ற நாலடிச் செய்யுளடியின்படி அடங்காக் கோபமுடைத்தாய் உட்பகையை விடாதிருத்தல் யானையின் இயல்பாதலால் அதற்கு 'காயும்' என்ற அடைமொழி சேர்க்கப்பட்டது. கடம்-வடசொல்; இது யானைக் கன்னத்தின் பெயர், இடவாகு பெயராய் அதினின்றும் ஒழுகும் மதநீரை உணர்த்தி நின்றது. 'கடகளிறு' என்பதில் நிலைமொழி ஆரியச் சொல்லாதலின் வருமொழி முதல் மிகாது இயல்பாயிற்று. களிறு-யானையின் ஆண்பாற் பெயர்; களி-மதக்களிப்பு, அதனை உடையது களிறு; இதிலுள்ள று-பெயர் விகுதி. நால்வகைப் படைகளுள்ளும் யானைப்படை சிறந்ததாதலின் அதனை உடைத்தாயிருந்

தலையே சிரேஷ்டமாகப் பாவித்து நளனைக் 'களிற்றாய்' என விளித்தான் கார்க்கோடகன். இனிக் "காயுங்கடகளிற்றாய்" என்பதற்கு "மறவாது கோபங் கொள்ளுகின்ற மதயானையை நிகர்த்தவனே" என்றும் பொருள் உரைக்கலாம். கோபத்தை மறைக்கவேண்டிய போது மறைத்து வெளிப்படுத்துதல் அரசரின் இயல்பு. ஆதலின் இங்கு அத்தகைய குணமுடைய மதயானை நளமகாராஜனுக்கு உவமை கூறப்பட்டதென்க; நைடதத்திலும் அந் நூலாசிரியர் "திருகுவெண்களிறனைய சீற்றத்தான்" என்றார். இங்ஙனம் யானையின் குணத்தைப் பொருந்தி யிருத்தல் அரசநீதிகளுள் ஒன்றாம். "பொள்ளென வாங்கே புறம்வேரார் காலம்பார்த் துள்வேர்ப்ப ரொள்ளி யவர்" என்ற திருக்குறள் செய்யுளால் இஃதுணரப்படும். இன்னும் களிற்றாய் என்பதற்கு வலிமையிலும் கம்பீரமான நடையிலும் யானை போன்றவனே என்றுரைத்தாலும் பொருந்தும். 'களிற்றான்' என்பதன் ஈறு திரிந்து 'களிற்றாய்' என விளியாயிற்று. பேர்-பெயர் என்பதன் மரூஉ. 'வந்ததியான்' என்பதிலுள்ள இகரம் குற்றியலிகரமெனப்படும். காயம், காரணம் என்பன தற்சம வடசொற்கள். ஆ-ஆக என்பதன் திரிபு.

நளனுக்குக் கார்க்கோடகன் இரண்டு
ஆடைகள் கொடுத்தல்.

333. கூனிறல் பாயக் குவளை தவளைவாய்த்
தேனிறல் பாயுந் திருநாடா—கானில்
தணியாத வெங்கனலைத் தாங்கினா யிந்த
அணியாடை கொள்கென்றா னங்கு.

(இ-ள்.) (அவ்வாறு கூறிப்பின்னரும் கார்க்கோடகன் இரண்டு வஸ்திரங்களை எடுத்துநீட்டி நளனை நோக்கி) கூன்-வளைவாகிய, இறல் - இறால் என்னும் நீர்ப்பிராணிகள், பாய - பாய்தலினாலே, குவளை - நீலோற்பல மலர்களினின்றும், தவளைவாய் - (பக்கத்திலுள்ள) தவளைகளின் வாயிலே, தேன்-தேனானது; இறல் பாயும் தேன் கூண்டு போல (அதாவது தேன் கூட்டினின்றும் ஒழுகும் மதுவைப்போல) பாயப்பெற்ற, திருநாடா-அழகிய நிடத நாட்டையுடையவனே, கானில்-காட்டில், தணியாத-அடங்காத, வெங்கனலை-வெப்பமுள்ள நெருப்பை, தாங்கினாய்-சகித்து அதினின்றும் என்னை விடுவித்துப் பாதுகாத்தாய், (ஆதலின் அவ்வுபகாரத்துக்கீடாக), இந்த அணி ஆடை-இந்த அழகிய வஸ்திரங்களை, கொள்க என்றான்-பெற்றுக் கொள்வாயாக வென்று கூறினான்; [எ-று.]

கார்க்கோடகன் மேலும் இரண்டு வஸ்திரங்களை எடுத்து நளனுக்கு முன்னே நீட்டி அவனை நோக்கி "மன்னனே! நீ எனக்குச் செய்த உதவிக்கீடாக இவற்றைப் பெற்றுக்கொள்வாயாக" என்றான் என்பது இதன் கருத்து. மேல் 381-ம் செய்யுளில் "பூந்துகிலின்

ஒரு துகிலை வாங்கியுடுத்தான், ஒரு துகிலைப் போர்த்தான்'' என வருதலால் இங்குக் கார்க்கோடகனால் கொடுக்கப்பட்டவை இரண்டு துகில்களே என்பது பெறப்படும்; ஆதலின் 'ஆடை' என்ற பால் பகா அஃறிணைப் பெயர்க்கு ஆடைகள் எனப் பன்மையாகப் பொருள் கொள்ளப்பட்டது. நளன் கார்க்கோடகனை நெருப்பினின்றும் எடுத்து வெளிப்படுத்திய காலத்தில் அத்தியின் வன்மையைச் சகித்துக்கொண்டு அக்காரியத்தைச் செய்தானாகலின் அவனைத் "தணியாத வெங்கனலைத் தாங்கினாய்'' என்றான் கார்க்கோடகன். தாங்கினான் என்றதனாலேயே நளன் அவ்வெம்மையைச் சகித்துக்கொண்டு கார்க்கோடகனை எடுத்துக் காப்பாற்றினான் என்பதுதானே அமையும். கானில் தணியாத வெங்கனலைத் தாங்கிச் செய்த உபகாரத்திற்கு இந்த ஆடைகள் ஈடாதல் அடுத்த செய்யுளால் பெறப்படும். இச்செய்யுளின் முன்னிரண்டடிகள் நாட்டின் வளத்தை உணர்த்தி நின்றன. இருல் துள்ளிப்பாயுங் காலத்தில் குவளைப் புஷ்பத்தின் மேல் தாக்குதலால் அக்குவளை மலர் சிதைந்து அதில் நிரம்பியிருந்த தேன், தேன் கூட்டினின்றும் ஒழுகுவதுபோல் வழிந்து கீழேயிருக்கின்ற தவளைகளின் வாயிற் பெருகுமென்க. இவை செழித்தற்குக் காரணம் நீர்வளமே யாதலின் இங்ஙனங் கூறியதனால் நிடததேசமானது மிக்க நீர்வளமுள்ளதென்பது பெறப்படும். இங்ஙனம் மழைவளத்தின் காரியமும் நாட்டு வளத்தின் காரணமுமான நீர் வளத்தை விளக்கியதனால், "கொடி தொரீஇ நல்லவை செய்வானரசன்......பெய்யெனப் பெய்யுமழை'' என்றபடி மழைவளத்துக்குக் காரணமாகிய அரசனது செங்கோற் சிறப்பு குறிக்கப்படுகின்றது. "நீ தற்செயலாக வந்து என்னுயிரைக் காத்து எனக்குதவி செய்தாய்; இத்தகைய உனது நீதியால் 'மன்னனெப்படி மன்னுயிரப்படி' என்ற பழமொழிப்படி உனது தேசத்திலுள்ள அஃறிணை உயிர்களும் தற்செயலாக ஒன்றுக்கொன்று உதவுந் தன்மையனவாய்'' என்ற குறிப்பு இதில் விளங்கும், இனி, 'கூனிருல் பாயக் குவளை தவளைவாய்த் தேனிருல் பாயுந் திருநாடா' என்பதற்கு 'இருல் மீன்கள் நீரினின்றுந் துள்ளிக் கரையின் மேலிருக்கும் மரங்களின்மேல் உள்ள தேன்கூடுகளின் மேல் பாய்வதால் அவை உடைந்து சொரிகிற தேன் கீழுள்ள நீலோற்பல மலர்களின் வாயிலும் தவளைகளின் வாயிலும் பாயும் வளமுள்ள நாட்டையுடையவனே'என்று பொருள் கோடலுமொன்று. பாயும்-பெயரெச்சம், இடப்பெயரைகொண்டது. இன்னும் 'கனலைத் தாங்கினாய்' என்பதற்கு உருவம் விகாரப்படும்படி என் விஷாக்கனியையேற்றுக்கொண்டாய் எனப் பொருளுரைப்பினும் அமையும். இங்குக் கார்க்கோடகனால் கொடுக்கப்பட்ட வஸ்திரங்களினாலேயே நளனுடைய விகாரவடிவம் பிற்காலத்தில் நீங்குகின்றதாதலின் அதற்குப் பரிகாரமாக அவன் அவ்

வஸ்திரங்களைக் கொடுத்தான் என்பது மிகவும் பொருத்த முடைத்து; ஆங்கு-அசை.

கார்க்கோடகன் தன்னால் கொடுக்கப்பட்ட
ஆடைகளின் பயனைக் கூறுதல்.

334. சாதி மணித்துகில்நீ சாத்தினாற் றண்கழுநீர்ப்
போதின்கீழ் மேயும் புதுவரால்—தாதின்
துளிக்குநா நீட்டுந் துறைநாடர் கோவே
ஒளிக்குநா ணீங்கு முரு.

(இ-ள்.) (அவ்வாறு ஆடையை கொடுத்த கார்க்கோடகன் மேலும்) தண்-குளிர்ச்சி பொருந்திய, கழுநீர் போதின் கீழ்-செங்கழுநீர் மலரின் கீழே, மேயும்-இரைதேடித் திரிந்து உண்டு கொண்டிருக்கின்ற, புதுவரால்-புதியவரால் மீன்கள், தாதின் துளிக்கு-(அம்மலர்களி னின்றொழுகும்) தேன் துளிக்கு (அதாவது: அத்தேன் துளியை உட்கொள்ளுதற்கு), நாநீட்டும்-நாவை நீட்டுகின்ற, துறை-நீர்த்துறைகளையுடைய, நாடர்-நிடததேசத்தார்களுடைய, கோவே-அரசனே!, நீ ஒளிக்கும்நாள்-நீ (யதார்த்த வடிவத்துடன் வெளிப்பட்டுப்) பிரகாசிக்க வேண்டிய நாளில், சாதி மணித்துகில்-(இந்தச்) சிறந்த ஆடைகளை, சாத்தினால் - அணிந்துகொண்டால், உரு-(உனக் கிப்பொழுது ஏற்பட்டிருக்கும் இந்த) விகாரவடிவமானது, நீங்கும்-அகலும்; [எ-று.]

முன்னுரைத்தபடி ஆடைகளைக் கொடுத்த கார்க்கோடகன் நளனை நோக்கி, 'மன்னனே! நீ இந்த விகாரவடிவத்தை நீக்கி யதார்த்த சொரூபத்துடன் விளங்க வேண்டிய காலத்தில் இந்த ஆடைகளைத் தரித்துகொள்வாயானால் உன் விருப்பப்படியே இக்கோர ரூபம் அகன்று நினதுண்மை வடிவம் வந்துவிடும்' என்று கூறினான். அவன் இவ்வாறு கூறியதனால் தான் பிரதியுபகாரஞ் செய்ததை விளக்கினான். 'நீ ஒளிக்கும் நாள் சாதிமணித்துகில் சாத்தினால் உருநீங்கும்' என இயைக்க. ஜாதி-ஆரியமொழி; இஃது இலக்கணையால் சிறப்பை உணர்த்தி நின்றது; இலக்கணையாவது: உரியபொருளை விட்டு அப்பொருளின் சம்பந்தியை யுணர்த்துவது; இங்கே குலப்பெயராகிய ஜாதியென்பது அதன் பொருளை யுணர்த்தாமல் அதன் சம்பந்தியாகிய சிறப்பை விளக்கிற்று. 'சாதிமணித் துகில்', என்பதற்குச் 'சாதிமாணிக்கம் போல் அருமையான துகில்' எனவும் பொருளுரைக்கலாம்; புதுவரால்-வேற்று நாட்டிலிருந்து வெள்ளத்தின் வழியாக எதிரேறி இந்நாட்டிற்கு நூதனமாக வந்தவை; இவை அங்ஙனம் புதியனவாய் வந்தனவாதலின், அந்நாட்டின் தேனை உண்ணுதற்கு மிகவும் விருப்பங் கொண்டன. ஒரு நாட்டிற்கு நூதனமாக வந்த வேற்று நாட்டார் அங்குள்ள

வஸ்துக்களை மிக்க ஆவலுடன் விரும்புவது இயற்கை. இனி, 'இளமையான வரால்' எனவும் பொருளுரைக்கலாம். இளமைப் பருவமுடையவை மேய்ச்சலுக்குச் செல்வதில் புதியனவாதலின், இப்பெயர் பெறும். தாது-பூவிதழ் அல்லது பூந்துகள்; இஃதிலக்கணையாய்த் தேனை யுணர்த்தி நின்றது. இனி, தாதிலிருந்து வடிவது தேனேயென்ப துறுதியாதலின், தேன் என்பதைக் குறிப்பால் வருவித்து, 'தாதின் துளி' என்பதற்கு, 'பூந்துகளிலிருந்து அல்லது பூவிதழ்களிலிருந்து வடியும் தேன் துளி' எனவும் பொருள் கொள்ளலாம்; இனி, தாது+இன்+துளி—எனப் பிரித்து, இனிமையென்னும் பண்படியாகிய இன் என்பதைத் தேனிற்குக் குணவாகு பெயராகக் கொண்டு மேற்கூறியவா றுரைத்தலும் பொருந்தும். நாநீட்டுதல் விருப்பத்தோடு வாயைத்திறத்தல். "தண்கழுநீர்ப் போதின் கீழ்மேயும் புதுவரால்-தாதின் துளிக்கு நாநீட்டுந் துறை நாடர் கோவே" என்றதனால், "நினக்குப் புதியவனான நான் உன் உதவியை விரும்பியது போலவே நின் நாட்டிலும் பிறநாட்டுப் பிராணிகள் அங்குள்ள வளத்தின் உதவியை விரும்பி நிற்கும்" என்ற கருத்தே தொனிக்கும். இவ்வருணனையால் நீர்வளம் குறிப்பிடப்பட்டது.

துளிக்கு-என்பதிலுள்ள நான்கனுருபு பொருட்டுப் பொருளது. ஒளித்தல்-இங்குப் பிரகாசித்தல் என்னும் பொருளில் நின்றது. இனி 'ஒளிக்கும் நாள்' என்பதற்கு, 'இவ்வேற்றுருவத்தை நீ மறைக்க வேண்டிய காலத்தில்' என ஒரு பொருளும், 'நீ இந்த ஆடைகளை அணியும் அந்நாளில் இவ்விகார வடிவம் மறையும்' என ஒரு பொருளும் உரைக்கலாம். இதுவும் அடுத்த செய்யுளும் விரவி வருதலான் குளகமாய் முடியும்.

பெயரை மாற்றிக் கொண்டு ருதுபர்ணனுக்குத்
தேர்ப்பாகனாகும்படி நளனுக்குக் கார்க்கோடகன்
சொல்லல்.

335. வாகு குறைந்தமையால் வாகுவனென் றுன்னாமம்
ஆக வயோத்தி நகரடைந்து—மாகனகத்
தேர்த்தொழிற்கு மிக்கானீ யாகென்றான் செம்மனத்தாற்
பார்த்தொழிற்கு மிக்கானைப் பார்த்து.

(இ-ள்.) வாகு குறைந்தமையால்-(உன்னுடைய) தோள் மெலிந்து குறைவுபட்டதனால், உன் நாமம்-உனது பெயரானது, வாகுவனென்று ஆக-வாகுவனென்று பொருந்த, நீ—, அயோத்தி நகர் அடைந்து-அயோத்தியாபுரியிற் சேர்ந்து, (அந்நகரத்தரசனான ருதுபர்ணனுக்கு) மா-சிறந்த, கனகம்-பொன்னாலாகிய, தேர்த்

தொழிற்கு-தேரைச்செலுத்துந் தொழிலில், மிக்கான் ஆகு-மிகுந்தவனாகக் கடவாய் (அதாவது: சிறந்த தேர்ப்பாகனாகக் கடவாய்), என்றான்-என்று சொன்னான், செம்மனத்தால்-ஒழுங்கான உள்ளத்தினாலே, பார்த்தொழிற்கு-அரசியலில், மிக்கானை-மிகுந்த நளனை, பார்த்து-நோக்கி; [எ-று.]

இதுவும் முன்செய்யுளும் குளகமாதலின் இதனீற்றடியிலுள்ள, 'பார்த்தொழிற்கு மிக்கானைப்பார்த்து' என்பதை, முன் செய்யுளின் முதலிற்சேர்த்து, 'கார்க்கோடகன் பார்த்தொழிற்கு மிக்கானைப்பார்த்து, 'சாதிமணித்துகில் நீசாத்தினால்......நீங்குமுரு, வாகு குறைந்தமையால்......தேர்த்தொழிற்கு மிக்கானியாகென்றான்'' என்று முடித்துக் கொள்ள வேண்டும். நளன் அந்த விகார வடிவத்துடன் தன்பெயரைக் கூறினால் பிறர் நம்பாமல் அவனை அவமதித்து ஏளனஞ் செய்தலோடு அவனுக்கு ஒருவித இழிவும், ஜீவனோபாயத்திற்கு இடையூறும் நேருமாதலின் கார்க்கோடகன், அவனை இவ்வாறு பெயர் கொண்டு இத்தொழிலிலமரும்படி கூறினான். நளன் அசுவவித்தையில் வல்லவனாயிருந்ததனாலும், அவனுடைய தோள் கார்க்கோடகனுடைய விஷத்தினால் சுருங்கிப் போயிருந்தமையாலும் அவனுக்குத் தேரோட்டுந் தொழிலே தகுமென்று கருதி அதனையே செய்யும்படி கூறினான் என்ப.

வாகு-பாஹு என்ற வடசொற்றிரிபு. வாகுவன் - பாஹுகன் என்ற வடசொல்லின் விகாரம்; பாகு-தோள், க-சிறுமைப் பொருள் தரும் ப்ரத்யயம் என்னும் சமஸ்கிருத விகுதி; ஆதலின், 'பாகுக' என்பது, 'சிறுத்ததோள்' எனப்பொருள்பட்டு, அதனோடு அன்-விகுதிசேர்ந்த, 'பாகுகன்' என்பது, 'சிறுத்த தோளையுடையவன்' எனப்பொருள் தந்து நின்றது; தேர்ப்பாகர்க்குத் தோள் சுருங்கியிருத்தல் இயல்பு; அவர்கள் குதிரையின்வாய் வடத்தை எப்பொழுதும் இழுத்துப் பிடித்துக் கையை மடக்கிக் கொண்டிருக்கும் பழக்கம் அதிகமாக உடையவர்களாதலின், அவர்கட்கு அடிக்கடி நேரும் அப்பழக்கத்தால் தோள் சுருங்கு மென்க. ஆக-வியங்கோள் வினைமுற்று; செயவென்னும் வாய்பாட்டு வினையெச்சமுமாம். அயோத்யா, மஹா, கநகம், என்ற ஆரியமொழிகள் அயோத்தி, மா, கனகம் எனத்திரிந்து வந்தன. அயோத்யா-என்பது 'யுத்தமில்லாதது' என்று பொருள்படும்; அதாவது: பகைவராற் செய்யப்படும் போர் இல்லாதது என்பதாம்; ஆகவே, பகைவரால் போர் செய்து வெல்லற்கரியது என்பது பெறப்படும்; இதனால், அந்நகரம் பகைவர் அழித்தற்கரிய மதில் முதலிய அரண்களையும், வலியபடைகளையும், பலசாலிகளான வீரர்களையுமுடையதென்பது விளங்கும். ஆகு-செய்யென்னேவற்பகுதி; ஆ-என்பது

பகுதியாய், 'கு' சாரியை பெற்ற தெனலுமொன்று. செம்மை-மையீறு கெட்டு நின்றது. செம்மையாவது: நேர்மை; செம்மனம்-தருமகுணம் பொருந்திய உள்ளம். செம்மனம் பாரானுக்தொழிலில் மேன்மையாதற்கு ஏதுவாதலின், 'செம்மனத்தாற் பார்த்தொழிற்குமிக்கான்' என்றார் ஆசிரியர்; இதில் ஆல் உருபு ஏதுப் பொருளில் வந்தது. இரண்டிடங்களிலுமுள்ள, 'தொழிற்கு' 'தொழிற்கு' என்பனவற்றில் நான்கனுருபு ஏழனுருபின் பொருளில் மயங்கி வந்தது.

நளன் கார்க்கோடகனைப் பிரிந்து அப்பாற் செல்லுதல்.

336. இணையாரு மில்லா னிழைத்த உதவி
புணையாகச் சூழ்கானிற் போனான்—பணையாகத்
திண்ணாக மோரெட்டுந் தாங்குந் திசையனைத்தும்
எண்ணாக வேந்த னெழுந்து.

[இ-ள்.] (கார்க்கோடகன் அவ்வாறு கூறியபின்பு) பணை ஆகம்-பருத்த தேகத்தையுடைய, திண்-வலிமை பொருந்திய, ஓர்-ஒப்பற்ற, நாகம் எட்டும்-திசையானைகள் எட்டும், தாங்கும்-சுமக்கின்ற, திசை அனைத்தும்-எல்லாத் திக்குகளிலுள்ளவர்களும், எண்-சிந்திக்கும்படியான, ஆகம்-நல்ல இருதயத்தையுடைய, வேந்தன்-நளமகாராஜன், ஆரும்-எவரும், இணை இல்லான்-(தனக்கு) உவமையாக அடையாதவனாகிய (அதாவது: உயர்ச்சியில் ஒப்பற்றவனான) கார்க்கோடகன், இழைத்த-செய்த, உதவி-உபகாரமானது, புணை ஆக-தெப்பமாக (அதாவது: ஆதரவாக), எழுந்து-அவ்விடத்தை விட்டுப் புறப்பட்டு, சூழ்-சூழ்ந்த, கானில்-காட்டில், போனான்-போயினான்; [எ-று.]

'இணையாருமில்லான்' என்றது, 'பிறர்க்குதவி செய்வதில் தனக்கொப்பாரெவரு மில்லாதவன்' என்னும் கருத்தை விளக்கி நின்றது. கார்க்கோடகன் நளனோடு சிநேக மில்லாதவனா யிருந்தும், அவனுடைய நிலைமையை உணர்ந்து அவனது ஜீவிப்பிற்கு அனுகூலமா யிருக்கும்பொருட்டு அவனைக் கடித்து அவனின் உருவத்தை மாற்றிப் பிற்காலத்தில் அம்மாற்றுருவம் நீங்க இரண்டு வஸ்திரங்களையும் அவனுக்கு நல்கினானாதலின், இச்செய்கை, செய்யாமற் செய்த உதவியாகும்; ஆதலின், இது குறித்தே அவனை 'இணையாரு மில்லான்' என்றார் ஆசிரியர். இவ்வாறு கார்க்கோடகன், நளனுக்குச்செய்த உதவி, கடலைத் தாண்டுவதற்கு மரக்கலம் உதவியா யிருத்தல் போல, நளன் மறைந்துறைதல் என்னும் கடலைத் தாண்டுவதற்கு அனுகூலமா யிருந்தபடியால் 'உதவி புணையாக' என்றார் புலவர். இங்கே உதவி, புணையாக

உருவகித்துக் கூறப்பட்டது; இங்ஙனங் கூறியது உருவகவணியின் பாற்படும். அஷ்டகஜங்கள் எட்டுத் திக்குகளிலும் நின்று பூமியைத் தாங்கக் கூடிய வல்லமை பெற்றனவாதலின் அவற்றை, "பணை ஆகத் திண் நாகம் ஒரெட்டும்," என்றார் ஆசிரியர். அஷ்டகஜங்களாவன:—ஐராவதம், புண்டரீகம், வாமநம், குமுதம், அஞ்சநம், புஷ்பதந்தம், சார்வபௌமம், சுப்ரதீகம் என்பனவாம்; இவை முறையே கிழக்கு முதலிய திசைகளிற் கீழ் நின்று உலகத்தைத்தாங்குவனவாம். இனி, 'நாகம் ஓரெட்டு' என்பதற்கு, 'அஷ்டமகா நாகங்கள்' எனவும் பொருளுரைக்கலாம்; இவைகளும் எட்டுத்திக்குக்களினும் கீழ்நின்று பூமியைத் தாங்குவனவே யாம்; அவையாவன:—வாசுகி, அனந்தன், தக்கன், சங்கபாலன், குளிகன், பதுமன், மகாபதுமன், கார்க்கோடகன் என்பனவாம்; இவைகளும் முறையே கிழக்கு முதல் நின்று தாங்குவனவெனக் கொள்க. நளன் அஷ்டதிக்குகளிலுமுள்ள எல்லோராலும் கொண்டாடத் தக்க நல்ல உள்ளம் படைத்தவனாதலின், 'திசை அனைத்தும் எண் ஆகவேந்தன்' எனப்பட்டான், 'தன் உள்ளச் சிறப்பால் எங்கும் புகழ்படைத்தவன்' என்பது இதன் தேர்ந்த கருத்து. இனி,

> "நின்னைமெய்ப் பரதனை நிகரில் பார்த்தனை
> முன்னினும் நினைத்தவை யனைத்தும் முற்றுமால்"

என்று நைடதத்தில், இந்திரன் நளனை நோக்கிச் சொன்னதாயுளதாலும்.

> "தரைதிருத் தியசீர் வயினிய னென்னுந்
> தனிக்குடைப் பிருது வேந்தினையும்
> உரைசதுந் தலைபுத் திரனெனும் பரத
> னொடுநள னையுமோரு செயற்குப்
> புரையயறச் செல்லும் பொழுதுமுன் னினரப்
> பொருள்பெறீஇ விரைந்து மீள்குவரால்"

என்று, வடமொழி நைடத நூலுரை மேற்கோள் மொழிபெயர்ப்புச் செய்யுளிற் கூறியிருத்தலானும், பிருது சக்கரவர்த்தியையும், பரதனையும், கார்த்தவீரியார்ச்சுனனையும், நளனையும் சிந்தித்த மாத்திரத்தில் எத்தகைய காரியமும் சித்திக்கு மென்பது ஏற்பட்டிருத்தலால், 'திசை அனைத்தும் எண் ஆகவேந்தன்' என்பதற்கு, 'அஷ்டதிக்குக்களி லுள்ளவர்களும் தங்கள் தங்கள் காரியசித்தியின் பொருட்டு மனதில் தியானிக்கின்ற நளன்' என்றும் பொருளுரைக்கலாம்; இங்ஙனங் கொள்ளுமிடத்து 'எண் ஆகவேந்தன்' எனமாற்றி, அதற்கு, 'மனதில் தியானிக்கும் அரசன்' எனப் பொருள் விரிக்க வேண்டும். இனி, 'திசை அனைத்தும் எண் ஆக வேந்தன்' என்பதற்கு, 'எல்லோரும் கொண்டாடத்தக்க மார்பின்

தோற்றத்தையுடைய அரசன்' எனப்பொருள் விரிப்பினும் அமையும்.

இனி, இச்செய்யுள் இரட்டுற மொழிதலாக அமைந்து கார்க்கோடகன் அவ்விடத்தைவிட்டுக் கானகத்தில் அப்பாற் சென்றதையும் உணர்த்தியதெனக்கொள்ளலாம். அங்ஙனங் கொள்ளுமிடத்து, 'நாகவேந்தன்' என்பதையும், 'போனான்' என்பதையும் கார்க்கோடகனுக்கும், 'இணை யாரு மில்லான்' என்பதை நளனுக்கும் ஏற்றி, "அஷ்டதிக்குக்களி லுள்ளாரும் கருதுகின்ற ஸர்ப்ப ராஜனாகிய கார்க்கோடகன், இணையாரு மில்லாதவனாகிய நளன் தன்னை அக்கினியின்று மெடுத்துச் செய்த உயிருதவி துணையாக அவ்விடத்தைவிட்டுக் காட்டிலே அப்பாற் சென்றான்" என அநுவயங் கொண்டு பொருளுரைக்க வேண்டும். இங்ஙனம் கொள்ளும் உரையில், 'திசையனைத்தும் எண்' என்ற அடை மொழி எதனால் கார்க்கோடகனுக்கு அமையுமெனின், "கார்க்கோடகன், தமயந்தி, நளன், ருதுபர்ணன் ஆகிய இவர்கள் பெயரைச் சொல்லுதல், கலியை யொழித்தற்குக் காரணமாம்" என்ற மேற்கோள்பற்றி அமைந்ததெனக் கொள்க. இனி, 'சூழ்கானில் இழைத்த உதவி' எனவும், 'திசையனைத்தும் போனான்' எனவும் அநுவயித்து, "நளன், சூழ்கானில் இணையாரு மில்லான் இழைத்த உதவி கொண்டு புறப்பட்டு எல்லாத் திக்குக்களிலும் சுற்றி வந்தான்" எனப் பொருள் கோடலு மொன்று. இச்செய்யுள் இங்ஙனம் பலவகைப் பொருள்கட்கு இடந்தரினும் அடுத்த வெண்பாவில் 'வேகின்றான் வேலைக்கரை கண்டான்' எனவருதலால், நளனுக்குச் செலவு கூறும் உரையொன்றே மிகப் பொருத்தமுடைத்தாம்.

நகம்-மலை; நிலைபெயராதது என்பது இதன் பொருள்; யானை இதில் வாழக் கூடியதாதலின் நாகம் எனப் பெயர் பெற்றது. நகம் என்பது வடசொல். திசா என்ற ஆவீற்று வடசொல், ஐயீறு பெற்றுத் திசை யென்றாயது; இஃதிடவாகு பெயராய்த் திக்குக்களி லுள்ள மனிதரை யுணர்த்தி நின்றது.

நளன் கடற்கரையைக் காணுதல்.

337. நினைப்பென்னுங் காற்றசைப்ப நெஞ்சிடையே மூளுங்
கனற்புகைய வேகின்றான் கண்டான்—பனிக்குருகு
தண்படா நீழற் றனிப்பேட்டைப் பார்த்திரவு
கண்படா வேலைக் கரை.

(இ-ள்.) (அவ்வாறு சென்று) நினைப்பு என்னும்-(தமயந்தியின் மேற்பட்ட) எண்ணமென்கின்ற, காற்று-காற்றானது, அசைப்ப-

அலைப்பதனாலே, நெஞ்சிடை-மனத்தினிடமாக, மூளும்-பற்றுகின்ற, கனல்-(விசனமென்கிற) நெருப்பானது, புகைய-புகைந்து கொண்டிருக்க, வேகின்றான்-வெந்து கொண்டிருக்கின்றவனாகிய நளன், பனி-அச்சத்தையுடைய, குருகு-நாரையானது, தண்-குளிர்ச்சி பொருந்திய, படாம்-பெருங்கொடிகளின், நீழல்-நிழலிலே, தனி-ஒப்பற்ற, பேட்டை-பெட்டை நாரையை, பார்த்து-பார்த்துக்கொண்டு, இரவு-இராத்திரியில், கண்படா-கண்மூடி யுறங்காம லிருக்கின்ற, வேலைக் கரை-கடற்கரையை, கண்டான்-பார்த்தான்; [எ-று.]

நெருப்பு மூளுவதற்குக் காற்று சகாயமா யிருப்பது இயற்கை; இதுபற்றியே நெருப்புக்குக் 'காற்றின் சகாயன்' என ஒரு பெயரும் ஏற்பட்டிருக்கின்றது; ஏனெனில் காற்று வீசவீச நெருப்பு மூண்டெரியும்; ஆதலின் இங்கு ஆசிரியர் நளனுடைய விசனத்தை நெருப்பாகவும், தமயந்தியின் நினைவைக் காற்றாகவும் உருவகப்படுத்தி, "நினைப்பென்னுங் காற்றசைப்ப நெஞ்சிடையே மூளுங், கனற்புகைய வேகின்றான்" என்று நளனைக் கூறினார்; இதனால், நளனுடைய மனதில் தமயந்தியின் பிரிவாலேற்பட்ட விசனம் அக்கினி போல்வெதும்பிக் கொண்டிருந்த தென்பதும், தனியாகச் செல்லும் இச்சமயம் அவனுடைய எண்ணம் அதிகரித்தபடியால் அவ்விசனமும் அதிகரித்து நெருப்புப் புகைந்தெரிவது போல் எரியத் தலைப்பட்ட தென்பதும், அதனால் அவன் முன்னிலும் அதிகமாக விசாரத்தால் வெதும்பினான் என்பதும் பெறப்படும். சமுத்திரக் கரையில் பெருங்கொடியின் நிழற்கீழ் பெட்டைக் குருகு நித்திரை செய்து கொண்டிருக்கும்; ஆண் குருகு அதன் மீது அதிகமாக ஏற்பட்ட அன்பினால் அதன் பக்கத்தில் உட்கார்ந்து அதற்கபாயம் உண்டாகாதபடி விழித்துப் பார்த்துக் கொண்டிருக்கும்; இது, பறவைகளின் அன்பின் மிகுதியாலேற்படுஞ் செய்கை. மேற்கூறியபடி தமயந்தியின் பிரிவால் வெதும்பிச் சென்ற நளன், நாரையின் இவ்வித செய்கையை யுடைய சமுத்திரக் கரையைக் கண்டான். நாரை இவ்வாறு தன் பெட்டையினிடத்தில் அன்பு செலுத்துவதைக் கண்டவுடன் நளனுக்கு, 'அந்தோ! பறவையும் தன் பெட்டையினிடத்தில் இங்ஙனம் அன்பா யிருக்கும்போது நாம் நம் மனைவியினிடத்தில் அன்பற்று அவளைப் பிரிந்து வந்தோமே' என்று விசனம் முன்னிலும் அதிகரிக்குமாதலின், அவன் சமுத்திரக் கரையைப் பார்த்தது மிக்க துயர்க்கேதுவாம். ஆதலின், இதைக் குறிப்பால் விளக்குதற் பொருட்டே ஆசிரியர், "வேகின்றான்......குருகு கண்படா வேலைக்கரை கண்டான்" என்றார். இதனால், "முன்னரே துயரத்தால் வெந்து கொண்டிருந்த நளன் மேலும் தன் விசனம் அதிகரிக்கச் சமுத்திரக் கரையைக் கண்டான்" என்று பொருள் கொள்ள வேண்டும்.

பறவைகள் எப்பொழுதும், வேடர் முதலியவர்களால் தங்களுக்கு அபாயம் வருமோ என்ற அச்சத்துடனேயே இருக்கக் கூடியனவாதலின் இங்குக் குருகுக்கு, 'பனி' என்ற அடை கொடுக்கப்பட்டது; குருகு இவ்வித அச்சத்தினாலேயே பெடைக்குக் காவலிருந்தமைதென்க. பேடு, அன்பு செலுத்துவதில் ஒப்பற்றதாதலின், 'தனிப்பேடு' என்னப்பட்டது. வேகின்றான்-வினையாலணையும் பெயர். கனல்-புகைய எதுகை நோக்கி-ல்-ற் ஆனது.

நளன் கடற்கரையில் குருகைப் பார்த்துக் கூறுதல்.

338. கொம்ப ரிளங்குருகே கூறு திருத்தியால்
அம்புயத்தின் போதை யறுகாலால்—தும்பி
திறக்கத்தே னூறுந் திருநாடன் பொன்னை
உறக்கத்தே நீத்தேனுக் கொன்று.

(இ-ள்.) (அவ்வாறு கடற்கரையைக் கண்ட நளன் மேற்கூறியபடியிருந்த குருகை நோக்கி) கொம்பர் - மரக்கிளையின் மேலிருக்கத் தக்க, இளங் குருகே - இளமை பொருந்திய நாரையே!, அம்புயத்தின் போதை-தாமரை மலரை, தும்பி-வண்டுகள், அறுகாலால்-ஆறு கால்களினால், திறக்க- கிண்டி இதழ்களைத் திறந்துவிட, (அதினின்றும்) தேன் ஊறும் - மதுவானது சுரந்தொழுகும்படியான, திரு-சிறப்பினையுடைய, நாடன்-விதர்ப்ப தேசாதிபதியினது, பொன்னை-இலக்குமிபோன்ற குமாரத்தியை, உறக்கத்தே-தூக்கத்தில், (அதாவது: அவள் தூங்கும்போது) நீத்தேனுக்கு-விட்டு வந்தவனாகிய எனக்கு, ஒன்று-தேறுதலான ஒரு வார்த்தையை, கூறு துஇருத்தி-நீ சொல்லாமல் இருக்கின்றாய், (இது தகுதியாகுமா என்று கூறினான்); [எ-று.]

மேற்கூறியபடி நளன் கடற்கரையிற் சேர்ந்தவுடன், பெட்டையின் மீது அன்புகொண்டிருந்த நாரையைக் கண்டு, 'இதற்குள்ள இத்தன்மை நமக்கில்லாமற் போயிற்றே; சிறிதும் பற்றுதலின்றி மனைவியை நீத்துவந்து விட்டோமே' என்று வருந்தினான். ஆதலின், அவ்வருத்த மிகுதியால் அக்குருகை நோக்கி, "நானோ உன்னைப் போல மனைவியினிடத்தில் அன்பு வைத்தலை அறியாதவனாய் அவளைப் பிரிந்து வந்து மிக்க துயர்க்குள்ளாகிக் கலங்குகின்றேன்; நீயோ இணைபிரியாத் தன்மையிற் சிறந்திருக்கின்றாய்; இத்தகையை நீ துயர்க்குள்ளாகி வருந்தும் என்னைப் போன்றவருடைய மனம் தேறும் மார்க்கத்தினையு முணர்ந்திருப்பாய்; அவ்வாறுணர்ந்திருந்தும் மனைவியைப் பிரிந்து வருந்தும் எனக்குத் தேறுதலான ஒரு வார்த்தையேனும் கூறாதிருக்கின்றாய்; இது நியாயமாகுமோ" என்று கூறினான். பறவை, மனிதரோடு சம்பாஷிக்கக் கூடிய பிராணியன்றெனி.

னும், நளன் வருத்த மிகுதியால் இங்ஙனம் அதனிடம் பேசினான். விசனம், சந்தோஷம் முதலியன மிகுந்தகாலத்தில் மனிதர் இவ்வாறு பேசத்தகாத விடத்திலும் பேசுதல் இயற்கை; இது, வருத்தத்தாலுண்டாகும் மதிமயக்கத்தால் ஏற்படும் செய்கை.

'கொம்பர் இளங்குருகே' என்றது அது, மற்ற காலங்களில் இருக்கும் இயற்கை நோக்கிக் கூறியது; முன்பாடலில் கொடியினீழலில் இருந்ததாகக் கூறியது குறித்துச் சொன்னதன்று. இப் பாடலில் கதைத்தொடர்ச்சி பற்றி எழுவாய், பயனிலை முதலியன இசை யெச்சமாக வருவித்துரைக்கப்பட்டன. 'கொம்பர்' என்பதில், குற்றியலுகர மாதலின் அர்-மொழியிறுதிப் போலி. ஆல்-அசை. பொன்-தமயந்திக்கு உவமையாகு பெயர்.

வண்டு, தன் பெட்டையினிடத்தில் காட்டும் அன்பை நோக்கி,
நளன் தான் அதுபோன் றில்லாததைப் பற்றி வருந்தல்.

339. புன்னை நறுந்தாது கோதிப் பொறிவண்டு
கன்னிப் பேடையுண்ணக் காத்திருக்கும்—இன்னருள்கண்
டஞ்சினா னாவி யழிந்தா னறவுயிர்த்து
நெஞ்சினா லெல்லா நினைந்து.

(இ-ள்) (நாரையைப் பார்த்து அவ்வாறு கூறிய நளன் மேலும்) புன்னை-புன்னைமலரிலுள்ள, நறும்தாது-நல்ல மகரந்தத்தை, கோதி-காலினால் கிண்டி, பொறிவண்டு - புள்ளிகளையுடைய வண்டானது, கன்னி-இளமை கெடாத, பெடை-பெண்வண்டு, உண்ண - (அதன் பக்கத்தில் தான்) உண்ணாமல், காத்திருக்கும் - அதனைக் காத்திருக்கின்ற, இன் அருள்கண்டு-இனிமையான கிருபையை நோக்கி, நெஞ்சினால்-தன்மனத்தினாலே, எல்லாம்-தான் செய்தவற்றை யெல்லாம், நினைந்து-சிந்தித்து, அஞ்சினான்-(தான் தமயந்தியைப் பிரிந்த செய்கையைக் குறித்துப்) பயந்தவனாய், அற உயிர்த்து - மிகவும் மூச்சு விட்டு (அதாவது: பெருமூச்சு விட்டு), ஆவி அழிந்தான் - உயிர் குறையப் பெற்றான் (அதாவது யாதொரு செயலுமற்று மூர்ச்சித்தான்); [எ-று.]

நளன் முன்னுரைத்தபடி நாரையை நோக்கிக் கூறிவிட்டு மற்றொரு பக்கம் நோக்கினான்; அங்கே புன்னை விருக்ஷத்திலுள்ள மலரில் பொறிவண்டு சேர்ந்து அதன் மகரந்தத்தைக் கிண்டித்தன் பெட்டையை உண்ணும்படி அதில் விட்டுத் தான் உண்ணாமல் அதற் கபாயம் நேராதபடி பக்கத்தில் அதனைக் காத்துக் கொண்டிருந்தது. அதைப் பார்த்தவுடனே நளனுக்கு, "அந்தோ! இவ்வஃறிணைப் பிராணியினிடத்துள்ள பாரியாள் நேசம் நம்மிடத்திலில்

லாமற் போயிற்றே; நாம் தமயந்தியை நீத்து வந்தது மகா பாதகமாமே" என்று திகிலுண்டாகிற்று; அதனாலேயே அவன் பெருமூச்சு விட்டுத் தான் செய்தவற்றை யெல்லாம் நினைந்து ஆவி சோர்ந்தான்.

'கன்னிப்பெடை புன்னை நறுந்தாது கோதியுண்ணப் பொறி வண்டு காத்திருக்கும்' எனமாற்றி, நறுந்தாது கோதிய தொழிலைப் பெட்டைக்கேற்றி, 'அஃதுண்ணும் வரை பொறி வண்டு காத்திருக்கும்' எனவும் பொருளுரைக்கலாம். கன்னி - அழியாவியல்பு; அஃதிங்கே இளமை கெடாத்தன்மையை யுணர்த்தி நின்றது; ஆகவே, 'கன்னிப்பெடை' என்பது. 'இளம்பெடை' எனப்பொருள்படும். 'உண்ண' என்னும் எச்சத்தைப் பொருட்டுப் பொருளிலுங் கொள்ளலாம்; அப்போது 'உண்ணும் பொருட்டு' எனப் பொருள் விரிக்க வேண்டும். அஞ்சினான்-முற்றெச்சம். 'ஆவியழிந்தான்' என்பதில் ஆவி என்னும் சினைவினை முதலோடு முடிந்தது.

நளன் நண்டைப் பார்த்துக் கூறுதல்.

340. காதலியைக் காரிருளிற் கானகத்தே கைவிட்ட
பாதகனைப் பார்க்கப் படாதென்றோ—நாதம்
அளிக்கின்ற வாழிவா யாங்கலவ ஓடி
ஒளிக்கின்ற தென்னோ உரை.

(இ-ள்.) (அவ்வாறு ஆவி சோர்ந்த நளன் மேலும் அங்கே தன்னைக் கண்டோடி யொளித்த ஒரு நண்டைப்பார்த்து), அலவ - நண்டே!, நாதம் அளிக்கின்ற-ஓசையைத் தருகின்ற (அதாவது: ஒலிக்கின்ற), ஆழிவாய்-சமுத்திரத்தினிடத்தில், ஓடி ஒளிக்கின்றது - நீ ஓடி ஒளித்துக்கொள்ளுகின்றது, என்-என்ன காரணத்தால்?, காதலியை-ஆசைக்குரியவளாகிய மனைவியை, கார் இருளில்-கரிய இருட்டில், கானகத்தே-காட்டிலே, கைவிட்ட-நீக்கிவிட்டு வந்த, பாதகனை-பாவியாகிய என்னை, பார்க்கப்படாதுஎன்றோ - பார்த்தல் கூடாது என்றோ?, உரை-சொல்வாயாக (என்று உரைத்தான்).

கடற்கரையிலுள்ள நண்டு, மனிதரைக் கண்டவுடன் அவர்களுக்குப் பயந்தோடி மறைதல் இயல்பு; அவ்வியற்கைப் படியே இங்கு நளனைக் கண்டபோதும் ஓடி மறைந்தது; அதனை, தன்னைப் பார்க்கப் படாதென்ற காரணத்தால் நிகழ்ந்த செய்கையாகக் கற்பித்துக் கூறி இரங்கினான் நளன். மனதில் ஒன்றை அதிகமாகச் சிந்தித்துக் கொண்டிருக்கும் மனிதர்க்கு மாதலின் இங்குத் தமயந்தியின் பிரிவு குறித்து மிகவும் வருந்தி யிருந்த நளனுக்கு இவ்வளம் நண்டின் செய்கை தன்னைக் குறித்தே நிகழ்ந்ததாகத்

தோற்றிற்று. நளன் இவ்வாறு கற்பித்துக் கூறியது தற்குறிப் பேற்றவணியின் பாற்படும். நளன் முதலில் நண்டை நோக்கி அஃதோடி மறைந்ததற்குக் காரணத்தை வினவிப் பின்னர், 'நம்மைப் பார்த்தல் கூடாதென்பது தான் காரணமாக விருக்கலாம்' என்று துணிந்து, 'என்னைப் பார்க்கப்படாதென்றோ மறைகின்றாய்?,' என்று கூறினான்; ஆதலின், இச்செய்யுளை, "அலவ! நாதம் அளிக்கின்ற ஆழிவாய் ஓடி ஒளிக்கின்றது என்னோ, காதலியை........ கைவிட்ட பாதகனைப் பார்க்கப்படாதென்றோ?, உரை" என்று மாற்றி அநுவயங் கொள்ளவேண்டும். காவிய விலக்கணத்திற் சேர்ந்த கடற்கரைக் காட்சியும் பிரிவாற்றாது வருந்துதலும் இங்கமைந்தன; இக்கடற்கரைக் காட்சி முதனூலிற் கூறப்படவில்லை. இங்கு நளன் நண்டை நோக்கிக் கூறியதாக ஆசிரியர் உரைத்தது போலவே நைடத நூலாசிரியரும்,

"ஆவி யன்னதோ ரணங்கினை யரையிருள் நீத்த
பாவி யேன்முக நோக்குறிற் பழிவரு மென்றோ
மேவு சேக்கையிற் குருகிளம் பேட்டினம் வெருவிச்
சேவ லோடகன் றேகுவ தெனமனந் திகைத்தான்."

என நளன் பறவையை நோக்கிக் கூறியதாக உரைத்தல் காண்க.

காதலி - அன்புடையவள்; காதல் - அன்பு, அதனையுடையாள் காதலி; இதற்கு ஆண்பால் பெயர்-காதலன்; இக்காரணப் பெயர் கணவனுக்கும் மனைவிக்கும் வருதலோடு புத்திரனுக்கும் புத்திரிக்கும் வருதலுமுண்டு. கானகம் - காட்டிடம்; கான் - காடு, அகம்- இடம். கை-பக்கம், ஆதலின், 'காதலியைக் கைவிட்ட என்பதற்கு, 'மனைவியைப் பக்கத்தி லிருந்தும் நழுவவிட்ட' என்பது நேர்பொருளாம்; இது 'மனைவியைப் பிரிந்த' என்னும், பொருளை விளக்கி நின்றது; இனி மனைவி கைப்பொருள் போன்றவளாதலின், 'காதலியைக் கைவிட்ட' என்பதற்கு, 'மனைவியைக் கையினின்றும் நழுவவிட்ட' எனப்பொருளுரைத்தலு மொன்று. கை-தமிழுபசர்க்கம். பாதகம், நாதம் என்பன வடசொற்கள் 'பார்க்கப்படாது' என்பதை ஒரு சொன்னீர்மைத்தாகக் கொண்டு திணைபால் இடங்களுக்கெல்லாம் செல்லும் எதிர்மறை வினைமுற்றென்றாயினும், 'பார்க்க-படாது' என்று பிரித்துப் பார்க்க என்னும் செயவெனெச்சம் பார்த்தல் என்னும் தொழிற் பெயர்ப் பொருளில் வந்ததாகக் கொண்டு பார்த்தல் செய்யப்படா தென்றாயினும் இலக்கணங் கூறுக; 'வஞ்சரையஞ்சப்படும்' 'கற்றறிந்தோரைத் தலை நிலத்து வைக்கப்படும்' 'கீழ்களைச் செய்தொழிலாற் காணப்படும்' என்று உடன் பாட்டு முடிபுகள் வருதலால் 'பாதகனைப் பாக்கப்படாது' என்ற எதிர் மறை முடிபையும் இலக்கணத்திற் கொத்ததாகக் கொள்க, என்றோ

என்பதில் ஓ-வினாப்பொருளது. ஆழி-ஆழத்தையுடையது; இதில், இ-கருத்தாப் பொருள் விகுதி, வாய்-ஏழனுருபு. அலவன் என்ற அஃறிணைப் பெயர் இறுதி கெட்டு அலவ எனவிளியாயிற்று; (நன். பெ. 54.) 'ஒளிக்கின்றது' என்ற தொழிற் பெயர் இங்கு வினைமுற்றுத் தன்மையடைந்து நின்றது. முதலடி முற்றுமோனை. என்னோ ஓ-அசை. ஆங்கு-அசை; எழுவாயும் பயனிலையும் கூட்டி முடிக்கப்பட்டன.

நளன் நீலோற்பலம் முதலியவற்றை நோக்கிக் கூறுதல்.

341. பானலே சோலைப் பசுந்தென்றல் வந்துலவுங்
கானலே வேலைக் கழிக்குருகே—யானுடைய
மின்னிமைக்கும் பூணாளவ் வீங்கிருள்வா யாங்குணர்ந்தால்
என்னினைக்குஞ் சொல்வீ ரெனக்கு.

(இ-ள்.) (அவ்வாறு கூறியவன் பின்னரும் பானல் முதலியவற்றை நோக்கி) பானலே-நீலோற்பலமே!, சோலை-பொதிகை மலையின் சந்தன மரச்செறிவிலிருந் துண்டாகிவரும், பசுந்தென்றல்-பசுமையான (குளிர்ந்த அல்லது இளமையான) தென்றற்காற்றானது, வந்து உலவும்-வந்து வீசுகின்ற, கானலே-கடற்கரைச் சோலையே!, வேலை-கடலைச்சார்ந்த, கழி-உப்பாற்றிலுள்ள, குருகே-நாரையே!, யான் உடைய-நான் மனைவியாகக் கொண்ட, மின் இமைக்கும்-பிரகாசம் வீசுகின்ற, பூணாள் ஆபரணங்களை யணிந்தவளான தமயந்தி, ஆங்கு-அவ்விடத்தில் (அதாவது: அந்தப் பாழ் மண்டபத்தில்), அவ்வீங்கு இருள்வாய் அந்த-மிகுந்த இருட்பொழுதில் உணர்ந்தால்-(தனியே விழித்துக் கொண்டு நான் இல்லாததை) அறிந்தால், என் நினைக்கும்-என்ன நினைப்பாள்?, எனக்குச் சொல்வீர்-எனக்கு அதனைக் கூறுவீராக, (என்றான்.)

நீலோற்பல மலரும், கடற்கரைச் சோலையும், தென்றலும், கழிக்கரை நாரையும் காதலையுண்டாக்கக் கூடியனவாதலின், நளன் அக்கடற்கரையிற் சேர்ந்தவுடன் அவற்றால் அவனுக்குத் தமயந்தியின் எண்ணமும், அவளைப் பிரிந்ததாலாய துன்பமும் அதிகரித்தமையால் அவன், "அந்தோ! தமயந்தி அந்தப் பாழ்மண்டபத்தில் விழித்துக்கொண்டவுடன் என்ன நினைப்பாளோ" என்று கவலை கொண்டான். அதனாலேயே அவன் அவற்றினிடம் இவ்வாறு வினவினான். தென்றல் பொதிகைச் சோலையிலிருந்து வந்துலவக் கூடியதாதலின், 'சோலைப் பசுந்தென்றல்', என்னப்பட்டது. கழி-உப்பாறு; சமுத்திரச் சார்பாகவுள்ளது; நாரை இதன் கரையிலிருந்து வசித்து வருமாதலின், 'கழிக்குருகு' என்று விளிக்கப் பட்டது.

பச்சை ஜலம் என்றதில் பசுமை குளிர்ச்சியின் மேலும், பசுங் குழவி என்றதில் இளமையின் மேலும் நிற்றல் போல இங்குத் தென்றன் மேனின்றதால் 'பசுந்தென்றல்' என்பதற்குக் 'குளிர்ந்த தென்றல்' என்றேனும், 'இளந்தென்றல்' என்றேனும் பொருள் கொள்ளலாம். தென்றல்-தெற்கிலிருந்து வருவது; இதில் தெற்கு-பகுதி, இதனீற்றுயிர் மெய்யாகிய 'கு' நீங்கி, றகரம் னகரமாயிற்று; (நன். உயி. 36) அங்ஙனமானது பெயர் விகுதியாகிய 'அல்' சேர்ந்து, து-சாரியை பெற்று அது றகரமாய்ச் சந்தியால் உகரம் கெட 'தென்றல்' என்றாயிற்று. உடைய-உடைமை யென்னும் பண்படியிற் பிறந்த குறிப்புப் பெயயரெச்சம். பூண் - பூணப்படுவது; இது செயப்படுபொருள் விகுதி புணர்ந்து கெட்ட பெயர். 'பூணாள் நினைக் கும்' என்பதில் செய்யும் முற்று பெண்பாலுக்குவந்தது. ஆங்கு அசை யெனலுமாம்; இச்செய்யுளிலும் எழுவாய், பயனிலை வருவித் துரைக்கப் பட்டன.

நளன் சமுத்திரத்தை நோக்கிக் கூறுதல்.

342\. போவாய் வருவாய் புரண்டு விழுந்திரங்கி
நாவாய் குழற நடுங்குறுவாய்—தீவாய்
அரவகற்று மென்போல வார்கலியே மாதை
இரவகற்றி வந்தாய்கொ லின்று.

(இ-ள்) (அவ்வாறு வினவிய நளன் பின்னரும் சமுத்திரத்தை நோக்கி) ஆர்கலியே-சமுத்திரமே!, போவாய் வருவாய்-போகின்றாய் மறுபடியும் திரும்பி வருகின்றாய், புரண்டு விழுந்து - உருண்டு வீழ்ந்து, இரங்கி-பரிதவித்து,(ஒலித்து), நாவாய் - நாவோடு கூடிய வாய், (கப்பல்), குழற-தடுமாறிப்போக,(அலைய), நடுங்குறுவாய்-நீ நடுக்கங் கொள்கின்றாய், (ஆதலின்) தீவாய்-நெருப்பினிடத்தி லிருந் தும், அரவு - பாம்பை, அகற்றும் - நீக்கின, என்போல - என்னைப் போலவே, (நீயும்), மாதை-மனைவியாகிய பெண்ணை, இன்று-இன் றைக்கு, இரவு-இராத்திரியில், அகற்றி வந்தாய் கொல்-நீக்கிவிட்டு வந்தனை போலும்?, (என்றும் கூறினான்)' [எ-று.]

நளன் மனைவியைப் பிரிந்ததனால் போதலும் வருதலுமாய்ப் பூமியில் வீழ்ந்து புரண்டு பேச்சுத் தடுமாறிப் புலம்பி நடுங்கி வருந் தினான். இச்செயல்களெல்லாம் கடலினிடத்தும் பொருந்தி யிருந் தன. ஆதலின், அவன், "இக் கடலும் நம்மைப் போலவே மனைவி யைப் பிரிந்திருக்குமோ" என்று நினைத்து இங்ஙனம் அதனிடத்து வினவினான். நீர், அலையினால் கரையோரத்தில் போதலும் வருத லும், புரண்டு புரண்டு வீழ்தலும், கப்பல்கள் காற்றினால் அலைத லும், எவ்விடத்தும் நீர் ஆடிக் கொண்டிருத்தலும் சமுத்திரத்திற்

குரிய செயல்களாம்; இவற்றைச் சிலேடை வகையால் மனிதர் செயல்களாகக் குறித்தான் நளன். இங்ஙனம் கூறிய நளன் கூற்றில் சிலேடையை அங்கமாகக் கொண்ட தற்குறிப்பேற்றவணி அமைந்திருத்தல் காண்க. நளன் தமயந்தியைப் பிரியுங்காலத்தில் போதலும் வருதலுமா யிருந்தா னென்பதை, "போயொருகால் மீளும் புகுந்தொருகால் மீண்டேகும்" என்னும் இந்நூல் கலிதொடர் காண்டச் செய்யுளடியானும்,செல்லும் வெந்துயரோடுஞ், "செல்லக் காலெழாது ஒல்லையில் மீளும்" என்ற நைடதச் செய்யுளடியானும் உணர்க. 'நாவாய்' என்பது கடலுக் காம்போது ஒருமொழி; நளனுக் காம்போது தொடர்மொழி. கார்க்கோடகனை நளன் தீயினின்று மெடுத்தவுடன் அவன் நளனைக் கடிக்க அந்நளன் கரிய நிறத்தை அடைந்தபடியால் அந்நிறத்தையுங் குறிப்பிட்டு "நிறத்தாலும் என்னைப் போன்ற நீ" என்பதை விளக்குதற் பொருட்டே, "தீவாய் அரவகற்று மென்போல" என்றான்.

புரண்டு என்பதில், புரள்-பகுதி. நடுங்குறுவாய் என்பதில் உறு-துணை வினை. 'தீவாய்' என்பதில், 'வாய்' என்னும் ஏழனுருபு ஐந்தாவதனீக்கப் பொருளில் வந்தது; இஃதுருபு மயக்கம்; இனி இது, 'தீவாய்ந்த அரவு' என வினைத் தொகையுமாம். 'அகற்றும்' என்பதில், அகல் என்பதன் பிறவினையான அகற்று-பகுதி; அதில் று பிறவினை விகுதி. ஆர்கலி-நிறைந்த ஓசை; இது வினைத் தொகைப் புறத்துப் பிறந்த அன்மொழித் தொகையாய்க் கடலை யுணர்த்திற்று; நிறைந்த ஓசையையுடைய தெனவிரியும். கடலை 'ஆர்கலியே' என்று விளித்தது, அதன் இயல்பான ஓசையைப் பிரிவாற் கதறுவதாகக் குறித்தற் பொருட்டாம். மாது-விருப்பத்திற் கிடமானவள்; விருப்பத்தையுணர்த்தும் 'மாதர்' என்ற உரிச்சொல், மாது என விகாரப்பட்டு ஆகுபெயராய் விருப்பத்திற்கிடமான பெண்ணை யுணர்த்தி நின்றது. 'வந்தாய் கொல்,' என்பதில் 'கொல்' என்னும் இடைச்சொல் வினாப்பொருளது; இது தற்குறிப்பேற்ற வுருவாய் வந்தது. போவாய், வருவாய், நடுங்குறுவாய் என்பவற்றில் வகர விடைநிலை-காலமுணர்த்தாது தன்மையுணர்த்தி நின்றது. போவாய் வருவாய்-முரண்தொடை. இச்செய்யுட் கருத்து, பிரிவுகாலத்தில் கடலை நோக்கி ஆண்பால் இரங்கியதாகும். இங்ஙனமே பெண்பால் இரங்குதலுமுண்டு. இச் செய்யுட் கண்ணும் இசை யெச்சமாக எழுவாயும், பயனிலையும் கூட்டியுரைக்கப் பட்டன.

நளன் அயோத்தி நகரடைதல்.

343. முன்னீர் மடவார் முறுவற் றிரள்குவிப்ப
நன்னீ ரயோத்தி நகரடைந்தான்—பொன்னீர்

முருகுடைக்குந் தாமரையின் மொய்மலரைத் தும்பி
அருகுடைக்கு நன்னாட் டரசு.

(இ-ள்) (அவ்வாறு கடற்கரையிற் புலம்பிய பின் பிரயாணஞ் செய்து) பொன் நீர்-பொன்னின் குணமாகிய, முருகு-அழகை, உடைக்கும்-சிதைந்து போகச் செய்கின்ற, (அதாவது: பொன்னினும் அழகு மிக்க), தாமரையின்-செந்தாமரையினது, மொய்மலரை-இதழ் நெருங்கிக் குவிந்த மலரை, (அதாவது: அரும்பை), தும்பி-வண்டுகள், அருகு-ஓரத்தில், (சென்று குடைந்து), உடைக்கும்-இதழ்களை நெகிழ்த்திவிடுகின்ற, நல்நாடு-சிறந்த நிடதேசத்திற்கு, அரசு-அரசனாகிய நளன், முன் நீர் - பழமையான நீரையுடைய சமுத்திரமானது, மடவார்-பெண்களின், முறுவல் திரள்-பற்களைப் போன்ற முத்துக்களின் தொகுதியை, குவிப்ப-அலைகளால் கொழித் தொதுக்கிக் கரையில் திரளாகச் சேர்க்க, (அதனைப்பார்த்து, 'இது தமயந்தியின் பல் வரிசையை ஒத்திருக்கின்றது' என்று சிந்தித்துக் கொண்டே போய்) நல்நீர்-நல்லநீர் வளம்பொருந்திய, அயோத்தி நகர் - அயோத்தியா புரி என்னும் நகரத்தை, அடைந்தான்-சேர்ந்தான்; [எ-று.]

முன்னே கடற்கரையைச் சேர்ந்து மனைவியை நினைத்து வருந்திய நளன் கார்க்கோடகன் சொற்படி அதன் வழியாகவே சென்று அயோத்தி நகரத்தையடைந்தான் என்பது இதன் கருத்து. கடலில் முத்துக்கள் அதிகமாயிருக்குமாதலின் அவற்றைக் கடல் நீரானது திரள் திரளாகக் கரையில் ஒதுக்கிக் கொண்டிருக்கும்; அவ்வாறொதுக்குவதைக் கடலோரமாகவேசென்ற நளன் பார்த்து அம்முத்தின் திரள்கள் தமயந்தியின் பல் வரிசையை நிகர்த்திருந்தபடியால் அவளெண்ணம் மனத்திலுதிக்க அவளைச் சிந்தித்துக் கொண்டே போயினான். இனி "முன்னீர்மடவார் முறுவல் திரள் குவிப்ப" என்ற தொடருக்கு, "சமுத்திரக்கரையில் உலாவும் பட்டினப் பெண்கள் புன்சிரிப்பின் கூட்டத்தைச் சேர்க்க (அதாவது: மிகுதியாகப் புன்னகை புரிய)" என்று பொருள் விரித்துச் "சமுத்திரக்கரையில் உலாவும் பெண்கள் தன்னைப் பார்த்துப் புன்னகைபுரிய நளன் கடலோரமாகவே சென்று அயோத்தி நகரத்திற்குப் புகுந்தான்" என உரைத்தலுமொன்று. இப்பெண்கள் நளனைக் கண்டு சிரித்ததற்குக் காரணம், கார்க்கோடகனால் அவனுக் கேற்பட்ட விகாரவடிவமேயாம். இங்ஙனம் பொருள் கொள்வதிலும், 'முன்னீர் மடவார்' என்பதற்குச் 'சமுத்திரக்கரையில் வாழும் நெய்தனிலப் பெண்கள்' எனவும், 'எதிரில் ஜலமெடுத்துச் செல்லும் மாதர்' எனவும் பொருள் கொள்ளலாம். 'தண்ணீரெடுத்து எதிரிற் செல்லும் மாதர்' எனப் பொருள் கொள்ளும்போது, முன் + நீர் + மடவார் = எனப் பிரித்தல் வேண்டும். நகரங்களிலுள்ள மாதர்கள் திரள் திரளாகக் குளத்

திற்குச் சென்று குடத்தில் நீரெடுத்து வருவார்கள்; அப்பொழுது ஏதேனும் அதிசயத்தைக் கண்டால் அவர்கள் ஒருவரோடொருவர் அதைப் பற்றிப் பேசிச் சிரிப்பது இயற்கை; ஆதலின், இங்கு நளனையும் கண்டு சிரித்தார்களென்க.

'முன்னீர்' என்பது, 'பழமையான நீர்' அல்லது, 'முந்திப் படைத்தநீர்' எனப் பொருள்பட்டு ஆகுபெயராய் அதனையுடைய கடலையுணர்த்தும்; கடவுள் நீரையே முந்திப்படைத்தாரென்று புராணங் கூறும். இனி, 'முந்நீர்' எனப் பாடமோதி அதற்கு, ஆக்கல், அழித்தல், காத்தல் என்னும் மூன்று தொழிலையும் செய்யும் நீர் எனவும்,'' ஆற்றுநீர், ஊற்றுநீர், மழைநீர் என்னும் மூன்றுநீர்' எனவும் பொருள் கூறலுமொன்று; சமுத்திர ஜலத்தில் இந்த மூன்று நீர்களும் அடங்கியிருத்தலின், அஃதிப் பெயர் பெற்றதென்க. பதவுரையில் கூறிய பொருளின்படி முறுவல்-உவமையாகு பெயராய் முத்தையுணர்த்தி நின்றது; 'முறுவல்' என்பதற்குப் 'புன்னகை' எனப் பொருள்கூறி அஃதாகுபெயராய் முத்தையுணர்த்திற்றெனினுமாம்' இச்செய்யுளில், 'முன்னீர் மடவார் முறுவற்றிரள் குவிப்ப' என்று பெண்களின் பற்களுக்கு முத்துக்களை உவமை கூறியிருத்தல் போல நைடதத்தில்,

"மதர்வை நோக்கிதன் வாள்நகை யெனவுயிர் வருத்தும்
கதிர்சேய் நித்திலம் வரன்றேறி திரைக்கடல் கண்டான்"

என்ற செய்யுளடிகளிலும் கூறியிருத்தலையும், இப்பொருளே பெரும்பான்மையும் அதிலும் அடங்கியிருத்தலையும் காண்க. மடவார்-இளமையையுடையவர்; மடமை-இளமை; மாதர்க்கணிகலமான பேதமை யெனினும் அமையும். குவிப்ப-வினையெச்சம். 'பொன்னீர்' என்பதில், நீர்-நீர்மையென்ற பண்புப்பெயர் விகாரம் மையீறு கெட்டு நின்றது. 'மொய்ம்மலர்' என்பது அரும்பையுணர்த்தி நின்றது. இதழ்கள் நெருங்கிக் குவிந்திருத்தலும், வண்டு ஓரத்தைக் குடைந்து மலர்வித்தலும் அரும்பினிடத்தே யுள்ளனவாதலின் 'மொய்ம்மலர்' அரும்பெனக் கொள்ளப்பட்டது; இனித் தாமரை யரும்பு பொன்னிறமுடையதாதலின் அதற்கேற்பப் 'பொன்னீர்' என்ற குறிப்பினாலும் அஃதரும்பெனக் கொள்ளப்படும்.

இனி, "பொன்னீர் முருகுடைக்குந் தாமரையின் மொய்ம் மலரை'' என்பதற்குப்''பொன்னீர்-பொன்னின் குணமான செம்மையழகுகளையும் முருகு - தேனை அல்லது வாசனையையும், உடை-உடைய, குந்தா-குந்தியிராத, (அதாவது படிந்திருக்கின்ற), மரையின் மொய்மலரை-தாமரையின் வலிய அரும்பை,'' எனப் பொருளுரைத்தலுமொன்று; தாமரைக்கொடி படர்ந்திருப்பதாதலின், அதனைக் 'குந்தாமரை' எனல் பொருந்தும். இவ்வுரைக்குப் பின்னிரண்டடிகளும் திரிபு என்னுஞ் சொல்லணியுடையனவாம்.

"தாமரையின் மொய்ம்மலரைத் தும்பியருகுடைக்கும் நன்னாட்டரசு" என்றதனால், 'நளன், வேண்டுவார்வேண்டியபடி தன் பொருளை வலியவந்து பெற்றுப்போம்படியான உதார குணமுள்ளவன்' என்ற குறிப்பும் விளங்கும். நளன், கார்க்கோடகனிடத்தினின்றும் புறப்பட்டுப் பத்தாவது நாளில் அயோத்தி நகரடைந்தானென்பது முதனூலால் விளங்குகின்றது; நைடத நூலாசிரியரும், "இன்ன தன்மையன் வைகலீரைந்துபோ யிறப்ப.....அன்னங்கண் படுவெள்ளநீ ரயோத்தி நாடடைந்தான்" என்று கூறியிருத்தல் காண்க. தாமரஸம் என்ற வடமொழி, தாமரையென விகாரப்பட்டு வந்தது.

நளன் ருதுபர்ணனுடைய வாயில் காப்போரிடம் சென்று தன்வரவை அம்மன்னனுக் குணர்த்தும்படி வேண்டல்.

344. மான்றேர்த் தொழிற்கு மடைத்தொழிற்கு மிக்கோனென்
றூன்றேய்க்கும் வேலா னுயர்நறவத்—தேன்றோய்க்குந்
தார்வேந்தற் கென்வரவு தானுரைமி னென்றுரைத்தான்
தேர்வேந்தன் வாகுவனாய்ச் சென்று.

(இ-ள்.) (அவ்வாறு அயோத்திக்குச் சென்ற பின்னர்) தேர்வேந்தன்-தேரையுடைய அரசனான நளன், வாகுவன் ஆய் - பாகுகனென்னும் பெயருடையவனாகி, சென்று-(ருதுபர்ணனுடைய அரண்மனை வாயிலிற்) போய், (துவாரபாலகரை நோக்கி), மான்தேர்த் தொழிற்கும் - குதிரைகள் பூட்டிய தேரைச் செலுத்துந் தொழிலிலும், மடை தொழிற்கும் - சோறு சமைக்கும் தொழிலிலும், மிக்கோன்-(யான்) சிறந்தவன், என்று-என்று சொல்லி, ஊன்-பகைவர்களுடைய உடம்பின் தசையை, தேய்க்கும் - உராய்ந்தழிக்கின்ற வேலான்-வேலாயுதத்தை யுடையவனாகிய, உயர்-உயர்ந்த, நறவம்-வாசனையுள்ள, தேன் தோய்க்கும் - தேனினால் நனைக்கப்பட்டிருக்கின்ற, தார்-மலர் மாலையையணிந்த, வேந்தற்கு - உங்கள் அரசனான ருதுபர்ணனுக்கு, என் வரவை-எனது வருகையை, (அதாவது: நான் வந்திருக்கின்ற செய்தியை), உரைமின் - சொல்லுங்கள், என்று உரைத்தான்-என்று சொன்னான்; [எ-று.]

ஒரு மனிதன் ஒரு புதியவிடத்திற்குச் சென்றபோது தனக்குத் தெரிந்த தொழில்களைக் கூறி அதன்மூலம் அங்குள்ளவர்களைப் பழக்கம் செய்துகொண்டு அவர்களிடம் வேலைக்கமருதல் இயற்கையாதலின், நளனும் அங்குச் சென்றவுடன் அவர்களிடம் தனக்குத் தெரிந்த தொழில்களையும், அவற்றில் தான் சிறந்திருத்தலையும் கூறி இத்தகைய் தொழில்களையுடைய தான் வந்திருப்பதை அரசனிடம் தெரிவிக்குமாறு வேண்டினான். இவ்வாறு கூறியதன் மூலம் நளன்

ருதுபர்ணனிடம் அத்தொழில்களைச் செய்யும் வேலையாளாய் அமர இசைந்திருப்பதையும் குறிப்பால் விளக்கினன். இவன், அசுவ வித்தையிலும், பாகத் தொழிலிலும் சிறந்தவனாதலாலும், தேர்ப் பாகனாக அமரும்படி கார்க்கோடகன் தனக்குக் கூறியிருக்கிறபடியாலும் தேர்ப்பாகனெனப்பெயர் வைத்துக்கொண்டே சென்று 'இவ்விரண்டு தொழில்களிலும் நான் வல்லவன்' என்று கூறினன். இவன் சமையல் தொழிலில் வல்லவனானது அக்கினிதேவன் கொடுத்த வரத்தினாலேயாம். இது

"மிடல்கெழு மேழக மேற்கொளு மேலோன்
உடைதிரை வேலையி னின்னமு தொப்ப
மடிதலில் வெங்கன லின்றியும் வாளா
அடிசி லடுந்தொழில் விஞ்சை யளித்தான்."

என்ற நைடதச் செய்யுளால் விளங்கும். இங்ஙனம் இவன் வரம் பெற்றதனால், நெருப்பில்லாமல் உருசி மிகுந்த உணவுகளைச் சமைக்குந் திறமை பெற்றான். இத்திறமையானது இன்னும் உலகத்தார், உயர்ந்த உணவுகளை, 'நளபாகம் போன்றவை' என்று உவமித்துக் கூறுவதன் மூலம் விளங்கும். அரசர்கள் அலங்காரத்திற்காகவும், அடையாளத்திற்காகவும், வெற்றிக்குறிகுறியாகவும் எப்பொழுதும் புஷ்பமாலையை யணிந்திருத்தல் இயல்பு; ஆதலின், 'தார்வேந்தன்' என்றார் புலவர். 'ஊன் தேய்க்கும் வேலான்' என்றது, தார்வேந்தனுக்கடை; இனி, இதனைத் தேர்வேந்தனுக்குங் கொள்ளலாம். நளன் அதிரதர், மகாரதர், சமரதர், அர்த்தரதர் என்னும் நால்வகை வீரர்களுள் அதிரதனாய்ச் சிறந்திருந்தவனாதலின், ஆசிரியர் அவனைத் 'தேர்வேந்தன்' என்றார். சதுரங்க சேனைகளில் தேர் சிறந்ததாதலின் அதனை மற்ற மூவ்வகைப் படைக்கும் உபலக்ஷணமெனவுங் கொள்ளலாம்.

மான், ஊன் என்பவற்றிலுள்ள, ன்-சாரியை; "ஆமாகோனவ் வணையவும் பெறுமே" (நன்-உரு-பு,9) என்பது விதி. விலங்கின் பொதுப் பெயராகிய மா-என்பது இங்கு இடம் நோக்கிக் குதிரையை உணர்த்தி நின்றது. தொழிற்கு-உருபு மயக்கம்; ஏழனுருபு நான்கனுருபாக மயங்கி வந்தது. மடை-மடுக்கப்படுவது; அதாவது: சோறு; இதில், மடு-பகுதி; ஐ-செயப்படுபொருள் விகுதி; மடுத்தல் உட்கொண்டு நிறைத்தல்; ஆகவே, 'மடை' என்பது 'சோறு' என்று பொருள்பட்டு 'மடைத் தொழில்' என்பது, 'சோறு சமைக்குந் தொழில்' எனப் பொருள்படும். மிக்கான்-வினையாலணையும் பெயர்; இதில் ஆகரவீற்றயல் ஆகாரம் ஓகாரமாயிற்று. (நன்-பொ.2) நனு என்பதில் குறிபதன்கீழ் ஆ, குறில் அம் சாரியை

சேர்ந்து நறவம் என்பதாயிற்று. உரைமின்-ஏவற்பன்மை. வாகுவன் காரணவாக்கப் பெயர்; கார்க்கோடகன் நளனைக் கடித்ததனால் அவனுடைய தோள் சிறுத்தது பற்றி அக் கார்க்கோடகனால் அவனுக் கிடப்பட்டதிது. மிக்கோன் யான்-தன்மையிற் படர்க்கை வந்த இடவழுவமைதி. வேலான் தார்வேந்தன் - இருபெயரொட்டுப் பண்புத் தொகை. தான்-அசை.

நளன் ருதுபர்ணனிடம் சேர்தல்.

345. அம்மொழியைத் தூத ரரசற் கறிவிக்கச்
செம்மொழியாத் தேர்ந்ததனைச் சிந்தித்தே—இம்மொழிக்குத்
தக்கானை யிங்கே தருமி னெனவுரைக்க
மிக்கானுஞ் சென்றான் விரைந்து.

(இ-ள்.) (நளன் அவ்வாறு கூறிய) அ மொழியை-அந்த வார்த்தையை, தூதர்-தூதுவர்கள் (செய்தியறிவிப்பவர்), அரசற்கு - ருதுபர்ண மன்னனுக்கு, அறிவிக்க - தெரிவிக்க, (அம்மன்னன்) அதனை சிந்தித்து - அந்த வார்த்தையை ஆலோசித்து, செம்மொழி ஆ தேர்ந்து-உண்மை வார்த்தையாகத் தெளிந்து, இமொழிக்குத் தக்கானை - இந்தச் சொல்லுக்குத் தகுந்த யோக்கியதையுடையவனை, இங்கே - இவ்விடத்தில், தருமின் - அழைத்துக் கொண்டு வந்து சேருங்கள், என உரைக்க - என்று அத்தூதுவரை நோக்கிக் கூறிக் கட்டளை யிட, (அவ்வாறே தூதுவர்களால் அழைத்துக் கொண்டு போகப் பட்டு), மிக்கானும் - (அசுவவித்தையிலும் மடைத்தொழிலிலும்) மிகுந்தவனாகிய நளனும், விரைந்து-துரிதமாகி, சென்றான்-போய் அவ்வரசனிடம் சேர்ந்தான்; [எ-று.]

நளன் கூறிய வார்த்தையைத் தூதுவர் போய்ச் சொன்னவுடனே ருதுபர்ணனுக் கது உண்மையானதாகத் தோற்றிற்று; அதனால் அவன், நளனை அழைத்து அவனுடைய தொழில் திறமையை நேரில் விசாரித் துணர்ந்து தன்னிடம் வேலைக்கு வைத்துக் கொள்ள விரும்பினான்; ஆதலின், நளனை அப்பொழுதே அழைத்து வருமாறு தூதுவர்க்குக் கட்டளை யிட்டான். அரசர் கட்டளையைத் தாமதமின்றி உடனே நிறைவேற்றுதல் மற்ற மனிதரின் கடமையாதலின் அக்கட்டளையைக் கேட்ட வுடனேயே நளன் அம் மன்னனிடம் விரைந்து சென்றான். அரசர் நோக்கம் அடிக்கடி மாறிவிடும் இயல்பினை யுடையதாதலின், அவர் குறிக்கும் காரியங்களை அறிஞர் உடனே செய்து நிறைவேற்றி விடுவர்.

மொழிக்குத் தக்கான் என்றது, அதன்படி காரியம் செய்யத் தக்கவன் என்னும் பொருளில் நின்றது. அரசற்கு என்பதில்

நான்கனுருபு-கோடற் பொருளது. ஆ-ஆக என்பதன் தொகுத்தல். உரைக்க-என்னும் செயவெனெச்சம் இங்கு இறந்த காலத்தில் வந்தது. மிக்கான்-மிகு என்னும் முதனிலைமேற் பிறந்த இறந்தகால வினையாலணையும் பெயர்; இதில் பகுதி யிரட்டிக் காலங்காட்டிற்று. தக்கான்-என்பதில் தகு-பகுதி. மிக்கானும் என்றதிலுள்ள உம்மை-இறந்தது தழுவிய எச்சப் பொருளது.

ருதுபர்ணன் வாகுவனாகிய நளனை நோக்கி வினவுதல்.

346. பொய்யடையாச் சிந்தைப் புரவலனை நோக்கித்தன்
செய்ய முகமலர்ந்து தேர்வேந்தன்—ஐயாநீ
எத்தொழிற்கு மிக்கா னியாது பெயரென்றான்
கைத்தொழிற்கு மிக்கானைக் கண்டு.

(இ-ள்.) (அவ்வாறு சேர்ந்த மாத்திரத்தில்) தேர்வேந்தன்-தேரையுடைய அரசனாகிய ருதுபர்ணன், கைத்தொழிற்கு மிக்கானை-(தேர்க்குதிரை செலுத்துதலும் சமையல் செய்வதுமாகிய) கைத்தொழில்களிற் சிறந்தவனான அவனை, கண்டு-பார்த்து, (முகக்குறிப்பால் இவன் சிறந்த புத்திமானாகவே யிருப்பானென் றறிந்து), தன்-தன்னுடைய, செய்ய-செம்மையாகிய, முகம் மலர்ந்து-முகமானது மலர்ச்சி யடையப்பெற்று, (அவ் வாகுகனென நடித்து வந்த) பொய் அடையா-பொய்சேராத, சிந்தை-உள்ளத்தையுடைய, புரவலனை-நளமகாராஜனை, நோக்கி-, ஐயா-ஐயனே! நீ—, எத்தொழிற்கு மிக்கான்-எத்தொழிலிற் சிறந்தவன்?, பெயர்யாது-உன்னுடைய பெயரென்ன?, என்றான்-என்று கேட்டான்; [எ-று.]

நளன்போய் ருதுபர்ணனைக் கண்டவுடன் அவன் முதலில் அந்நளனை நன்றாக உற்று நோக்கினான்; அவ்வாறு நோக்கிய மாத்திரத்தில் அந்நளனாகிய வாகுவன் தான் தூதுவரிடம் கூறியபடி இரண்டு தொழில்களிலும் வல்லவனாயிருப்பா னென்பதும் சிறந்த புத்திமானா யிருப்பானென்பதும் அவனுடைய முகத்தோற்றத்தால் விளங்கின. ஆதலின் ருதுபர்ணனுக்கு, "நாம் இன்று இருதொழில்களின் மிக்கா னொருவனைப் பெற்றோம்" என்னும் மகிழ்ச்சி மனத்திலுதித்தது; அதனால் முகம் மலர்ச்சியடைந்தது. அங்ஙனம் அவன் களிப்புற்றபடியால் மீண்டும் நளனை நோக்கி, "நீ எத்தொழில் வல்லாய்? உன் பெயரியாது?" என்று வினவினான். நளன் தொழில்களைத் தூதுவர் சொல்ல ருதுபர்ணன் அறிந்திருந்தும், அவனைத் தன்னிடத்தில் வைத்துக்கொள்ள வேண்டுமென்னும் எண்ணம் தனக்குதித்தபடியாலும், அவன் தொழில் பெயர் முதலியவற்றை நேரில் கேட்டுத் தெரிந்து கொள்வது முறைமையாத

லானும் இவ்வாறு அவனுக்குத் தெரிந்த தொழில்களைப் பற்றியும் பெயரைக் குறித்தும் அவனிடம் கேட்டான்.

ருதுபர்ணன், இங்குத் தொழிலாளியை 'ஐயா!' என்றது அன்பின் பொருட்டு வந்த மரபு வழுவமைதி: இனி, அவனுடைய யோக்கியதையைப் பற்றிக் கௌரவித்து ருதுபர்ணன் அங்ஙனம் விளித்தான் எனினும் அமையும். 'நீ மிக்கான்' என்றது முன்னிலையிற் படர்க்கை வந்த இடவழுவமைதி. புரவலன்-பாதுகாத்தலில் வல்லவன்; புரத்தல்-பாதுகாத்தல்; இதில் வல்லவன் புரவலன். செய்ய-செம்மை யென்னும் பண்படியிற் பிறந்த குறிப்புப் பெயரெச்சம்; செம்மையின்மையீறு போய் முன்னின்ற மகரமெய் யகரமாகத்திரிந்தது. "கைத்தொழிற்கு மிக்கானைக் கண்டு" என்பதை அடுத்தசெய்யுளுடன் இயைத்துக் குளகமாக்கி, அதற்குப் "படைவகுப்புத் தொழிலில் சிறந்த ருதுபர்ணனைப் பார்த்து" என்று பொருள்கொண்டு, 'பார்த்து' என்னும் எச்சத்தை, அடுத்த செய்யுளில், 'வல்லவன் யானென்றான்' என்ற முற்றோடு கூட்டி முடித்தலுமொன்று. கை-படை வகுப்பு மாகும்.

ருதுபர்ணன் வினவுகித வாகுகனாகிய நளன் கூறிய விடை.

347. அன்ன மிதிப்ப அலர்வழியுந் தேறல்போய்
செந்நெல் விளைக்குந் திருநாடர்—மன்ன
மடைத்தொழிலுந் தேர்த்தொழிலும் வல்லன்யா னென்றான்
கொடைத்தொழிலின் மிக்கான் குறித்து.

(இ-ள்.) (அவ்வாறுவினவியவுடன்), கொடைத்தொழில்-ஈகைத்தொழிலில், மிக்கான் - மிகுந்தவனாகிய நளன், குறித்து - ருதுபர்ணனை நல்லவனாக மதித்து, (அவன் முகத்தை நோக்கி), அன்னம் - அன்னப்பறவைகள், மிதிப்ப - மேலேறி மிதித்தலினால், அலர் - தாமரை மலர்களினின்றும், வழியும் - வடிகின்ற, தேறல்-தேனானது, போய்-(வாய்க்கால்களின் வழியாக நீரோடு) கலந்தோடி, செந்நெல்-செந்நெற்பயிரை, விளைக்கும்-செழிப்புற்று வளர்ந்து விளையச் செய்கின்ற, திரு-இலக்குமி வாசஞ்செய்யும்படியான, நாடர்-(கோசல) நாட்டிலுள்ளார்க்கு, மன்ன-அரசனே!, யான்-நான், மடைத்தொழிலும்-சோறு சமைக்குந் தொழிலிலும், தேர்த்தொழிலும்-தேரைச் செலுத்துந்தொழிலிலும், வல்லன்-வல்லவன், என்றான்-என்றுரைத்தான்;]எ-று.]

ருதுபர்ணன் மேற்கூறியபடி வினவியவுடன் நளன் அவனை நோக்கி, "மன்னனே! நான் மடைத்தொழிலிலும்தேர்த்தொழிலிலும் வல்லவன்" என்று கூறினான் என்பது இதன் கருத்து. ருதுபர்ணன்

தொழிலையும் பெயரையும் வினவியதற்கு நளன் தன் தொழில்களை மாத்திரம் கூறியதென்னையெனின், தொழில்களைக் கூறிய மாத்திரத்தில் அவைகாரணமான பெயர்களும் அமையுமென்பது பற்றி யென்க. 'மடைத்தொழிலினும் தேர்த்தொழிலினும் வல்லன்' என்றதனால் அத்தொழில்களினடியாகச் சுயம்பாகியென ஒரு பெயரும், வாருகன் என்று ஒரு பெயரும் அமைந்தன. ஆதலின், நளன் தன் தொழில்களை மட்டுங்கூறி அவற்றின் மூலம் பெயர்களையும் விளக்கினான். இதனாலேயே அவன் பெயர்களை வெளிப்படக் கூறவில்லை. இங்ஙனம் அவனுக்கு இரண்டு பெயர்கள் ஏற்பட்டிருப்பினும், கார்க்கோடகன் சொற்படி வாருகன் என்றபெயரை முதலிலேயே அவன் வைத்துக்கொண்டு சென்றதனால் அப்பெயரே பெரும் பான்மையும் வழங்கும்.

இச்செய்யுளின் முதலிரண்டடிகளில் கோசல நாட்டின் வளங்கள் உயர்வுநவிற்சியாக அமைந்துள்ளன. அலர், மலர்கட்குப் பொதுப்பெயராயினும், அதில் அன்னத்தின் செய்கை கூறப்பட்டமையால் தாமரைமலரெனக் கொள்ளப்பட்டது; அன்னம் பெரும்பான்மையும் தாமரையிலேயே வாசஞ்செய்யும். இனிப் "பூவெனப்படுவது பொறிவாழ்பூவே" என்ற நியாயம் பற்றியும் இங்ஙனம் கொள்ளலாம். முதலெழு வள்ளல்களில் நளனும் ஒருவனாதலின், 'கொடைத்தொழிலில் மிக்கான்' எனப்பட்டான். தேறல்-தெளிவுள்ளது; தெளிதல் என்னுந் தொழிற் பெயர் ஆகுபெயராய் அதனையுடைய மதுவை யுணர்த்தி நின்றது. நெல்லுக்குச் செம்மை, செழிப்புப் பற்றி வந்த பெயர்; நெற்பயிரின் தானியம் சிவந்திருத்தல் பற்றி வந்த தெனினுமாம். வல்லன்-தன்மை யொருமைக் குறிப்பு முற்று. கொடை - ஐவிகுதிபெற்ற தொழிற் பெயர். அன்னம்-ஹம்ஸம் என்ற வடமொழித்திரிபு. மிதிப்ப-செயவெனெச்சம்; இது காரணப்பொருள தாதலின் இறந்த காலத்ததாம். அலர் வழியும்-ஐந்தாம் வேற்றுமைத்தொகை. 'தொழிலும்' என்பதில் இல்லுருபுதொக்கது.

அடுத்த செய்யுளில் தமயந்தியின் செய்தி கூறப்படுவதால், இங்கு நளன் செய்தி முடிவுறாதிருப்பினும் கதைத்தொடர்ச்சி பற்றி, "நளன் இவ்வாறு கூறியதைக் கேட்டு ருதுபர்ணன் அவனைத் தனக்குத் தேர்ப்பாகனாக வைத்துக்கொள்ள, அவன் மனைவியை விட்டகன்று வந்த வருத்தத்துடனே அங்குத் தங்கியிருந்தனன்" எனக்கூட்டி முடித்துக் கொள்ள வேண்டும். இனித் தந்தையிடம் சென்றிருந்த தமயந்தி ஆங்கிருந்து தன் நாயகனைத் தேடுதற்குத் தூதனுப்புஞ்செய்தி கூறப்படும்.

தமயந்தி நளனைத் தேடுதற்குப் புரோகிதனை அனுப்பத் தொடங்குதல்.

348. என்னை இருங்கானி னீத்த விகல்வேந்தன்
தன்னைநீ நாடுகெனத் தண்கோதை—மின்னுப்
புரைகதிர்வேல் வேந்தன் புரோகிதனுக் கிந்த
உரைபகர்வ தானா ளுணர்ந்து.

(இ-ள்.) (நளன் அங்ஙனம் ருதுபர்ணனிடம் சேர்ந்திருக்க), தண்கோதை - குளிர்ச்சி பொருந்திய மாலையை யணிந்தவளான தமயந்தி, (தன் நாயகனைத் தேட நினைந்து), உணர்ந்து - (அவனைக் காணும் உபாயத்தைக் குறித்து ஆலோசித்து ஒரு மார்க்கத்தை) அறிந்து, மின்னுபுரை-மின்னலை நிகர்த்த, கதிர்-பிரகாசம் பொருந்திய, வேல் - வேலாயுதத்தையுடைய, வேந்தன் - அரசனாகிய வீமனென்னும் தன் தந்தையினுடைய, புரோகிதனுக்கு - வைதீக காரியஞ் செய்யும் ஆசாரியனாகிய ஒரு வேதியனுக்கு, என்னை—, இருங்கானில்-பெரிய காட்டிலே, நீத்த-விட்டுப் பிரிந்து போன, இகல்-வெற்றி பொருந்திய, வேந்தன் தன்னை - அரசனாகிய என் நாயகனை, நீ நாடுகென - நீ தேடுவாயாக என்று, இந்த உரை - இந்த வார்த்தையை, பகர்வது ஆனாள் - சொன்னாள்; [எ-று.]

தமயந்தி தன் நாயகனைத் தேடிக்காணும் மார்க்கத்தையுணர்ந்து, வீமராஜனுடைய புரோகிதனை நோக்கி, 'நீ என் நாயகனைத் தேடுவாயாக' என்று அதன் பொருட்டுக் கீழ்வரும் வார்த்தையை உரைத்தாளென்பது இதன் கருத்து. கீழ் வரும் வார்த்தையாவது அவனைக் காணும் உபாயம் பொருந்திய வார்த்தையாம். அது அடுத்த செய்யுளில் வரும். இங்குக் கூறிய புரோகிதன் பெயர் பர்ணாதன் என்பதாம்; இது முதனூலா லறியப்படும். இருமை + கான் = இருங்கான்; இதில் பண்புப்பெயரின் மை இறுதிபோய் இனமெல்லெழுத்து மிக்கது. இருமை பெருமை 'நாடுகஎன' என்பது அகரந்தொகுத்தலாய், 'நாடுகென' எனவந்தது. தண்கோதை - பண்புத் தொகைப் புறத்துப் பிறந்த அன்மொழித்தொகை. இனித் 'தண்கோதை' என்பதற்குக் 'குளிர்ச்சியான பூமாலை போல மென்மையவளான தமயந்தி' எனப் பொருள் விரித்துக் 'கோதை' என்பதை உவமையாகு பெயராகக் கோடலுமொன்று. மின் + புரை = மின்னுப்புரை; இது, "மின்பின் பன் கன் தொழிற் பெயரனைய" (நன்-மெய்-14) என்பதன் விதிபற்றி, உகரச்சாரியை பெற்று, "இயல்பினும் விதியினும்" என்றதன் பொதுவிதியால் வலிமிக்கு வந்தது. புரை-உவமையுருபு. புரோகிதன் - புரோஹிதன் என்ற வடசொற்றிரிபு; வைதீக காரியங்களில் முன்னே வைக்கப்படுபவனென்று காரணப்பொருள் தரும். பகர்வது ஆனாள் - சொல்லுதல்

உண்டாகப் பெற்ருள்; 'சொன்னுள்' என்பது இதன் திரண்ட பொருள். 'புரோகிதனுக்கு' என்பதில் நான்கனுருபுத் தொடர் இரண்டனுருபும் பயனும் தொக்க பொருளில் வந்தது.

தமயந்தி, புரோகிதனுக்கு நளனைக் கண்டுபிடிக்கு முபாயங் கூறல்.

349. காரிருளிற் பாழ்மண்ட பத்தேதன் காதலியைச்
சோர்துயிலி னீத்த துணிவன்ருே—தேர்வேந்தற்
கென்றறைந்தா னேர்நின் றெதிர்மாற்றந் தந்தாரைச்
சென்றறிந்து வாவென்ருள் தேர்ந்து.

[இ-ள்.] (தமயந்தி மேற் கூறியபடி புரோகிதனிடத்தில் சொன்னதாவது; அவள் அவனை நோக்கி), தேர்ந்து-ஒருபாயத்தை நிச்சயித்து, கார் இருளில்-கரிய இருட்டில், பாழ் மண்டபத்தே-பாழடைந்த ஒரு மண்டபத்தினிடத்திலே, தன் காதலியை-தன் ஆசைக்குரியவளாகிய நாயகியை, சோர் துயிலில்-அறிவு சோர்ந்திருக்கிற நித்திரை சமயத்தில், நீத்தல்-விட்டுச் செல்லுதல், தேர்வேந்தற்கு-தேரையுடைய அரசனுக்கு, துணிவு அன்ருே-(இரக்கமின்றியும் பாவத்திற்கஞ்சாமலும் செய்யும் ஒரு) தைரியமான காரியமல்லவா?, என்று-என்று (நீ ஒவ்வோரிடத்திலும்), சென்று-போய், அறைந்தால்-சொன்னுல், (எவரேனும் இதற்கு மறுமொழி சொல்வார்; அங்ஙனம் யாராவது), நேர் நின்று-(உனக்கு) எதிரில் நின்று, (இவ்வார்த்தைக்கு), எதிர்மாற்றம்-மறுமொழி, தந்தாரை-கொடுப்பாரை, (அதாவது: மறுமொழி கூறுவோர்களை), அறிந்துவா-தெரிந்துகொண்டு வருவாயாக, என்ருள்-என்று தமயந்தி கூறினுள்; [எ-று.]

நளன், இராத்திரியில் பாழ் மண்டபத்திலே தூங்குந்தருணத்தில் தன் காதலியைவிட்டு நீங்கிச்சென்ற இச்செய்தி, நளனுக்கும், தமயந்திக்குமே தெரிந்த இரகசியமாதலின், இதனைக் குத்துப்பாடாகக் கூறுங்காலத்தில் இதற்கு நளனெருவனே ஆத்திரங்கொண்டு மறுமொழி கூறுவன்; இதன் மூலமாக அவனை எளிதிற்றெரிந்துகொள்ளலாம்; ஆதலின் தமயந்தி இவ்வுபாய மொழியை ஆராய்ந்தறிந்து புரோகிதனிடம் கூறினுள்.

பாழ்-அழிவு, வெறுமை. 'தன் காதலி' என்றதனுல், 'அவள் தனதன்புக்கிடமானவள்' என்ற பொருளும், 'தன்னிடத்தே அன்புடையவள்' என்ற பொருளும் விளங்கும். ஆகவே, அவள் எவ்விடத்தும் எக்காலத்தும் எக்காரணத்தை முன்னிட்டும் கைவிடத்தகாதவள் என்பது அமையும். 'வேந்தற்குத் துணிவன்ருே' என்றது இழிவுகுறிக்கும் ஒரு நிஷ்டூரச் சொல்லாம். துணிவு-

தைரியம், இஃதிங்கே ஆகுபெயராய்ப் பாவத்துக்கஞ்சாது செய்யும் செய்கை மேனின்றது. 'அன்றோ' என்பதிலுள்ள ஓகாரம் தேற்றப்பொருளது. காரிருள் பண்புத்தொகை; கருமையில், மை-விகுதிகெட்டு நடுவுகரம் போய், ஆதி நீண்டது. சோர்துயில்-வினைத்தொகை. தந்தாரை-உயர்விணல் ஒருமையிற் பன்மைவந்த பால்வழுவமைதி; ஆண்பால் பலர்பாலாயிற்று; (நன்-பொது-28) 'தருபவரை' என வருதற்பாலது 'தந்தாரை' என வந்தது விரைவு அல்லது இயல்பு பற்றி எதிர்காலம் இறந்தகாலமாக மாறி வந்த காலவழுவமைதி யெனப்படும்; (நன்-பொ-33). தருதல்-இங்குச் சொல்லுதற் பொருளில் நின்றது. அறைந்தால் என்பதற்குப்பின் சிலவாக்கியங்கள் இசை யெச்சமாகக் கூட்டி முடிக்கப்பட்டன. அறைந்தால்-மன்பதில், ஆல்-வினையெச்ச விகுதி; அசையெனினு மொன்று.

புரோகிதன் அயோத்தி நகரடைதல்.

350. மின்னாடு மால்வரையும் வேலையும் வேலைசூழ்
நன்னாடுங் கானகமு நாடினான்—மன்னு
கடந்தாழ் களியானைக் காவலனைத் தேடி
அடைந்தா னயோத்தி நகர்.

(இ-ள்.) (தமயந்தி அவ்வாறு கூறியவுடனே அந்தப் புரோகிதன் அவ்விடத்தினின்றும் புறப்பட்டு), மின் ஆடும்-(மேகங்கள் சேர்ந்திருப்பதால்) மின்னல் அசைந்துகொண்டிருக்கின்ற, மால் - பெரிய, வரையும்-மலைகளிலும், வேலையும்-சமுத்திரத்திலும், வேலை சூழ்-அக்கடல் சூழ்ந்த, நல் - நன்மையாகிய, நாடும்-தேசங்களிலும், கானகமும் - வனங்களிலும், (போய்) நாடினான் - ஆராய்ந்தவனாய், (முடிவில்), மன்னு - பொருந்திய, கடம் - காமநீர், தாழ் - ஒழுகப் பெற்ற, களி-செருக்குள்ள, யானை-யானையையுடைய, காவலனை-அரசனாகிய நளனை, தேடி-தேடிக்கொண்டு, அயோத்திநகர்-அயோத்தியாபுரியை, அடைந்தான்-சேர்ந்தான்; [எ-று.]

மேற்கூறியபடி தமயந்தியின் கட்டளையைப்பெற்ற புரோகிதன், மலை, கடல், நாடு, வனம் முதலியவைகளிலெல்லாம் நளனைத் தேடிக் காணாமல் முடிவில் அயோத்தி நகரடைந்தான் என்பது இதன் கருத்து. மலைகள் மேகமண்டலம் வரை அளாவி அவற்றில் மேகங்கள் சஞ்சரிக்குமாதலின், அடிக்கடி மின்னலுண்டாகி ஆடிக்கொண்டிருக்கும். வேலை என்றது சமுத்திர மத்தியிலுள்ள தீவுகளை. உம்மைகள் - எண்ணுப்பொருளன. நாடினான் - முற்றெச்சம். கடம்-யானைக்கன்னம்; இஃதாகுபெயராய் அதில் வழியும் மதநீரையுணர்த்திற்று; இது வடசொல்.

அயோத்தியில் புரோகிதன் சொன்னதைக் கேட்டு நளன் எதிர்வருதல்.

351. கானகத்துக் காதலியைக் காரிருளில் கைவிட்டுப்
போனதுவும் வேந்தற்குப் போதுமோ—தானென்று
சாற்றினு னந்தவுரை தார்வேந்தன் தன்செவியி
லேற்றினன் வந்தா னெதிர்.

(இ-ள்.) (அவ்வாறு புரோகிதன் அயோத்தியிற் சேர்ந்தவுடன்), கானகத்து-வனத்தில், காதலியை-மனைவியாளை, கார் இருளில்-கரிய இருட்டில், கைவிட்டுப் போனதுவும்-நீங்கிச் சென்ற செய்கையும், வேந்தற்கு-அரசனுக்கு, போதுமோ-தகுமோ?, என்று சாற்றினன்-என்றுரைத்தான், அந்தவுரை-அந்த வார்த்தையை, தார்வேந்தன்-மாலையை அணிந்த அரசனாகிய நளன், தன் செவியில்-தன்னுடைய காதுகளில், ஏற்றினன்-கொண்டவனாகி, எதிர் வந்தான்-(அந்தப் புரோகிதனுக்கு) எதிரில் வந்தான்; [எ-று.]

அயோத்தியிற் சேர்ந்த புரோகிதன், "கானகத்தில் காரிருளில் கைவிட்டுப்போதல் வேந்தனா யிருப்பவனுக்குத் தகுமோ?" என்று தெருக்களில் சொல்லிக்கொண்டே போயினன். அதை நளன் கேட்டான். அஃதவன் செய்த செய்கையைப் பற்றிய குத்துப்பாடான வார்த்தையாயிருந்தபடியால் 'அந்தோ! நம் செய்கையை எவனோ தெரிந்து நம்மைப் பழித்துரைக்கின்றானே' என்று அவனுக்கு மிக்க விசனமுண்டாயிற்று; அதனால் அவன், 'அம்மனிதனுக்குத் தக்க சமாதான வார்த்தை கூறி நம்மீது அவனுக் கேற்பட்டிருக்கும் தாழ்ந்த அபிப்பிராயத்தை நீக்கிவிடவேண்டும்' என்று கருதி அவ்வாறே சமாதானங் கூறுதற்கு அப் புரோகிதனுக் கெதிரில் வந்தான். உலகத்தில் எவருக்கேனும் இழிவான வார்த்தை யேற்பட்டால் அதன்பொருட் டவர் வருந்தி அவ்விழிவை நீக்கிக்கொள்ள முற்படுவ தியற்கை. ஆதலின் நளனும் இவ்வாறு செய்ய முன்வந்தான்.

முதலடி முற்றுமோனை, போனது + உம் = போனதுவும்; குற்றியலுகரம் சிறுபான்மை கெடாமல் பொது விதியால் வகரவுடம்படு மெய் பெற்றது. போதுதல்-திருப்தியாதல்; அஃதிங்கே தகுதியாதல் என்னும் பொருளில் நின்றது. 'போனதுவும்' என்பதில், உம்மை-அசை 'போதுமோ' என்பதில் ஓ-எதிர்மறைப் பொருளது. தான்-அசை, ஏற்றினன்-முற்றெச்சம்.

அங்ஙனம் எதிரில் வந்த நளன் சொன்ன மறுமொழி.

352. ஒண்டொடி தன்னை யுறக்கத்தே நீத்ததுவும்
பண்டை விதியின் பயனேகாண்—தண்டாளப்

பூத்தாம வெண்குடையான் பொன்மகளை வெவ்வனத்தே
நீத்தானென் றையுறேல் நீ.

(இ-ள்.) (அவ்வாறு வந்த நளன், அப் புரோகிதனை நோக்கி வேதியனே!) ஒள் தொடி தன்னை-பிரகாசமாகிய வளையலையணிந்தவளாகிய மனைவியை, உறக்கத்தே-தூக்கத்தில் (அதாவது: அவள் தூங்கிக்கொண்டிருக்கும்போது), நீத்தது உம்-கைவிட்டதும், பண்டை-பழமையான, விதியின்-விதியினது, பயனே-பலனேயாகும், காண்-இதனை அறிந்துகொள், (காரிய நிகழ்ச்சி இங்ஙனமிருப்பதால்) தண்-குளிர்ச்சி பொருந்திய, தாளம் பூதாமம்-முத்துக்களின் அழகியமாலைகளையுடைய(அதாவது: முத்துமாலைகள் சுற்றிலும் தொங்கவிடப்பட்ட), வெள்குடையான் - வெண்கொற்றக் குடை உடையவனாகிய அரசன், பொன்மகளை-இலக்குமி போன்ற பெண்ணாகிய தன்மனைவியை, வெவ்வனத்தே-வெப்பம் பொருந்திய காட்டிலே, நீத்தான்-(விதியினாலல்லாமல் கன்மனத்தால் வேண்டுமென்றே) கைவிட்டான், என்று-என்று நினைத்து, நீ ஐயுறேல்-(இவன் நல்லவனோ கெட்டவனோ என்று) நீ சந்தேகப்படாதே, (என்று கூறினான்); [எ-று.]

நளன், தன் மனைவியை நீத்தது விதிப்பயன் என்னும் துணிவுடையவனாதலின், தன்னைப் பழித்துக் கூறிய புரோகிதனை நோக்கி, "வேதியனே! அவ்வரசன் மனைவியை நீத்தது விதிப் பயனேயாகும்; ஆதலின், நீ இதனை ஆராயாமல், 'அவன் கன்னெஞ்சுடையவனாய் வேண்டுமென்றே அவளை நீத்தான்; அதனால் அவன் நல்லவனோ கெட்டவனோ' என்று சந்தேகப்படாதே" என்று கூறினான். தன்னை வெளிப்படுத்தக் கூடாதாதலால் தன் காரியத்தைப் படர்க்கையில் வைத்துரைத்தான். பண்டை விதியின் பயன்-முன் ஜன்மத்திற் செய்த கருமங்களினாலேற்பட்ட விதியின் பயனால் உண்டாம் காரிய நிகழ்ச்சி; பயன்-ஆகுபெயராய் அதனாலாம் காரியத்தை யுணர்த்தும்; விதி-இரு வினைகளுக்குத் தக்கபடி இன்ன இன்ன காரியங்கள் நடைபெறுவதாக என்று நியமித்த தேவ கட்டளை. நளன், இப்பிறப்பில் தன் மனமறியத் தான் செய்த தீவினை யொன்றுமில்லை யென்பதை யுணர்வானாதலின், 'இது முற்பிறப்பிற் செய்த தீவினையின் பயனே' என்று துணிந்து இங்ஙனம், "பண்டை விதியின் பயனே" என்றான். வெண்மை-புகழையும், செம்மை பிரதாபத்தையும் விளக்கக் கூடியனவாதலின், வெள்ளைக்குடை, சத்தியந் தவறாத கீர்த்தியோடு பொருந்திய அரசாட்சிக்கறிகுறியாம். ஆதலின், 'சத்தியந்தவறாத புகழோடு கூடிய ஒரு மன்னன் இத்தகைய தீங்கான காரியத்தை வேண்டுமென்றே செய்யான்' என்பதை விளக்குதற்கு 'வெண்குடையான்'

பொன்மகளை நீத்தானென்றையுறேல் நீ' என்றான் நளன். ஆகவே, 'வெண்குடையான்' என்ற விசேஷ்யம் ஒரு கருத்தை உட்கொண்டதாதலின், 'கருத்துடையடைகொளியணி' எனப்படும். குளிர்ச்சி, முத்தின் இயற்கைக்குணமாதலின் அது தண் என்ற அடையேற்றது. முத்துமாலைகள், குடையைச்சுற்றிலும் சரங்களாகத் தொங்க விடப்பட்டனவாம். புத்திரியை உணர்த்தும் 'மகள்' என்ற சொல், இங்குப் பொதுவாய்ப் பெண்ணுக்காய் மனைவியை உணர்த்தி நின்றது. இவ்வாறே புத்திரனுக்காம் 'மகன்' என்ற சொல்லும் பொதுவாய் மனிதனுக்காய்க் கணவனை யுணர்த்துவதும், சிறுபான்மையுண்டு. "நினக்கிவன் மகனாத்தோன்றியதூஉம், மனக்கினியார்க்கு நீ மகளாயதூஉம்," என்று மணிமேகலையிலும், "கண்போன்ற மாமன் மகள்" என்று சீவகசிந்தாமணியிலும், "சோகவுண்டோ நும்மகனார்க்கினி" என்று சிலப்பதிகாரத்திலும் வருவன இங்கு ஆராயத்தக்கவை. மனைவியை, இன்னானுடைய ஸ்திரீ என்றும், கணவனை இன்னாளுடைய புருஷன் என்றும் உலகத்தார் வழக்கில் வழங்குதலு முணர்க. 'வெண்குடையான்' இங்கு நளனைக் குறித்து நின்றது; இனி, வீமனைக் குறித்ததாகக்கொண்டு 'பொன்மகள்' அவனுடைய புத்திரியெனினுமாம்; இங்ஙனங் கொள்ளுமுறையில் 'நீத்தான்' என்ற முற்றுக்கு 'அரசன்' என்னும் தோன்றா எழுவாய் வருவித்துரைத்தல் வேண்டும். "தண்டரளப் பூத்தாம வெண்குடை" என்பதற்குக் "குளிர்ந்த முத்துக்களாலாகிய அழகிய ஒளி பொருந்திய வெள்ளைக்குடை" எனப் பொருளுரைத்தலு மொன்று; இவ்வுரையில் தாமம் - ஒளி; வடசொல். இனி, "நீத்தானென்றையுறேல் நீ" என்பதை, "நீத்தான் நீ என்று ஐயுறேல்" என மாற்றி வேறுவகைப் பொருளுரைத்தலு முண்டு; இது, நலிந்து பொருள் கொள்ளலாம்.

ஒண்டொடி - பண்புத்தொகைப் புறத்துப் பிறந்த அன்மொழித்தொகை; இதில், ஒள்-ஒண்மை யென்னும் பண்படி; ளகரதகரங்கள் ணகரடகரங்களானது சந்தியும், விகாரமுமாம். தொடி - கைவளை. உறக்கம்-தொழிற்பெயர்; இதில், உறங்கு - பகுதி, அம் - விகுதி, வலித்தல்-விகாரம். 'ஒண்டொடி தன்னை' என்பதில், தன்- சாரியை. நீத்தது - இறந்த காலத் தொழிற்பெயர்; து - விகுதி. 'பண்டை' என்பதில், ஐ-சாரியை; 'பண்டு' என்னும் மென்றொடர்க் குற்றியலுகரம் ஐயீறு பெற்றுவந்தது; "ஐயீற்றுடைக்குற்றுகரமு முளவே" என்பதுய்த்துணர்க. 'நீத்ததுவும்' என்பதில், உம்மை-அசை. 'பயனே' என்பதில், ஏகாரம்-பிரிநிலையோடு தேற்றம். காண் - அசை யெனவுமொன்று; தேற்றமுமாம். ஐயுறேல் - எதிர்மறை ஏவலொருமை வினைமுற்று; இதில், ஐயமுறு என்பதன் விகாரமான ஐயுறு-பகுதி. விதி, தாளம், தாமம் என்பன வடசொற்

கள். 'பலம்' என்ற ஆரியமொழி 'பயன்' என விகாரப்பட்டு வந்தது. வெம்மை + வனம் = வெவ்வனம்; இதிலுள்ள வெம்மையென்னும் பண்புப் பகுதியில், மையீறுகெட்டு முன்னின்ற மகரமெய் வகரமெய்யாகத் திரிந்தது. ஈற்றில், 'என்று கூறினன்' என்னும் பயனிலை இசையெச்சமாக வருவித்துரைக்கப்பட்டது.

இவ்வாறு நளன் கூறியதைக் கேட்ட புரோகிதன், தான் வந்த காரியம் நிறைவேறி விட்டதென்று சந்தோஷித்து இச்செய்தியைக் கூறுதற்குத் தமயந்தியிடம் விரைந்து திரும்பிப் போயினன் என்பதாம்.

அடுத்த செய்யுளில் தமயந்தி புரோகிதனிடம் நள மகாராஜனைக் கண்டதுண்டோ என வினவும் செய்தி வருகின்றமையால், அவன் திரும்பிப் போயினசெய்தி கதைத் தொடர்ச்சிபற்றி இங்குக் கூட்டியுரைக்கப்பட்டது.

திரும்பிவந்த புரோகிதனிடம் தமயந்தி "நீ எவ்வெவ் விடங்கட்குச் சென்றனை ? மன்னனைக் கண்டதுண்டோ" என வினவல்.

353. எங்க ணுறைந்தனைகோ லெத்திசைபோய் நாடினைகோல்
கங்கைவள நாட்டார்தங் காவலனை—அங்குத்
தலைப்பட்ட வாறுண்டோ சாற்றென்றாள் கண்ணீர்
அலைப்பட்ட கொங்கையா ளாங்கு.

(இ-ள்.) (மேற்கூறியபடி புரோகிதன் திரும்பிப் போய்த் தமயந்தியைக் கண்டவுடனே, அவனை நோக்கி), கண்ணீர் - கண்ணீரானது, அலைப்பட்ட - அலைந்து வடிதலைக் கொண்டிருக்கின்ற, கொங்கையாள் - தனங்களையுடையவளாகிய தமயந்தி, (வேதியனை நோக்கி நீ), ஆங்கு - அவ்விடத்தில், எங்கண் உறைந்தனை - எவ்விடத்திற் போய்த் தங்கியிருந்தாய் ?, கங்கை - கங்கை சூழ்ந்த, வளம் - வளம் பொருந்திய, நாட்டார்தம் - நிடத நாட்டாருடைய, காவலனை - அரசனாகிய என் நாயகனை, எத்திசைபோய் நாடினை - எந்தத் திக்கிற் புகுந்து தேடினாய், அங்கு - நீ சென்ற அவ்விடத்தில், தலைப்பட்ட ஆறு - (அம் மன்னன்) எதிர்ப்பட்ட வகை, உண்டோ - உளதோ ?, சாற்று என்றாள் - சொல்வாயாக என்று கேட்டனள்; [எ-று;]

புரோகிதன் திரும்பி வந்த மாத்திரத்தில் அவனுடைய முகக் குறிப்பால் அவன் ஏதேனும் நல்ல செய்திகொண்டு வந்திருப்பானென்றுணர்ந்து அதனைக் கேட்டறிய வேண்டுமென்னும் விருப்பத்தால் தமயந்தி இவ்வாறு அவனை நோக்கி "நீ எங்குச் சென்றாய் ? மன்னனைக் கண்டதுண்டோ ?" என்று வினவினாள். அவள் இவ்வாறு அத்தருணம் விசனம் நீங்கி வினவினாளெனினும் அதற்கு

முன்னர் அழுதுகொண்டே இருந்தபடியால், அவளை, "கண்ணீர் அலைப்பட்ட கொங்கையாள்" என்றார் ஆசிரியர்.

தலை-இடம்; இஃதிங்கே எதிரிடத்தை யுணர்த்தி நின்றது. படல்-ஆதல்; இஃதிங்கு நேர்தலை யுணர்த்திற்று; ஆகவே இவ் விரண்டும் இருவர் எதிரிடத்தில் சந்தித்தலை விளக்கி நின்றன. கொல் இரண்டும் - அசைகள். ஆங்கு-என்பதையும் அசையெனக் கோடலுமொன்று மென்ப.

புரோகிதன் தான் அறிந்து வந்த செய்தியைத் தமயந்திக்குக் கூறுதல்.

354. வாக்கினன் மன்னவனை யொப்பான் மறித்தொருகால்
ஆக்கையே நோக்கி னவனல்லன்—பூக்கமழுங்
கூந்தலாய் மற்றக் குலப்பாக னென்றுரைத்தான்
ஏந்துநூன் மார்ப னெடுத்து.

(இ-ள்.) (தமயந்தி அவ்வாறு வினவியவுடன்) ஏந்தும் நூல்மார்பன்-பூணூலைத்தரித்த மார்பையுடையவனாகிய அந்தப் புரோகிதன், (தமயந்தியை நோக்கி); பூகமழும் - (சூடிய) மலர்கள் மணக்கின்ற, கூந்தலாய்-அளக பாரத்தையுடையவளே!, (நான் பற்பல விடங்கட்கும் போய் முடிவில் அயோத்தி நகரடைந்து, நீ கூறிய வார்த்தைகளைக் கூறினேன்; அதைக் கேட்டு ருதுபர்ணன் அரண்மனையிலுள்ள தேர்ப்பாகனொருவன் வந்து அதற்கு மறுமொழி கூறினன்), அக் குலப்பாகன்-அந்த உயர்ந்த தேர்ப்பாகன், வாக்கினால்-(நான் கூறியதற்கு அவன் கூறிய மறுமொழியாகிய) வார்த்தையினாலே, மன்னவனை ஒப்பான்-நளமகாராஜனை நிகர்ப்பவனாயிருக்கின்றான், மறித்து-திரும்பவும், ஒருகால் - ஒரு சமயம், ஆக்கையே - (அவனுடைய) உடம்பை மாத்திரம், நோக்கின்-பார்த்தால், அவன் அல்லன் - அம் மன்னனல்லாதவனாயிருக்கின்றான், என்று எடுத்து - என்று (தான் கண்ட கேட்ட விஷயங்களையெல்லாம்) மனத்தினின்றும் வெளிப்படுத்தி, உரைத்தான்-தமயந்தியினிடம் சொன்னான்; [எ-று.]

மேற்கூறியபடி வினவிய தமயந்தியை நோக்கி அப்புரோகிதன், "மலர் மணம் வீசுகின்ற கூந்தலையுடையவளே! நின் கட்டளைப்படியே நான் பற்பல விடங்கட்கும் சென்று முடிவில் அயோத்தி நகரடைந்து அவ்வார்த்தைகளைக் கூறினேன்; அதைக்கேட்டு அவ் வயோத்தி மன்னன் அரண்மனையிலுள்ள தேர்ப்பாகனொருவன் வந்து அதற்கு மறுமொழி கூறினன்; அவனுடைய வார்த்தைகளை நோக்குமிடத்து நம்மன்னனைப் போலவே விளங்குகின்றான்; திரும்பி யொரு சமயத்தில் தேகத்தை மாத்திரம் நோக்கினால்

அவனை மன்னனென்று மதித்தற் கேதுவில்லை" என்று தான் அறிந்த விவரங்களை யெல்லாம் கூறினான் என்பது இதன் கருத்து. அத்தேர்ப்பாகன், பேச்சின் தன்மையாலும் குரலாலும் புரோகிதனுக்கு நளனைப்போன்று விளங்கினான்; உருவத்தால் வேறொரு மனிதனாகத் தோன்றினான். இவ்வாறு இருவழியிலும் புரோகிதனுக்குச் சந்தேகமே நிகழ்ந்தபடியால் அவன் எதைப்பற்றியும் துணிவு கொள்ளமுடியாமல் இவ்வாறு சொன்னான்.

புரோகிதன் நளனைக் கண்டதையும் அவனால் கூறப்பட்ட வார்த்தைகளையும் இதில் விளக்கமாகக் கூறுவிடினும், கதைத் தொடர்ச்சி பற்றியும், செய்யுட் கருத்து முடிபு நோக்கியும் 'அக் குலப்பாகன்' என்பதற்கு முன் அவ்விஷயங்கள் இசை யெச்சமாகக் கூட்டியுரைக்கப்பட்டன; அங்ஙன முரைக்காவிடின் இச்செய்யுள் பொருண் முடிபற்றதாகும்; 'மறித்து' என்பது வினைமாற்றுப் பொருளை விளக்கி நின்றது. ஆக்கை-(எலும்பு தசை நரம்பு முதலியவற்றால்) ஆக்கப்பட்டது; இதில், ஆக்கு-பிறவினை விகுதி, ஐ செயப்படு பொருள் விகுதி; இனி, 'யாக்கை' யென்பது இங்ஙனம் மருவி வந்ததெனக் கோடலுமொன்று; 'யாக்கை' என்பதற்கு, 'எலும்பு நரம்பு முதலியவற்றால் யாக்கப்பட்டது' என்பது பொருளாம்; யாத்தல்-கட்டுதல். 'ஆக்கையே' என்பதில், ஏ-பிரிநிலைப் பொருளது. கூந்தலாய்-கூந்தலாள் என்பதன் ஈறுதிரிந்த விளி. "பூப்பெயர் முன்னின மென்மையுந் தோன்றும்" என்றதன் உம்மையினால் பொது விதிப்படி வன்மை தோன்றுதலாகி, 'பூகமழும்' என்பது, 'பூக்கமழும்' எனவந்தது. வாக்கு-வாக் என்னும் வடசொற்றிரிபு. உத்தமஸ்திரீகளின் கூந்தல், இயற்கை மணமுடைய தென்பது நூற்களின் துணியாதலால், 'பூக்கமழும் கூந்தலாய்' என்பதற்கு "மலரைப்போன்று நறுமணங்கமழும் கூந்தலையுடையவளே" என்றும் பொருளுரைக்கலாம். நூல்-முப்புரிநூல்; அந்தணர் மார்பிலணியப்படுவது; இது பூணத்தக்கதாதலின் 'பூணூல்' என வழங்கும்; இஃதந்தணர்க் கின்றியமையாத தென்பது, "நூலேகரகம் முக்கோல்மணையே, ஆயுங்காலை அந்தணர்க்குரிய" என்னும் தொல்காப்பியச் சூத்திரத்தாலுணரப்படும். 'ஏந்து நூன் மார்பன்' என்றது, 'நூலேந்து மார்பன்' என மொழி மாற்றப்பட்டது. பாகன்-தேர்க்குதிரை செலுத்தும் சாரதி. எடுத்தல்-உயர்த்துதல்; அஃதிங்கு வெளிப்படுத்தற் பொருளில் வந்தது.

தமயந்தி அவ்வாகுகனைத் தான் நேரிற்கண்டு நளனோ அல்லனோ என்பதைத் தெரிந்து கொள்ளுதற்கு ஓர் உபாயத்தைச் செய்யும்படி வேதியனிடங் கூறுதல்.

355. மீண்டோர் சுயம்வரத்தை வீமன் றிருமடந்தை
பூண்டாளென் றந்தணநீ போயுரைத்தால்—நீண்ட

கோடைவேந்தற் கித்தூரந் தேர்க்கோலங் கொள்வான்
படைவேந்த னென்றாள் பரிந்து.

(இ-ள்.) (அதுகேட்ட தமயந்தி சுதேவனென்னும் வேதியனை நோக்கி) பரிந்து-அன்புகொண்டு, அந்தண-பிராமணனே!, நீபோய்-நீ (அயோத்திக்குச்) சென்று, வீமன்-வீமராஜனுடைய, திருமடந்தை-அழகிய குமாரத்தியாகிய தமயந்தி, மீண்டு-திரும்பவும், ஓர் சுயம் வரத்தை-ஓர் சுயம்வரச் சடங்கை, பூண்டாள் என்று-ஏற்றுக் கொண்டனள் என்று, உரைத்தால்-சொன்னால், நீண்டகொடை-மிக்க ஈகையையுடைய, வேந்தற்கு-அவ்வயோத்தி மன்னனுக்கு, படை-ஆயுதங்களையுடைய, வேந்தன் (நாம் தேர்ப்பாகனெனச் சந்தேகிக்கும் நம்) நளமகாராஜன், இத்தூரம்-(நாமிருக்கும் இடமாகிய) இவ்வளவு தூரத்துக்கு, தேர்க்கோலம்-தேர்க்குரிய கோலத்தை, கொள்வான்-தாங்குவான் (அதாவது: தேரோட்டும் சாரதி வடிவந்தாங்கி ருதுபர்ணனுக்குத் தேரைச் செலுத்திக் கொண்டு இங்கே வருவான்; அவ்வாறு வந்தால் நாம் அவனைச் சந்தேகமறத் தெரிந்து கொள்ளலாம்), என்றாள்-என்று தமயந்தி வேதியனிடத்துக் கூறினாள்; [எ-று.]

"தமயந்தி கணவனை இழந்து விட்டபடியால் மீண்டும் ஒரு கணவனைத் தேடிக்கொள்வதற்கு விரும்பி மற்றொரு சுயம்வரத்தை ஏற்படுத்தி இருக்கின்றாள்' என்று ஒரு பொய்ச் சமாசாரத்தை அயோத்தி நகரில் புகவிட்டால் அந்நகரத் தரசன் உடனே புறப்பட்டு வருவான்; அப்போது அந்தணன் சந்தேகித்துரைத்த தேர்ப்பாகனும் அவனுக்குத் தேர் செலுத்திக் கொண்டுவருதல் கூடும்; அவ்வாறு வந்தால் நாம் நேரில் அவனைப்பார்த்து இன்னவனென நிச்சயித்துக் கொள்ளலாம்" என்று தமயந்தி கருதினாள்; ஆதலின், அந்தணனிடம், தான் கருதியபடியே அயோத்தியிற் போய் இவ்வாறு சமாசாரம் தெரிவிக்கும்படி கூறினாள். சுயம்வரமாவது: ஓர் இராஜ கன்னிகை, தன் தந்தையால் வருவித்து ஓரிடத்தில் சேர்க்கப்பட்ட இராஜ குமாரர்களில் தனக்கிஷ்டமானவனை நாயகனைக் கொண்டு அவனுக்கு மணமாலை சூட்டுவதாம். தேர்க்கோலம்-தேருக்குரிய கோலம்; (அதாவது: தேரைச்செலுத்துந் தொழிற்குரிய சாரதிக்கோலம்) 'தேர்க்கோலங்கொள்வான்' என்றதனால், 'அக் கோலத்தைக் கொண்டு தேரைச் செலுத்திவருவான்' என்பது பெறப்படும். அயோத்திக்குப் போய் வந்த அந்தணன் கூறிய விவரத்தால் அவ்வாகுகன் பெரும்பான்மையும் நளனாகவே யிருப்பானென்ற எண்ணம் தமயந்திக் கேற்பட்டிருந்ததால் அவள் அவனை 'படை வேந்தன்' என்றாள். முன் அயோத்திக்குப் போய் வந்த அந்தணன் வேறு; இச்செய்யுளிற் கூறப்பட்டவன் வேறு.

சுயம்வரம்-ஸ்வயம்வரம் என்ற வடசொற்றிரிபு. படை - பகைவரைப் படுக்குங்கருவி; இதில், படு - பகுதி, ஐ - கருவிப் பொருள் விகுதி. இனி, படை - சேனையெனலுமொன்று. 'படைவேந்தன்' என்பது முன்னிலைமை பற்றி யென்க. தாரம்-வடசொல்.

சுதேவன் சென்று தமயந்தியின் இரண்டாம் சுயம்வரச் செய்தியை ருதுபர்ணனுக் குரைத்தல்.

356. எங்கோன் மகளுக் கிரண்டாஞ் சுயம்வரமென்
றங்கோர் முரச மறைவித்தான்—செங்கோலாய்
அந்நாளு நாளை யளவென்று னந்தணன்போய்த்
தேன்றாளுந் தாராளைச் சேர்ந்து.

(இ-ள்.) (தமயந்தி அவ்வாறு கூறியவுடன்), அந்தணன்-சுதேவனென்னும் பிராமணன், போய் - (அயோத்திக்குச்) சென்று, தேன் ஆளும்-அழகை ஆளுகின்ற (அதாவது: அழகைத் தனக்குச் சொந்தமாகப் பெற்றிருக்கின்ற), தாரானை - மலர் மாலையையணிந்த ருதுபர்ணனிடத்தில், சேர்ந்து-அடைந்து, (அவனை நோக்கி), செங்கோலாய்-நீதிதவறாத அரசாட்சியை யுடையவனே!, எம்கோன்-எங்கள் அரசனாகிய வீமனுடைய, மகளுக்கு - புத்திரியான தமயந்திக்கு, இரண்டாம் சுயம்வரம் என்று-இரண்டாவது சுயம்வரம் நடைபெறுகிறது என்று சொல்லி, அங்கு - அவ்விடத்தில் (அதாவது: அந்தக் குண்டின புரியிலும் அதைச் சார்ந்த விதர்ப்ப நாட்டிலும்), ஓர் முரசம்-ஒப்பற்ற மணப் பேரிகையை, அறைவித்தான் - (முரசறைவோரால்) அடிக்கச்செய்து (அவ்விஷயத்தை எங்கும்) தெரிவித்தான், அந்நாளளவும் - அந்தச் சுயம்வரத்துக்குக் குறிப்பிட்ட தினத்தின் எல்லையும், நாளை என்றான்-நாளையே என்று கூறிச்செய்தி தெரிவித்தான்; [எ-று.]

அரசர்கள் ஏதேனுமொரு செய்தியை உலகத்தார்க்குத் தெரிவிக்க வேண்டி யிருந்தால், தம் பணியாளரால், முரசறைவித்துத் தெரிவித்தல் மரபு; ஆதலின், இங்கு அந்தணன் ருதுபர்ணனிடத்தில் "எங்கோன் மகளுக்கிரண்டாஞ் சுயம்வரமென் றங்கோர் முரசமறைவித்தான்" என்றான். இன்னும் அங்ஙனம் அரசர் விஷயந் தெரிவிப்பதிலும் தம் தேசத்தில் முரசாலும், மற்ற தேசங்களில் தூதாலும் அறிவிப்பர்; ஆதலின், முரசறைந்ததை, குண்டின புரத்திலும் விதர்ப்ப நாட்டிலும் நடந்ததாகக் குறிப்பிடற்பாலது.

எம்-உளப்பாட்டுத் தன்மைப்பன்மை; அந்தணன், தன்னையும், விதர்ப்பதேசத்து ஜனங்களையும் சேர்த்து, 'எம்' என்றான். முரசம்-வடசொல். செங்கோல் - கோணாதகோல்; இஃதரசாட்சிக்கு

உவமையாகுபெயர்; அரசாட்சியானது, சாயாதகோலைப் போன்று செவ்வனே நீதியில் நின்று நடைபெறுவதாதலின் இப்பெயர் பெற்றது. இதுபோலவே அரசாட்சியைத் 'தண்டம்' என்பர் வடநூலாரும். செங்கோலுக் கெதிர்மொழி-கொடுங்கோல்; இதற்குப் பொருள் 'வளைவுள்ளகோல்' என்பதாம்; இதுவும் உவமையாகுபெயராய் நீதி தவறிய அரசாட்சியை உணர்த்தி நிற்கும். 'தென் ஆருந்தார்' என்பதற்கு 'அழகு ஆருகிறமாலை' என்றாவது, 'அழகை ஆருகிற மாலை' என்றாவது பொருளுரைக்க. எங்ஙனமுரைப்பினும் கருத்தொன்றேயாய் 'அழகுள்ளமாலை' என்றே பொருள்படும். இனி, தென் இசையெனக்கொண்டு 'வண்டுகளின் இசையை ஆருகின்ற மாலை' எனலுமொன்று. அந்தணன் - காரணவிடுகுறிப்பெயர்; அழகிய தட்பத்தை யுடையவனென்று பொருள்படும்; தட்பம்-குளிர்ச்சி; அஃது அருளை யுணர்த்தும். 'அந்தணன்' என்பது காரணம் கருதிய பொழுது அருளுடைய பலர்க்குஞ் செல்லும்; காரணங் கருதாத பொழுது வேதியனுக்கு மட்டுஞ் செல்லும்.

சுதேவன் உரைத்ததைக் கேட்டு ருதுபர்ணன் சிந்தித்தல்.

357. வேத மொழிவாணன் மீண்டுஞ் சுயம்வரத்தைக்
காதலித்தாள் வீமன்றன் காதலியென்—றோதினன்
என்செய்கோ மற்றிதனுக் கென்றா னிகல்சீறும்
மின்செய்த வேலான் விரைந்து.

(இ-ள்.) (சுதேவன் என்னும் அந்தணன் அவ்வாறு சொல்லியதைக் கேட்ட மாத்திரத்தில்) இகல்-பகைவர்களை, சீறும்-கோபிக்கின்ற, மின்செய்த-மின்னலைச் செய்கின்ற (அதாவது: மின்போற் பிரகாசிக்கின்ற), வேலான்-வேலாயுதத்தை யுடையவனாகிய ருதுபர்ணமகாராஜன், விரைந்து-விரைவுகொண்டு, வீமன்றன்-வீமராஜனுடைய, காதலி - மகளாகிய தமயந்தி, மீண்டும் - மறுபடியும், சுயம்வரத்தை - சுயம்வரத்தினை, காதலித்தாள் என்று - விரும்பினாள் என்று, வேதமொழி வாணன் - வேத சாஸ்திரங்களில் வல்லவனான அந்தணன், ஓதினன்-கூறினன், இதனுக்கு-இதற்கு, என்செய்கோ-(நான்) என்ன செய்வேன், என்றான்-என்று (தன்வாகுகனிடத்தில்) யோசனைசெய்து தீர்மானித்தலின் பொருட்டுச் சொன்னான்; [எ-று.]

முந்தின சுயம்வரத்தில் ருதுபர்ணன் தமயந்தியின்மீது மிக்க காதல் கொண்டிருந்தான். அதனை அத் தமயந்தி உணர்ந்திருந்தாள். ஆதலின், அவள், தனக்கு இரண்டாம் சுயம்வரம் ஏற்பட்டிருக்கின்றதென்ற பொய்ச் செய்தியை அவனுக்கெட்டும்படி செய்தால் அவன் முன்பின் யோசியாமல் புறப்பட்டுக் குண்டினபுரத்துக்கு

வருவானென்றும், அவனோடு விரைந்து தேர் செலுத்தக்கூடிய வாகுகனும் வருதல் கூடுமென்றும், அங்ஙனம் வந்தால் அவ் வாகுகன் தன் நாயகன் தானே யென்பதை உணர்ந்து கொள்ளலா மென்றுங் கருதியே அந்தணனை இச்செய்தி தெரிவிக்கும்படி அயோத்திக்கனுப்பினாள். அவன் போய் மேற்கூறியபடி செய்தி தெரிவித்த வுடனே, அவள் உத்தேசித்தபடியே ருதுபர்ணன், 'ஆசைகொண்டான் பித்தங்கொண்டான்' என்ற பழமொழிக் கிணங்க இஃது அசம்பாவித மென்பதைப் பற்றிச் சிறிதும் யோசியாமல், இதனை மெய்யென்றே நம்பி குண்டினபுரத்துக்குப் புறப்படத் தீர்மானித்து, 'குண்டினபுரமோ நெடுந்தூரத்தி லிருக்கின்றது; நாளைக்கே சுயம்வரமாம், ஆதலின் நான் அதற்குள் எப்படி அங்குப்போய்ச் சேர்வேன்' என்று வாகுகனை நோக்கிக் கூறினான்; இவன் இங்ஙனம் வாகுகனை நோக்கிக் கூறியதால், "நீ தேர் செலுத்தி நாளைக்குள் என்னை அங்குக் கொண்டுபோய்ச் சேர்த்துவிடல் முடியுமா?" என்று வினவினானென்னுங் குறிப்புத் தொனிக்குமாகவே அது குறிப்பெச்சம்.

வேத மொழிவாணன் - வேத வசனத்தால் வாழ்பவன்; அதாவது: வேத சாஸ்திரங்களை ஓதியும், ஓதுவித்தும்; அவற்றின் பொருள்களை யுணர்ந்தும், அவற்றின்படி நடந்தும், ஜீவிப்பவன் என்பதாம். செய்கு-தன்மை யொருமை எதிர்கால வினைமுற்று; கு-எதிர்காலங் காட்டும் விகுதி; (நன்-பத-18) ஓ - கவலைக்குறிப்பினதாம். வாணன்-வாழ்நன் என்பதன் மரூஉ. காதலித்தாள் - காதல் என்ற பெயர்ச்சொல்லின்மேற் பிறந்த வினைமுற்று. இகல்-பகைமை; இது பண்பாகு பெயராய்ப் பகைவரை யுணர்த்தி நின்றது. 'சீறும்' என்பது வேலா னுக்கடை; அதனை வேலுக்குக்கொண்டால் அதற்கு, 'அழிக்கின்ற' என்று பொருளுரைக்க வேண்டும்; இது காரியப் பொருளைக் காரணச்சொல்லாற் கூறிய உபசார வழக்காம்; இனி, வேலேந்தியவனது சீற்றத்தை உபசார வழக்காக வேலின் மேலேற்றிக் கூறிய தெனவுமாம். 'மின் செய்த' என்பதற்கு, 'மின்னல் போன்ற' என்றும் பொருளுரைக்கலாம்; இப்பொருள் கொள்ளுமிடத்து, 'செய்த' என்பது உவமவுருபாம். மற்று - அசை; வினைமாற்றெனினும் அமையும்.

வாகுகன் அதற்கு ஆக்ஷேபனை கூறுதல்.

358. குறையாத கற்பினாள் கொண்டானுக் கல்லால்
இறவாத வேந்திழையா ளின்று—பறிபீறி
நெல்லிற் பருவரா லோடு நெடுநாடா
சொல்லப் படுமோவிச் சொல்.

[இ-ள்.] (அதைக் கேட்டவுடன் நளனாகிய வாகுகன் ருதுபர்ணனை நோக்கி), பறிபீறி-பறியென்னும் மீன்படுக்குங் கருவி

யைக் கிழித்துக்கொண்டு, பருவரால்-பெரிய வரால்மீன்கள், நெல்லில் ஓடும்-நெற்பயிரில் ஓடி ஒளிக்கின்ற, நெடுநாடா-பெரிய கோசல நாட்டையுடையவனே!, குறையாத கற்பினள்-குறைவில்லாத பதிவிரதா தருமமுள்ளவளும், கொண்டானுக் கல்லால்-தன்னை முதலிற் கலியாணஞ் செய்துகொண்டவனுக்கேயல் லாமல், இறவாத-அழியாத, ஏந்து இழையாள்-அணிந்த ஆபரணங்களையுடைய தமயந்தி இன்று-இப்பொழுது, இச்சொல்-இந்தச்சொல்லை, சொல்லப் படுமோ-சொல்லத்தகுவளோ, சொல்லியிருக்கமாட்டாள் (என்று கூறினன்;) [எ-று.]

நளன், தமயந்தியின் நற்குண நற்செய்கைகளையும், பதிவிரதா தர்மத்தையும் நன்குணர்வானாதலின், அவள் ஒருபோதும் இரண்டாவது சுயம்வரத்தை விரும்பமாட்டாள்; இச்சொல் நம்பத்தகாததாயிருக்கின்றது என்று கருதி இவ்வாறு ருதுபர்ணனிடத்தில், "குறையாத கற்பினள் கொண்டானுக்கன்றி, இறவாத வேந்திழையாள்; இன்று சொல்லப்படுமோ இச்சொல்; இதில் ஏதோ ஓர் மர்மம் இருக்கவேண்டும் என்று ஆராய்ந்து பார்க்காமல் இதனை நீர் நம்பலாகாது" என்று கூறினன் என்பதாம்.

கற்பு-கணவனையே தெய்வமென்று கருதி நடக்கும் ஒழுக்கம். இறத்தல்-நடத்தல்; அஃதிங்கே தன்னைச் செலுத்துதல் என்னும் பொருளில் நின்றது. தன்னைச் செலுத்துதலாவது: தன்னை அன்னியனிடத்தே சேர்வித்துத் தன்னுடம்பு அவனுக்குச் சொந்தமாகும்படி செய்தல். இனி ஸ்திரீகள் தங்கள் தேகத்தைப் புருஷர் தீண்ட இசைவது மானங்கெடுதலாம்; அஃதவர்கட்கு இறப்புக்குச் சமானமாம். சொந்த நாயகர்க்கு அங்ஙனமிசைவது நீதியெனினுங் கூட அஃதவர்கட்குச் சொல்வழக்கால் மானக்கேடென்றே சொல்லப்படும்; அது மானக்கேடாயிருப்பினும் உத்தமஸ்திரீகள் தம் கணவரிடத்தில் மட்டும் அதற் கிசைவர்; மற்றையரிடத்தில் இசையார் ஆதலின் 'கொண்டானுக்கல்லால் இறவாத' என்பதற்குப் 'புருஷனுக்கேயன்றி மற்றையர்க்கு மானங்கெடாத' என்று பொருளுரைத்தலு மொன்று. இன்னும், பதிவிரதைகள் கணவன் இறந்தால் மாத்திரம் உடனிறப்பார்; மற்றையர் பொருட்டு உயிர்விடத் துணியார்; ஆதலின் 'கொண்டானுக்கல்லால் இறவாத' என்பதற்கு, 'நாயகனுக்கே யல்லாமல் மற்றையர்க்கு உயிர் கொடுக்கத் துணியாத' என்று பொருளுரைப்பினும் பொருந்தும். கணவனோடுயிர் விடல் பதிவிரதைகளுக்கு மற்ற எல்லாக் குணங்களினும் சிறந்த குணமாம். 'பறிபீறி நெல்லில் நெல்லில்பருவராலோடும் நெடுநாடா' என்றதால் கோசலநாடு நிலவளத்துக்குக் காரணமான நீர்வளம் மிக்கதென்பது விளங்கும். நீர்வள மிகுதியால் வரால்கள் கொழுத்

திருக்குமாதலின், அவை பறியைப் பிறிக்கொண்டோடும். பறி-பிடிக்கப்பட்ட மீன்களைப் போட்டுவைக்கும் குடலையுமாம். நெடுமை-பெருமையில் நின்றது. தமயந்தியின் இரண்டாம் சுயம் வரத்தை வாயினாற் சொல்வதற்கும் நளன் கூசினானாதலின் 'இச் சொல்' என்று சுட்டிய வளவோடு நிறுத்திவிட்டான். மேல், 360-ம் செய்யுளிலும் 'தன் மரபுக்கொவ்வாத வார்த்தை இது' என்ப துணர்க. படும் செய்யுமென்னும் முற்று; பெண்பாலுக்கு வந்தது. 'ஏந்திழையாளால்' இச் சொல் சொல்லப்படுமோ, என்று செயப் பாட்டு வினைமுடிபாகக் கொள்ளினும் அமையும். ஓ-ஈண்டு எதிர் மறைப் பொருளில் வந்தது.

நளன் கூறிய ஆக்ஷேபனைக்கு ருதுபர்ணன் சமாதானங் கூறுதல்

359. என்மே லெறிகின்ற மாலை யெழினளன்றன்
முன்னே விழுந்ததுகாண் முன்னாளில்—அன்னதற்குக்
காரணந்தா னீதன்றோ வென்றான் கடாஞ்சோரியும்
வாரணந்தா னன்னான் மதித்து.

[இ-ள்.] (வாகுகன் அவ்வாறு கூறியதைக்கேட்டு), கடாம்-மதநீரை, சொரி-பொழிகின்ற, வாரணம்-யானையை, அன்னான்-நிகர்த்தவனான ருதுபர்ணன்; மதித்து-(சுதேவன் கூறிய வார்த்தையை மெய்யென்றே) கருதி, (வாகுகனை நோக்கி), முன்நாளில்-முதற்சுயம்வரம் நடந்த முற்காலத்தில், என் மேல் எறிகின்ற மாலை-(தமயந்தி என்னைக் கணவனாகக் கொள்ள விரும்பி) என் மீதெறிந்த பூமாலையானது, (என்பக்கத்திலிருந்த), எழில்-அழகுபொருந்திய, நளன் முன்னே-நளன்மேலே; விழுந்தது-தவறி விழுந்து விட்டது, அன்னதற்கு-அப்படி விழுந்ததற்கு, காரணம்-காரணமானது, ஈது-இந்த மறு சுயம்வரமே, (அதாவது: இங்ஙனம் மறு சுயம்வரம் ஏற்படுத்தி அவள் என்னையே மணந்துகொள்ளும் விதி நேர்ந்திருந்ததேயாகும்), என்றான்-என்று சொன்னான்;[எ-று.]

நளன் மேற்கூறியபடி உரைத்ததற்கு ருதுபர்ணன் அவனை நோக்கி "வாகுக! நீ உண்மை உணராமல் உரைக்கின்றாய்; தமயந்தி சுயம்வரம் ஏற்படுத்தியிருப்பது உண்மையாகவே இருக்கும்; ஏனெனில், அவள் முதற் சுயம்வரத்தில் என்னை மணந்துகொள்ள விரும்பி என்மீதே மாலையை எறிந்தாள்; அது தவறி என் பக்கத்தி லிருந்த நளன் கழுத்தில் விழுந்து விட்டது; அவள் என்செய்வாள் பாவம்! மாலை விழுந்த கிரமப்படி அவனுக்கே மனைவியாக இசைந்து கொள்ளவேண்டுமாதலின், அவ்வாறுதற்கு மனதில் சிறிதும் இஷ்டமில்லாமலே மேலுக்கு இசைந்துகொண்டாள். ஆனால், அவள் விருப்பமுழுவதும் என் மீதிலேயே இருந்தது. அவள்

விருப்பத்திற்கனுகூலமாக அவன் சொற்பகாலத்திலேயே அவனை விட்டு நீங்குங்காலம் நேர்ந்துவிட்டது. அதனால் அவள் சந்தோஷித்து, மறு சுயம்வரம் வைத்து அதில் என்னையே மணந்து கொள்ளலாமென்றும், 'இது தகுமோ' என்று கேட்பவர்க்கு, 'நளன் தானே மனைவியைத் தள்ளிவிட்டுச் சென்றமையால் தகுமெனவும், இது விதியினால் நேர்ந்ததெனவும் சமாதானம் கூறிவிடலாமென்றும் இந்த இரண்டாவது சுயம்வரத்தை ஏற்படுத்தியிருப்பாள். இவ்வாறு அவள் இரண்டாவது சுயம்வரத்தில் என்னை மணந்துகொள்வாளென்ற ஊழும் ஏற்பட்டுளது. இந்த ஊழேதான் முந்தி அம்மாலையை நளன் கழுத்தில் விழும்படி செய்துவிட்டது. நீ சொல்லுகிறபடி அவள் பதிவிரதை யென்பதும் மெய்தான். அதனாற்றான், தான் முதலிற் கருதிய என்னையே மறுவிவாகம் ஏற்படுத்தியாவது மணஞ் செய்துகொள்ளத் தீர்மானித்தாள். ஆனால், நளனிடத்திற் சொற்பகாலம் அவள் சேர்ந்திருந்ததால் பதிவிரதா தர்மங் கெடுமெனிலோ, கெடாது; ஏனெனில், அது விதியினால் நேர்ந்ததாம்; நீ இவற்றை யெல்லாம் ஆலோசனை செய்யவில்லை; எனக்கு எல்லாம் தெரியும்; ஆதலால் நீ இவ்விஷயத்தில் தர்க்கமாடாமல் என்னை அங்கு விரைவில் கொண்டு போய்ச் சேர்க்கும் மார்க்கத்தை நாடுவாயாக'' என்று கூறினான் என்பது இச்செய்யுட் கருத்தாம். பேராசை யுடையார்க்கு அறிவு குறைந்திருக்குமாதலின், ருதுபர்ணன் அவ்வாசையால் புத்தி கெட்டு இவ்வாறு அசம்பாவிதமான கருத்துக்கொண்டு சொல்லத் தகாத வார்த்தைகளை யெல்லாம் கூறினான் என்பதாம்.

'முன் நாளில் எறிந்தமாலை' என வரவேண்டியவிடத்தில் 'எறிகின்ற மாலை' என வந்தது, இயல்புபற்றி இறப்பு நிகழ்வாக மாறிவந்த கால வழுவமைதி; (நன்-பொது-33). 'யாம் பண்டு விளையாடுகிறது இச் சோலை' என்றாற்போல அக்காலத்தைக் குறித்து இது நிகழ்காலத்திற் கூறப்பட்டது. கடாம்-கடம் என்பதன் விகாரம். மாலை-மாலா என்ற வடசொல் விகாரம். காரணம் வாரணம் என்பன வடசொற்கள். 'நளன் தன்' என்பதில், தன்-அசை. முன்-ஏழாம் வேற்றுமைச் சொல்லுருபு. இதில் ஏ-அசை. காண் தான்-அசைகள்; 'காண் என்பதற்கு 'நீ அறிந்துகொள்வாயாக; எனப் பொருளுரைத்தலு மொன்றெனக் கொள்க.

ருதுபர்ணன் கூறிய அசம்பாவிதமான வார்த்தைகளைக் கேட்டு நளன் பலவிதமாகச் சிந்தித்தல்.

360. முன்னை வினையான் முடிந்ததோ மொய்குழலாள்
என்னைத்தான் காண விசைந்ததோ—தன்மரபுக்

கொவ்வாத வார்த்தை யுலகத் துரைப்பட்ட
தெவ்வாறு கொல்லோ விது.

[இ-ள்.] (அவ்வாறு ருதுபர்ணன் கூறியவற்றைக்கேட்டு), தன் மரபுக்கு-தமயந்தியினுடைய உயர்ந்த குலத்திற்கு, ஒவ்வாத வார்த்தை-பொருந்தாத வார்த்தையாகிய, இது-இச்சொல், உலகத்து-உலகத்தில், உரைப்பட்டது-வழங்கியது, முன்னை வினையால்-முந்தின ஜன்மத்திற்செய்த கருமத்தினால், முடிந்ததோ - நிறைவேறியதோ, மொய்குழலாள்-அடர்ந்த கூந்தலை யுடையவளாகிய தமயந்தி, என்னைக்காண - என்னைத்தேடிக் கண்டுபிடிப்பதற்கு, இசைந்ததோ-நேர்ந்ததோ, எவ்வாறு கொல்லோ-(இதன் காரணம்) வேறெவ்விதமோ? (நமக்கொன்றும் புலப்படவில்லை), [எ-று.]

இச் செய்யுளும் அடுத்த பாடலும் குளகமாதலின், இதில் வரும் விஷயங்களை அடுத்த செய்யுளில் வரும் விஷயங்களோடு கூட்டி, 'ஏவன் முடிப்பன் இனியென்று......தேன் துளிக்குந் தார்மன்......தேரைப்பூட்டினான்' என்று முடித்துப் பொருள் கொள்ளுதல் வேண்டும்.

தமயந்தி சொல்லியனுப்பிய வார்த்தைக்குக் காரணம் இன்னதென்று புலப்படாமையால் நளன், 'இது முன்னை வினையான் முடிந்ததோ, என்னைக்காண இசைந்ததோ, இன்னும் இதற்குக் காரணம் வேறெதுவோ' என்று எதிலும் துணிவின்றிச் சந்தேகமாகவே கூறினான். 'தன் மரபுக் கொவ்வாத வார்த்தையிது' என்றது இரண்டாவது மணத்தைச் சுட்டியதாம்; உயர்குலப் பெண்கள் இரண்டாவது மணஞ் செய்துகொள்வது கிருதயுகத்திலுங் கூட அருவருக்கப்பட்டதென்பது இதனால் விளங்கும். இன்னும், இது, 'குறையாத கற்பினாள்' என்னும் 353-ஆம் செய்யுளானு முணரப்படும். உரைப்பட்டது - சொல்லப்பட்டது. 'முன்னை' என்பதில் ஐ சாரியை. முதலிரண்டடிகளினு முள்ள ஓகாரங்கள் ஒன்றிலுள்ளதை வேறொன்றிற்குத் திருப்பும் விகற்பப் பொருளன. உலகம்-லோகம் என்னும் வடசொற்றிரிபு. கொல்-ஐயப்பொருளது; இதிலுள்ள, ஓ - அசை. மொய்குழல் - வினைத் தொகை நிலைத்தொடர்.

நளன் அவ்வெண்ணத்தை விடுத்துத் தன் வேலையிற் பிரவேசித்தல்.

361. காவலனுக் கேவற் கடன்பூண்டேன் மற்றவன்றன்
ஏவன் முடிப்ப னினியென்று—மாவிற்
குலத்தேரைப் பூட்டினான் கோதையர்தங் கொங்கை
மலர்த்தேன் றுளிக்குந்தார் மன்.

(இ-ள்.) காவலனுக்கு-இந்த ருதுபர்ண மன்னனுக்கு, ஏவல் கடன்-பணிவிடை செய்யுங் கடமையை, பூண்டேன்-நான் தாங்கின வனுவேன், (ஆதலின்) அவன் வார்த்தைக் கெதிர்மொழி பேசுதல் தகாது; அவனே குண்டினபுரம் போய்ச் சேர்வதற்கு விரைவில் தேரை அலங்கரித்துக் கொண்டுவரும்படி குறிப்பால் நமக்குணர்த் தினன்; (அக்குறிப்பின்படியே) இனி-இனிமேல், அவன் தன்-அவ னுடைய, ஏவல் - கட்டளையை, முடிப்பன் - நிறைவேற்றுவேன், என்று—,கோதையர்தம்-மலர்மாலையை அணிந்த பெண்களுடைய, கொங்கை-தனங்களில், மலர்த்தேன் - மலர்களிலுள்ள தேனானது, துளிக்கும் - துளியாகத் தெறிக்கின்ற, தார்-மார்பின் மாலையை அணிந்த, மன்-அரசனாகிய நளன், மாவை-குதிரைகளை, குலத் தேரில்-உயர்ந்ததேரிலே,பூட்டினன் சேர்த்துப்பிணித்தான்.[எ-று.]

முன்செய்யுளிற் கூறியபடி, தமயந்தியின் இரண்டாம் சுயம்வர சம்பந்த வார்த்தைக்குக் காரணம் எதுவோவென்று சந்தேகித்த நளன், பின்னர், "நாமோ இந்த ருதுபர்ணனுக்குப் பணியாளனாக அமைந்திருக்கின்றோம்; இந்நிலைமையிலிருக்கும் நாம்-இவனுடைய வார்த்தையைத் தடுத்துரைத்தல் கூடாது, இவனே தேரை அலங் கரித்துக் கொண்டுவரும்படி குறிப்பால் நமக்குணர்த்தினன்; ஆத லின், அதன்படியே செய்யவேண்டும்" என்று தேரில் குதிரைகளைப் பூட்டினன் என்க. அஃதவனுடைய மனைவியின் விஷயமாயிருந்தும் அவன் அப்போதிருந்த நிலைமையானது அவ்விஷயத்தில் அதிகமாக அவன் புத்தியைச் செலுத்த இடங்கொடுக்கவில்லை.

மற்று-அசை. முடிப்பன்-உடன்பாட்டுத் தன்மை யொருமை எதிர்கால வினைமுற்று. 'மாவில் குலத்தேரை' என்பதை, 'குலத் தேரில் மாவை' எனமாற்றுக. நளன் மார்பிலணியப்பட்டிருக்கும் மாலையிலுள்ள மலர்த்தேனானது எதிரில் நெருங்கியிருக்கும் தமயந் தியின் மார்பகத்தில் துளிக்கும் எனக் கொள்க. கொங்கை மலர்- ஏழாம் வேற்றுமைத் தொகை.

நளன் தேரை அலங்கரித்துக்கொண்டு வந்ததை
ருதுபர்ணனிடங் கூறுதல்.

362. ஒற்றைத் தனியாழித் தேரென்ன வோடுவதோர்
கொற்ற நெடுந்தேர் கொடுவந்தேன்—மற்றிதற்கே
போந்தேறு கென்றுரைத்தான் பொம்மென் றளிமுரலத்
தீந்தேறல் வாக்குந்தார்ச் சேய்.

(இ-ள்.) (மேற்கூறியபடி தேரிற் குதிரைகளைப் பூட்டியவுடனே அத் தேரைக் கொண்டுவந்து ருதுபர்ணனுக்கெதிரில் நிறுத்திக்

கொண்டு), அளி-வண்டுகள், (நெருங்கி), பொம் என்று மூரல் - பொம் என்று ஓசையுண்டாக ஒலிக்க, தீம் தேறல் - தித்திப்பாகிய தேனை, வாக்கும்-ஊற்றுகின்ற, தார் - பூமாலையை அணிந்த, சேய் - குமாரனாகிய நளன், (ருதுபர்ணன் முகத்தை நோக்கி), தனி - ஒப்பற்ற, ஒற்றை ஆழி-ஒரே சக்கரத்தையுடைய, தேர் என்ன-தேரைப் போல, (அதாவது: சூரியனுடைய ஒற்றைச் சக்கரத் தேரைப் போல), ஓடுவது-விரைந்தோடத் தக்கதாகிய, ஓர்-ஒரு, கொற்றம் - வெற்றி பொருந்திய, நெடுந்தேர்-பெரிய தேரை, கொடுவந்தேன் - கொண்டு வந்தேன், இதற்கு-இதில், போந்து-வந்து, ஏறுக - ஏறக்கடவாயாக, என்று உரைத்தான்-என்று சொன்னான். [எ-று.]

தேரை அலங்கரித்த நளன், அதனைக் கொண்டுபோய் ருதுபர்ணனுக்கெதிரில் நிறுத்திக்கொண்டு அவனை நோக்கி, "நான் உயர்ந்த தேரைக் கொண்டுவந்தேன்; இதில் ஏறிக்கொள்" என்றான் என்க. இந்நளன் ஒரு விதத்தில் அரசன் கட்டளையை நிறைவேற்ற வேண்டுமென்று சென்றானெனினும், அவன் மனத்தில் மாத்திரம் தானும் விரைந்து குண்டினபுரிக்குப்போய் இரண்டாவது சுயம்வரத்தின் உண்மையை உணர வேண்டுமென்னும் விருப்பம் அதிகமாயிருந்தது. அதனால் அவன், 'ருதுபர்ணன் விரைந்து செல்லத்தக்க தேரைக் கொண்டுவரும்படி சொன்னது நம்முடைய எண்ணத்துக்கும் அநுகூலமாகவே யிருக்கின்றது; ஆதலின், மிக்க விரைவில் செல்லத் தக்க அஸ்வங்களையும் தேரையுமே நாம் கொண்டு செல்லவேண்டும்' என்று தீர்மானித்து அவ்விதமான தேர்க்குதிரைகளையே அலங்கரித்துக் கொண்டுவந்தான். அதனாலேயே அவன், "ஒற்றைத்தனியாழித் தேரென்ன ஓடுவதோர், கொற்ற நெடுந்தேர் கொடுவந்தேன்" என்றான். இதனால் நளன் ருதுபர்ணனிடத்தில் 'என்செய்கோமற்றிதனுக்கு' என்று நீ விசாரப்படாமல் இதில் ஏறிக்கொண்டால் குறித்த காலந் தவறாமல் நாளைக்கே குண்டினபுரிக்குப்போய்ச் சேரலாம்" என்பதைக் குறிப்பா லுணர்த்தினானென்பதும் விளங்கும். சூரியனுடைய தேர் ஒற்றைச் சக்கரத்தையுடையதென்று புராணங்கூறும். நளன் இப்பொழுது கொண்டுவந்த தேர் சிறிதும் ஓயாமல் விரைந்து சென்று குறித்தவிடம் போய்ச் சேரக்கூடியதாதலின் இதற்குச் சூரியன் தேரை உவமை கூறினான். 'கொற்றத் தேர்' என்பது, 'எல்லாத் தேர்களினும் உயர்ந்ததேர்' என்பதை விளக்கும். மாலையில் வண்டுகள் சேர்ந்து தேன் உண்பதை, அவ்வண்டுகள், பொம்மென்னும் ஓசையால் தங்கள் பசித்துன்பத்தைச் சொல்லி முறையிடுவதாகவும், அதற்கிரங்கி மாலை, தேனை அளிப்பதாகவும் உருவகப்படுத்திக் கூறினர் ஆசிரியர். இவ்வாறு கூறியதனால் அம்மாலையைத்தரித்த நளனும் அதைப்போலவே உபகாரசிந்தை யுடையவனென்ற குறிப்புத் தொனிக்கும். இது, 'ஒலேக

மொழி கூறிய ருதுபர்ணனுக்குத் தேரைக்கொண்டுவந்து நிறுத்தி நளன் மதுரமொழி கூறினன்' என்பதால் பெறப்படும்.

ஒற்றை ஒன்று என்னும் மென்றொடர்க் குற்றியலுகரம் வன்றொடராய் ஐச்சாரியை பெற்றது; (நன் உயி-34, 35); இரட்டை என்பதும் இங்ஙனமே கொள்ளப்படும். கொற்றம்-(பகைவரைக் கொன்று பெறுவது; இது வெற்றிக்குக் காரணக்குறி; கொற்றம் என்பதில், கொல்-பகுதி, அம்-விகுதி, று-சாரியை, மற்றவை-சந்தி, இதற்கு உருபு மயக்கம்; (நன்-பெ-60) போந்து-புகுந்து என்பதன் மரூஉ; 'போ' என்ற பகுதியினின்றே பிறந்ததெனவுமாம். 'ஏறுக என்று' என்பது, 'ஏறுகென்று' எனத் தொகுத்தலாயிற்று. பொம்மெனல்-ஒலிக்குறிப்பு; இதனை 'சப்தா நுகரணம்' என்பர் வட நூலார். அளி-ஆரியமொழி. தீம்-இனிமை (தித்திப்பு); தீம்+தேறல்=தீந்தேறல்; கொடுமைப்பொருளைப் பயக்குமிடத்தில் இது 'தீத்தேறல்' என்று வலிமிகுந்து நிற்கும்; அப்பொழுது, தீமை தேறல் எனப் பதச்சிதைவு செய்யவேண்டும்; தீந்தேன் தீத்தேன், தீங்கவி தீக்கவி, என்பனவற்றில் இவ்வேறுபாடு காண்க. வாக்குதல்-வார்த்தல், மற்று-அசை 'இதற்கே' என்பதில், ஏ-அசை கொடு-நடுக்குறைந்தது. சேய்-இளமைப் பருவமுடையவன். வீரனென்னும் பொருளதென்பினுமாம்.

அடுத்த செய்யுளில் தேர் விரைந்துசென்ற செய்தி கூறப்படுகின்றமையால், இங்கு நளன் சொற்படி ருதுபர்ணன் தேரில் ஏறினானென்பதையும், நளன் தேரைச் செலுத்தினன் என்பதையும் கதைத் தொடர்ச்சிக்குத் தக்கவாறு கூட்டி முடித்துக் கொள்ள வேண்டும்.

இதில், நளன் செலுத்திய தேர் விரைந்து சென்றமை கூறப்படுகின்றது.

363. முந்தை வினைகுறுக மூவா மயல்கொண்டான்
சிந்தை யினுங்கடுகச் சென்றதே—சந்தவிரைத்
தார்குன்று மேல்லோதி தன்செயலைத் தன்மனத்தே
தேர்கின்ற ஞார்கின்ற தேர்.

(இ-ள்.) (அவ்வாறு ருதுபர்ணனும் நளனாகிய வாகுகனும் தேரிலேறிப் புறப்பட்டுப் போகுங்காலத்தில்), சந்தம்-அழகினையும், விரை-வாசனையையும், (உடைய), தார்-பூமாலைகள், குன்று-குறையாத (அதாவது: மிகுதியாகச் சூட்டப்பெற்ற), மெல் ஓதிதன்-மென்மையான கூந்தலையுடையவளான தமயந்தியினது, செயலை-செய்கையை, (அதாவது: அவள் இரண்டாவது சுயம்வரம் ஏற்படுத்தியிருக்கும் விஷயத்தை), தன்மனத்தே-தன்னுடைய மனத்திலே,

தேர்வின்றான்-ஆலோசித்துக் கொண்டிருக்கின்றவனான நளன், ஊர்கின்ற-ஏறிச்செலுத்துகின்ற, தேர்-அந்த இரதமானது, முந்தை வினைகுறுக-பழ வினையானது நெருங்க, (அதனால் அவமானப் படவேண்டித் தமயந்தியினிடத்து), மூவா-முடிவடையாத (அதாவது: அளவு கடந்த), மயல் கொண்டான்-ஆசை மயக்கத்தைக் கொண்டவனான ருதுபர்ணனுடைய சிந்தையினும்-மனமானது செல்லுவதைக் காட்டினும், கடுகச்சென்றது-விரைவாகப் போயிற்று, எ-று.

நளன் செலுத்திய அத்தேரானது, பழவினைப்பயனால் அவமானத்தை அடைதற்குத் தமயந்தியின்மீது மிக்க ஆசை மயக்கத்தைக்கொண்ட ருதுபர்ணனுடைய மனத்தைக் காட்டினும் வேகமாகச் சென்றது என்பது இதன் கருத்து. மனமானது எவ்வளவு தூரத்திலுள்ள பொருளை நினைத்தாலும் நினைத்த அக்கணத்திலேயே அப்பொருளினிடம் செல்லுதல் இயற்கை; அதனினும் காதல் மிக்கார் மனம் தீவிரமானது; ஆதலின், பெண்மயல் கொண்ட ருதுபர்ணனுடைய மனம் மிக்க வேகத்துக்குவமையாகக் கூறப்பட்டது. மிக்க வேகத்துக்கு 'மநோவேகம்' என்று உலகில் வழங்குதலுங் காண்க. "மயல்கொண்டான் சிந்தனையினுங் கடுகச் சென்றது" என்றதனால்; தமயந்தியை விரும்பிய ருதுபர்ணன் அவளை மணஞ்செய்து கொள்ளற்கு எவ்வளவு வேகமாகத் தேர் செல்ல வேண்டுமென்று நினைத்தானோ அதைக்காட்டினும் மிக்க வேகமாக அது சென்றதென்பது பெறப்படும். நளன் வேகமுள்ளவையெனத்தெரிந்து பூட்டிய குதிரைகளின் வேகமொருபக்கமிருக்க, அவன் அச்வஹ்ருதய வித்தையை யுணர்ந்துபயோகித்து இக்குதிரைகளைச் செலுத்தியதாலும், ருதுபர்ணனைப்போலவே தானும் விரைந்துபோக வேண்டுமென்று கருதித் தனக்காகவும் கடுகச் செலுத்தியதாலும் அத்தேர் இங்ஙனம் வேகமுடையதாயிற்றென்க. நளன் தன்பொருட்டும் தேரை வேகமாகச் செலுத்தினானென்பது, 'மெல்லோதி தன் செயலைத் தன் மனத்தே தேர்கின்றான்" என்றதனாற் பெறப்படும். நீதிதவறாத மநுவம்சத்திற் பிறந்த ருதுபர்ணன், சாஸ்திரத்துக்கும் உலக வழக்கிற்கும் விரோதமான இரண்டாம் சுயம்வரத்தை மெய்யென்று நம்புவதற்கும், அம்மணத்திற்குப்போய்த் தான் அவமானப்பட்டுத் திரும்புவதற்கும் காரணம் அவன் பூர்வ ஜன்மத்திற் செய்த தீவினையேயாம்; ஆதலின், அவனை, "முந்தைவினை குறுக மூவாமயல் கொண்டான்" என்றார் ஆசிரியர். தமயந்தியின் கூந்தல் இயற்கையழகும், மாலைசூடல் முதலிய அலங்காரங்களால் செயற்கையழகும் பொருந்தியதாதலின், "சந்த விரைத்தார் குன்றாமெல்லோதி" எனப்பட்டது. கூந்தலுக்கு மென்மை பெண்பால் உரோமத்தின் உத்தமகுணம் ஐந்தனுள் ஒன்று.

மூந்து-பழமையை உணர்தது மிடைச்சொல்; இதில், ஐ-சாரியை; 'மூந்தை' என்பது ஐயீற்றுடை மென்றொடர்க்குற்றியலுகரம். 'வினை' என்பது நல்வினை தீவினை இரண்டிற்கும் பொது வாயினும் இங்குச் சந்தர்ப்பம் நோக்கித் தீவினைமேனின்றது. குறுக-செயவெனெச்சம்; இது, காரணப் பொருளதாதலின் இறந்த காலத்ததாம். 'குறுகக்கொண்டான்' என இயையும், மூவா-மூ என்னும் வினைப்பகுதியடியாகப் பிறந்த ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சம்; இதன் உடன்பாடு 'மூத்த' என்பதாம்; மூத்தல்-கிழத்தன்மை யடைதல்; அஃதிங்கு 'முடிதல்' என்னும் பொருளில் நின்றது. கொண்டான், தேர்கின்றான் என்பன வினையாலணையும் பெயர்கள். சிந்தை-சிந்தாவென்னும் வடசொற்றிரிபு; இதில் ஆவீறு ஐயீறாயிற்று. இன்-எல்லைப்பொருளதாகிய ஐந்தனுருபு. உம்-அதனினும் மேம்பட்ட வேகத்தைக் குறித்தலால் உயர்வு சிறப்புப் பொருளது. சந்த விரைத்தார் குன்றுமெல்லோதி-அடையடுத்த சினையாகு பெயர்; 'மெல்லோதி' என்பதைப் பண்புத் தொகைப் புறத்துப் பிறந்த அன்மொழித் தொகையாகக் கொள்வாருமுளர்; அங்ஙனங் கொள்ளுமிடத்து, 'சந்த விரைத்தார் குன்று' என்ற அடை 'மெல்லோதி' அன்மொழித் தொகைப் பெயரின் ஏகதேசமாகிய ஓதிக்கு ஏலாதாதலின் அது பொருந்தாமை யுணர்க. 'சென்றதே' என்பதிலும், 'மனத்தே' என்பதிலும், ஏ-அசை.

அங்ஙனம் அத்தேர் வேகமாகச் சென்றதற்கோர் அறிகுறி.

364. மேலாடை வீழ்ந்த தெடுவென்றா னவ்வளவில்
நாலாறு காத நடந்ததே—தோலாமை
மேல்கொண்டா னேறிவர வெம்மைக் கலிச்சூதின்
மால்கொண்டான் கோல்கொண்ட மா.

(இ-ள்) *(அத்தேர் அவ்வாறு சென்றபோது) தோலாமை-(பகைவர்க்குத்) தோற்காதிருக்குந் தன்மையை, மேல்கொண்டான்-தரித்தவனாகிய (அதாவது: வெற்றியைக் கைக்கொண்டவனாகிய) ருதுபர்ணன், ஏறிவர-அதில் ஏறியமர்ந்துவர, (அத்தேர் சென்ற வேகத்தால் உண்டான காற்று மோதியதால்), மேலாடை-(அவன்) மேலே தரித்த வஸ்திரமானது, வீழ்ந்தது-கீழே வீழ்ந்தது, (அப்போது ருதுபர்ணன் நளனை நோக்கி), எடு என்றான்-(அதனை) எடுப்பாயாக என்றான், அவ்வளவில்-அவ்வாறு சொல்லிய நேரத்துக்குள், வெம்மை-கொடுமையையுடைய, கலி - கலிபுருஷனுடைய, சூதின் - வஞ்சனையினால், மால்கொண்டான்-மயக்கத்தைக் கொண்ட நளன், கோல்கொண்ட-சாட்டைக்கோல் கொண்டு தூண்டி நடத்திய,*

மா-தேர்க் குதிரைகள், நால் ஆறுகாதம்-நான்கு அல்லது ஆறுகாத தூரம், நடந்தது - வேகமாகப் பாய்ந்து சென்றுவிட்டன, [எ-று.]

கீழே வீழ்ந்த மேலாடையை எடுஎன்று, ருதுபர்ணன் நளனை நோக்கிக்கூறிய வார்த்தை முடிவதற்குள் குதிரைகள் நாலாறு காதம் நடந்தன என்றதனால், அக்குதிரைகளின் வேக மிகுதியும், நளன் தேர் செலுத்துந் திறமையும் நன்கு விளங்கும். ருதுபர்ணன் குண்டின புரத்துக்குப் போய் மணம் பெறாமல் மீள்வதால் மேலாடை வீழ்ந்தது அதற்கறி குறியான நிமித்தமாம். ருதுபர்ணன் இவ்விரண்டாம் சுயம்வரத்தில் தான் தமயந்தியை அடைவது நிச்சயமென்று கருதியிருந்தனனாதலின் அவனை, 'தோலாமை மேல் கொண்டான்' என்றார் ஆசிரியர். ஒரு பெண்ணின்மீது காதல் கொண்டார், அவள் தம்மை விரும்பாதிருப்பினும் அவள் செய்யும் செய்கைகளை யெல்லாம் தம் விருப்பாற் செய்வனவாகவே அக்காதன் மயக்காற் கருதுவது இயற்கையாதலின், இங்கு ருதுபர்ணனும் தனக்காகாத காரியத்தில் ஜெயம் பெறுவதாக உறுதிகொண்டான். நளன் இரண்டாவது சுயம்வரத்தைப்பற்றி ஒரு துணிவுங் கொள்ளாது மயக்கமுற்றிருந்ததற்குக் காரணம் கலியின் வஞ்சகச் செய்கையேயாம். ஆதலின், அவனை "கலிச்சூதின் மால்கொண்டான்" என்றுங் கூறினார் புலவர்.

'நாலாறு' என்றது அவ்வெண்ணைக் குறியாமல் சில மாத்திரமாய் நின்றது. இனி, 'நாலாறு' என்பதை, 'நாலும் ஆறும்' என உம்மைத் தொகையாகக் கொண்டு 'பத்து' என்றும், 'நான்காகிய ஆறு' எனப் பண்புத் தொகையாகக் கொண்டு 'இருபத்துநான்கு என்றும் உரைக்கலாம். எடு-வினைப்பகுதி; இது, தானே ஏவலொருமைக்கு வந்தது. மா-சாதியொருமை; ஆதலின், அதற்கேற்ப இது 'நடந்தது' என்னும் ஒருமை முற்றைக்கொண்டது; 372-ஆம் செய்யுளில் 'பரிவிட்டவையாற்றி' என வருதல் நோக்கி இங்கு மா-என்ற பால்பகாவஃறிணைப் பெயருக்குப் பன்மைப் பொருள் கொள்ளப்பட்டது. வர-வினையெச்சம்; 'வீழ்ந்தது' என்ற முற்றோடு முடியும்; இதில் வருதல்; செல்லுதற் பொருளில் நின்றது. காதம்-ஏழரை நாழிகைவழி; அதாவது: பத்துமைல். கொண்டான்-இரண்டும் வினையாலணையும் பெயர்கள். கோல்-குதிரை நடத்தும் சாட்டை. தோலாமை-எதிர்மறைத் தொழிற் பெயர். 'சூதின் என்பதில், இன்-ஏதுப்பொருளதாகிய ஐந்தனுருபு. மேலாடை-உத்தரீயம்; இதன் எதிர்மொழி - அத்தரீயம்; இதற்கு, 'உள்ளாடை' என்று பொருள். ஏ-அசை; தேற்றப்பொருளெனினுமாம்.

ருதுபர்ணன், தனக்குத் தெரிந்த அக்ஷஹ்ருதய வித்தையை நளனுக்குக் காட்டுதல்.

365. இத்தாழ் பணையி லிருந்தான்றிக் காயெண்ணிற்
பத்தா யிரங்கோடி பாரென்ன—உய்த்ததனில்
தேர்நிறுத்தி எண்ணினான் தேவர் சவைநடுவே
தார்நிறுத்துந் தோள்வேந்தன் தான்.

(இ-ள்.) (அவ்வாறு தேர் வேகமாகச்சென்று கொண்டிருக்கையில் ருதுபர்ணன் வழியில் நின்ற ஒரு தான்றி மரத்தை நளனுக்குச் சுட்டிக்காட்டி அவனை நோக்கி), தாழ்பணையில்-(சுற்றிலும் தழைத்துத்) தாழ்ந்த கிளைகளையுடைய, இரு-பெரிய, இ தான்றி-இந்தத் தான்றி மரத்திலுள்ள, காய்-காய்கள், எண்ணில்-கணக்கிட்டுப் பார்க்குமிடத்தில், பத்தாயிரம்கோடி-பதினாயிரம்கோடி என்னும் தொகையினவாம், பார்-(நீபோய் எண்ணிச் சோதித்துப்) பார்ப்பாயாக, என்ன-என்று சொல்ல, தேவர் சவைநடுவே - தேவர்கள் கூடிய சபையின் மத்தியிலே, தார்-(தமயந்தி சூட்டிய) சுயம்வர மாலையை, நிறுத்தும்-(தன்னிடத்தே) நிற்கச்செய்த, தோள்-தோள்களையுடைய, வேந்தன்-நளமகாராஜன், அதனில்-அம்மரத்தினிடத்தில், தேர்உய்த்து நிறுத்தி-தேரைச் செலுத்தி நிறுத்தி, எண்ணினான்-அக்காய்களை எண்ணிப் பார்த்து அவை ருதுபர்ணன் சொன்ன கணக்குப்படி சரியாயிருக்க வுணர்ந்து அளவற்ற அதிசயமடைந்தான்; [எ-று.]

ருதுபர்ணன், தேரோடும் வேகத்தைக்கண்டு அதிசயித்து, 'இத்தேரில் பூட்டிய குதிரைகள் இங்ஙனம் விரைந்து செல்வதற்குக் காரணம், நளன் அச்வஹ்ருதய வித்தையை உணர்ந்திருப்பதே; அவ்வித்தை மிக அருமையாயிருக்கின்றது; அதனை நாமும் தெரிந்துகொண்டால் அது நமக்குப் பற்பல விஷயங்களில் அனுகூலமாயிருக்கும்; எனினும், அவ்வரிய வித்தையைப் பிரதிபலனின்றிக் கற்றுக்கொடுக்கும்படி நாம் இவ்வாகுகனிடம் கேட்பது தகாது; நமக்குத் தெரிந்திருக்கும் அக்ஷஹ்ருதய வித்தையை இவனுக்குக் காட்டி அதற்கீடாக இதனைக் கற்றுக்கொடுக்கும்படி இவனைக் கேட்டால் இவன் எளிதில் நமக்குணர்த்துவான்' என்று கருதினான். ஆதலின், நளனுக்கு அவ்வித்தையைக் காட்டினான். ருதுபர்ணன் இவ்வாறு கருதியே இதனைச் செய்தான் என்பது அடுத்த செய்யுளால் விளங்கும். தமயந்தியை நளனுக்கு மாலைசூட்டச் செய்தது அவனுடைய தோள் அழகேயாதலின், அத்தோளைத் 'தார்நிறுத்துந் தோள்' என்றார் ஆசிரியர்.

'இத்தான்றி, என இயக்க. 'பணையில்' என்றதில், இல்-சாரியை; இஃது இன் என்பதுபோல அமைந்தது; இன்

சாரியைக் கொண்டு 'பணையினிருந்தான்றி' எனப்பாட மோதுதல் சேராம். இனி 'தாழ்பணை இல்' என்று பிரித்து, 'தாழ்ந்த கிளைகள் இல்லாத' எனப்பொருளுரைத்தலு மொன்று; இதற்கு, 'மேலே வளர்ந்த கிளைகளையே உடையது' என்பது கருத்தாம். இன்னும், 'தாழ்பணையில் தான்றி' என்பதற்கு, 'தாழ்ந்தவயலில் உள்ள தான்றிமரம்' எனப்பொருள் கொள்வாருமுளர்; இதற்கு, 'பக்கத்திலுள்ள பள்ளத்தாக்கான மருத நிலத்திலிருந்த தான்றி' என்பது கருத்தாம். பத்தாயிரங்கோடி-பண்புத்தொகைப் பன்மொழித் தொடர்; இனி, 'பத்தாயிரங்கோடி' என்பதை, 'பத்தாயிரம்-பதினாயிரம், கோடி-(இதனைத் தள்ளாது மனத்திற்) கொள், என்று பிரித்துப் பதப்பொருளுரைப்பாரு முளர்; இவ்வுரை கொள்ளுமிடத்து, கோடி-ஏவலொருமை வினைமுற்று. இதில், கொள்-பகுதி, இ-விகுதி, பகுதி முதல் நீட்சி-விகாரம், த்-எழுத்துப்பேறு, தகரம் டகரமாய் ளகரம் கெட்டது-சந்தி. சவை-ஸபா என்ற வடசொற் றிரிபு. தான்-அசை. 'எண்ணினான்' என்பதில் 'கணக்கிட்டுப் பார்த்தான்' என்ற பொருள்மட்டு மிருப்பினும் மேல்வரும் விஷயம் நோக்கி அதன் பின்னர்ச் சிலவாக்கியங்கள் இசை யெச்சமாகக் கூட்டி முடிக்கப்பட்டன.

ருதுபர்ணன், நளனிடத்தில், 'நம் வித்தைகளை மாற்றிக்கொள்வோம்' என்றுரைத்தல்.

366. ஏரடிப்பார் கோலெடுப்ப வின்றேன் றொடைபீறிக்
காரடுத்த சோலைக் கடனாடன்—தேரடுத்த
மாத்தொழிலு மித்தொழிலு மாற்றுதியோ வென்றுரைத்தான்
தேர்த்தொழிலின் மிக்கானைத் தேர்ந்து.

(இ-ள்.) (நளன் அவ்வாறு காய்களை எண்ணிப்பார்த்து அதிசயித்தபோது தான் உத்தேசித்தபடியே), ஏர் அடிப்பார்-(உழுபடை கொண்டு உழும்போது) எருதுகளை அடித்தோட்டும் உழவர்கள், கோல் எடுப்ப-(அவற்றை அடித்தற்குத்) தாற்றுக்கோலை மேலே உயர்த்த, (அதுபட்டதனால், இன்-இனிமையான, தேன் தொடை-தேன் கூண்டானது, பீறி-கிழிபட்டு, கார் அடுத்த-மேகத்தைச் சேரப்பெற்ற, சோலை-சோலைகளையுடைய,கடல் நாடன்-கடலடுத்த கோசல தேசத்தை யுடையவனான ருதுபர்ணன், தேர்த் தொழிலின் மிக்கானை-தேரோட்டுந்தொழிலில் சிறந்தவனான நளனை, தேர்ந்து-(அச்வஹ்ருதய வித்தையில் தேர்ந்தவனென்று) நன்குமதித்து, (அவனை நோக்கி), தேர் அடுத்த-தேரிற் சேர்ந்த (அதாவது: இரதத்திற் பூட்டப்பட்ட), மாத் தொழிலும்-குதிரைகளை யோட்டுந் தொழிலையும், இத்தொழிலும்-(எனக்குத் தெரிந்த) இந்தக்காயெண்

னுந் தொழிலையும், மாற்றுதியோ-மாற்றிக்கொள்கின்றாயா?, என்று உரைத்தான்-என்று சொன்னான், [எ-று.]

ருதுபர்ணன் நளனை நோக்கி "நான் அறிந்த அக்ஷஹ்ருதயம் என்னும் இந்தக் கணித வித்தையை உனக்குத் தெரிவிக்கின்றேன்; நீ யறிந்த அச்வஹ்ருதயம் என்னும் வித்தையை எனக்குக் கற்பிக்கின்றனையா" என்றானென்பது இதன் கருத்து. நளன், தன்னுடைய வித்தையைப்பார்த்து அதிசயித்ததால் அதை விரும்பினானென்றும், அவ்வாறு விருப்பம் ஏற்பட்டதால் அவ்வித்தையைக் கற்றுக்கொண்டு அவனுடைய வித்தையைத் தனக்குக் கற்றுக்கொடுக்க இசைவானென்றும் ருதுபர்ணன் உணர்ந்தான்; அதனாலேயே இவ்வாறு 'வித்தைகளை மாற்றிக்கொள்கின்றனையா?' என்று அவனிடம் வினவினான். ஒருவரிடம் ஒன்றைப் பெற்றுக்கொள்ள விரும்புவோர் அவர் அதனைக் கொடுப்பார் என்ற குறிப்பை யுணர்ந்தபின்னரே கேட்டல் இயல்பு. மாத்தொழில்-அக்ஷஹ்ருதயம் என்னும் வித்தை; இத்தொழில் என்றது, ருதுபர்ணனுக்குத் தெரிந்த அக்ஷஹ்ருதயம் என்னும் வித்தை, இது, எவற்றையும் பார்த்த மாத்திரத்தில் கணக்கிட்டு உணரும் வல்லமையோடு சூதாட்டத்தில் ஜெயங்கொள்ளுந் தன்மையை யுண்டாக்கக்கூடியது. மருத நிலத்தில் சோலைகள் வயல்களைச் சூழ்ந்து நிற்கும்; அவற்றில் மேகங்கள் படிந்திருக்கும்; அச்சோலைகளிலுள்ள மரங்களில் தேன் கூண்டுகள் ஆங்காங்கே யிருக்கும்; இவ்வாறு சோலைகளும் மேகமும் மருத நிலத்தைச் சூழ்ந்திருப்பதால் உழவெருதுகளைத் தாற்றுக்கோலால் அடித்தோட்டும் மள்ளர்கள் அவ்வாறடிக்க அக்கோலை மேலே தூக்கும்போது அக்கோலின் நுனி தாழ்ந்த மரக்கிளைகளிலுள்ள தேனிறால்களிற்றாக்க அவைகிழிந்து அவற்றினின்றும் தேன் வெளிப்பட்டு அங்கு படிந்திருக்கும் மேகத்தோடு கலக்கும். இனித் 'தேன் தொடைபீறிக் கார் அடுத்த' என்பதற்கு, 'இனிமையான தேன்கூடு கிழிபட்டு மேகத்தை யொத்திருக்கின்ற (அதாவது: மேகத்தைப் போலத் தேனைச் சொரிகின்ற' எனப்பொருளுரைத்தலுமொன்று; இன்னும் இதனை, முன் 347-ஆம்செய்யுளில் "அன்னமிதிப்ப அலர் வழியுந் தேறல் போய்ச், செந்நெல் விளைக்குந் திருநாடு" என்பது போல அமைந்ததெனக் கொண்டு, 'தொடை' என்பதைப் பூ அல்லது பூங்கொத்தெனக்கொண்டு, பொருளுரைத்தலும் பொருந்தும். "கடல்நாடு" என்பதை உவமைத் தொகையாகக் கொண்டு, 'கடல் போல விசாலமான தேசம்' எனினும் பொருந்தும். கோசல நாட்டின் எல்லை கடற்கரை வரையில் உள்ளதென்பது சிலர் கொள்கையாதலின் அதையொட்டிக் 'கடல் நாடு' என்பதற்கு, 'கடலடுத்த தேசம்' எனப் பொருளுரைக்கப்பட்டது; 'மாற்றுதியோ என்றுரைத்தான்' என்பதற்கு, 'மாற்றிக்கொள்கின்றாயோ என்று

வினவி அக்ஷஹ்ருதய வித்தையை நளனுக்குச் சொல்லிக் கொடுத்தான்' என்று பொருள் கூறுவாருமுளர்.

கார்- மேகத்துக்குப் பண்பாகு பெயர்; கருமையென்னும் பண்புப் பெயர் ஈறுபோய் ஆதிநீண்டு இடை உகரங்கெட்டு, 'கார்' என நின்றது; கருமை என்னும் நிறக்குணப் பெயர் அதனையுடைய மேகத்துக்காயிற்று. மா-என்பது, பலபொருளொரு சொல்லாய் விலங்கின் பொதுப்பெயருமாவதெனினும், 'தேரடுத்த' என்னும் அடையால் குதிரையையுணர்த்தி நின்றது. மாற்றுதி-முன்னிலை யொருமை எதிர்கால முற்று; இதில் இகர விகுதியே காலங்காட்டிற்று; த்-எழுத்துப்பேறு; ஏர்-எருது, கலப்பை, நுகத்தடி முதலியவற்றின் கூட்டத்திற்கேற்பட்ட பெயர். இவ்விடத்தே முக்கியமாக எருதையுணர்த்தி நின்றது. எடுத்தல்-மேலோங்குதல்.

இனி அடுத்த செய்யுளில் கலி, நளனைவிட்டு நீங்கினமை கூறப்படுகின்றபடியால், இடையில் நடந்த விஷயம் சொல்லப்படாவிடினும் கதைத் தொடர்பு நோக்கி, 'ருதுபர்ணன் அவ்வாறு கூறியதற்கு நளன் இசைய அதன்மேல் இருவரும் ஒருவர்க்கொருவர் வித்தையைக் கற்றுக்கொடுத்தார்' என்ற விஷயத்தை இங்குக்கூட்டி முடித்துக்கொள்ள வேண்டும்.

கலிபுருஷன் நளனைவிட்டு நீங்குதல்.

367. வண்டார் வளவயல்சூழ் மள்ளுவநாட் டெங்கோமான்
தண்டார் புனைசந் திரன்சுவர்க்கி—கொண்டாடும்
பாவலன்பா னின்ற பசிபோல நீங்கிற்றே
காவலன்பா னின்ற கலி.

(இ-ள்.) (இவ்வாறு இருவரும் வித்தையை மாற்றிக்கொண்ட சமயத்தில்) காவலன்பால்-நளமகாராஜனிடத்தில், நின்ற-நிலைபெற்றிருந்த, கலி-கலிபுருஷனவன், வண்டு ஆர்-வண்டுகள் நிறைந்த, வளம்-வளப்பம் பொருந்திய, வயல்-கழனிகள், சூழ்-சூழ்ந்த, மள்ளுவநாடு-மள்ளுவ நாட்டையுடைய (அதாவது: அத் தேசத்தை ஆளுகின்ற) எம்கோமான்-எங்கள் அரசனாகிய, தண் தார் புனை-குளிர்ச்சியான மலர்மாலையை அணிந்த, சந்திரன் சுவர்க்கி-சந்திரன் சுவர்க்கியென்னும் அரசனால், கொண்டாடும்-மேன்மைப் படுத்தப் படுகின்ற, பாவலன்பால்-கவிவல்லோனிடத்தில், நின்ற பசிபோல-இருந்த பசியைப்போல, நீங்கிற்று-அந்நளனைவிட்டு நீங்கினான், [எ-று.]

நளன் அக்ஷஹ்ருதய வித்தையை ருதுபர்ணனிடத்தில் கற்றுக்கொண்ட மாத்திரத்திலே கலிபுருஷன் அந்நளனைவிட்டு நீங்கினு

னென்பது இதன் கருத்து. இந்த வித்தை, எவற்றையும் பார்த்த மாத்திரத்தில் எண்ணிக்கையிடுதலையும், சூதில் வெற்றிபெறுந் திறத்தினையும் தரவல்லதாதலின், இது நளனைச்சேர்ந்த மாத்திரத்தில், கலிக்குரியனவாயிருந்த அவ்விருதொழில்களும் அந்நளனுக்குரியனவாயின. இதனால் கலியின் வல்லமை நளனிடத்திற் செல்லாததாயிற்று; ஆதலின், அவன் அந்நளனைவிட்டு நீங்கினனென்க. இந்நூலாசிரியர் தம் வழக்கத்தின்படியே தம்மை ஆதரித்து வந்த சந்திரன் சுவர்க்கியென்னும் பிரபுவை உபமான முகத்தாற் புகழ்ந்து கூறினர். இங்கு அவன் தம்மை ஆதரித்து வந்ததைச் சுட்டியே 'பாவலன்' என ஒருமையாற் கூறினார். இனி, பாவலன் என்பதைச் சாதியொருமையெனக் கொண்டு பல பாவலர்கள் எனக்கொள்ளுமாம். பசித்திருந்த பாவலர் சந்திரன் சுவர்க்கியைச் சார்ந்திருந்தால் அப்பசி அவர்கள் பால் நில்லாமல் ஓடியே போய்விடும்; அதாவது: அவனால் கொண்டாடப்படும் அவர்களிடத்தில் தரித்திரமென்பதே இராது. பசியானது புலவர்களிடத்து முன்னே நின்று சந்திரன் சுவர்க்கியிடம் அவர்கள் சேர்ந்தவுடனே நீங்கக்கூடியதாதலின் அதனை 'நின்றபசி' என்று இறந்த காலத்தாற் கூறினர் புலவர். இங்குக் கலி, பசிநோக்குவமையாகக் கூறப்பட்டான். சந்திரன் சுவர்க்கி என்ற பெயர் குளிர்ந்த அருட்டன்மையாலும் சகல பிராணிகட்கும் மகிழ்ச்சியை விளைவித்தலாலும் சந்திரனையும், செல்வத்தாலும் சுகானுபவத்தாலும் சுவர்க்காதிபனையும் நிகர்த்தவனென்று பொருள் தரும்.

வண்டு-சங்குமாம். வண்டார் என்பதைத் தண்டார்க் கடையாக்கினும் பொருந்தும். எம்-என்ற தன்மைப்பன்மை, அந்நாட்டுக் குடிகளையும், தம்மைப்போன்று அவ்வரசனிடம் வந்து சேர்ந்திருக்கின்ற அந்நியநாட்டுப் புலவர்களையும் குறிக்கும். 'சந்திரன் சுவர்க்கி கொண்டாடும்' என்பதை இரண்டாம் வேற்றுமைத் தொகையாகக் கொண்டு, 'சந்திரன் சுவர்க்கியைக் கொண்டாடும் பாவலன்' என வுரைத்தலும் பொருந்தும். 'கோமான்' என்பதில், மான்-பெயர் விகுதி. தண் தார்-பண்புத்தொகை. தேவர்களை இருதிணையாலும் உரைக்கலாமென்பது இலக்கணமாதலின் கலிபுருஷனை இங்கே, 'கலிநீங்கிற்று' என்று அஃறிணையாற்கூறினர் புலவர். பாவலன்-பாட்டில் வல்லவன்; பா-பாட்டு. இச்செய்யுளில் உவமையணி காண்க.

அடுத்த செய்யுளில் ருதுபர்ணன் குண்டினபுரம் போய்ச் சேர்ந்தவிஷயம் வருவதால்; இங்கு நளனும் அவனும் அவ்விடத்தினின்றும் புறப்பட்டார்கள் என்ற விஷயம் கூட்டி முடித்துக் கொள்க.

நதுபர்ணன் குண்டினபுரம் சேர்தல்.

368. ஆமை முதுகி லலவன் றுயில்கொள்ளும்
காமர் நெடுநாடு கைவிட்டு—வீமன்றன்
பொன்னகரி சென்றடைந்தான் போர்வேட் டெழுங்கூற்றம்
அன்னகரி யொன்றுடையா னங்கு.

(இ-ள்.) (அதன்மேல்) போர் வேட்டு-யுத்தத்தை விரும்பி, எழும்-(அதைச் செய்யும் பொருட்டு) எழுகின்ற, கூற்றம் அன்ன-யமனை நிகர்த்த, கரி ஒன்று-ஒரு யானையை, உடையான்-உடையவனான ருதுபர்ணன், ஆமை முதுகில்-ஆமையினுடைய முதுகிலே, அலவன்-நண்டுகள், துயில் கொள்ளும்-படுத்து நித்திரை செய்கின்ற, காமர்-அழகு பொருந்திய, நெடுநாடு-பெரிய தன்னுடைய தேசத்தை, கைவிட்டு-கடந்து, வீமன்தன்-வீமராஜனுடைய, பொன்நகரி-பொன்மிகுந்த நகரத்தில், சென்று அடைந்தான்-தனது நாட்டு எல்லையைக் கடந்துபோய்ச் சேர்ந்தான்; [எ-று.]

தான்றி மாத்தடியினின்றும் புறப்பட்டவுடன் ருதுபர்ணன் தன் நாட்டின் எல்லையைக்கடந்து குண்டினபுரம் போய்ச் சேர்ந்தான் என்பது இதன் கருத்து. நீர்வளமிகுந்திருப்பதனால் ஆமை நண்டு முதலியன கொழுத்து அமைதியுடையனவா யிருக்குமாதலின், ஆமையின் முதுகில் நண்டுகள் படுத்துறங்கும். ஆமையும் சுகமிகுந்து தூங்குவதால் நண்டுகள் தன் முதுகிலேறிப் படுத்திருப்பதை யுணர்ந்து அவற்றைத் தள்ளுவதில்லை. ஆமையின் முதுகு வலிய ஓடாயிருப்பதால் அஃதவற்றை யுணர்வதில்லையெனினுமாம். நண்டுகள், ஆமை ஒரு பிராணியாயிருந்தும் அதனிடத் தஞ்சாது அதன் முதுகில் ஏறி நித்திரை செய்தல் எங்ஙனம் அமையுமெனின், அமையுமென்க. எங்ஙனமெனில், ஆமை வட்டமான கல்போன்று அசையாமல் படுத்திருப்பதால் அந்நண்டுகள் அதனைக் கல்லென்றே நினைத்து அதன் மேலேறித் துயிலும். இதுபோலவே, "எருமை மேல் நாரை துயில்வதியுமூர்" என்று பழமொழியிற் கூறியிருத்தல் காண்க. இதனால் அந்நாட்டின் மருத நிலவளம் வெளியாம். நெடுநாடு-என்றது கோசல தேசத்தின் எல்லையைக் குறிக்கும்; இனி, அந்நாட்டிற்கும் விதர்ப்ப நாட்டிற்கு மிடையிலுள்ள தேசங்களைக் குறித்ததெனினும் பொருந்தும்.

கரி ஒன்று-பட்டத்துயானை. காமர்-காமம் என்ற வடசொற்றிரிபு; விருப்பம் என்ற பொருள் தரும் இச்சொல் இலக்கணையால் விரும்பப்படும் அழகின்மேல் நின்றது. நகரி-நகரீ என்ற வடசொற்றிரிபு. வேட்டு-செய்தெனும் வினையெச்சம்; இதில், வேள்-பகுதி, உ-விகுதி, ட்-இடைநிலை, ள் ட் ஆனது புணர்ச்சி விதியாலாய சந்தி. ஆங்கு-அசை.

ருதுபர்ணன் வீமனரண்மனையினுட் செல்லல்.

369. வெற்றித் தனித்தேரை வீமன் பெருங்கோயின்
முற்றத் திருத்தி முறைசெய்யுங்—கோற்றவற்குத்
தன்வரவு கூறப் பணித்துத் தனிப்புக்கான்
மன்விரவு தாரான் மகிழ்ந்து.

(இ-ள்.) (அவ்வாறு போய்ச் சேர்ந்தபின்பு) மன்விரவு-பெருமை சேர்ந்த, தாரான்-மாலையை அணிந்தவனை ருதுபர்ணன், மகிழ்ந்து-சந்தோஷித்து, வெற்றி-ஜெயம் பொருந்திய, தனி-ஒப்பற்ற, தேரை-தன்னுடைய இரதத்தினை, வீமன்-வீமராஜனுடைய, பெருங்கோயில்-பெரிய அரண்மனையின், முற்றத்து-முன்றிலிலே, இருத்தி-இருக்கச் செய்து (அதாவது: நிறுத்திவிட்டு), முறை செய்யும்-நீதியைச் செய்கின்ற (அதாவது: நியாயத்தை நடத்துகின்ற), கொற்றவற்கு-வெற்றியையுடைய அரசனாகிய வீமனுக்கு, தன்வரவு-தன்னுடைய வருகையை, கூற-சொல்லும்படி பணித்து-அங்கு நின்ற பணியாளர்க்குக் கட்டளையிட்டு, (அவர்கள் போய்த் தெரிவித்த பின்னர் வீமனுடைய அநுமதியைப் பெற்று), தனிப்புக்கான்-தனியனாய் அவ்வரசனிடம் போய்ச் சேர்ந்தான்; [எ-று.]

ஒருவரை ஒருவர் பார்க்கும் போது அவரநுமதி பெற்றுப் பார்த்தல் முறைமையாதலின், இங்கு ருதுபர்ணன் தேரை அரண்மனைவாயிலில் நிறுத்திவிட்டு, வாயில் காப்போரால் தன்வருகையை வீமனுக்குணர்த்தி அவனநுமதி பெற்று, அவனிடம் போனான். வீமனுடைய சம்மதத்தின் பேரிலேயே தமயந்தி, ருதுபர்ணனை வரவழைத்ததாகிய இவ்வுபாயத்தைச் செய்தனளாதலின், வீமன் சந்தோஷமாகவே ருதுபர்ணன் வரவை ஏற்றுக்கொண்டான். ருதுபர்ணன் தேர் எல்லாத்தேர்களினும் மேம்பட்டிருத்தலானும், குறித்தகாலந்தவறாது விரைந்துபோய்ச் சேர்ந்தமையானும் 'வெற்றித்தேர்' என்றும், வேறொரு தேருமின்றித் தனியாகச் சென்றமையால் 'தனித்தேர்' என்றும் கூறப்பட்டது. ருதுபர்ணனும் வேறொருவருமின்றித் தான் மாத்திரம் சென்றனனாதலின் அவனை, 'தனிப்புக்கான்' என்றார் ஆசிரியர். 'தனிப்புக்கான்' என்பதற்குத் 'தனியிடத்தைச் சேர்ந்தான்' என்று பொருள் கூறுவாருமுளர். அடுத்த செய்யுளில் வீமன், 'நீ இங்கு என் காரணமாக வந்தாய்', என்று வினவினன் என வருதலால் அது பொருந்தாமை யுணர்க. 'பெருங் கோயில்' என்பதற்கு, 'சிறந்த அரண்மனை' யெனவுமாம். முற்றம்-முன்றில். இல் முன் என்பதிங்ஙனம் மாறிவரும்; இஃதிலக்கணப் போலியெனப்படும். இருத்தி ஏவுதற் கருத்தாவினை; இதற்கு,

'தேர்ப்பாகனைக் கொண்டு நிறுத்தி' எனப் பொருள் கொள்ளவேண் டும்; வீமனை, 'முறைசெய்யுங் கொற்றவன்' என்றதனால், 'அவன் நீதிக்கு விரோதமாகிய இரண்டாம் சுயம்வரத்தை ஏற்படுத்தாத வன்' என்பது தொனிக்கும்படி அமைந்துள்ளது.

வரவு-தொழிற் பெயர். மன்-அரசு ஆதலின், 'மன்விரவுதார்' என்பது, 'அரசின் தன்மை விளங்கும் வெற்றிமாலை' என்று பொ ருள்படும்; வெற்றியாற் பெற்ற பெருமிதமாகிய அரசே இங்கு மன்- எனக் குறிக்கப்பட்டது. இனி, தார்- 'சேனை' என்று பொருள்படு மாதலின், 'மன்விரவுதார்' என்பதற்குப், 'பெருமை பொருந்திய சேனையை உடைய' எனப் பொருள் விரிப்பினும் அமையும். ருது பர்ணனுக்கு மகிழ்ச்சி-தான் சுயம்வரத்திற்குக் குறித்த தினத்தில் வந்து சேர்ந்துவிட்டதால் ஏற்பட்டதாம்; தமயந்தி நிச்சயமாகத் தனக்கு மனைவியாவாள் என்ற எண்ணத்தால் உண்டாயதெனை யூகித்தற்கும் தகுதியுடையதாம்.

ருதுபர்ணன் அங்கு வந்ததற்குரிய காரணத்தை
வீமன் அவனிடம் விசாரித்தல்.

370. கன்னி நறுந்தேறன் மாந்திக் கமலத்தின்
மன்னித் துயின்ற வரிவண்டு—பின்னையும்போய்
நெய்தற் கவாவு நெடுநாட நீயென்பால்
எய்தற் கவாவியவா றென்.

(இ-ள்.) (அவ்வாறு ருதுபர்ணன் வீமனிடம் போய்ச் சேர்ந்த மாத்திரத்தில் அவன் ருதுபர்ணனை நோக்கி), கன்னி-இளமையான (அதாவது: புதியதான), நறும் தேறல்-நல்ல வாசனையுள்ள தேனை, மாந்தி-குடித்து, கமலத்தில் - தாமரை மலரில், மன்னி - பொருந்தி, துயின்ற-நித்திரை செய்த, வரி-இரேகைகளையுடைய, வண்டு-வண் டுகள், பின்னையும் போய்-மறுபடியும் சென்று, நெய்தற்கு அவாவும்- கருநெய்தல் மலரைச் சேர்வதற்கு விரும்புகிற, நெடு நாடா-பெரிய கோசல நாட்டையுடையவனே!, நீ என்பால் எய்தற்கு-நீ என்னி டத்தில் வருதற்கு, அவாவிய ஆறு என் - விரும்பிய விதம் என்ன? (என்று வீமன் ருதுபர்ணனை நோக்கி வினவினான்), [எ-று.]

ருதுபர்ணன் அங்கு வந்த காரணத்தை வீமன் அறிவான் எனி னும் அறியாதவன் போன்று அவனை நோக்கி, "மன்னனே! இங்கு என்னைக் காணவந்ததன் காரணம் யாது?" என்று வினவினான். ருதுபர்ணன் உலகத்தில் தனக்கு வேண்டிய இன்பங் கிடைத்திருந் தும் அம்மட்டில் திருப்தி யடையாமல் மேலும் தமயந்தியையும் விரும்பி ஓடிவந்தானாதலின் அவனுடைய அக்குணத்தைக் குறிப்பா

துணர்த்துமாறு வீமன் அவனை, "கன்னி நறுந்தேறல் மாந்திக் கமலத்தின், மன்னித்துயின்ற வரிவண்டு பின்னையும் போய், நெய்தற் கவாவும் நெடுநாடா" என்றான்; இதனால் வீமன் அவனை 'நீயும் இவ் வண்டைப்போன்ற குணமுடையவன்' என்று குறிப்பால் இடித்துக் கூறினன் என்பது பெறப்படும். இதனாலேயே ருதுபர்ணன் அங்கு வந்த காரணத்தை வீமனும் உணர்ந்திருந்தா னென்பது தெளியப்படும்.

இதில், எழுவாயும் பயனிலையும் இசை யெச்சமாகக் கூட்டி முடிக்கப்பட்டன. கமலம்-வடசொல். நெய்தற்கு அவாவும்-நான்கனுருபு செயப்படுபொருளில் வந்தது. வரி - உடற்கோடு; இசைப் பாட்டெனினுமாம். கமலம், நெய்தல்-அவற்றின் மலர்கட்கு முதலாகுபெயர்கள். 'நெய்தற்கு' என்பதில் இரண்டனுருபு நான்கனுருபுமாக மயங்கிவந்த தெனினுமாம்; இங்ஙனங்கொள்ளுமிடத்து, 'நெய்தற்கவாவும்' என்பதற்கு, 'நெய்தலை விரும்பும்' எனப்பொருளுரைக்க வேண்டும்.

வீமன் வினவியதற்கு ருதுபர்ணன் விடைகூறல்.

371. இன்றுன்னைக் காண்பதோ ராதரவால் யானிங்ஙன்
மன்றல் மலர்த்தாராய் வந்தடைந்தேன்—என்றான்
ஒளியார்வேற் கண்ணாண்மே லுள்ளந் துரப்பத்
தெளியாது முன்போந்த சேய்.

(இ-ள்.) (அவ்வாறு வீமன் கேட்டபோது) ஒளி ஆர்-பிரகாசம் பொருந்திய, வேல்-வேலாயுதம் போன்ற, கண்ணாள் மேல்-கண்களையுடையவளாகிய தமயந்தியினிடத்தில், உள்ளம் - தன் மனமானது, துரப்ப-தன்னைச் செலுத்தியதனால், தெளியாது-பொய்ச் சுயம்வரத்தின் செய்தியை உணராமல், முன்போந்த-எல்லோர்க்கும் முன்னே புறப்பட்டு விரைந்து அங்குவந்து சேர்ந்த, சேய் - குமாரனாகிய ருதுபர்ணன், (வீமனைப்பார்த்து), மன்றல்-வாசனை பொருந்திய, மலர்த்தாராய் - மலர்களால் தொடுக்கப்பட்ட மாலையை அணிந்த மன்னனே!, உன்னைக் காண்பது-உன்னைப் பார்ப்பதாகிய, ஓர்-ஒரு, ஆதரவால் - ஆசையால், யான்-நான், இன்று - இப்பொழுது, இங்ஙன் வந்து அடைந்தேன்-இவ்விடம் வந்து சேர்ந்தேன், என்றான்-என்று சொன்னான்; [எ-று.]

ருதுபர்ணன் அங்குப் போனவுடன் அவ்விடத்திலிருந்த நிலைமைகளையும் வீமன் தன்னை வினவிய விதத்தையும் நோக்கி, அங்கே சுயம்வரம் ஏற்படவில்லை யென்பதையும், அதன் செய்தி ஏதோ மாறுபாட்டால் தன்னிடம் வந்திருக்கக் கூடுமென்றும் நினைத்தான்,

அதனால் அவன் உண்மையைக் கூறினால் மானக்கேடாகுமென்று இவ்வாறு வீமனைப் பார்க்க வந்ததாகக் கூறினான். "ஒளியார் வேற் கண்ணாள் மேல் உள்ளந் துரப்பத், தெளியாது முன்போந்த சேய்" என்றதனால், "ருதுபர்ணன், 'எருது கன்று ஈன்றது' என்ற மாத் திரத்தில், 'அதனைப் பிடித்துக் கட்டு' என்று சொல்லும் பேதை யரைப் போன்று, 'தமயந்தியின் சுயம்வரம் காலை நிகழ்வது' என் றவுடனே, அவனுடைய ஆசைமயக்கால் அறிவு மழுங்கி, அது அசம்பாவிதமா யிருக்குமென்பதைச் சிறிதும் ஆலோசியாமல் அதனை மெய்யென்று நம்பிப் புறப்பட்டு விரைந்தோடி வந்தான்" என்பது பெறப்படும்.

ஆதரவு-ஆதரம் என்ற வடசொற்றிரிபு. இங்ஙன்-இங்ஙனம் என்பதன் கடைக்குறை. ஆர்வேல் - வினைத்தொகை. உள்ளம்-அகத்துறப்பு; அதாவது: உட்கரணம். தெளியாது-எதிர்மறைத் தெரிநிலை வினையெச்சம்; முன்-இடைச்சொல்; இஃதிங்கு விரைவின் மேனின்றது. இன்று, இங்ஙன்-இடைச்சொற்கள்; பெயர்களெனக் கொள்வாரு முளர்.

இனி, அடுத்த செய்யுளில் நளன் செய்கை கூறப்படுகின்றமை யால், ருதுபர்ணன் அவ்வாறு விடை கூறியதன்மேல் வீமனால் உபசரிக்கப்பட்டு அங்கிருந்தான் என்பதை இங்குக் கூட்டி முடித் துக் கொள்க.

நளன், தேர்க் குதிரைகளை அவிழ்த்துவிட்டு மடைப்பள்ளியிற் சேர்தல்.

372. ஆதி நெடுந்தேர்ப் பரிவிட் டவையாற்றிக்
கோதி லடிசிற் குறைமுடிப்பான்—மேதிக்
கடைவாயில் கார்நீலங் கண்விழிக்கு நாடன்
மடைவாயிற் புக்கான் மதித்து.

[இ-ள்.] (ருதுபர்ணன் அவ்வாறு வீமனிடத்தில், விடை கூறிவிட்டிருக்க), மேதி-(புற்பூண்டுகளை மேய்கின்ற) எருமையின், கடைவாயில்-(குதட்டுகின்ற) வாய்க்கடையில், கார்-கரிய, நீலம்-செய்தற் பூவானது, கண்விழிக்கும்-மலர்ந்து விளங்குகின்ற, (சிறப் பினையுடைய), நாடன்-நிடத தேசாதிபதியான நளன், ஆதி-முதன்மையாகிய, நெடுந்தேர்-பெரிய தேரிற் பூட்டிய, பரிவிட்டு-குதிரைகளை அவிழ்த்துக் கூடத்தில் விட்டு, அவை - அவற்றை, ஆற்றி-இளைப்பாற்றுவித்து, (தான் செய்யவேண்டிய காரியங்களில்), குறை-(முடிக்காமல்) குறையாயிருக்கின்ற, கோதுஇல்-குற்றமில் லாத, அடிசில்-உணவு சமைக்குங் காரியத்தை, முடிப்பான்-மதித்து முடிக்கவெண்ணி, மடைவாயில் - மடைப்பள்ளியினிடத்தில், புக் கான்-மிக்க விரைவாகச் சென்று புகுந்தான்; [எ-று.]

சாரதித் தொழிலும், உணவு சமைக்குந் தொழிலும் நள னுக்குரியன வாதலின், அவன், தேரைக் கொண்டுபோய் நிறுத்த வேண்டிய இடத்தில் நிறுத்திக் குதிரைகளை அவிழ்த்துக் கூடத்தில் விட்டு இளைப்பாறுவித்துப் பின்னர் எஞ்சியிருந்த உணவு சமைக் குந் தொழிலைச் செய்வதற்கு மடைப்பள்ளியிற் புகுந்தான். எருமை நீர் நிலைகளில் நீந்தித் திரிந்து, கொடி புல் முதலியவற்றை மேயும்போது நீலோற்பல மலர்கள் அதன் வாயிலகப்பட்டுக் கடைப்பாகத்தில் ஒதுங்கி மலர்ச்சியோடு விளங்கும். இதனால், நிடத நாட்டின் நீர்வளம் இத்தகைத் தென்பது புலப்படும். கண் விழித்தல்-கண்ணைத் திறத்தல்; அஃதிங்கு மலர்தலில் நின்றது; இனி, நீலோற்பல மலர், மகளிர் கண்ணுக்குவமையாதலின் 'கண் விழிக்கும்' என்பதற்கு, 'மகளிர் கண்ணைப்போல மலர்ந்து விளங் கும்' எனப் பொருளுரைத்தலு மொன்று.

மடை-சோறு; அஃதாகுபெயராய் உணவு சமைக்குமிடத்தை உணர்த்தி நின்றது; வாய்-ஏழனுருபு. பரி-பாரத்தைப் பரிப்பது; பரித்தல்-தாங்குதல். அடிசில்-என்பதைத் தொழிலாகு பெயரா கிய காரணக்குறி யென்றும், அதில், அடு-பகுதி, இசில் - தொழிற் பெயர் விகுதியென்றும் கூறலாம். கடைவாய் - வாயினது கடை; இது முன்பின்னாகத் தொக்க ஆறும் வேற்றுமைத் தொகை; இலக் கணப் போலியுமாம். முடிப்பான் - 'பான்' என்னும் விகுதி காலங் காட்டும் எதிர்கால வினையெச்சம். முதல் வேந்தர் இக்ஷுவாகு வமிசத்தவராதலின், அம்மரபில் வந்த ருதுபர்ணன் தேர் 'ஆதித் தேரானது.'

நளன் சமையலுக்குச் சென்றவிடத்தில் அவனுக்குக்
கிடைத்திருந்த வரபலத்தால் எல்லாப் பொருள்
களும் தாமே வந்து நிறைதல்.

373. ஆதி மறைநூ லனைத்துந் தெரிந்துணர்ந்த
நீதி நெறியாளர் நெஞ்சம்போல்—யாதும்
நிரப்பாம லெல்லாம் நிரம்பிற்றே பொற்றேர்
வரப்பாகன் புக்க மனை.

(இ-ள்.) (அவ்வாறு மடைப்பள்ளியிற் புகுந்த மாத்திரத்தில்), ஆதி-முதன்மை பெற்ற, மறைநூல் அனைத்தும் - வேத சாஸ்திரங் களை யெல்லாம், தெரிந்து உணர்ந்த-ஆராய்ந்தறிந்த, நீதி நெறியா ளர்-நியாய வழியிற் செல்லும் பெரியோர்களுடைய (அதாவது: அவற்றையுணர்ந்து அவற்றிற் சொல்லப்படும் நீதி மார்க்கத்திலே நடக்கக் கூடிய பெரியோர்களின்), நெஞ்சம்போல் - மனத்தைப் போல, (அதாவது: அம்மனம் தனக்குத்தானே சத் விஷயங்களால்

நிறைவு பெற்றிருப்பதுபோல), வரம் - சிரேஷ்டமாகிய, பொன் தேர்ப்பாகன் - அழகிய தேர்ப்பாகனாகிய நளன் (சமையல் செய்வதற்கு), புக்கமனை-புகுந்த அவ்விடானது, யாதும் நிரப்பாமல்-(ஏவலாட்கள்) எதையும் கொண்டுவந்து நிறைக்காமலே, எல்லாம்-எல்லாப் பண்டங்களும், நிரம்பிற்று-அங்குத் தாமே வந்து நிறைந்தன; [எ-று.]

நளன் சமையல் செய்யப் புகுந்த மனையில் இங்ஙனம் யாவும் வந்து நிரம்பியதற்குக் காரணம், அவனுக்கு வேண்டிய பொருள்களெல்லாம் வேண்டிய விடத்திற்கிடைக்கும்படி முன்தேவர்கள் கொடுத்த வரமேயாம். அங்ஙனம் அவர்கள் வரங்கொடுத்ததைச் சுருங்கக் கூறிய "அங்கியமுதநீரப்பூ......" என்ற செய்யுளால் உணர்க. வேத சாஸ்திரங்களை யுணர்ந்து நீதிமார்க்கத்தில் நடக்கும் பெரியோர்களுடைய உள்ளம் ஒருவர் முயற்சியின்றித் தானே பூரணவஸ்துவால் நிறைவுபெற்றிருக்கும். இதுபோல் நளன் புக்க மனையிலும் ஒருவர் பிரயத்தனமில்லாமலே எல்லாம் நிறைந்தன. இனிப் பெரியோருள்ளம் சாஸ்திரவுணர்ச்சியால் எல்லாவற்றையும் உணர்ந்திருக்குமாதலின், அது யாவற்றாலும் நிறைவுற்றதெனினுமாம்.

வேதம் எல்லாவற்றிற்கும் முதனூலாதலின், 'ஆதிமறை' எனப்பட்டது. பொன்தேர்-பொன்மயமாகிய தேரெனினுமாம். மறைநூல் - உம்மைத்தொகை; மறைகளும், அவற்றைச் சார்ந்த மற்றைய நூல்களும் என்று விரியும்; இனி இதனைப் பண்புத்தொகையாகக் கொண்டு மறையாகிய நூலெனினுமாம். அனைத்து-என்பதில் அத்தனை என்பதன் மரூஉவாகிய அனை-பகுதி. நெஞ்சம் என்பதில் அம்-சாரியை. 'எல்லாம் நிரம்பிற்று' எனவந்தது, "ஒருமையிற் பன்மையும் பன்மையிலொருமையும், ஓரிடம் பிறவிடம் தழுவலுமுளவே" என்னும் (நன்-பொது-29 ஆம்) சூத்திர விதிபற்றிப் பன்மையில் ஒருமைவந்த பால்வழுவமைதி; எல்லாம் என்பது யாவும் கூடிய ஒரு கூட்டமென்னும் ஒருமையாய் நிரம்பிற்றென்னும் ஒருமை முடிபேற்றதெனினுமாம். 'நிம்பினவே' எனவும் பாடபேதமுண்டு; இது கொள்ளின் நேர். பெரியோர் உள்ளத்தை நளன்புக்க மனைக்குவமை கூறியதால் இஃதுவமை யணியெனப்படும். ஏ-அசை. 'எல்லாம் நிரம்பின' என்றதனால்,- 'நளனுடைய சமையல் வேலை எல்லாம் முடிந்து யாவும் சித்தமாயின' என்பது பெறப்பட்டது.

தேர்ப்பாகனாகிய நளன் செயல்களை அறிந்து வரும்படி, தமயந்தி ஒருதோழியை அவனிடமனுப்புதல்.

374. இடைச்சுரத்திற் றன்னை யிடையிருளி னீத்த
கோடைத்தொழிலா னென்றுயிர்த்த கோமான்-மடைத்தொழில்கள்

செய்கின்ற தெல்லாந் தெரிந்துணர்ந்து வாவென்றாள்
நைகின்ற நெஞ்சா ணயந்து.

(இ-ள்.) (நளன் அவ்வாறு மடைப்பள்ளியிற் புகுந்து தன் வேலைகளை முடித்திருக்கும் போது) நைகின்ற-(கணவனைப்பிரிந்த தனால்) வருந்துகின்ற, நெஞ்சாள் - மனத்தையுடையவளாகிய தம யந்தி, சுரத்து இடையில்-பாலைவனத்தின் நடுவிலே, இடை இருளில்-நடுராத்திரியில், தன்னை நீத்த-தன்னைவிட்டு நீங்கிப்போன, கொடைத்தொழிலான் என்று - ஈகைத்தொழிலையுடைய] நள னென்று, அயிர்த்த-தன்னால் சந்தேகிக்கப்பட்ட, கோமான்-அந்தச் சிறந்த புருஷனாகிய வாகுகன், மடைத்தொழில்கள்-சமையல் வேலை களை, செய்கின்றதெல்லாம் - செய்கின்ற வகைகளையெல்லாம், தெரிந்து-(பலர் அறிந்துவந்து சொல்லக்கேட்டு) உணர்ந்து, (நள னாகவே யிருக்கலாமென்று துணிந்து மேலும் அவனைச் சந்தேகமற உணர்ந்து கொள்வதற்கு) நயந்து-விரும்பி (தன்தோழி யொருத் தியை நோக்கி) உணர்ந்துவா என்றாள்-(நீபோய் இன்னும் அவ னுடைய மற்ற செயல்களையும்), அறிந்துவரக் கடவாய் என்று கட்டளையிட்டாள்; [எ-று.]

நளன் மேற்கூறியபடி சமையல் வேலையிற் புகுந்திருக்கும் போது, அவனைத் தந்திரத்தால் வரவழைத்த தமயந்தி, அவனைப் பற்றிய விஷயங்களை ஆராயத்தொடங்கியிருந்தாள். அத்தருணத் தில் நளன் அங்கே நெருப்பு நீர் முதலியன தேடாமலே உணவு சமைத்த அதிசயத்தைக் கண்ட சிலர் வந்து தமயந்தியிடம் தெரி வித்தார்கள். அதனைக்கேட்டதும், தமயந்தி, அவனுக்குள்ள அவ் வாற்றலை முன்னரே உணர்ந்திருப்பவளாதலின், அங்கு மடைத் தொழில் செய்பவன் நளனாகவேயிருக்கலாமென்று ஒருவாறு துணிவுகொண்டு மேலும் அவனைச் சந்தேகமின்றித் தெரிந்துகொள் ளும் பொருட்டு அவனிடத்து நிகழும் மற்ற செய்கைகளையும் உணர்ந்து வருமாறு தோழியை அனுப்பினாள். இதன் பொருட்டே தோழியை அனுப்பினளென்பது அடுத்த செய்யுளால் விளக்கமாகப் புலப்படும்.

இனி, இச்செய்யுட்குத் "தமயந்தி தன்னை இடைச்சுரத்தில் இடையிருளில் நீத்த கொடைத்தொழிலானென்றயிர்த்த கோமான், மடைத்தொழில்கள் செய்கின்ற வகைகளை யெல்லாம் தெரிந்துணர்ந் து வாவென்று தோழியை அனுப்பினாள்" என்று பொருள் கூறு வாருமுளர்; இதில் 'தன்னைப் பிரிந்தவனென்றயிர்த்தவன் செயல் களை நீ அறிந்துவா,' என்று கூறுதல் சரியான முடிபின்றி முரணு யிருத்தலின் இவ்வுரை பொருந்தாமை யுணர்க. இது சரியான

முடிபாக வேண்டுமானால், 'தன்னை' யென்பது அங்ஙனமேயிருப்ப, 'தெரிந்துணர்ந்து வா வென்றாள்' என்பது 'தெரிந்துணர்ந்து வரச் செய்தாள்' என்றிருத்தல் வேண்டும்.

இன்னும், 'என்றயிர்த்த கோமான்' என்பதை, 'என்றயிர்த்தக் கோமான்' எனப்பாடமோதி, இச்செய்யுட்கு, "பாலைவனமத்தியில் நள்ளிரவில் தன்னை நீத்த கொடைத்தொழிலானென்று சந்தேகித்து, அக்கோமான் மடைத்தொழில்கள் செய்கின்ற தெல்லாந் தெரிந்துணர்ந்து வாவென்று தமயந்தி தோழியை நோக்கிக் கூறினாள்" எனப்பொருளுரைப்பர் ஒரு சாரார். இவ்வுரையில் அயிர்த்து என்பதற் கேற்ப முதலில், 'வாகுகனை' என்னுஞ் சொல் வருவித்துக் கொள்ளவேண்டும். இவ்வுரை ஒருவகையிற் பொருந்துமெனினும், மேல், சமையல் தொழில்வகைகளைத் தோழி ஆராய்ந்தாளென்பது வாராமையானும் அடுத்த செய்யுளில் தமயந்தி வேறு செயல்களை நாடுமாறுரைத்தலானும் சிறவாமை யுணர்க.

'அயிர்க்கப்பட்ட' என்னும் செயப்பாட்டு வினை, 'அயிர்த்த' என்று செய்வினைபோல் வந்தது; (நன்-பொது-49) ஆம் சூத்திரம் பார்க்க. செய்கின்றதெல்லாம்-ஒருமையிற் பன்மைவந்த பால் வழுவமைதி. 'செய்கின்றவெல்லாம்' எனப்பாடபேதமுண்டு; அப்பாடங்கொள்வது நேர். சுரம்-ஜ்வரம் என்ற வடசொற்றிரிபு; இது 'வெப்பம்' எனப்பொருள்படும் எனினும் இங்கு அதனுடைய பாலைவனத்தின் மேனின்றது. 'இடைச்சுரம்' என்பது,'சுரத்திடை' என மாற்றிக்கொள்ளப்பட்டது.

தமயந்தி தோழியிடம் வாகுகனைச் சோதிக்க முபாயங் கூறல்.

375. கோதை நெடுவேற் குமரனையுந் தங்கையையும்
ஆதி யரச னருகாகப் — போத
விளையாட விட்டவன்றன் மேற்செயலு டென்றாள்
வளையாடுங் கையாள் மதித்து.

(இ-ள்) (அவ்வாறு சொல்லிப் பின்னரும் மேற்செய்ய வேண்டிய காரியங்களை யோசித்து), வளை ஆடும்-வளையல்கள் அசைந்தாடிக் கொண்டிருக்கின்ற, கையாள்-கரங்களை யுடையவளாகிய தமயந்தி, மதித்து-(தான் பாகனைச் சோதித்தற்குச் செய்யுமாறு யோசித்த வற்றுள் ஒன்றை) எண்ணி, (அதனைத் தெரிவிக்கத் தொடங்கித் தோழியை நோக்கி), கோதை-மாலையை அணிந்த, நெடுவேல்-நீண்ட வேலாயுதத்தைத் தரிக்கத்தக்க, குமரனையும்-என் புத்திரனை இந்திர சேனனையும், தங்கையும்-(அவனுடைய) தங்கையான இந்திர சேனையையும், ஆதி-முதன்மை பெற்ற, அரசன் அருகு ஆக-அரச

னு வாகுகன் சமீபமாக, போத-போகவும், விளையாட-விளையாட வும், விட்டு-அனுப்பி, மேல் - அதன் பிறகு, அவன்தன் - அவ னுடைய, செயல்-செய்கையை, நாடு என்றாள் - கவனித்துநோக்கு என்று கூறினாள்; [எ-று.]

நளனுடைய சமையற்றொழிலின் திறத்தைத் தமயந்தி அறிந் ததன் மூலம் அவனைத் தன் நாயகனென்றே ஒருவாறு தெளிந்தன ளெனினும் மேலும் சந்தேகமறத் தெரிந்துகொள்ள வேண்டுமென் னும் எண்ணத்தால் இவ்வாறு தன் பிள்ளைகளை அவனெதிரில் விளையாடவிட்டு அவர்களைக் கண்டு அவன் செய்யும் காரியங்களை அறிந்து தனக்குத் தெரிவிக்கும்படி தோழிக்குரைத்தாள். அந்த வாகுகன் நளனாகவேயிருக்கும் பக்ஷத்தில் பிள்ளைகளைக் கண்டவுடன் பிள்ளைப் பாசமாகிய அன்புமறைக்க முடியாதாதலின் அவனிடத் தில் அதற்குரிய செய்கைகள் வெளிப்படும்; அதன்மூலம் நளனைத் தெரிந்துகொள்ளலாமென்பது தமயந்தியின் கருத்து. இவள் மிக்க பதிவிரதையாதலின், தேர்ப்பாகன் வடிவந்தாங்கியிருக்கும் ஒருவனைத் தன் நாயகனென நிச்சயிக்கும் விஷயத்தில் இவ்வளவு ஜாக்கிரதையாய்ப் பல உபாயங்களைச் செய்தாள். தமயந்தியின் குமாரனுக்கு வேலாயுதத்தைத் தாங்கும் பருவம் இன்னும் வரவில் லையாதலின், 'வேற்குமரன்' என்பதற்கு, வேலைத் தாங்கத்தக்க புதல்வன் என்று பொருளுரைக்கப்பட்டது, இனி 'வேற்குமரன்' என்பதை முருகக்கடவுளுக்கேற்றி அவர் பெயர் உவமையாகு பெய ராய் இப்புத்திரனுக்கு வந்ததெனலுமாம். யுத்தத்திற்குச் செல் லுங்கால் வஞ்சிப்பூ மாலையையும், யுத்தம் புரியுங்கால் தும்பைப்பூ மாலையையும், போரில் வெற்றியடைந்தபோது வாகை மாலையையும் வீரர்கள் அணிந்துகொள்வதோடு தமது படைக்கலத்திற்கும் சூட் டுதல் மரபாகலின் 'கோதை' என்பது வேலுக்கணியாகக் கொள் ளப்பட்டது; இனி இதனைத் தமயந்தியின் புத்திரனுக்கும் அவன் தங்கைக்கும் அடையாக்கினும் அமையும். தமயந்தி, கணவனைப் பிரிந்த துயரத்தால் உடல்மெலிந்தனளாதலின் அவளுடைய கைவளைகள் கரங்களில் இறுகச் சேர்தலின்றி அங்கு மிங்குமோடி அசைவனவாயின. 'ஆதியரசன்' என்பதற்கு 'முன் அரசனாயிருந்து இப்போது அந்நிலை நீங்கியிருக்கின்ற நளன்', எனக்கொள்ளினுமாம்.

'தங்கை, என்பதில், தாம் பகுதி, கை-முறைப்பெயர் விகுதி, பகுதி முதல் குறுகிற்று. 'போத' என்பதில், போ - பகுதி, அ-விகுதி, து-சாரியை; போது-பகுதி யென்பாருமுளர்; இனி, 'போத' என்பதை, 'புகுத' என்பதன் மரூஉவெனினும் பொருந் தும்; செய்தெனெச்சத்தின் திரிபாகக்கொண்டு, 'போத' என்ப தற்கு, 'போய்' எனப் பொருளுரைத்தலுமாம். வளை - வளைந்த

வடிவமுள்ளது, அல்லது கையையவளைத்தது. செய்யுளில் 'நாடென்றான்' எனக் கூறியிருப்பினும் உரையில் கதைத் தொடர்ச்சிக்குத் தக, 'நாடி அதனை எனக்குத் தெரிவி என்றாள்' என்று பொருளறிக.

இனி அடுத்த செய்யுளில், நளன், மக்களைக்கண்டு வருந்திய செய்கை கூறப்படுதலால் இங்குத் தோழி தமயந்தியின் சொற்படி, பிள்ளைகளை அழைத்துக்கொண்டுபோய் நளனுக்கெதிரில் விளையாட விட்டாள் என்ற தொடர்ச்சி விஷயங் கூட்டி முடித்துக்கொள்க.

நளன் பிள்ளைகளைக் கண்டவுடன் செய்யும் செய்கைகள்.

376 மக்களைமுன் காணா மனநடுங்கா வெய்துயிராப்
புக்கெடுத்து வீரப் புயத்தணையா—மக்காணீர்
என்மக்கள் போல்கின்றீர் யார்மக்க ளென்றுரைத்தான்
வன்மக் களியானை மன்.

(இ-ள்.) (தமயந்தியின் சொற்படி, தோழி, பிள்ளைகளை அழைத்துக்கொண்டுபோய் நளனுக்கெதிரில்விட அப்போது), வன்மம்-பகைக் குணமுடைய, களி-மதம் பொருந்திய, யானை-பட்டத்துயானையுடைய, மன்-நளமகாராஜன், மக்களை-(அவ்வாறே தோழியால் கொண்டுவந்து விடப்பட்ட) அப்பிள்ளைகளை, முன்காணா-எதிரில் பார்த்து, (இவர்களையும் பிரிந்தோமே என்ற துக்கத்தால்), மனம் நடுங்கா-நெஞ்சம் கலங்கி, வெய்து உயிரா-வெப்பமாக பெருமூச்சுவிட்டு, புக்கு எடுத்து-போய்த்தூக்கி, வீரம்-வைரத்தன்மை பொருந்திய, புயத்து அணையா-தோள்களிற் சேர்த்தணைத்து, (அவர்களை நோக்கி), மக்காள்-குழந்தைகளே! நீர்-நீங்கள், என் மக்கள்போல்கின்றீர்-என், பிள்ளைகளைப் போன்றிருக்கின்றீர்கள், யார்மக்கள்-எவருடைய குழந்தைகள், என்று உரைத்தான்-என்று சொல்லி வினவினான்.

நளன் மறைந்தொழுகும் நிலைமையிலிருந்தும் தன் பிள்ளைகளைக் கண்டமாத்திரத்தில் தன்னிடத்தே அடக்கொணா அன்பெழுந்ததால் தன்னையும் மறந்து மனநடுங்கிப் பெருமூச்செறிந்து அவர்களை வாரியெடுத்துத தோளோடு சேர்த்தான். அவ்வளவில் தன்னிலைமைபற்றிய எண்ணம் அவனுக்குதித்தபடியால் அவன் தன்னை மறைத்துக் கொள்ளவேண்டி அன்னியன்போல நடித்து அவர்களை நோக்கி, 'நீங்கள் யாருடைய பிள்ளைகள்: என் குழந்தைகளைப் போன்றிருக்கின்றீர்களே' என்று சொன்னான். இங்குக் கூறியவாறு அன்பு எந்நிலைமையினும் வெளிப்படுமென்பதை,

"அன்பிற்கு முண்டோ வடைக்குந்தா ழார்வலர்
புன்கணீர் பூசல் தரும்"

என்னுந் திருக்குறட் செய்யுளானுணர்க.

வன்மம்-உள்வயிரம்; அதாவது வெளிப்படாமல் மனதிற்குள்ளேயே வைத்திருக்கும் பகை; யானை உட்பகை வைத்திருந்து சமயம் பார்த்துத் தன் பகைவரைக்கொல்லும் இயற்கையுள்ளது; பாகன் தனக்கு ஆகாராதிகளை யூட்டினும் சில சமயங்களில் தன்னை அடித்தடக்கும் செயலை நினைத்து அவன்மீது பகைகொண்டு அதனை வெளிக்குக்காட்டாமல் அவனோடு சிநேகமாகவேயிருந்து மதச் செருக்குற்றகாலத்தில் அவனையே தேடிக்கொல்லும்; இதனை, "யானை அறிந்தறிந்தும் பாகனையேகொல்லும்" என்ற நாலடிச் செய்யுளடியாலுணர்க. இங்கு, 'யானையையுடைய அரசன்' என்றது முன்னிலைமைநோக்கி யென்க. இனி, 'களியானை மன்' என்பதற்கு, மதயானைபோன்ற அரசன்' எனப் பொருளுரைப்பினும் அமையும். மக்கள்-மகன் மகள் என்பவற்றின் பன்மை; முன்-இடமுன். காணு, நடுங்கா, உயிரா, அணையா என்பன. செய்யா வாய்பாட்டு உடன்பாட்டு இறந்தகால வினையெச்சங்கள்; இவற்றில் 'ஆ'-என்ற விகுதியே காலங்காட்டும். வெய்து-வெம்மையென்னும் பண்படியிற் பிறந்த ஒன்றன்பாற் குறிப்பு முற்றெச்ச வினையுரி; இதில், பண்புப்பகுதியின் ஈறுபோய் முன்நின்ற மகரம் யகரமாயிற்று. வீரம், புஜம்-என்பன வடசொற்கள். மக்காள்-ஈற்றயல் திரிந்த விளி. நீர் யார்மக்கள்-முன்னிலையிற் படர்க்கை வந்த இடவழுவமைதி. மன்-பெருமை; இது குணவாகுபெயராய் அதனையுடையானை உணர்த்தி நின்றது. 'மனம் நடுங்கா என்றுரைத்தான்' என்பதில் சினைவினை முதலொடு முடிந்தது. 'வன்மம்' என்பதில், பண்படியாகிய வல்-பகுதி, அம்-தொழிற் பெயர் விகுதி, மகரம்-எழுத்துப் பேறு. வன்மையின் மை விகுதி கெட்டது.

நளனுடைய மக்கள், தம்மை இன்னாரென் றுரைத்தல்.

377\. மன்ன னிடதத்தார் வாழ்வேந்தன் மக்கள்யாம்
அன்னைதனைக் கான்விட் டவனேக—இந்நகர்க்கே
வாழ்கின்றோ மெங்கள் வளநாடு மற்றொருவன்
ஆள்கின்றா னென்றா ரழுது.

(இ-ள்.) (நளன் அவ்வாறு வினவியபோது அம்மக்கள் அவனை நோக்கி) அழுது-கண்ணீர் விட்டழுதுகொண்டு, யாம்-நாங்கள், மன்னன்-பெருமையை உடையவனும், நிடதத்தார் வாழ்-நிடத தேசத்தார் வாழ்தற்குக் காரணமான, வேந்தன்-அரசனுமாகிய நளனுடைய, மக்கள்-பிள்ளைகள், அவன்-அம்மன்னன், அன்னைதனை-எங்களுடைய தாயை, கான்விட்டு-வனத்திலே விட்டுவிட்டு, ஏக-பிரிந்துபோயினமையால், இந்நகர்க்கே-இந்தப் பட்டணத்திலேயே, வாழ்கின்றோம்-(நாங்களும் எங்கள் அன்னையும்) வசித்து ஜீவிக்கின்றோம், எங்கள்-எங்களுடைய, வளம் நாடு-வளப்பம் பொருந்திய

நிடத தேசத்தை, மற்றொருவன்-வேறொருவன், ஆள்கின்றான்-ஆட்சிபுரிகின்றான், என்றார்-என்று சொன்னார்கள்; [எ-று.]

பிள்ளைகள், தாய்தந்தையரைப் பிரிந்து முன்னரே அங்கு வந்திருப்பினும், அவர்கள் தமயந்தியுடன் அவ்விடத்திலேயே தங்கியிருத்தற்குக் காரணம்; நளன் தமயந்தியைக் காட்டில் விட்டேக அவளும் அங்குவந்து சேர்ந்தனளாதலின், 'அன்னை தனைக்கான்விட்டவனேக, இந்நகர்க்கே வாழ்கின்றோம்' என்றார்கள். நளன் அவ்வாறு செல்லாமல் தமயந்தியுடன் கூடியிருப்பானானால், எங்கேனுமோரிடத்தில் இல்வாழ்க்கை செய்தல்கூடும்; அங்ஙனம் செய்தால் தங்களை இவ்வளவு காலம்வரை அங்கேவிட்டு வைத்திருக்க மாட்டானென்பது அப்பிள்ளைகளின் கருத்து. இவர்கள் உத்தமனுக்கும் உத்தமிக்கும் பிறந்தவர்களாதலின் உண்மையை மறைக்காமல் கூறினார்கள். நளன் உத்தமனெனினும் தான் மறைந்தொழுக வேண்டிய நிமித்தம் தன்னியல்பை மறைத்தான்; நளன் தன்னுயிரைப் போல் மன்னுயிரைக் காக்கும் நீதியையுடையனாதலின் அவனை நிடதேசத்தார் வாழ்வதற்குக் காரணமானவனென்று கூறினார் புலவர்; இந்நகர், என்றது குண்டினபுரியை; 'மற்றொருவன்' என்றது புஷ்கரனை.

வாழ்-காலங்கரந்த பெயரெச்சம் (வினைத்தொகை); இது காரியப்பொருளில் வந்தது. மக்கள்யாம்-தன்மையிற் படர்க்கை வந்த இடவழுவமைதி. 'நகர்க்கு' என்பதில் எழனுருபு நான்கனுருபாக மயங்கி வந்தது; இஃதுருபுமயக்கம். ஏ-பிரிநிலைப்பொருளது; இதனால், 'எங்கள் நகரத்திற்குப் போகாமல்' என்பது போதரும். அழுது-இறந்தகால வினையெச்சம்; அழுகை சொல்லுதற்கு முன் ஏற்பட்டதாதலின் இதில் இறந்தகாலங் கொள்ளுதல் தகுதி. இனி, 'அழாநின்று சொன்னார்கள்' என இதனை நிகழ்காலத்தாற் கூறுதலுமொன்று; இதில், அழுகையும் சொல்லும் உடனிகழ்ந்தனவாகக் கொள்ளப்படும்; இங்ஙனங் கூறுமிடத்து, 'அழுது' என்பது 'அழாநின்று' என்னும் நிகழ்கால் வினையெச்சம் திரிந்து வந்ததாகக் கொள்ளப்படும். திருக்குறளில் "தெய்வந்தொழாஅள் கொழுநற்றொழுதெழுவாள்" என்றதன் உரையில் பரிமேலழகர், 'தொழாநின்று என்பது தொழுது எனத்திரிந்து நின்றது' என்றமையால் இதனையுணர்க. 'ஏக' என்பதில் ஏகு-பகுதி, அ-இறந்தகால வினை எச்ச விகுதி.

மக்கள் கூறியதைக் கேட்டு நளன் வருந்தல்.

378. ஆங்கவர் சோன்ன வுரைகேட் டழிவெய்தி
நீங்கா உயிரோடு நின்றிட்டான்—பூங்காவில்

வள்ளம்போற் கோங்கு மலருந் திருநாடன்
உள்ளம்போற் கண்ணீ ருகுத்து.

(இ-ள்.) ஆங்கு - அவ்விடத்தில், அவர் - அப்பிள்ளைகள், சொன்ன-அவ்வாறு கூறிய, உரை கேட்டு-வார்த்தைகளைக் கேட்டு, பூகாவில்-பூஞ் சோலைகளில், வள்ளம்போல் - கிண்ணங்களைப் போல, கோங்குமலரும்-கோங்கின் பூ மலரப்பெற்ற, திருநாடன் - அழகிய நிடததேசாதிபதியான நளன், அழிவுஎய்தி - (எதுவும் தோன்றாதிருப்பதான சோர்வை யடைந்ததால் மனம்) கரைதலை அடைந்து, உள்ளம்போல் - (அவ்வாறு கரைந்தொழுகும்) மனத்தைப் போல, கண்ணீர் உகுத்து-கண்ணீரை வடியச்செய்து, நீங்கா உயிரோடு - உடம்பை விட்டுப்போகாத பிராணனோடு, நின்றிட்டான் - நின்றான்.

தன் குழந்தைகள் சொன்ன பரிதாபமான வார்த்தைகளைக் கேட்டவுடன் நளனுக்கு ஆற்றொணாத் துக்கம் அதிகரித்தது. அதனால், அவனுடைய மனம் கட்டுவிட்டுருகிப் போயிற்று; கண்களிலிருந்து நீர்வடிந்தது; இவ்வாறு மிகுந்ததுக்கத்தால் அவன் யாதொரு செயலுமின்றி ஆவியைமட்டும் தாங்கி ஸ்தம்பித்து நின்றான். மனம் நீர் போன்றுருகிச் சோர்ந்ததாதலால், அது கண்ணீர் உதிர்தலுக் குவமையாயிற்று. எல்லாம் ஓய்ந்து உயிர்மாத்திரம் நீங்கக் கூடிய நிலைமையில் எஞ்சி நின்றதாதலின், அதனை விளக்கி ஆசிரியர் 'நீங்காவுயிரோடு நின்றிட்டான்' என்றார்; கோங்கின்மலர் கிண்ணம் போன்றிருக்கும்; "பூங்காவில் வள்ளம்போற் கோங்குமலருந் திருநாடு" என்றதனால் நிடததேசத்தின் சோலைவளம் விளங்கும்.

'ஆங்கு' என்பதற்கு, 'அப்படி' என்று பொருளுரைத்தலுமொன்று. நீங்கா-பெயரெச்சம். 'நின்றிட்டான்' என்பதில், இடு - பகுதிப்பொருள் விகுதி; இதனைத் துணைவினை யெனவும் பொருந்தும்.

நளன் தன் புத்திர னிடத்தில் ஒன்று வினவுதல்

379. உங்க ளரசோருவ னுளனோ ரோடிப்போந்
திங்க ணுறைத லிழுக்கன்றோ—செங்கை
வளவரசே யென்றுரைத்தான் மாதவத்தாற் பெற்ற
இளவரசை நோக்கி யெடுத்து.

(இ-ள்.) (அவ்வாறு நின்ற நளன்), மாதவத்தால் - (தான் செய்த) சிறந்த தவத்தினாலே, பெற்ற-ஈன்ற, இள அரசை-இளமையாகிய அரசனை (அதாவது; இராஜகுமாரனை), எடுத்து - கையால் தூக்கி, (மார்போடணைத்து) நோக்கி - (அப்புதல்வன் முகத்தைப்) பார்த்து, செம்கைவளம்-சிவந்த கைகளின் வளத்தை (அதாவது;

உத்தம விலக்கணத்தை) யுடைய, அரசே - இராஜ குமாரனே! உங்கள் அரசு - உங்களுடைய அரசாட்சியை, ஒருவன் - வேறொருவன், ஆள-ஆட்சி புரிய, (விட்டு நளன் எங்கோ செல்ல), நீர்-நீங்கள், ஓடிப்போந்து-ஓடிவந்து, இங்கண்-இவ்விடத்தில், உறைதல் - தங்கியிருத்தல், இழுக்கு அன்றே - (உங்களுக்குக்) குறைவல்லவோ ?, என்று உரைத்தான்-என்று சொன்னான்; [எ-று.]

நளன் துக்கத்தால் மேற்கூறியபடி சோர்ந்து நின்றான் எனினும், பின்னர்த் தெளிவுற்றுத் தன்புத்திரனுடைய மனம் எத்தன்மைத்தா யிருக்கின்றது என்பதை உணர்ந்து கொள்ளும் பொருட்டு இவ்வாறு அவனைத் தூக்கி மார்போடணைத்துக் கொண்டு அவனை நோக்கி, "உங்கள் அரசை மற்றொருவனுள விட்டு நீங்கள் இங்ஙனம் வந்திருப்பது உங்கட் கிழிவன்றோ" என்று வினவினான். தன் புத்திரனுடைய மனம் க்ஷத்திரியர்க்குரிய தன்மை யிலிருக்கின்றதா இல்லையா வென்பதைச் சோதித்தறிய வேண்டுமென்பது நளன் கருத்து. இவ்வாறே மனிதர்கள், தங்கள் குழந்தைகளின் மனோநிலைமையை இளமைப் பருவத்தில் சோதித்தறிந்து அது நல்ல விதத்தில் அமைந்திருந்தால் மகிழ்ச்சியையும், கெட்ட விதத்தில் அமைந்திருந்தால் துக்கத்தையும் அடைதல் இயற்கை.

செங்கைவளமாவது: அரசர்க்குரிய உத்தமரேகை முதலியன அமைந்திருத்தலாம்; ஈகையெனினும் அமையும். அரசு - நாட்டையாளுந்தன்மை; அஃதிங்கதனை யுடையான் மேனின்றது ஆகுபெயராம். இளவரசு - யுவராஜன்; அவன் பட்டத்திற்கு வரத் தக்க இராஜகுமாரன். 'இக்கண்' என்பது, 'இங்கண்' என மெலித்தல் விகாரம் பெற்றுவந்தது. நீர் - உளப்பாட்டு முன்னிலைப் பன்மை; அவனது தங்கையையும் தாயையும் அவனோடு சேர்த்துக் கூறியது. அன்றே-வினாவகையால் தேற்றத்தில் நின்றது. 'உங்கள் அரசொருவனுள' என்பதற்குப்பின், 'நளன் எங்கோசெல்ல' என்பது இசை யெச்சமாக வருவித்துரைக்கப் பட்டது.

நளன் கூறியதைக்கேட்டுப் புத்திரன் கோபித்துரைத்தல்.

380. நெஞ்சாலிம் மாற்ற நினைந்துரைக்க நீயல்லா
தஞ்சாரோ மன்ன ரடுமடையா—எஞ்சாது
தீமையே கொண்ட சிறுதொழிலா யெங்கோமான்
வாய்மையே கண்டாய் வலி.

(இ-ள்.) (நளன் அவ்வாறு கூறியதைக் கேட்ட அவ்விளங் குமாரன் அவனை நோக்கி), அடும் - (உணவு) சமைக்கின்ற, மடையா-மடைப்பள்ளியிலிருப்பவனே !, எஞ்சாது - குறையாமல்,

தீமையேகொண்ட - கொடுமையையே கொண்டிருக்கின்ற, சிறு தொழிலாய்-தாழ்ந்த தொழிலையுடையவனே!, இமாற்றம் - இந்த ஏளன வார்த்தையை, நெஞ்சால் நினைத்து - மனதால் நினைத்து, உரைக்க-சொல்வதற்கு, நீ அல்லாது-நீ அல்லாமல், மன்னர் அஞ்சாரோ - அரசர் பயப்படமாட்டார்களோ?, (அதாவது: பயப்படுவார்கள்), எம்கோமான்-எங்கள் அரசனாகிய நளச் சக்கரவர்த்திக்கு, வாய்மையே வலி-சத்தியமே பலம், (ஆதலின், அவர் சத்தியத்திற்குக் கட்டுப்பட்டு அரசாட்சியை விட்டாரே யன்றி வலி யின்மையாலன்று), கண்டாய்-நீ அறிந்தனையா? [எ-று]

நளன் அவ்வாறு கூறியவார்த்தைகளைக் கேட்டமாத்திரத்தில் அப்புத்திரன், "இவன் நம்மையும், தந்தையையும் நிந்தித்துத் தாழ்மையான வார்த்தைகளைக் கூறுகின்றான்; இதற்குக் காரணம், நம் தந்தையின் தன்மையை உணராமையே; ஆதலின், இவனுக்கு இந்தத் தப்பபிப்பிராயம் நீங்கும்படியான வார்த்தைகளை நாம் கூறவேண்டும்" என்று கருதினான்; அதனாலேயே இவ்வாறு தன் தந்தையின் தன்மையையும், அவன் அரசாட்சியை விட்டதன் காரணத்தையும் விளக்கிக் கூறினான். நளன் புஷ்கரனை எளிதில் யுத்தத்தால் வெல்லக் கூடியவனாயிருந்தும், சூதாட்டத்தில் தோற்ற நாட்டை யுத்தத்தால் பெறுதல் நீதியாகாதென்று சத்தியத்திற்குக் கட்டுப்பட்டு விட்டு வந்தானாதலின், இங்கு அக்குமரன் 'எம் தந்தைக்கு வாய்மையே வலி; ஆதலின், அதனைக் காப்பாற்றுதற்கே நாட்டைவிட்டு வந்தனர்; இதனால் அவருக்கு எவ்வித இழிவும் ஏற்படாது' என்பவற்றை விளக்கிக்காட்டி 'நீ புத்தியில்லாத மடைத்தொழிலுடையனாதலின் இவ்வாறு கூறினை; அரசராயினார் இங்ஙனம் கூறமாட்டார்கள்' என்றுரைத்தான். இவ்வாறு அவன் கூறியதனால் 'நீ புத்தியில்லாதவனாதலின் நான் மனம் பொறுத்தேன்; வேறொருவரானால் இதற்குத் தக்க தண்டனையடைவார்கள்' என்ற குறிப்பையும் உணர்த்தினான். மடையா-என்பதற்கு, 'புத்தியில்லாதவனே' எனப் பொருள் கூறினும் அமையும். 'அடும்மடையா' என்பதற்கு, 'நீதியைக்கொல்லும் மடையனே' என்றும், 'தீமையே கொண்ட சிறு தொழிலாய்' என்பதற்கு, 'வெப்பத்தையே கொண்ட அடுப்பு மூட்டுதலாகிய அற்பத் தொழிலை யுடையவனே' என்றும் பொருள் கொள்ளலாம்.

அஞ்சாரோ-எதிர்மறை யெச்சம்; அஞ்சுவார் என்ற பொருளைத்தரும். 'மடையன்' என்பது ஈறுகெட்டு அயல்நீண்டு, 'மடையா' என விளியாயிற்று. கண்டாய் - அசையெனினுமாம். இதுவும் அடுத்த செய்யுளும் குளகம்.

381. எந்தை கழலிணையி லெம்மருங்குங் காணலாம்
கந்து சுளியுங் கடாக்களிற்றின்—வந்து
பணிமுடியிற் பார்காக்கும் பார்வேந்தர் தங்கள்
மணிமுடியிற் றேய்ந்த வடு.

[இ-ள்.] (இன்னும்) கந்து-கட்டுத்தறியை, சுளியும்-கோபித்து முறிக்கின்ற, கடாக்களிற்றின்-ஆண் யானைகளின்மேல், வந்து-ஏறி வந்து, பணி முடியில்-ஆதிசேடனாகிய பாம்பின் சிரசில் தங்கியிருக்கும், பார்-பூமியை, காக்கும்-ஆளுகின்ற, பார்வேந்தர் தங்கள்-முறைமை தங்கிய அரசர்களுடைய, மணிமுடியின் - இரத்தின கிரீடங்களால், தேய்ந்த-தேய்வுற்றதனாலுண்டாகிய, வடு-தழும்பை, எந்தை-எம் தந்தையாகிய நளச்சக்கரவர்த்தியினுடைய, கழல் இணையில்-இரண்டு பாதங்களிலும், எம்மருங்கும்-எந்தப் பக்கத்திலும், காணலாம்-(இருக்கப்) பார்க்கலாம் (என்று சொன்னான்.)

நளனுடைய புத்திரன், முன் செய்யுளிற் கூறியவற்றையுரைத்ததன்றி மேலும், தந்தையின் பிரதாபத்தை விளக்குதற்கு, "பலதேயத்தரசர்களும் தினந்தோறும் வந்து வணங்கி வணங்கி அவர்களுடைய முடி உராய்ந்ததனு லேற்பட்ட வடுவானது எம் தந்தையின் பாதங்களில் எம்மருங்கு மிருக்கக் காணலாம்" என்று கூறினான். இவ்வாறுரைத்ததனால், நளன் எல்லா அரசர்களையும் அடக்கியாண்ட மகாவீரனென்பதும், அத்தகைய வீரன் இப்போது சத்தியத்தைக் காப்பாற்றும் பொருட்டே நாட்டைவிட்டுச் சென்றனனென்பதும் பெறப்படும்.

கழல் வீரகண்டை; இஃதாகுபெயராய்ப் பாதத்தையுணர்த்தி நின்றது. 'எம்மருங்கும்' என்பதில், உம்மை முற்றுப்பொருளது. சுளித்தல்-கோபித்தல்; அஃதிங்கு முறித்தன் மேனின்றது. பார்-முறைமை; அதாவது: ஒழுங்கு.

கோபித்துப் பேசிய புத்திரனை நோக்கி நளன் சமாதான வார்த்தை கூறுதல்.

382. மன்னர் பெருமை மடைய ரறிவரோ
உன்னை யறியா துரைசெய்த—என்னை
முனிந்தருள லென்று முடிசாய்த்து நின்றான்
கனிந்துருகி நீர்வாரக் கண்.

(இ-ள்.) (அவ்வாறு கூறிய குமாரனை நோக்கி நளன் மனத்தில் மிக்க அன்பு பூண்டு இராஜகுமாரனே!), மன்னர்-அரசர்களுடைய, பெருமை-உயர்வை, மடையர்-சோறுசமைக்குந் தொழிலையுடையார்,

அறிவரோ-அறிவார்களோ? (அறியமாட்டார்கள்; ஆதலின், நானும் மடையனாதலால்), உன்னை அறியாது-(இத்தகைய வீரகுணமுள்ள) உன்னைத் தெரிந்துகொள்ளாமல், உரைசெய்த-ஏதேதோ பேசிய, என்னை—, முனிந்தருளல்-கோபிக்க வேண்டாம், என்று-என்று சொல்லி, முடிசாய்த்து-தலையை வணங்கி, கனிந்து உருகி-மனமிளகிக் கரைந்து, கண்-கண்களில், நீர்வார-நீர் ஒழுக, நின்றான்-மௌனமுற்று நின்றான்; [எ-று.]

நளன், தன்னுடைய புத்திரன் க்ஷத்திரிய குலத்திற்குத் தக்கவாறு வீரமும், நீதியும் பொருந்திய வார்த்தைகளைச் சொல்லக் கேட்டவுடனே, அவனுடைய புத்திசாதுரியத்தைப்பற்றி ஒருவகை மகிழ்ச்சியும் அன்பும்கொண்டு, 'இத்தகைய புத்திரனையும் பிரியுங் காலம் நேர்ந்ததே' என்று வருந்தினான். அதனால், மனமுருகிக் கண்ணீர் சோர நின்றான். நளன், மடையனல்லாதவனாயிருந்தும் இவ்வாறு, "மன்னர் பெருமை மடையர் அறிவரோ, உன்னை யறியாதுரைசெய்த, என்னை, முனிந்தருளல்" என்று தன்னைத் தாழ்த்திக் கூறியது, புத்திரன்மீதேற்பட்ட மகிழ்ச்சியால், விளையாட்டாகக் கூறியதாம். தாய் தந்தையர் பிள்ளைகளிடத்தில் அதிசய குணங்களைக் கண்டால் இங்ஙனமே மகிழ்ந்தும் அவர்களைப் புகழ்ந்தும் உரிமை பாராட்டி விளையாட்டாகப் பேசுதல் உலகியற்கை. நளன் கஷ்டத்திற்குள்ளாகி யிருக்கும்போது மகிழ்ச்சியுற்றதற்குக் காரணம் தன் பிள்ளையின் மதி நுட்பமான வார்த்தைகளைக் கேட்டதேயாம். கண்ணீர் மகிழ்ச்சியாலும் துக்கத்தாலும் ஏற்பட்டது.

இதிலும் 'மடையர்' என்பதற்கு, 'அறிவில்லாதவர்' எனப் பொருள் கூறலாம். அறிவரோ-எதிர்மறை யெச்சம். முனிந்தருளல்-எதிர்மறை ஏவலொருமை வினைமுற்று; வியங்கோள் வினைமுற்றுமாம்; இதில், அல் விகுதியே எதிர்மறுத்தலையும் ஏவலையும் உணர்த்துமெனக் கூறுவாருமுளர். 'அருள்' என்பது மரியாதை குறித்துவந்தது; பெரியோரிடம் உயர்வு நோக்கி இதனை எல்லாவிடங்களிலும் கூட்டியுரைத்தல் இயல்பு; எழுந்தருளல்-கூறியருள், உண்டருள், கேட்டருள், இருந்தருள் என்பனபோன்ற வாக்கியங்களால் இஃதுணரப்படும்.

இனி, அடுத்த செய்யுளில், நளன் செய்கைகளைத் தோழியும், மக்களும் தமயந்தியிடம் கூறியதும், அதைக்கேட்டு அவள் வருந்தியதும் கூறப்படுகின்றமையால், தோழி, தமயந்தியின் பிள்ளைகளை அவளிடம் அழைத்துக்கொண்டுபோன செய்கையை இங்குக்கூட்டி முடித்துக்கொள்க.

நளன் செய்கைகளைத் தன் பிள்ளைகளும், தோழியும்
உரைக்கக்கேட்டுத் தமயந்தி வருந்துதல்.

383. கொற்ற குமரனையுங் கோதையையுந் தான்கண்டு
மற்றவன்ற ணாங்குரைத்த வாசகத்தை—முற்றும்
மொழிந்தாரம் மாற்ற மொழியாத முன்னே
அழிந்தாள் விழுந்தா ளழுது.

(இ-ள்) (தமயந்தியின் பிள்ளைகளும் தோழியும் திரும்பிப் போய் அத்தமயந்தியிடம்), கொற்றம்-வெற்றி பொருந்திய, குமரனையும்-அந்த ராஜ புதல்வனையும், கோதையையும்-ராஜ புத்திரியையும், கண்டு-பார்த்து, அவன்-அந்த வாகுகன், ஆங்கு-அவ்விடத்தில், உரைத்த-சொன்ன, வாசகத்தை-அவ்வார்த்தையை, முற்றும்-முழுவதும், மொழிந்தார்-உரைத்தார்கள், அம்மாற்றம்-அந்த வார்த்தையை மொழியாத முன்னே-சொல்லி முடிக்காததற்கு முந்தியே, (தமயந்தி), அழிந்தாள்-மனவுறுதி கெட்டவளாகி, (அதாவது: மனங்கரைந்து), அழுதுவிழுந்தாள்-அழுதுகொண்டு தன்னையே மறந்து அப்படியே நிலத்தில் வீழ்ந்தாள்; [எ-று.]

நளன் மேற்கூறியவாறு பிள்ளைகளைக் கண்டவுடனே செய்த செய்கைகளை அவர்களும் தோழியும் கூறியவுடனே அவனைத் தன் நாயகனென்றே நிச்சயமாக உணர்ந்துகொண்டாள். அதனால், அவள், 'அந்தோ! நம் நாதர் இந்நிலைமை அடைந்தனரே!' என்று வருந்தி மனமுருகிக் கீழே வீழ்ந்தழுதாள். அவ்வார்த்தைகள் முடிவதற்கு முந்தியே அவளுக்குத் தன் நாயகன் செய்கை விளங்கிவிட்டபடியால் அவற்றை முடியக் கேட்பதற்கு முந்தியே அவள் துக்கங்கொண்டு வீழ்ந்தாளாதலின், 'அம்மாற்றம், மொழியாதமுன்னே அழிந்தாள் விழுந்தாள் அழுது' என்றார் ஆசிரியர்.

கோதை-உவமையாகு பெயர். உம்மைகள்-எண்ணுப்பொருளன. தான் இரண்டும்-அசைகள். 'ஆங்கு' என்பதற்கு, 'அப்படி' எனப் பொருளுரைத்தலுமாம். மற்று-அசை. 'முன்னே' என்பதில் ஏ-விரைவுப்பொருள் குறித்து நின்றது; அழிந்தாள் - முற்றெச்சம்.

இதுவுமது.

384. கொங்கை யளைந்து குழறிருத்திக் கோலஞ்செய்
அங்கை யிரண்டு மடுபுகையால்—இங்ஙன்
கருகியவோ வென்றழுதாள் காதலனை முன்னாள்
பருகியவேற் கண்ணாள் பதைத்து.

(இ-ள்) (அவ்வாறழுதுமேலும்), முன்னாள் - முந்திய நாள்களில், காதலனை-தன் ஆசைக்குரியவனாகிய நாயகனை, பருகிய-உட்கொண்ட, வேல்-வேலாயுதத்தைப் போன்ற, கண்ணாள்-கண்களையுடையவளாகிய அத்தமயந்தி, பதைத்து-பதறி, (நளனை மனத்தால் நோக்கி, என்னுயிர்த்துணைவனே!), கொங்கை அளைந்து - வாசனை வஸ்துக்களைக் கலந்தெடுத்து. (அவற்றைப்பூசி), குழல் திருத்தி-என் கூந்தலை ஒழுங்குபடுத்தி, கோலம் செய்-எனக்கு அலங்காரம் செய்கின்ற, அங்கை இரண்டும்-உள்ளங்கைகளிரண்டும், அடுபுகையால்-சமையல் தொழில் புரிவதாலுண்டாகும் புகையினாலே, இங்ஙன்-இப்படி, கருகியவோ-கருமையாயினவோ, என்று அழுதாள்-என்று சொல்லி மேலும் அரற்றினாள்; [எ-று.]

முன்னுரைத்தபடி நளன் தன்மையைக் கேட்டமாத்திரத்தில் வீழ்ந்தழுத தமயந்தி மேலும் அவனுடைய கைகள் சமையல் தொழில் செய்வதால் கருமையுற்றிருக்கின்றனவென்று தோழி முதலியவர்கள் சொன்னதால் உணர்ந்தாளாதலின், அவன் செங்கரங்கள் முன்னாளில் தன் குழலைச் சீவிமுடித்துத் தனக்கு அலங்காரஞ்செய்ததையும், அப்போது அடுப்பின் புகையால் கருமையுற்றிருப்பதையும் நினைத்து இவ்வாறு 'கொங்கையளைந்து குழல் திருத்திக் கோலஞ்செய் அங்கையிரண்டும் அடுபுகையால், இப்படிக் கருகியவோ' என்று கூறி அழுதாள் என்பதாம்.

கொங்கு-வாசனை; அஃதிங்கு வாசனைத்தைலம் முதலியவற்றின் மேனின்றது. அளைதல்-கலத்தல்; இஃதிங்கு எடுத்துப் பூசுதலை யுணர்த்திற்று. 'கொங்கைளை அந்து' என்பதற்கு, 'தனங்களில் சந்தனக்குழம்பு முதலியவற்றைப் பூசி' எனப்பொருளுரைத்தலுமொன்று; இதில், 'சந்தனக்குழம்பு' என்பதை இசையெச்சமாக வருவித்துரைத்தல் வேண்டும், உயர்குலப் பெண்கட்கு உயர்குலப் பூமான்கள் அன்பின்மேலீட்டால் இங்ஙனம் அலங்காரம் செய்தல் இயல்பு. (நன்-மெய்-பு-19) ஆம் சூத்திரவிதிபற்றி 'அகங்கை' என்பது 'அங்கை' எனவந்தது. அகம்-உள்; அகங்கை-உள்ளங்கை. 'இங்ஙனம்' என்பது, அம்-குறைந்து, 'இங்ஙன்' என நின்றது. ஓ-இரக்கப்பொருளது. காதலனைக் கண்பருகுதலாவது முடியநோக்கி இன்பமுறலாம். இனி 'கொங்கை அளைந்து' என்பதற்கு 'கொங்கைகளைத் தடவி' எனப்பொருளுரைப்பினும் பொருந்தும். காதலர் விருப்பமேலீட்டால் உடம்பைத் தடவி அலங்கரித்தல் இயல்பு. 'கொங்கை வருடிக்குழைதிருத்தி' எனவும் பாடபேதமுண்டு இதற்கு, 'தனங்களைத்தடவிக் காதணிகளை ஒழுங்கு பெறச்செய்து' எனப்பொருளுரைத்தல் வேண்டும்.

தமயந்தி, வாகுகனே நளனென்பதைத் தன் தாய்தந்தையர்க் கறிவித்தல்.

385. மற்றித் திருநகர்க்கே வந்தடைந்த மன்னவற்குக்
கொற்றத் தனித்தேருங் கொண்டணைந்து—மற்றும்
மடைத்தொழிலே, செய்கின்ற மன்னவன்கா ணெங்கள்
கொடைத்தொழிலா னென்றாள் குறித்து.

(இ-ள்.) (அவ்வாறு அழுத தமயந்தி தன் தாய்தந்தையரிடத்திற் சென்று), குறித்து-நளன் செய்கைகளைச் சுட்டிக்காட்டி, இத் திருநகர்க்கு-இந்த அழகிய பட்டணத்திற்கு, வந்து அடைந்த-வந்து சேர்ந்த, மன்னவற்கு-ருதுபர்ணமகாராஜனுக்கு; கொற்றம்-வெற்றிபொருந்திய, தனி-ஒப்பற்ற, தேரும் கொண்டு அணைந்து-இரதத்தையும் ஓட்டிக் கொண்டு வந்து சார்ந்து, மற்றும்-பின்னரும், மடைத்தொழிலே செய்கின்ற-சமையல் வேலையையும் செய்கின்ற, மன்னவன் - அரசன், எங்கள் - எங்களுடைய, கொடைத் தொழிலான்-ஈகைத் தொழிலுக்குரியவனாகிய நள மகாராஜனே யாவான், என்றாள்-என்று சொன்னாள்; [எ-று.]

வாகுகனை நிச்சயமாக நளன்தானென்றறிந்து கொண்ட தமயந்தி, உடனே தன்தாய்தந்தையரிடத்தில் அவனுடைய குணம் செயல் முதலியவற்றைக் குறித்துக் காட்டி, 'ருதுபர்ணனுக்குத் தேர் செலுத்திக் கொண்டு வந்து இங்கு உணவு சமைக்குந் தொழிலையும் செய்கின்ற வாகுகனே எங்கள் வள்ளலாகிய நளன்' என்று சொன்னாள். இங்ஙனம் அவளுரைத்ததற்குக் காரணம், விரைந்து போய் அவனை அழைத்துவர வேண்டுமென்று கருதியதேயாம். தமயந்தி, நளனுடைய குணங்களையும் செய்கைகளையும் 'இது அவனுடையகுணம், இது அவனுடையசெய்கை' என்று ஒவ்வொன்றாக அங்குள்ளாரிடத்தில் சுட்டிக்காட்டினாள்; அதனாலேயே, 'குறித்து' என்றார் ஆசிரியர். தமயந்திமுன்னே நளனுடைய சமையல் திறத்தைக் கேட்டபோதே அவனே நளனென்று துணிந்தாள்; எனினும், அத்துணிவில் சிறிது சந்தேக மிருந்தது; அதுபற்றி அப்போது அவன் விஷயத்தைத் தாய்தந்தையரிடத்தில் தெரிவிக்கா திருந்தாள்; இப்போது அவன், பிள்ளைகளைக்கண்டு துக்கித்தானென்றதைக் கேட்டதனால் அவனே நளனென்பதை நிச்சயமாகத் தெரிந்து கொண்டாள்; ஆதலின், இத்தருணத்தில் அவன்செயல்களைத் தாய்தந்தையரிடத்திற் கூறி அவனே தன்நாயகனென்பதை விளக்கிக்காட்டி அவனை விரைவில் அழைத்துவரவேண்டுமென்றாள்.

முதலிலுள்ள மற்று-அசை. 'நகர்க்கே' என்பதில் ஏ-அசை தேரும் என்பதன் உம்மை-எதிரது தழுவியது. மற்றும் என்பதன்

உம்மை-இறந்தது தழுவியது. தொழிலே என்பதிலுள்ள ஏ-என்னும் பொருளில் வந்தது; தேர்கொண்டணைந்ததும், மடைத்தொழில் செய்ததும் எண்ணிக்கையில் நிற்றல் காண்க. இரண்டாவது வந்த மற்று-வினைமாற்றுப் பொருளில்வந்த இடைச்சொல். காண்-அசை; இதற்கு, 'அறி' என்று பொருள் கூறுவாருமுளர். 'தமயந்தி நளன் விஷயங்களைத் தாய்தந்தையர்க்குக் கூறினாள்' எனப்பொருள் கொண்டிருப்பதால் 'அறி' என்னும் ஏவலொருமை கொள்ளல் பொருந்தாமை யுணர்க. தமயந்தி தந்தையை மாத்திரம் நோக்கிக்கூறினாள் எனக்கொள்ளின், காண்-என்பதற்கு, 'அறி' என்று பொருள் கொள்ளல் அமையும். எங்கள்-என்றது தன்னையும், பிள்ளைகளையும் நிடதநாட்டுஜனங்களையும் சேர்த்துரைத்ததாம்.

வீமன் வாகுகனிடம் போய் அவனை நளனென்
றுணர முடியாமல் திகைத்து நிற்றல்.

386. போதலருங் கண்ணியான் போர்வேந்தர் சூழப்போய்க்
காதலிதன் காதலனைக் கண்ணுற்றான்—ஓதம்
வரிவளைகோண் டேறும் வளநாடன் றன்னைத்
தெரிவரிதா நின்றான் றிகைத்து.

(இ-ள்.)(அவ்வாறு தமயந்தி கூறியதைக்கேட்டவுடன்)போது-பூவரும்புகள், அலரும்-மலர்ந்து விளங்குகின்ற, கண்ணியான்-மாலையை அணிந்தவனாகிய வீமராஜன், போர்வேந்தர்-யுத்தஞ் செய்யும் வீரராகிய பல அரசர்கள், சூழ-தன்னைச் சூழ்ந்துவர, போய்-(வாகுகனிருந்த மடைப்பள்ளிக்குச்) சென்று, காதலி தன்-தன்னுடைய அன்பிற்குரிய மகளாகிய தமயந்தியின், காதலனை-ஆசைக்குரிய நாயகனாகிய நளனை, கண்ணுற்றான்-பார்த்தான், (அப்போது நளனுருவம் அவனிடத்தின்மையால்), ஓதம்-கடல்நீரின் அலையானது, வரி-இரேகைகளையுடைய, வளைகொண்டு-சங்குகளை எடுத்துக்கொண்டு, ஏறும்-கரையில் ஏறி மடங்குகின்ற, வளம்-கடல் வளத்தையுடைய, நாடன் தன்னை-நிடத தேசாதிபதியான நளமகாராஜனை, தெரிவு அரிதா-அறிதல் அருமையாக (அதாவது: அறிதல் முடியாமலிருந்தபடியால்) திகைத்து நின்றான்-மயங்கினின்றான்; [எ-று.]

தமயந்தி, நளன் அங்குளனென்று கூறியதைக் கேட்டவுடனே, வீமன் மகிழ்ந்து, அவனைக் கண்டழைத்து வரும்பொருட்டுப் பல அரசர்கள் தன்னைச் சூழ்ந்து வரப்புறப்பட்டுப் போய் அவனைப் பார்த்து அவனிடத்தே நளனுருவம் இல்லாமையால் திகைத்து நின்றான். நளன் உருவம் மாறுபட்டிருந்தமையால், வீமன் 'நம்

குமாரத்தி இவனை எதனால் நாயகனென்று கூறினாள்? நளனாயிருந்தால் இவனுடைய உருவம் மாறுபட்டிருத்தற்குக் காரணமென்ன?' என்று பலவிதமாகச் சந்தேகங் கொண்டபடியால் அவனுக்கு மதி மயக்க முண்டாயிற்று. போர்வேந்தர் - வீமனுக்கடங்கிக் கப்பங் கட்டிவரும் சிற்றரசர்கள்; அன்றிப் போர்த் தொழிலுக்குரியாராய் அவனிடத்தே அமர்ந்திருக்கும் அவன் குடும்பத்தைச் சார்ந்த க்ஷத்திரியர் எனினுமாம். அரசன் வெளிப் புறப்படுங்கால், சிற்றரசர் போர் வீரர் முதலியவர்கள் அவனைச்சூழ்ந்து செல்லுதல் மரபு. 'போர் வேந்தர் சூழ' என்பதில் வீமனுக்குரிய மற்ற எல்லோரையும் அடக்கி, 'தமயந்தி, அவளுடைய குழந்தைகள் முதலிய எல்லாருமே போயினார்கள்' எனக்கொள்க; இது, பின்னர் 'தமயந்தியும் குழந்தைகளும் நளனடியில் வீழ்ந்தழுதார்கள்' என வருகிற கதைத் தொடர்ச்சியாற் கொள்ளப்படும்.

காதலி - அன்பிற் குரியவள்; மகள்; இது மனைவி என்னும் பொருளிலும்வரும். காதலன்-ஆசைக்குரியவன்; கணவன்; இது குமாரனுக்கும் வரும். ஓதம்-குளிர்ச்சி; இது நீருக்காய், நீர் கடலுக்காய், கடல் அலைக்காய் நின்றது; ஆதலின் மும்மடியாகு பெயராகும். அலை சங்குகளைக் கரையில் ஒதுக்கித்தள்ளும்; அதனை இங்கு எடுத்து வருவதாகக் கூறினார் புலவர். அரிதாக, என்பது, 'அரிதா' என ஈறுதொக்கி நின்றது. 'காதலின்' என்பதற்கு, 'நளன் மனைவியாகிய தமயந்தியின்', எனப் பொருளுரைப்பினுமாம்.

வீமன் நளனைத் தெரிந்து கொள்ளுதல்.

387. செவ்வாய் மொழிக்குஞ் செயலுக்குஞ் சிந்தைக்கும்
ஒவ்வாது கொண்ட வுருவென்று—எவ்வாயும்
நோக்கினான் நோக்கித் தெளிந்தா னுணங்கியதோர்
வாக்கினான் றன்னை மதித்து.

(இ-ள்.) (மேற்கூறியபடி சந்தேகித்து மயங்கிநின்ற வீமன் நளனோடு சிறிது நேரம் சம்பாஷணைசெய்து, அவன் குணம், செயல், வாய்மை முதலியன உயர்வை விளக்குவதையும், அவனுடைய உருவம் தாழ்மையைத் தெரிவிப்பதையும் நோக்கி), கொண்ட - இவன் கொண்டிருக்கின்ற, உரு-வடிவமானது, (இவனுடைய) செவ்வாய் மொழிக்கும்-செம்மையான வாயினின்று முண்டாகும் வார்த்தைக்கும், செயலுக்கும்-செய்கைக்கும், சிந்தைக்கும்-மனத்திற்கும், ஒவ்வாது என்று - பொருந்தாது என்று, (அதாவது: அவ்வடிவம் இவற்றிற்குத் தகுந்ததில்லையென்று), எவ்வாயும் - எல்லா வழிகளையும், நோக்கினான் - ஆராய்ந்து பார்த்தான், நோக்கி - அவ்வாறு

பார்த்து, நுணங்கியது-(கருத்தில்) நுட்பமுடையதாகிய, ஓர் - ஒப்பற்ற, வாக்கினன் தன்னை - வார்த்தையை யுடையவனாகிய நளனை, மதித்து-(அவ்வார்த்தையினால்) நிச்சயித்து, தெளிந்தான்-அறிந்துகொண்டான்; [எ-று.]

வீமன் நளனிடத்தே சென்றவுடன் அவனுடைய உருவத்தைப்பார்த்துச் சந்தேகித்து மயங்கிநின்று சிறிது நேரம்வரை அவனோடு சம்பாஷணை செய்தான். அவ்வாறு செய்தபோது அவனுடைய பேச்சும், செய்கையும், குணமும் கௌரவமான புருஷனிடத்துள்ளவை போலத் தோன்றின. ஆதலின், அவன், 'இவற்றிற்கும் இவனுடைய வடிவத்திற்கும் சிறிதும் பொருத்த மில்லாமலிருக்கின்றதே; இவன் பேச்சு முதலியவைகள் இவன் அரசனென்பதை விளக்குகின்றன; உருவம் வாகுகனென்பதை விளக்குகின்றது; இவற்றைக் கொண்டு நாம் எவ்வாறு இவன் நளன் என்று துணியலாம்' என்று மேலும் அவனை அறிவதற்கான பலவழிகளைக்கொண்டும் ஆராய்ந்து பார்த்தான். அவ்வாராய்ச்சியில் நளனுடைய உயர்ந்த கருத்தடங்கிய நுட்பமான வார்த்தையே அவன் இன்னவனென்பதை நன்கு புலப்படுத்திவிட்டது. அதன்மேல் வீமன் அவனை நளனென்றே உணர்ந்து கொண்டான். 'நுணங்கியதோர் வாக்கினன் றன்னைமதித்து' என்றதனாலேயே, 'வீமன் நளனுடைய வாக்கைக் கொண்டே அவனை நளன்தான் என்று தெளிந்தான்' என்பது பெறப்படும்.

மொழிக்கும், செயலுக்கும், சிந்தைக்கும் என்பவற்றின் உம்மைகள் எண்ணுப் பொருளன. 'எவ்வாயும் என்பதன் உம்மை - முற்றுப் பொருளது; வாய்-வழி; அதாவது: அறியும் உபாயம் என்பதாம்.

வீமன் நளனிடத்தில் அவனுடைய இயற்கை வடிவத்தைக் காட்டும்படி கூறுதல்.

388. பைந்தலைய நாக பணமேன்று பூகத்தின்
ஐந்தலையின் பாளைதனை யையுற்று—மந்தி
தெளியா திருக்குந் திருநாடா உன்னை
ஒளியாது காட்டுன் னுரு.

(இ-ள்.) (அவ்வாறு நளனைத் தெரிந்துகொண்ட வீமன் அவன் முகத்தைநோக்கி), பூகத்தின்-கமுக மரத்தினுடைய, ஐ - அழகிய, தலையின் - தலைப்பக்கத்திலுள்ள, பாளைதனை - மலராத பாளையை, பைந்தலைய - பசுமையான தலையையுடைய, நாகபணமென்று-சர்ப்பத்தின் படமென்று நினைத்து, மந்தி - குரங்கானது,

தெளியாதிருக்கும் - (அச்சந்தேகம்) தெளியாதிருக்கின்ற, திரு நாடா-அழகிய நிடத தேசத்தையுடைய மன்னனே!, உன்னை ஒளியாது - (இனியும்) உன்னை மறைக்காமல், உன் உரு - உனது யதார்த்த வடிவத்தை, காட்டு - காண்பிப்பாயாக, (என்று கூறினான்); [எ-று.]

வீமன் நளனை நோக்கி, "உன்னை இன்னவனென்று நாங்கள் உணர்ந்து கொண்டோமாதலின் இனிமேல் நீ உருவத்தை மறைப்பதால் ஒரு பயனுமில்லை ஆதலின், உன்னுடைய யதார்த்த வடிவத்தைக் காட்டிவிடு" என்று உரைத்தானென்பது இதன் கருத்து. நளனை இன்னவனென்றறிந்து கொண்ட வீமன், அவன் தன்னுடைய தாழ்ந்த நிலைமையில் தன்வடிவத்தைப் பிறருக்குக் காட்டக்கூடாதென்று மறைத்திருக்கிறா னென்பதையும் உணர்ந்து கொண்டான். ஆதலின், இவ்வாறு கூறினான். இவ்விதம் கூறியதன் கருத்தாவது: "நீ இப்படியிருப்பது நன்றன்று; இனியாவது நினதுண்மைச் சொரூபத்தைக் காட்டி மனைவிமக்களுடன் கூடி மேம்படுதற்காம் உபாயங்களைச் செய்வாய்" என்பதாம். மலராத கமுகின்பாளை பாம்பின் படத்தைப் போன்றிருக்கும்; அதைப் பாம்பென்று நினைத்துக் குரங்கு மதிமயங்கியிருக்கும். பாம்புக்கு, மந்தி மிகுதியும் அஞ்சுதல் இயற்கை. இங்ஙனம் 'மந்தி தெளியாதிருக்குந் திருநாடனே' என்றதனால் "நின் நாட்டுக் கமுகம்பாளை குரங்கை மயக்குவதைப்போன்று நீயும் வேற்றுருவங்காட்டி என்னை மயக்குகின்றாய்" என்னும் குறிப்பு தொனிக்கும்.

பசுமைத்தலை, ஐமைத்தலை என்பன, பைந்தலை, ஐந்தலை என விகாரப்பட்டு வந்தன. ''நாகபணம்' என்பது வடமொழித் தொடராதலின் பகரவொற்று மிகவில்லை. தலைய-பெயரெச்சம். 'நாடன்' என்பது ஈறுகெட்டு அயல்நீண்டு நாடா-எனவிளியாயிற்று. 'என்று கூறினான்' என்ற முடிபு கூட்டியுரைக்கப் பட்டதாகவே இசை எச்சம்.

நளன், தன்னுடைய வடிவத்தைப் பெறும் பொருட்டு,
முன் கார்க்கோடகனால் கொடுக்கப்பட்ட
வஸ்திரங்களை அணிதல்.

389. அரவரசன் றன்கொடுத்த வம்பூந் துகிலின்
ஒருதுகிலை வாங்கி யுடுத்தான்—ஒருதுகிலைப்
போர்த்தான் பொருகலியின் வஞ்சனையாற் பூண்டளிக்குங்
கோத்தாய முன்னிழந்த கோ.

(இ-ள்.) (அவ்வாறு வீமன் கூறியதைக் கேட்டபின் தன்னுடைய யதார்த்தவடிவத்தை அடையும் பொருட்டு), பூண்டு - வழி

வழியாகக்கொண்டு, அளிக்கும்-காக்கின்ற, கோத்தாயம் - அரசுரிமையை, பொரு-தன்னோடு இரகசியமாக எதிர்த்துத் தீங்குசெய்த, கலியின்-கலிபுருஷனுடைய, வஞ்சனையால்-சூதினாலே, முன் - முற்காலத்தில்,இழந்த-இழந்து வந்த, கோ-நளமகாராஜன், அரவரசன்-சர்பராஜனாகிய கார்க்கோடகன், கொடுத்த-முன் உதவிய, அம்பூந்துகிலின்-மிக்க அழகாகிய வஸ்திரங்களுள் ஒரு துகிலை - ஓர் ஆடையை, வாங்கி-கையினால் எடுத்துப்பிரித்து, உடுத்தான்-அரையிற் கட்டிக்கொண்டான், ஒருதுகிலை-மற்றொரு வஸ்திரத்தை, போர்த்தான்-உடம்பின்மேல் போர்த்துக்கொண்டான்; [எ-று.]

வீமன் கூறியவார்த்தைகளைக் கேட்டவுடனே நளன், 'இவர்கள் நம்மைத் தெரிந்துகொண்டார்கள்; இனி, நாம் மறைந்து கொண்டிருப்பதால் ஒருபயனுமில்லை; ஆதலின், நம் இயற்கை உருவத்தைக் காட்டிவிடுதலே நலம்' என்று கருதி அங்ஙனம் தன் வடிவைப் பெறுவதற்கு, முன்னே கார்க்கோடகனால் கொடுக்கப்பட்ட வஸ்திரங்களுள் ஒன்றை எடுத்து அரையிற் கட்டி, மற்றொன்றைத் தேகத்திற் போர்த்துக்கொண்டான்.

தாயம்-ஒருவனுடைய குடும்பத்தில் வழிவழியாகவந்து அவன் அடையத்தக்கதாயிருக்கும் உரிமைப்பொருள்; கோத்தாயம் - அரசுரிமையாகிய பொருள், கலி, நளனுக்கு வெளிப்படாமல் இருந்து இரகசியமாக அவனோடு எதிர்த்து வந்தானாதலின், 'பொருகலி' எனப்பட்டான். தான்-அசை. அம்பூ-ஒருபொருட் பன்மொழி; சிறப்புப்பற்றி வந்தது; "ஒரு பொருட் பன்மொழி சிறப்பினின் வழா" (நன்-பொது-47) என்பது விதி; இது, மீமிசைச்சொல் லெனவும் படும். வாங்குதல்-கைப்பற்றுதல்; இஃதிங்கு 'எடுத்துப் பிரித்தல்' என்னும் பொருளில் நின்றது; இனி, 'வாங்கி உடுத்தான்' என்பதற்கு, 'வளைத்துக் கட்டினான்' எனப் பொருளுரைப்பினும் அமையும்.

நளனுடைய மாறுவேடம் நீங்குதல்.

390\. மிக்கோ னுலகளந்த மெய்யடியே சார்வாகப்
புக்கோ ரருவினைபோற் போயிற்றே—அக்காலம்
கானகத்தே காதலியை நீத்துக் கரந்துறையும்
மானகத்தேர்ப் பாகன் வடிவு.

(இ-ள்.) (அவ்வாறு வஸ்திரங்களை அணிந்து கொண்டமாத்திரத்தில்) அக்காலம் - அந்தக்காலத்தில், கானகத்தே - காட்டில், காதலியை-மனைவியை, நீத்து-கைவிட்டு, கரந்து-உருவம் மறைந்து, உறையும்-வாசஞ் செய்கின்ற, மால்-பெரிய, நகம்-மலையைநிகர்த்த,

தேர்ப்பாகன்-தேர்ப்பாகனுக்குரிய, வடிவு-உருவமானது, மிக்கோன்-தேவர்களுக்குள்ளே உயர்ந்தோனாகிய மகாவிஷ்ணுவின்; உலகு அளந்த-உலகங்களை அளவிட்ட, மெய் அடியே-மெய்யான பாதங்களையே, சார்வு ஆக-துணையாக, புக்கோர்-(அவற்றினிடம்) அடைந்தவர்களின், அருவினைபோல்-(நீங்குதற்கு) அரிதாகிய பாபகர்மங்கள் (நீங்குவதைப்) போல, போயிற்று-நீங்கிற்று; [எ-று.]

அந்த வஸ்திரங்களை மேற்கூறியபடி நளன் எடுத்து அணிந்து கொண்டவுடன், அவன் கொண்டிருந்த தேர்ச்சாரதி வடிவமானது, மகாவிஷ்ணுவினுடைய பாதங்களைச் சார்ந்தவர்களின் பாவங்கள் உடனே நீங்குவதுபோல நீங்கிவிட்டது. 'திருமாலின் அடிகளைச் சேர்ந்தவர் பாவங்கள் நீங்குவதுபோல் நளனது தேர்ச்சாரதிவடிவம் நீங்கிற்று' என்றது உவமையணி. 'மிக்கோன்' என்றது 'உருவத்தில் மிகுந்தவன்' என்னும் பொருளையும் தரும்; பலிச்சக்கரவர்த்தியினிடத்தே, திருமால் வாமனரூபமாகச் சென்று மூன்றடி மண் கேட்டு, எல்லாவுலகங்களையும் அளக்கும் பொருட்டு நீண்ட வடிவத்தைக்கொண்டனர்; அதன் பொருட்டே அவருக்கு, 'நெடியோன்' என்னும் பெயர் ஏற்பட்டது; பின்னர், 'உலகளந்த மெய்யடி' என வருதலால், 'மிக்கோன்' என்பதற்கு, 'நெடியோன்' எனப்பொருள் கொள்ளுதல் மிகவும் பொருத்தமுடைத்து. 'உலகளந்த' என்பது திருமாலின் அருட்டிறத்தை விளக்கும். திருமாலின் அடிகள், தம்மைச் சார்ந்தாரின் பாவங்களை மெய்யாகவே போக்கக் கூடியனவாதலின், 'மெய்' என்ற அடையை ஏற்றன. 'மெய்யடியே சார்வாக, என்பதை, 'அடியே மெய்ச்சார்வாக' எனவும் மாற்றிப் பொருளுரைக்கலாம். அருவினை-ஆகாமிய சஞ்சித கர்மங்களாகிய பாவவினைகளாம்; இவைகள் திருமாலின் அடிகளைச் சேர்ந்த மாத்திரத்தில் நீங்கிப்போம்; இவ்வாறு நீங்குமென்பதை,

"உளதான வல்வினைக் குள்ளம் வெருவி யுலகளந்த
வளர்தா மரையினை வன்சர ணாக வரித்தவர்தாம்
களைதா னெனவெழுங் கன்மங் துறப்பர் துறந்திடலும்
இளைதா நிலைசெக வெங்கள் பிரானருட் டேனெழுமே"

என்பதால் உணர்க. முன் கலிதொடர் காண்டத்தில் கலிசேர்ந்த தன்மையைக்கூறும் பாடலில், "நாராயணாய நமவென் றவனடியிற், சேராரைவெந்துயரஞ் சேர்ந்தாப்போல்" என்றதற்கேற்ப, நளனுடைய கஷ்டம் நீங்குவதைக் கூறும் இப்பாடலில், "தேர்ப்பாகன் வடிவு, மிக்கோனுளகளந்த மெய்யடியே சார்வாகப், புக்கோரருவினைபோற் போயிற்றே" என்றார் ஆசிரியர். இதனால் இவர், விஷ்ணுபக்தி மிக்காரென்பது விளங்கும்.

[illegible]ோனின் அடியைச் சார்ந்தவர்களுடைய பாவங்கள் நீங்குவது நிச்சயமாதலின், 'அருவினைபோல்' என்பதனிடையில் 'நீங்குவது' என்னுஞ்சொல் இசையெச்சமாக வருவித்துரைக்கப்பட்டது. அக்காலம்-என்பதிலுள்ள சுட்டு சேய்மைச்சுட்டு; நளன் தமயந்தியைக் காட்டில்விட்டு நீங்கிய அக்காலத்தை யுணர்த்தி நின்றது. 'அடியே' என்பதில் ஏகாரம்-பிரிநிலை. 'போயிற்றே' என்பதிலுள்ள, ஏ-அசை.

இயற்கைவடிவம் பெற்ற நளனைக் கண்டவுடனே
அவனுடைய பிள்ளைகள் வருந்துதல்.

391. தாதையைமுன் காண்டலுமே தாமரைக்க ணீரரும்பப்
போதலருங் குஞ்சியான் புக்கணைந்து—கோதிலாப்
பொன்னடியைக் கண்ணிற் புனலாற் கழுவினான்
மின்னிடையா ளோடும் விழுந்து.

(இ-ள்.) (அவ்வாறு நளன்,தேர்ச்சாரதி வடிவம் நீங்கியவுடனே இயற்கை வடிவம் பெற்று விளங்கினான்,) போது அலரும்-முடிக்கப்பட்ட மாலையிலுள்ள பூவரும்புகள் மலர்ந்து விளங்குகின்ற, குஞ்சியான்-மயிர் முடியையுடைய இந்திரசேனன் என்னும் இராஜகுமாரன், தாதையை-(அங்ஙனம் இயற்கை வடிவம்பெற்று விளங்கிய தன்) தந்தையாகிய நளனை, முன்-எதிரில், காண்டலும்-பார்த்த மாத்திரத்தில், தாமரைக்கண்-தாமரை மலர்போன்ற கண்களில், நீர் அரும்ப-நீர் துளிக்க, மின் இடையாளோடும் - மின்னலைப்போன்ற இடையை யுடையவளாகிய தன் தங்கை இந்திரசேனையுடனே, புக்கு அணைந்து-அந்நளன் சமீபத்திற்போய்ச் சேர்ந்து, விழுந்து-அவனுடைய பாதங்களின்மேல் வீழ்ந்து, கோது இல்லா - குற்றமற்ற, பொன்-அழகிய, அடியை-அப்பாதங்களை,கண்ணில் புனலால்-கண்களிலிருந்துண்டான நீரினால் (அதாவது: கண்ணீரால்), கழுவினான்-அலம்பினான், (அதாவது: அப்பாதங்களின்மேல் கண்ணீர் விட்டழுது வணங்கினான்).

நளனுடைய யதார்த்த வடிவத்தைக் கண்டவுடன் பிள்ளைகள் அவனைத் தங்களுடைய தந்தையென்றுணர்ந்து, "அந்தோ! நம் தந்தையோ இந்நிலைமையிலிருந்தனர்" என்று வருந்திக் கண்ணீர் விட்டழுதுகொண்டே அவனுடைய பாதங்களில் வீழ்ந்து வணங்கினார்கள். இங்ஙனம் அவர்களுக்கு வருத்தம் ஏற்பட்டது. தாங்கள் நெடுநாள் அவனைப் பிரிந்திருந்து கண்டதாலும், முன் அவனை யுணராமையால் மடையனென்று இகழ்ந்துரைத்ததை நினைத்ததனாலும் உண்டான தென்க. 'மின்னிடையாளோடும் புக்கணைந்து

விழுந்து பொன்னடியைக் கண்ணிற் புனலாற் கழுவினன்" என்றத னால் இருவரும் அவ்வாறு செய்தார்கள் என்பது பெறப்படும்.
காண்டலும் - வினையெச்சம்; இதனீற்றேகாரம் - அசை; விரைவுப்பொருளில் நின்றதெனலுமாம். தாமரைக்கண்-உவமைத் தொகை. அரும்ப-வினையெச்சம். அலரும் - பெயரெச்சம். அணைந்து-வினையெச்சம். ஓடும், என்பதில் உம்-அசை. உயர்வு சிறப்புப் பொருளென்பினுமாம்.

தமயந்தி நளனைக்கண்டு வருந்தியழுது அவனடியில் விழ்ந்து வணங்குதல்.

392. பாதித் துகிலோடு பாய்ந்திழியுங் கண்ணீருஞ்
சீதக் களபதனஞ் சேர்மாசும்—போத
மலர்ந்ததார் வேந்தன் மலரடியில் வீழ்ந்தாள்
அலர்ந்ததே கண்ணீ ரவற்கு.

(இ-ள்.) (அவ்வாறு அப்பிள்ளைகள் வீழ்ந்தழுது வணங்கிய தருணத்தில் தமயந்தியும்) பாதித்துகிலோடு-(முன்னே காட்டில் அறுபட்டுத் தன்னால் உடுத்திக்கொண்டிருக்கப்பட்ட) பாதிவஸ்தி ரத்துடனே, பாய்ந்து-ஓடி, இழியும்-வடிகின்ற, கண்ணீரும்—, சீதம்-குளிர்ச்சிபொருந்திய,களபம்-கலவைச் சாந்தை யணியத்தக்க, தனம்-தனங்களில், சேர்-அடைந்திருக்கின்ற, மாசும்-புழுதியும், போத-அதிகரித்து விளங்க, மலர்ந்த-அரும்புகள் மலர்ந்து விளங்கு கின்ற, தார்-மாலையை அணிந்த, வேந்தன்-நளமகாராஜனுடைய, மலர் அடியில்-தாமரை மலர்போன்ற பாதங்களில், வீழ்ந்தாள்—, (அங்ஙனம் வீழ்ந்த மாத்திரத்தில்) அவற்கு-அந்நளனுக்கும், கண்ணீர் அலர்ந்தது-கண்ணீரானது மிகுதியாக வெளிப்பட்டுத் தோன்றிற்று; [எ-று.]

மேற்கூறியபடி பிள்ளைகள் நளன் பாதத்தில் வீழ்ந்தவுடனே தமயந்தியும் துக்கம் சகிக்கமுடியாமல் கண்ணீர்விட்டழுது கொண்டே வீழ்ந்தாள். இவள் காட்டில் நளனால் அறுக்கப்பட்ட பாதிவஸ்திரத்துடனே அவனைப் பிரிந்த அந்நாள்தொட்டு வேறு வஸ்திரமுடுத்தாமலும், ஸ்நானஞ்செய்து உடம்பை அலங்கரித்துக் கொள்ளாமலும், மாசுபடிந்த மேனியுடனேயே கண்ணீர் விட்டழுது கொண்டு இருந்தாள்-ஆதலின், 'பாதித்துகிலோடு பாய்ந்திழியும் கண்ணீருஞ், சீதக்களபதனஞ் சேர்மாசும் போத' என்றார் ஆசிரியர். தமயந்தி வீழ்ந்தழுத மாத்திரத்தில் நளனுக்கும் துக்கம் மேலிட்ட டியால் அவனும் கண்ணீர் விட்டழுதான். பிரிந்தோர் ஒன்று சேர்வது மகிழ்ச்சியைத் தருவதாயினும் அப்போது மனிதர், முன்

நிகழ்ந்தவற்றை யெண்ணித் துக்கப்படல் இயற்கை. ஆதலின், இவர்களும் இங்ஙனம் வருந்தினர்.

இச்செய்யுளில் 'தமயந்தி' என்னும் தோன்றா எழுவாய் வருவித்துரைக்கப்பட்டது. போதுதல்-நீளல், வருதல்; இஃதிங்கு அதிகரித்தற் பொருளில் நின்றது. நளனைக் கண்ட மாத்திரத்தில் தமயந்தியினுடைய பரிதாப கோலமும் துக்கமும் நீங்கிவிடுமாதலின், 'பாதித்துகிலோடு பாய்ந்திழையுங் கண்ணீரும், சீதக்களப தனஞ் சேர்மாசும், போத, மலர்ந்த தார்வேந்தன் மலரடியில் வீழ்ந்தாள்' என்பதற்கு, "பாதிவஸ்திரமும், கண்ணீரும், தனஞ்சேர் மாசும் அகலும்படி வேந்தனுடைய மலர்பாதத்தில் வீழ்ந்தாள்" எனப் பொருளுரைப்பினும் அமையும். 'சீதக்களபதனம்' என்றது முன்னிருந்த நிலைமைபற்றி வந்ததென்க. 'பூவெனப்படுவது பொறிவாழ்பூவே' என்றதனால், இங்கு மலர் என்பது தாமரையை உணர்த்தி நின்றது. ஏ-அசை.

தமயந்தி, மிகுதியாகக் கண்ணீர்வடிய நின்றநிலை.

393. வெவ்விடத்தோ டொக்கும் விழியிரண்டும் வீழ்துயில்கோள்
அவ்விடத்தே நீத்த வவரென்றே—இவ்விடத்தே
வாரார் முலையாளம் மன்னவனைக் காணமல்
நீரான் மறைத்தனவே நின்று.

(இ-ள்.) (அவ்வாறு தமயந்தியும் நளனும் அழுது நின்ற போது), வெம்விடத்தோடு-வெவ்விதாகிய விஷத்துடனே, ஒக்கும்-நிகர்த்திருக்கின்ற, விழி இரண்டும் - (அத்தமயந்தியின்) இரண்டு நேத்திரங்களும், வீழ் - சோர்ந்து படுக்கையில் வீழ்கின்ற, துயில் கொள்-தூக்கத்தைக் கொண்ட, அவ்விடத்தே-அந்தப் பாழ்மண்டபத்திலே, நீத்த-நம்மைப் பிரிந்துசென்ற, அவர் என்றே - (இவர்) அந்தக் கன்மனதுடையாரென்று, (நினைத்து அத்தகைய நளனைப் பார்த்தல் கூடாதென்னும் எண்ணத்தால்), இவ்விடத்தே - இந்த வீமராஜனது மாளிகையினிடத்தில், வார் ஆர் - கச்சணியப் பெற்றிருக்கின்ற, முலையாள் - தனங்களையுடைய தமயந்தியானவள், அம் மன்னவனை-அந்த நளமகாராஜனை, காணாமல் - காணாதிருக்குமாறு, நீரால்-வடிகின்ற நீரினாலே, மறைத்தன-அவனுருவத்தை மறைத்து விட்டன; [எ-று.]

நளன் தமயந்தியைக் காட்டில் விட்டுப் பிரிந்து சென்றவனாதலின், அத்தகைய கன்மனத்தனைக் காணுதல் தகாதென்று நினைத்துக் கண்கள் அவனுடைய உருவம் அவளுக்குத் தெரியாதபடி நீரால் அதனை மறைத்துவிட்டன என்பது இதன் கருத்து. தாம்

கள் வெறுக்கத்தக்க செயல்களைச் செய்தவரைக் காணுதற்கு உலகத்தார் கூசுதல் இயற்கையாதலின், தமயந்தியின் கண்களும் தங்களையும் தமயந்தியையும் பிரிந்த நளனைப் பார்த்தல் கூடாதென்று இங்ஙனம் செய்தனவென்க. ஒரு கூட்டத்தார்க்கு வெறுப்பானவன் மீது எல்லாருமே அருவருப்புக் கொண்டிருப்பினும், அவர்களுட் சிலர் வெறுப்புடையவராயும், சிலர் விருப்புடையவராயு மிருத்தலும், விருப்பையுடையார் நேயங்காட்ட நினைப்பினும் அவர்களை வெறுப்புடையார் அங்ஙனம் செய்யவொட்டாது தடுத்தலும் இயற்கை. இது போல் இங்கு நளன், தமயந்திக்கும், அவளுடைய கண்களுக்கும் வெறுப்பானவனே யெனினும் தமயந்தி அவ்வெறுப்பைப் பாராட்டாது அவனைப் பார்க்க நினைத்தாள்; கண்கள் மிகுதியும் வெறுப்புடையனவாதலின் அவளுடைய எண்ணம் நிறைவேறாதபடி நீரால் அந்நளனுடைய உருவத்தை மறைத்து விட்டன. நளன் பிரிந்தகாலத்தில் நித்திரை செய்து கொண்டிருந்தவை கண்கள். அவ்வாறு அயர்ச்சியுற்ற காலத்தில் நளன் நீங்கியது அக்கண்களையே ஏமாற்றிச் சென்றதாகும்; ஆதலின், அவை, நளன்மீது, தமயந்தியைக்காட்டிலும் மிகுதியாக வெறுப்படைந்தன வென்க. தமயந்தி, துக்க மிகுதியால் அழும் போது கண்ணில் மிகுதியும் நீர் ஒழுகிற்று; அதனால் கண் பார்வை மறைவுற்றது. அதனையே இங்ஙனம் உருவகப்படுத்திக் கூறினார் ஆசிரியர்; கண்கள் மிகவும் சீற்றமுடையவை யென்பது தோன்ற விஷத்திற்கு நேராகக் கூறப்பட்டன.

‘இரண்டும்’ என்பதிலுள்ள உம்மை-முற்றுப்பொருளது. நித்திரை மனிதரின் உடம்பைக் கீழே வீழ்த்தக் கூடியதாதலின் ‘வீழ்துயில்’ எனப்பட்டது. இனி, ‘வீழ்துயில்’ என்பதற்கு, ‘விரும்பத்தக்க நித்திரை’ எனப் பொருளுரைத்தலுமாம். என்றே, இடத்தே என்பவற்றிலுள்ள ஏகாரங்கள் அசைகள். நின்று-அசை. ‘நின்று நீரான் மறைத்தன’ எனமாற்றி, ‘நிலைபெற்று நீரினாலே மறைத்தன’ எனப்பொருள் கோடலுமொன்றும்.

தேவர் நளன்மேல் பூமாரி பொழிதல்.

394. உத்தமரின் மற்றிவனை யொப்பா ரொருவரிலை
இத்தலத்தி லென்றிமையோ ரெம்மருங்கும்—கைத்தலத்தில்
தேமாரி பெய்யுந் திருமலர்த்தார் வேந்தன்மேற்
பூமாரி பெய்தார் புகழ்ந்து.

(இ-ள்.) (அத்தருணத்தில்) இமையோர்-தேவர்கள், இத்தலத்தில்-இந்தப்பூமியில், (இருக்கின்ற) உத்தமரில்-நல்லோர்களுக்குள்ளே, இவனை-இந்த நளனை, ஒப்பார்-நிகர்த்திருப்பவர், ஒருவர்

இலை-ஒருவரும் இல்லை, என்று-என்று சொல்லி, புகழ்ந்து-அவனைத் துதித்து, தேம்மாரி-தேன்மழையை, பெய்யும்-சொரிகின்ற, திரு-அழகிய, மலர்த்தார்-பூமாலையை அணிந்த, வேந்தன்மேல்-நளமகாராஜன்மீது, எம்மருங்கும்-எப்பக்கத்திலும் (விழும்படி), கைத்தலத்தில்-தங்கள் கரங்களால், பூமாரிபெய்தார்-மலர் மழையைச் சொரிந்தார்கள்; [எ-று.]

நளன், அரசுரிமையைக் கைவிட்டு வறுமையுற்ற, காலத்திலும் வேட்டகஞ்சேர்தல் இழிவென்று கருதி, மனைவிமக்களையும் பிரிந்து காலத்திற்குத்தக்க கோலம் பூண்டு தன் உயர்ந்த நிலைமையைக் கருதாது இழிதொழில் புரிந்து மனவுறுதியுடனிருந்து தான் கொண்ட சத்தியத்தை நிறுத்தி வெளிப்பட்டனனாதலின், தேவர்கள் அவனை இவ்வாறு புகழ்ந்து அவன்மீது பூமழை பொழிந்து வாழ்த்தினர்.

மற்று-அசை. ஒருவர்-சிறப்பினால் ஒருமையிற் பன்மை வந்த பால்வழுவமைதி; இதில் இழிவு சிறப்பும்மை தொக்கது. இல்லையென்பது 'இலை' என நடுக்குறைந்து வந்தது. இமையோர்-கண் இமைக்காதவர்கள். மருங்கும், என்பதிலுள்ள உம்மை - முற்றுப் பொருளது. கைத்தலத்தில்-உருபு மயக்கம்; மூன்றனுருபு ஏழனுருபாக மயங்கி வந்தது.

கலி நளனைப் புகழ்ந்து தன்னிடம் வேண்டும் வரங்கேட்டுக்
கொள்ளும்படி அவனுக்குரைத்தல்.

395. தேவியிவள் கற்புக்குஞ் செங்கோன் முறைமைக்கும்
பூவுலகி லொப்பாயார் போதுவார்—காவலனே
மற்றென்பால் வேண்டும் வரங்கேட்டுக் கோள்ளென்றான்
முற்றன்பாற் பாரளிப்பான் முன்.

(இ-ள்.) (அவ்வாறு தேவர்கள் புஷ்பமாரி பொழிந்த சமயத்தில் கலிபுருஷன்), முற்று அன்பால்-நிறைந்த அருளினாலே, பார்-பூமியை, அளிப்பான் முன்-காக்கின்றவனாகிய நளமகாராஜனின் எதிரில், (நின்று அவனை நோக்கி), காவலனே-இராஜனே!, தேவி-உன் மனைவியாகிய, இவள்-இத்தமயந்தியினது, கற்புக்கும் - பதிவிரதா தர்மத்திற்கும், செங்கோல்-உன்னுடைய அரசாட்சியின், முறைமைக்கும்-ஒழுங்குக்கும், பூ உலகில்-இந்த மண்ணுலகத்தில், ஒப்பா-நிகராக, போதுவார்-வருகின்றவர், யார்-எவர்?, (ஒருவருமில்லை; ஆதலின், உங்கள்மீது நான்கொண்ட பகையை நீக்கி அன்பு கொண்டேன்; இனி), என்பால்-என்னிடத்தில், வேண்டும்வரம்-நீங்கள் பெற்றுக்கொள்ள வேண்டிய வரத்தை, கேட்டுக்கொள்-நீ கேட்டுக்கொள்வாயாக, என்றான்-என்று சொன்னான்; [எ-று.]

முன் 367-ஆம் செய்யுளிற் கூறியபடி, நளன் அக்ஷஇருதயம் என்னும் வித்தையைக் கற்றுக்கொண்டவுடனே, 'இனி நம்வல்லமை இவனிடத்துச் செல்லாதென்று அவனைவிட்டு நீங்கிய கலி, இப் போது, தமயந்தியின் கற்பு யாவையும், நளனுடைய நீதிவழுவாச் செய்கையையுங்கண்டு, 'இத்தகைய நற்குணம் வாய்ந்த இவர்க்கு நாம் இதுவரை தீங்குசெய்து வந்தது தகாத காரியம்; ஆதலின், இனி அப்பகையை நீக்கி நலம்புரிதல் வேண்டும்' என்று கருதினான். அதனாலே இங்ஙனம் நளன் செங்கோன் முறைமையையும், தமயந் தியின் கற்புயர்வையும் சிறப்பித்துக்கூறி, 'உங்கட்கு, வேண்டிய வரத்தைக் கேட்டுக்கொள்' என்று நளனிடம் கூறினான். அடக்க முடையார்க்குத் தீங்குசெய்வோர், தங்களால் இயன்றவரை துன் பங்களைச்செய்து பார்த்து அவர் எதிர்த்தொன்றுஞ் செய்யாதிருக்க, தாமே பகை தணிந்து அவ்வடக்கம் தம்மனத்தைச்சுடத் தாங்கள் செய்த கொடுஞ் செய்கைகளைக் குறித்துத் தங்களைத் தாங்களே நிந்தித்து நல்வழிக்குத் திரும்பி அவர்க்கு நலஞ்செய்தல் இயற்கை; ஆதலின், கலியும் அவ்வாறே செய்யத் துணிந்தான்.

> "மிகுதியான் மிக்கவை செய்தாரைத் தாந்தந்
> தகுதியான் வென்றுவிடல்"

என்றபடி நளன், செருக்கால் தனக்குத் தீங்கியற்றிய கலியைத் தன் அடக்கத்தால் வென்றான். தமயந்தியின் கற்பைச் சிறந்து நிற்கும் படி செய்தது, நளன் ஐசுவரியத்தையிழந்து தன்னையும் நீக்கிச் சென்றும் அவள், அவன்மீதுள்ள ஆர்வம் நீங்காதிருந்ததாம். நளனுடைய செங்கோன் முறைமையைச் சிறந்து விளங்கும்படி செய்தது, அவன் தனக்கு, புஷ்கரனை வெல்லலாம் ஆற்றலிருந்தும், சூதாட்டத்தில் தோற்ற அரசுரிமையை யுத்தத்தால் அடைதல் தகாதென்று அதனைவிட்டுப் பல கஷ்டங்களை அநுபவித்ததாம். இவ்விரு செயல்களும் இவ்விருவரையும் விட்டு நீங்காதிருத்தற்கே கலி, பகை நீங்கிச் சந்தோஷித்தான் எனக்கொள்க.

உம்மைகள்-எண்ணுப்பொருளன. யார்-உயர்திணைப் பொதுக் குறிப்பு வினைமுற்று; "யாரென் வினாவினைக் குறிப்புயர் முப்பால்" (நன்-வினை-30) என்னுஞ் சூத்திரம் பார்க்க. கொள்-தற்பொருட்டு என்னும் பொருளில் வந்தவிகுதி. போதுவார்-புகுதுவார் என்பதன் திரிபு; 'போ' என்னும் முதனிலையே இங்ஙனம் புடைபெயர்ச்சி யுடைத்தாயிற்றெனவுமாம்; அங்ஙனங்கொள்ளுமிடத்து, போ - பகுதி, து-சாரியை, வ்-எதிர்கால இடைநிலை, ஆர் - விகுதி; 'புகுதுவார்' என்பதில், புகுது-பகுதி;'புகு-பகுதி' து-சாரியை' எனக் கோடலுமொன்று. 'காவலன்' என்பது, 'காவலைச்செய்பவன்' என்றும், 'காத்தலில் வல்லவன்' என்றும் இருவகைப் பொருள்

படும்; 'காவலைச் செய்பவன்' என்று பொருள் கொள்ளுமிடத்து, காவல் + அன்—எனவும், 'காத்தலில் வல்லவன்' என்று கொள்ளுமிடத்து, கா + வலன்—எனவும் பிரித்தல்வேண்டும்; கா-முதனிலைத் தொழிற்பெயர்.

நளன், கலியினிடத்தில் வரங்கேட்டுக் கொள்ளல்.

396\. உன்சரிதஞ் செல்ல வுலகாளுங் காலத்து
மின்சோரியும் வேலாய் மிகவிரும்பி—என்சரிதம்
கேட்டாரை நீயடையே லென்றான் கிளர்மணிப்பூண்
வாட்டானை மன்னன் மதித்து.

(இ-ள்.) (அவ்வாறு கலிபுருஷன் கேட்டபோது), கிளர் - பிரகாசிக்கின்ற, மணி-இரத்தினங்களினாலாகிய, பூண் - ஆபரணங்களையும், வாள்-வாளாயுதத்தைத் தரித்த, தானை - சேனையையுமுடைய, மன்னன் - நளமகாராஜன், மதித்து - (கலியின் வார்த்தையை) உயர்வாகக் கொண்டு, (அவனை நோக்கி), மின்சொரியும் - பிரகாசத்தைப் பொழிகின்ற, (அதாவது: பிரகாசம் மிகுந்த), வேலாய்-வேலாயுதத்தையுடையவனே!, உன்சரிதம் செல்ல-உன்னுடைய வரலாறு நடைபெறும்படி, உலகு ஆளும்-நீ உலகத்தை ஆட்சிபுரிகின்ற, காலத்து-கலிகாலத்து, மிகவிரும்பி - மிகுதியாகப் பிரியங்கொண்டு, என்சரிதம் - என்னுடைய சரித்திரத்தை, கேட்டாரை - கேட்பவர்களை, நீ அடையேல்-நீ சேராதிருப்பாயாக, என்றான் - என்று சொன்னான்; [எ-று.]

கலி தனக்கு மிக்க தீங்கு செய்தவனாயிருந்தும், தானே பகை நீங்கி வரந்தருவேன் என்று கூறினமையால் நளன், அவன் சொல்லை உயர்வாக மதித்தான். இவன், தன் சௌக்கியத்தின் பொருட்டு ஒன்றையுங் கேளாமல் தன் சரித்திரத்தைக் கேட்கும் உலகத்தார்க்கு நலஞ்செய்யுமாறு கேட்டுக்கொண்டது இவனது பரோபகார சிந்தையாகிய பெருங்குணத்தை விளக்கும். கலியின் சரிதம் செல்ல அவன் உலகாளுங் காலமாவது: கலிகாலமாம்; அவன் சரிதம் செல்லுதலாவது: அவனுடைய செய்கை எங்கும் பரவியிருத்தலாம். கலிகாலத்தில் எங்கும் கொடுமையே பரவியிருத்தலும், அக்கொடுமை கண்டாரெல்லாரும் 'இது கலிகாலக் கொடுமை' என்று சொல்லுதலும் இயற்கை என்பது இதனுள் பொதிந்துள்ளது.

'உன்சரிதம் சொல்லி' எனவும் பாடபேதமுண்டு; இப்பாடங் கொள்ளுமிடத்து, "நீ, 'நான் இத்தகைய குணமுடையவன்'

என்று கூறி உன்னுடைய வரலாற்றை விளக்கிக் காட்டி" எனப் பொருளுரைத்தல் வேண்டும். கலி, தன் சரிதத்தைக் கூறுதலாவது: தன்னுடைய கொடுமை எங்கும் பரவச்செய்தலாம். மற்ற காலத்தி லுள்ளவர்களைக் காட்டினும் கலிகாலத்திலுள்ளவர்களே மிகுதியும் கஷ்டத்திற் குள்ளாவராதலானும், அவர்களுடைய துன்பத்தை நீக்குதலே சிறந்த புண்ணியமாதலானும் அக்காலத்திலுள்ளாரில் தன் சரிதங் கேட்பார்க்கு நலம் புரியுமாறு வேண்டினான் நளன்.

'வேலான்' என்பது ஈறுதிரிந்து 'வேலாய்' என விளியாயிற்று. கேட்டாரை - எதிர்காலம் இறந்தகாலமாக மாறிவந்த காலவழுவமைதி. அடையேல்-எதிர்மறை ஏவலொருமை வினைமுற்று. மன்னன்-அரசன்.

கலி நளனுக்கு வரங்கொடுத்துப் போதல்.

397. என்காலத் துன்சரிதங் கேட்டாரை யானடையேன்
மின்கா லயில்வேலாய் மெய்யென்று—நன்காவி
மட்டிறைக்குஞ் சோலை வளநாடன் முன்னின்று
கட்டுரைத்துப் போனான் கலி.

(இ-ள்.) (நளன் அவ்வாறு சொன்னதைக்கேட்டு), கலி - கலிபுருஷன், நன்காவி-நல்ல நீலோற்பல மலர்கள், மட்டு-தேனை, இறைக்கும்-சிதறுகின்ற, சோலை-சோலைகள் சூழப்பெற்ற, வளம்-வளப்பம் பொருந்திய, நாடன் - நிடத தேசத்தரசனாகிய நளனது, முன் நின்று-எதிரில் நின்று, (அவனை நோக்கி), மின்கால்-பிரகாசத்தைக் கக்குகின்ற, அயில்-கூர்மையுள்ள, வேலாய்-வேலாயுதத்தையுடைய அரசனே!, என்காலத்து - என்னுடைய காலத்தில், (அதாவது: கலியுகத்தில்), உன் சரிதம்-உன்னுடைய கதையை, கேட்டாரை - கேட்பவர்களை, யான் அடையேன் - நான் சேர்ந்து வருத்தமாட்டேன், மெய்-(இது) உண்மை, என்று—, கட்டுஉரைத்து - உறுதி சொல்லி, போனான்-தன்னிருப்பிடத்திற்குப் போயினான்; [எ-று.]

கலி நளன் விரும்பியவற்றை யெல்லாம் கொடுக்கவிரும்பி அவனிடத்தில், 'நீ விரும்பும் வரத்தைக் கேட்டுக்கொள்' என்று கூறினானாதலின், அந்நளன் கூறியதைத் தடையின்றிச் செய்வதாக உறுதி கூறிப்போயினான். சோலையிற் காவி எங்ஙன மிருக்குமெனில், ஆங்குள்ள தடாகங்களில் உளதாமெனக. ஒருவனிடம் கலி சேர்தல் துன்பத்திற் கேதுவாமாதலின், 'யான் அடையேன்' என்பதற்கு, 'நான் சேர்ந்து வருத்தேன்' என்று பொருள்.

கேட்டார் - வினையாலணையும் பெயர். அடையேன் - தன்மை யொருமை எதிர்கால வினைமுற்று. கால்அயில்-வினைத்தொகை கன்

மையென்னும் பண்புப்பெயர் மைவிகுதிகெட்டு நின்றது. 'கட்டுரைத்து' என்பதில், கட்டுரை-பகுதி.

வீமன், நளனையும், தமயந்தியையும், அவளின்
பிள்ளைகளையும் மாளிகைக் கழைத்துப்போய்
அவர்கட்கு விருந்துசெய்தல்.

398. வேத நெறிவழுவா வேந்தனையும் பூந்தடங்கட்
கோதையையு மக்களையுங் கொண்டுபோய்த்—தாது
புதையத்தேன் பாய்ந்தொழுகும் பூஞ்சோலை வேலி
விதையக்கோன் செய்தான் விருந்து.

(இ-ள்.) (அதன்மேல்) தாது-மகரந்தங்கள், புதைய-புதைந்து போகும்படி, தேன்-மதுவானது, பாய்ந்து ஒழுகும்-பரவிவடிகின்ற, பூஞ்சோலை - மலர்கள் மிகுந்த சோலைகளாகிய, வேலி-வேலியை யுடைய, விதையக்கோன்-விதர்ப்ப தேசத்தரசனாகிய வீமன், வேத நெறி-வேதமார்க்கத்தினின்றும், வழுவா-நீங்காத, வேந்தனையும்-நளமகாராஜனையும், பூ-நீலோற்பலமலர் போன்ற, தடம் - விசாலமாகிய, கண்-கண்களையுடைய, கோதையையும்-மாலைபோன்றவளாகிய தமயந்தியையும், மக்களையும்-(அவர்களுடைய) பிள்ளைகளையும், கொண்டுபோய்-அழைத்துக்கொண்டுபோய் (தன் அரண்மனையிற் சேர்த்து), விருந்து செய்தான்-(அவர்கட்குப்) புதிதாக உணவளித்தல் முதலிய உபசாரங்களைச் செய்தான்; [எ-று.]

வீமன், தன் மருமகனாகிய நளனை நெடுநாட்கள்வரை பிரிந்திருந்து கண்டனனாதலாலும், நளன் தாழ்ந்த நிலைமையில் மறைந்திருந்து அப்போது தன் இயற்கை வடிவத்துடன் வெளிப்பட்டதனாலும் மகிழ்ச்சி யடைந்து, இங்ஙனம் அவனுக்கும், அவனுடைய மனைவிமக்களுக்கும் விருந்து செய்தான். விருந்தாவது: புதிதாக வந்தோர்க்கு நல்லுணவளித்தல், பின்னும் வேண்டுவன நல்கல் முதலியனவாம். தமயந்தியும் அவளுடைய பிள்ளைகளும் வீமன் மாளிகையிற் சேர்ந்திருந்தாலும் நளனைப் பிரிந்த துக்கத்தால் நல்லுணவருந்தாமலும், நல்லாடை யுடுத்தாமலும், அலங்காரம் செய்து கொள்ளாமலுமிருந்தார்கள். ஆதலின், அன்று வீமன், அவர்களெல்லோருக்கும் நல்லுணவளித்து அவர்களை மேன்மைப்படுத்தினன். தேன்மிகுதியாகப் பாயும்போது மலர்களிலுள்ள மகரந்தங்கள் நனைந்துமறையும். வேலி ஊரையோ நிலத்தையோ சுற்றிக் காவலாயிருக்கும்படி மரம் செடி முதலியவற்றையோ மதிலையோ அமைத்தலாம்.

உம்மைகள் - எண்ணுப்பொருளன. நெறிவழுவா - ஐந்தாம் வேற்றுமைத் தொகை. 'பூந்தடங்கண்' என்பதற்கு, 'மலர்களை

யுடைய தடாகம்போன்ற கண்' எனப் பொருளுரைப்பினும் பொருந்தும். கோதை-தமயந்திக் குவமையாகுபெயர்; கோதை-மாலை; இது பெண்ணுக்குவமையால், நடக்கமும் மென்மையும் மணமும் அழகும் பற்றியென்க. விதையம்-விதர்ப்பமென்னும் ஆரியமொழித் திரிபு. வேலி என்பது ஊருக்கும் பெயராமாதலின், 'பூஞ்சோலை வேலிவிதையக்கோன்' என்பதற்கு, 'மலர்சோலைசூழ்ந்த கிராமங்களையுடைய விதர்ப்ப தேசாதிபன்' எனப் பொருளுரைப்பினுமாம்.

நிதுபர்ணன், நளனிடம் மன்னிப்புக் கேட்டுக்
கொண்டு தன்பதிக்கேகுதல்.

399. உன்னையா னொன்று முணரா துரைத்த வெலாம்
பொன்னமருந் தாராய் பொறுவென்று—பின்னைத்தன்
மேனீர்மை குன்று வெறுந்தேர் மிசைக்கொண்டான்
மானீ ரயோத்தியார் மன்.

(இ-ள்.) (நளன், தமயந்தி முதலியவர்கள் அங்ஙனம் விருந்துண்டு மகிழ்ந்திருக்கும்போது), மால்-பெருமை பொருந்திய, நீர்-நீர்வளமுள்ள, அயோத்தியார்-அயோத்தியைச் சார்ந்த நாட்டாருடைய, மன்-அரசனாகிய ருதுபர்ணன், (அங்கு நடந்தவைகளையெல்லாம் பார்த்து, தன்னிடம் தேர்ப்பாகனை யமர்ந்திருந்தவன் நளனென்பதையுணர்ந்து 'நளச்சக்கரவர்த்தியை நாம் தேர்ப்பாகனாக வைத்து ஏதேதோ இழிவான வார்த்தைகளையும் பேசினோமே' என்று வியப்பும் திகிலுமடைந்து நளனிடம் சென்று), பொன் அமரும்-அழகு பொருந்திய, தாராய்-மாலையை அணிந்த நளமகாராஜனே!, யான்-நான், ஒன்றும் உணராது-(இரகசியமாயிருந்த நின் விஷயங்களில்) ஒன்றையேனும் அறியாமல், உன்னை உரைத்த எல்லாம்-உன்னைப்பற்றிக் கூறியவைகளையெல்லாம், பொறு என்று-பொறுத்துக்கொள்வாயாக என்று சொல்லி மன்னிப்புக் கேட்டுக்கொண்டு, பின்னை-பிறகு, தன்-தன்னுடைய, மேல் நீர்மை-உயர்ந்த தன்மையானது, குன்று-குறைந்து, வெறுந்தேர் மிசைக்கொண்டான்-வெறுமையான தேரின்மேலேறிப் புறப்பட்டுப் போய்த் தன் நகரஞ்சேர்ந்தான்; [எ-று.]

நளன் தேர்ப்பாகனாய்த் தன்னிடம் அமர்ந்திருந்த காலத்தில் ருதுபர்ணன் அவனை இழிந்த குலத்தினனென மதித்து ஏளனஞ் செய்து பேசிவந்தான்; அதாவது: தமயந்தியின் இரண்டாம் சுயம்வரச் செய்தியைக் கேள்விப்பட்டபோது நளன் கூறிய வார்த்தைகளை அவன் தடுத்துரைத்தது முதலியவைகளாம். முன்னே ருதுபர்ணன் அவ்வாறு பேசியிருந்தபடியால் நளன் யதார்த்த வடிவத்தோடு வெளிப்பட்டவுடன், "அந்தோ! ஓர் சக்கரவர்த்தியை

நாம் தேர்ப்பாகனை ஏற்றுக்கொண்டதோடு அவமதித்துப் பேசினோமே" என்று மனதில் திகில் கொண்டான். அதனாலேயே இங்ஙனம் நளனிடத்தில், "நான் உன்னுடைய தன்மையைச் சிறிதும் உணராமல் பேசிய வார்த்தைகளைப் பொறுத்துக்கொள்" என்று கூறினான். இவன், தமயந்தியை மணஞ்செய்ய விரும்பி வந்து அவமான மடைந்தானாதலின், இவனுடைய உயர்வுகுன்றிப் போயிற்று; அதனால், 'மேனீர்மைகுன்றா' என்றார் ஆசிரியர். ருதுபர்ணன், தமயந்தியை ஏற்றிக்கொண்டு வரவேண்டுமென்று கருதி ஓட்டிக்கொண்டு வந்ததேரை, அவளின்றித் திருப்பிக் கொண்டு போயினமையால் புலவர் அதனை 'வெறுந்தேர்' என்றார்; இனி பாகனின்றி அம்மன்னனே நடத்திக்கொண்டு போயினமை பற்றி உரைத்தாரெனினுமாம். 'தன் மேனீர்மை குன்றா' என்பதற்கு, 'தனது உயர்ந்த தன்மை குறையாமல்' எனப் பொருளுரைப்பாருமுளர்; ருதுபர்ணன் சாஸ்திர விரோதமாகிய இரண்டாம் சுயம்வரத்தை விரும்பிவந்ததும், மற்றொருவனுக்கு மனைவி யானவள் மீதிச்சை கொண்டதும் இழிந்த செய்கைகளாம்; இவை பற்றி அவனுக்குத் தாழ்வு கூறுதலே மிகவும் பொருத்தமுடையதாம்; ஆதலின், இவ்வுரை பொருந்தாமையுணர்க. குன்றா-குன்றி.

'பொன் அமரும் தாராய்' என்பதற்கு 'ஜெயலட்சுமி பொருந்திய புயத்தையுடையவனே' எனப் பொருளுரைப்பினும் பொருந்தும். மிசைக்கொள்ளுதல் - மேலிடத்தை அடைதல்; அதாவது: அவ்விடத்தை இருக்கையாகப் பெற்றிருத்தல்; மிசைக்கொண்டான் என்பதை ஒரு சொன்னீர்மைத்தாகக் கொண்டு, 'ஏறினான்' எனப் பொருளுரைத்துக் கொள்க. மிசை-ஏழனுருபு. அயோத்தி நகரம் இங்கு அதைச் சார்ந்த நாட்டை யுணர்த்தி நின்றது. இனி 'அயோத்தியார்மன்' என்பதற்கு, 'அயோத்தியிலிருக்கின்ற அரசன்' எனவும் பொருளுரைக்கலாம். 'தேர்மிசைக்கொண்டான்' எனவே, 'தேரேறிப் புறப்பட்டுத் தன் நகரம் போய்ச்சேர்ந்தான்' என்பது தானே அமையும்.

நளன், மனைவி மக்களுடன் மாவிந்த
நகரத்திற்குப் புறப்பட்டுப் போதல்.

400. விற்றானை முன்செல்ல வேல்வேந்தர் பின்செல்லப்
பொற்றேர்மேற் றேவியொடும் போயினான்—முற்றாம்பல்
தேனீ ரளித்தருகு செங்நெற் கதிர்விளைக்கும்
மாநீர் நிடதத்தார் மன்.

(இ-ள்.) (ருதுபர்ணன் அவ்வாறு போயினபின்), முற்று ஆம்பல் - முதிர்ந்த அல்லி மலர்கள், தேன் - மதுவாகிய, நீர் - நீரை,

அளித்து-கொடுத்து, அருகு-பக்கத்திலுள்ள, செந்நெற்கதிர்-செம்மையாகிய நெற்கதிர்களை, விளைக்கும் - விளையச் செய்கின்ற, மா - சிறந்த, நீர்-நீர்வளமுள்ள, நிடதத்தார் - நிடத தேசத்தாருடைய, மன்-அரசனாகிய நளன், வில்-வில்லையேந்திய, தானை-சேனையானது, முன்செல்ல - முன்னே செல்ல, வேல்வேந்தர் - வேலாயுதத்தையுடைய அரசர்கள், பின்செல்ல - பின்புறத்திற் செல்ல, தேவியொடும் - மனைவியாகிய தமயந்தியுடனே, பொன் தேர்மேல் - அழகிய தேரின்மேல், (ஏறி), போயினான் - மாவிந்த நகரத்திற்குப் புறப்பட்டுப் போனான்; [எ-று.]

ருதுபர்ணன் சென்ற பின்பு, நளன், மேல்நடக்கவேண்டிய காரியங்களைப் பற்றி வீமராஜன் முதலியவர்களோடு கலந்து யோசித்து, சூதினால் தோற்ற அரசுரிமையைச் சூதினாலேயே பெறவேண்டுமென்றும், தனக்கு அக்ஷஇருதய வித்தை தெரிந்திருப்பதால் இனிப் புஷ்கரனை எளிதில் வெல்லலாமென்றும் உறுதிகொண்டு, அங்ஙனமே அவனோடு சூதாடித் தன் நாட்டைக் கைப்பற்றுதற்கு வில்வீரர்களும் வேல்மன்னர்களும் தன்னை முன்னும் பின்னும் சூழ்ந்துவர மனைவிமக்களுடன் தேரேறிப் புறப்பட்டு மாவிந்த நகரம் நோக்கிச் சென்றான். 'தேவியொடும்' என்றதனால், 'மக்களும் உடன் போயினார்கள்' என்பது தானே அமையும் என்ப.

ஆம்பல் முற்றுதல் - அரும்பின் தன்மை முதிர்ந்து மலரும் பருவத்தை அடைதல். 'விற்றானை முன்செல்ல வேல்வேந்தர் பின்செல்ல' என்பவை வினைச்செவ்வெண். முன்பின் என்பன இடைச்சொற்களாதலின், இவற்றின் னகரங்கள் "இடையுரி வடசொலினியம்பிய கொளாதவும்......" (நன் மெய்-பு-39) என்னும் சூத்திரவிதியினால் இயல்பாயின. "தேவியொடும்" என்பதில் உம்-அசை. தேனீர்-இருபெயரொட்டுப் பண்புத்தொகை. அளித்தல் - தருதல்; இவ்விடத்தே 'பாய்தல்' என்னும் பொருளில் நின்றது. ஆம்பல்-தேனை நீரைப்போலச் சொரிந்து பாய்ச்சிச் செந்நெல்லை விளைவிக்குமென்க. 'செம்மைநெல்' என்பது, 'செந்நெல்' எனத் திரிந்து வந்தது; செம்மையின் மைவிகுதி போய், நடுநின்ற மகரமெய் நகரமெய்யாகத் திரிந்தது. 'மாநீர்' என்பதற்கு 'மேலான குணம் பொருந்திய' எனப் பொருளுரைப்பினுமாம்.

பிரயாணமாய்ச் செல்லும்போது தமயந்தி, மேற்செல்லும் வழியின் தூரத்தை வினவுதலும், அதற்கு நளன் விடை கூறுதலும்.

401. தானவரை வெல்லத் தரித்தநோடு வைவேலாய்
ஏனைநெறி தூரமினி யெத்தனையோ—மானேகேள்
இந்த மலைகடந் தேழுமலைக் கப்புறமா
விந்தமெனு நம்பதிதான் மிக்கு.

(இ-ள்.) (அவ்வாறு புறப்பட்டுப் போகும்போது தமயந்தி நளனை நோக்கி), தானவரை - அசுரர்களை, வெல்ல-ஜெயித்தற்கு, தரித்த - கையில் தாங்குகிற, நெடு - நீண்ட, வை - கூர்மைபெற்ற, வேலாய்-வேலையுடைய குமாரக்கடவுள் போன்ற அரசனே !, (இது வரை நாம் கடந்தது போக இன்னும் கடக்க வேண்டியிருக்கும்), ஏனை நெறி-மற்ற வழியின், தூரம்-தூரமானது, இனி எத்தனையோ-மேலே எவ்வளவோ ?, (என்று வினவ அதற்கு நளன், அவளை நோக்கி எதிரிலிருந்த ஒரு மலையைச் சுட்டிக்காட்டி), மானே-மான் போன்ற மருண்ட பார்வையையுடைய பெண்ணே !, கேள் - நீ கேட்பாயாக, இந்தமலை கடந்து - இந்தப் பர்வதத்தைத் தாண்டி ; (பின்னால் தோன்றும்), ஏழுமலைக்கு அப்புறம் - ஏழு பர்வதங்களுக்கு அப்பால், மிக்க-சிறப்பினால் மிகுந்த, நம் - நம்முடைய, மாவிந்தம் எனும்பதி-மாவிந்தம் என்னும் நகரமானது (உளது) என்று தமயந்திக்கு கூறினான்; [எ-று.]

பெண்கள், புருஷர்களுடன் ஊர்ப்பிரயாணஞ் செய்யுங் காலத்தில் வழியின் தூரத்தை வினவுதலும் ஆங்காங்குள்ள விசேஷங்களைப் பற்றிக் கேட்டலும் இயற்கை. அவர்கள் வெளியில் அதிகமாகச் சஞ்சாரமில்லாதவர்களாதலாலும், ஒவ்வொன்றின் இயற்கைக் குணத்தையும் ஆழ்ந்து யோசித்துணரும் ஆற்றலில்லாத பேதைக் குணமுடையவராதலாலும் எதையும் புருஷர்களிடத்திற் கேட்டுக்கொண்டேயிருப்பார்கள். ஆதலின், இங்குத் தமயந்தியும் அங்ஙனமே வழியின் தூரத்தைப்பற்றிக் கணவனிடம் வினவினாள். பெண்கள் கேட்பவற்றிற் கெல்லாம் புருஷர்கள் வெறுக்காது அவர்களின் மனம் திருப்தியடையுமாறு விடைகூறுதல் இயல்பாதலின், நளனும் தமயந்தியின் வினாவிற்குத் தக்கவாறு விடையளித்தான்.

தானவரை வெல்லத்தரித்த நெடுவைவேலன்-குமாரக்கடவுள்; இவர் பெயர், நளனுக்கு உவமையாகுபெயராய் வந்தது. ஓ-வினாப் பொருளது. மான்-தமயந்திக்கு உவமையாகுபெயர். இச்செய்யுள் வினாவுத்தரமாக அமைந்தது. வினாவிற்கும் விடைக்கும் கர்த்தாக்கள் கூறப்படவில்லையெனினும், சொற்களின் குறிப்பு நோக்கி வினாவிற்குத் தமயந்தி என்னும் எழுவாயும், முடிக்குஞ் சொல்லும், விடைக்கு நளன் என்னும் எழுவாயும் பயனிலைச் சொற்களும் இசையெச்சமாகக் கூட்டியுரைக்கப்பட்டன. இனி, 'தானவர்' என்பதை அசுரரைப்போலக் கொடுந்தொழில் செய்யும் பகைவர்க்குவமையாகு பெயராகக்கொண்டு, 'தானவரை வெல்லத்தரித்த நெடுவை வேலாய்' என்பதற்கு, 'அசுரரைப்போன்ற பகைவரை வெல்லக்கையில் தாங்கிய நீட்சியும் கூர்மையுமுள்ள வேலாயுதத்தையுடையவனே' எனப்பொருள் கூறினும் அமையும்; தான்-அசை 'உளது' என்னுஞ் சொல் வருவித்துரைக்கப்பட்டது.

நளன் செல்லும்போதுண்டான இரவு நீங்கிச்
சூரியன் உதயஞ் செய்தல்.

402. இக்கங்குல் போக விகல்வே னளனெறிநீர்
செய்க்கங்கு பாயுந் திருநாடு—புக்கங்
கிருக்குமா காண்பான்போ லேறினன் குன்றிற்
செருக்குமான் றேர்வெய்யோன் சென்று.

(இ-ள்.) (இவ்வாறு தமயந்தியும் நளனும் பேசிக்கொண்டு செல்லும்போது பகல் நீங்கி இரவு வந்து அதுவும் நீங்கும் தருணமாயிருந்தது; அச்சமயத்தில்), செருக்கு-(வேகத்தில் தங்கட்கு மிஞ்சியவைகளில்லையென்று கொண்ட) கர்வத்தையுடைய, மான்-குதிரைகள் பூட்டிய, தேர்-இரதத்தையுடைய, வெய்யோன்-சூரியன், இக்கங்குல் போக-இங்குக்கூறிய இரவானது நீங்க, (மறுதினம்), இகல்-வெற்றியைக் கொண்ட, வேல்-வேலாயுதத்தையுடைய, நளன்-நளமகாராஜன், எறி-கரைகளில் அலைய வீசுகின்ற, நீர் - தண்ணீரானது, செய்க்கு-வயல்களுக்கு, பாயும் - பாயும்படியான, திரு-அழகிய, நாடு-நிடத தேசத்தில், புக்கு-புகுந்து, அங்கு-அவ்விடத்தில், இருக்கும் ஆ-தங்கும் விதத்தை, காண்பான்போல்-பார்க்க வருபவன் போல, குன்றில்-உதயகிரியில், சென்று-போய், ஏறினன்-ஏறி உதயஞ்செய்தான்; [எ-று.]

நளன் புறப்பட்ட அன்று பகலும் இரவும் தங்காமற் பிரயாணஞ் செய்தான். அவ்வாறு போகும்போது அற்றை இரவு நீங்கிச் சூரியன் உதித்தான் என்பது இதன் கருத்து. சூரியன் உதித்தலை, நளன் மறுதினம் நிடத தேசத்தில் சேர்ந்திருப்பதைப் பார்க்க வந்ததுபோல் வந்தானென்றுரைத்தார் புலவர், 'செய்க்கங்கு' என்பதில், அங்கு-அசை. பிரயாணத்தில் முன்னர் இரவு கூறப்படாவிடினும், இதில், 'இக்கங்குல்' என்று கூறியதனால், 'நளன் பகலும் இரவும் பிரயாணஞ் சென்றான்' என்பது பெறப்படும். 'இக்கங்குல்' என்பதிலுள்ள இகரச்சுட்டு இங்கு நூலில் கூறிய விஷயத்தைக் குறித்து அண்மைச் சுட்டாய் நின்றது. நெடுங்காலம் வரை ஓரிடத்தைவிட்டுப் போயிருந்தவன் மீண்டும் அவ்விடத்திற்கு வருவானாயின், ஆங்கு மனிதர்கூடி அவனை வரவேற்பதும், அவனுக்குபசாரமொழி கூறுதலும் அவன் அவர்கட்குபசாரமொழி கூறுதலும் மிக்க விநோதமுடையனவாயிருக்கும்; ஆதலின், அந்நிகழ்ச்சிகளைப் பலர் பார்க்க விரும்புதல் உலகியற்கை; அதுபற்றியே இங்குச் சூரியனையும், 'நளன் நிடதஞ்சார்தலைப் பார்க்க வந்தவன் போன்று வந்தான்' என்றுரைத்தார் ஆசிரியர்.

'இருக்குமாறு' என்பது, 'இருக்குமா' என ஈறு தொக்கநின்றது 'எறிநீர்' என்பதை, 'நெறிநீர்' எனக்கொண்டு, அதற்கு, வாய்க்

கால்களின் வழியாகச்செல்லும் நீர் எனப்பொருள் கூறினும் அமையும்.

நளன், தன்மனைவிமக்களுடன் மாவிந்த நகரம் போய்ச்
சேர்ந்து ஒரு சோலையில் தங்குதல்.

403. மன்றலிளங் கோதையோடு மக்களுந் தானுமோரு
வென்றி மணிநெடுந்தேர் மேலேறிச்-சென்றடைந்தான்
மாவிந்த மென்னும் வளநகரஞ் சூழ்ந்ததோரு
பூவிந்தை வாழும் பொழில்.

(இ-ள்.) (அவ்வாறு சூரியன் உதயமான பின்னர் நளன்), மன்றல்-வாசனை தங்கிய, இளம்கோதையொடு-இளமையான மாலையை அணிந்த தமயந்தியுடனே, மக்களும் தானும்-பிள்ளைகளும் தானுமாய், (மேற்கூறியபடி), ஒரு-ஒப்பற்ற, வென்றி-வெற்றிபொருந்திய, மணி-இரத்தினங்கள் பதித்த, நெடும்-உயர்ந்த, தேர்மேல் ஏறி-இரதத்தின் மேலேறி, சென்று-போய், மாவிந்தம் என்னும்-மாவிந்தம் என்கிற, வளம்-வளப்பம் பொருந்திய, நகரம்-நகரத்தை, சூழ்ந்தது-சூழ்ந்ததாகிய, பூவிந்தை-தாமரைப் புஷ்பத்தில் வீற்றிருக்கின்ற இலக்குமி, வாழும்-வாசஞ் செய்கின்ற, ஒருபொழில்-ஒரு சோலையை, அடைந்தான்-சேர்ந்தான்; [எ-று.]

சூரியோதயமான தருணத்தில், நளன், தன் மனைவி மக்களுடன் மாவிந்த நகரத்தருகிற் சார்ந்து ஒரு பூஞ்சோலையில் தங்கினான் என்பது இதன் கருத்து. மாவிந்த நகரம் நளனுக்குரியதாயினும் அக்காலத்தில் புஷ்கரன் வசப்பட்டிருந்தமையால் அதற்குள் நுழைதல் தகாதென்று கருதியே நளன், இங்ஙனம் பூஞ்சோலையில் தங்கினான். மன்றல் இளங்கோதை - அன்மொழித்தொகை; இனி, கோதையை உவமையாகு பெயராகக் கொண்டு, மன்றல்; இளமை ஆகியவற்றை அதற்கடைகளாக்கினுமாம். 'மன்றல்' என்பதற்கு, 'கலியாணம்' எனப்பொருள் கூறினும் அமையும். 'மன்ற விளங்கோதை' எனவும் பாடபேதமுண்டு; அங்ஙனங் கொள்ளுமிடத்து, 'மன்ற' என்பதை, அசையெனக்கோடல் வேண்டும். உம்மைகள் எண்ணுப் பொருளில் வந்தன. 'பூவிந்தைவாழும்' என்பதற்கு, 'மலர்களின், அதிசயம் தங்கியிருக்கின்ற' எனப்பொருளுரைப்பினும் பொருந்தும்; இங்ஙனம் கொள்ளுமிடத்து 'விந்தை' என்பது தெலுங்கிலிருந்து வந்த திசைச் சொல்லெனப்படும். 'நளன்' என்னும் தோன்று எழுவாய் வருவித்துரைக்கப்பட்டது.

மறு சூதாடப் புஷ்கரனை அழைத்து வரும்படி
நளன் தூதரை அவனிடமனுப்புதல்.

404. மற்றவனுக் கென்வரவு சொல்லி மறுசூதுக்
குற்ற பணைய முளதென்று—கொற்றவனைக்

கோண்டணைவீ ரென்று குலத்து தரைவிடுத்தான்
தண்டெரியற் றேர்வேந்தன் ரன்.

(இ-ள்.) (அங்ஙனம் அச்சோலையில் தங்கியிருக்கும்போது), தண்-குளிர்ச்சி பொருந்திய, தெரியல் - மாலையை அணிந்த, தேர்-இரதத்தையுடைய, வேந்தன் - நளமகாராஜன், (தூதுவரை அழைத்து அவர்களை நோக்கி), அவனுக்கு-அந்தப் புட்கரனுக்கு, என்வரவு சொல்லி-என்னுடைய வருகையைக் கூறி (அதாவது; நான் இங்கு மறு சூதாட வந்திருப்பதைச் சொல்லி), மறு சூதுக்கு-(அங்ஙனம் ஆடும்) மறுமுறைச் சூதாட்டத்திற்கு, உற்ற-பொருந்திய, பணயம்-பந்தயமும், உளது என்று-இருக்கின்றதென்றும் தெரிவித்து, கொற்றவனை - அம்மன்னவனை, கொண்டு - அழைத்துக் கொண்டு, அணைவிர் என்று-இங்குவந்து சேர்வீராக என்று சொல்லி, குலத்து தரை-மேன்மையாகிய அத்தூதுவர்களை, விடுத்தான்-அந்தப் புஷ்கரனிடம் அனுப்பினான்.

நகரத்தில் நுழையக் கூடாதென்று சோலையில் தங்கிய நளன், அங்கிருந்தபடியே, தான் மறுசூதாட வந்திருப்பதையும், தன்னிடம் பந்தயப் பொருள் இருப்பதையும் புஷ்கரனிடம் கூறி அவனைச் சூதாட்டத்திற் கழைத்து வரும்படி தூதுவரை அனுப்பினான். அக்ஷஹ்ருதய மென்னும் வித்தையால் தனக்கு நிச்சயமாக ஜெயமுண்டாகு மென்னும் உறுதி நளனுக்கேற்பட்டிருந்தபடியால் அவன் இங்ஙனம் தானே புஷ்கரனை வலியச் சூதாட அழைத்தான். முன் நளன் சூதாட்டத்தில் தோற்றுச் சென்றபோது, மேலே பந்தயம் வைத்தாடப் பொருளொன்று மில்லாமற் போனதைப் புஷ்கரன் உணர்ந்திருந்தானாதலின், 'இப்பொழுது அவனிடம் பணயப் பொருள் உண்டோ இல்லையோ' என்று சந்தேகங் கொண்டு சூதாட்டத்திற்கு வரமாட்டானென்று கருதியே நளன் இவ்வாறு பணயப் பொருளும் உளதென்றுரைக்கு மாறு கூறினான். வீமன், நளனுக்குச் சகல சிறப்புகளையும் செய்தனுப்பினானாதலின் அவனிடம் சூதாடும் பணயத்திற்கு வேண்டும் பொருள்களிருந்தன. அதனால், பொருள் விஷயத்திலும் அவன் தைரியங் கொண்டு கூற ஏதுவாயிற்று. 'குலத்து தர்' என்பதற்குப் பரம்பரையாகத் தூதுத்தொழிலே புரிபவர் எனப்பொருளுரைப்பினுமாம்; பரம்பரையாக ஒரு தொழிலையே செய்து வருவார்க்கு அதில் மிக்க வன்மையிருக்குமாதலின், குறித்த காரியத்தைச் சாதித்துத் தீரவேண்டி அத்தகைய குலத்து தரையே தேடியனுப்பினான் நளன். எப்படியாவது புஷ்கரனைச் சூதாட்டத்திற் கழைத்து வரவேண்டு மென்பது நளன் கருத்து.

மற்று, தான்-அசைகள். வரவு-தொழிற்பெயர். சொல்லி, என்று என்பவைகளில் எண்ணும்மைகள் தொக்கன.

புஷ்கரன் வந்து நளனைக் காணுதல்.

405. மாய நெடுஞ்சூதில் வஞ்சித்த வன்னெஞ்சன்
தூய நறுமலர்பூஞ் சோலைவாய்—ஆய
பெருந்தானை சூழப் பெடைநடையா ளோடும்
இருந்தானைக் கண்டா னெதிர்.

(இ-ள்.) (நளன் கட்டளைப்படியே தூதர் சென்றுரைத்ததைக் கேட்டு உடனே புறப்பட்டுவந்து), மாயம்-மோசம் பொருந்திய, நெடும் சூதில்-பெரிய சூதாட்டத்தில், வஞ்சித்த-முன்னே வஞ்சனை செய்து நளனிடம் அரசுரிமை முதலியவற்றைக் கைப்பற்றிய, வல் நெஞ்சன்-கடினமனதை யுடையவனாகிய புஷ்கரன், தூய-பரிசுத்தமான, நறுமலர்-நல்ல மலர்கள் நிறைந்த, பூஞ்சோலைவாய்-அழகிய சோலையினிடத்தில், ஆய-தன்மாமனால் தனக்குப் புதிதாக உண்டாகிய, பெருந்தானை-பெரியசேனைகள், சூழ-நெருங்க, பெடை நடையாளோடும்-பெட்டை யன்னத்தை நிகர்த்த நடையினையுடையவளாகிய தமயந்தியுடனே, இருந்தானை-இருந்தவனாகிய நளனை, எதிர்-எதிரிலே, கண்டான்-பார்த்தான்; [எ-று.]

நளன் கூறியனுப்பிய வார்த்தைகளைத் தூதுவர் சொல்லக் கேட்டவுடனே, புஷ்கரன், முன் ஜெயங்கொண்டிருந்த செருக்கால், மறுசூதாட்டத்திலும் வெற்றியுண்டாகுமென்று பேராசைகொண்டு விரைந்துவந்து நளனைக் கண்டான். புஷ்கரன் முன்னே கலியினுடைய மோசச்செய்கைக் கிணங்கி வஞ்சனையால் நளனுடைய அரசுரிமையைக் கைக்கொண்டானாதலானும், நளன் எல்லாவற்றையு மிழந்து பரிதாப நிலையோடு சென்ற காலத்திலும் மனதிரங்காமல் நகரமாந்தரை அவனோடு பேசக்கூடாதென்றுரைத்தது முதலிய கொடுமைகளைச் செய்தனனாதலானும் அவனை, 'வஞ்சித்த வன்னெஞ்சன்' என்றார் ஆசிரியர்.

பெடை-பறவைகளில் பெட்டையின் பெயர்; இஃதிங்குச் சிறப்புப் பற்றி அன்னத்தையுணர்த்தி நின்றது; இங்ஙனம் நின்ற பெயர் ஆகுபெயராய் நடையையுணர்த்தும். உம்-அசை.

புஷ்கரன் நளனிடம் க்ஷேமம் விசாரித்தல்.

406. செங்கோ லரசன் முகநோக்கித் தேர்ச்சியிலா
வெங்கோ லரசன் வினவினான்—அங்கோலக்
காவற் கோடைவேந்தே காதலற்குங் காதலிக்கும்
யாவர்க்குந் தீதிலவே யென்று.

[இ-ள்.] (அவ்வாறு பார்த்த மாத்திரத்தில்), தேர்ச்சி இலா-அறிவில்லாத, வெம்கோல் அரசன்-கொடுங்கோலரசனாகிய புஷ்கரன், செங்கோல் அரசன்-செம்மையான அரசாட்சியையுடைய நளமகாராஜனது, முகம் நோக்கி-முகத்தைப் பார்த்து, அம்-அழகிய, கோலம்-வடிவத்தையும், காவல்-உலகத்தைக் காக்குந் தொழிலையும், கொடை-ஈகையையும், (உடைய), வேந்தே-நளமகாராஜனே!, காதலற்கும்-தமயந்தியின் ஆசைக்குரிய கணவனாகிய உனக்கும், காதலிக்கும்-நின்மனைவியாகிய தமயந்திக்கும், யாவர்க்கும்-(பிள்ளைகள் முதலிய மற்ற) எல்லோருக்கும், தீது இலவே என்று-கெடுதிகள் இல்லையே என்று, வினவினான்-கேட்டு க்ஷேமம் விசாரித்தான்; [எ-று.]

புஷ்கரன் நளன் மீது உட்பகையுள்ளவனெனினும் மேலுக்கு அன்புடையவன் போன்று இங்ஙனம் அவனிடம் க்ஷேமம் விசாரித்தான்; இது கயவஞ்சகரின் செய்கை. நளன் முன்னே சூதாடி நாடிழந்த காலத்தில் சத்தியத்திற்குக் கட்டுப்பட்டுப் புஷ்கரனோடு யுத்தம் புரியாமல் போய்விட்டானாதலின், 'செங்கோல் அரசன்' எனப்பட்டான். புஷ்கரன் அக்காலத்தில் நகரமாந்தர் நளனோடு பேசவுங்கூடாதென்று தடுத்துக் கொடுமை புரிந்தானாதலின், 'வெங்கோல் அரசன்' எனப்பட்டான். இன்னும் அவன் மறுசூதில் தோல்வியடைவதை உணராமல் செருக்குடன் வந்தானாதலின், 'தேர்ச்சியிலா வெங்கோலரசன்' எனவுங் கூறப்பட்டான்.

'காதலற்கும்' என்பது முன்னிலையிற் படர்க்கை வந்த இடவழுவமைதி. இனி, காதலன், காதலி என்பவற்றைப் புத்திரன், புத்திரி எனக்கொண்டு "காதலற்குங் காதலிக்கும் யாவர்க்கும்" என்ற தொடருக்கு, "புத்திரனுக்கும் புத்திரிக்கும் நீ உன் மனைவி முதலிய மற்ற யாவர்க்கும்" எனப்பொருளுரைப்பினும் பொருந்தும். 'தீது' என்பது பால்பகாவஃறிணைப் பெயராதலின், பன்மையில் வந்து 'இலவே' என்னும் பன்மை வினையைக்கொண்டது; (நன்-பெய-24-ஆம்) சூத்திரம் பார்க்க. 'காதலர்க்கு' எனவும் பாடபேதமுண்டு; இப்பாடங்கொள்ளின், இதற்கு, 'பிள்ளைகளுக்கும்' எனப்பொருளுரைத்தல் வேண்டும் எனக்கொள்க.

நளனை இவ்வாறு புஷ்கரன் க்ஷேமம் விசாரித்த பிறகு இருவரும் சம்பாஷணைசெய்து சூதாடுவதற்கிசைந்தார்கள் என்பது கதைத்தொடர்ச்சி.

சூதாட்டத்திற்கு நளனும் புஷ்கரனும் பந்தயம் வைத்தல்.

407. தீது தருகலிமுன் செய்ததனை யோராதே
யாது பணைய மெனவியம்பச்—சூதாட

மையாழி யிற்றுயிலு மாலனையான் வண்மைபுனை
கையாழி வைத்தான் கழித்து.

(இ-ள்.) (புஷ்கரனும் நளனும் சூதாட இசைந்தபோது, புஷ்கரன், நளனிடம் முன்னே ஜெயித்த எல்லாவற்றையும் பந்தயமாகவைத்து), தீது தரு-தீமையைக் கொடுக்கின்ற, கலி-கலிபுருஷன், முன்-முன்னே, (நளன் தேரோட்டி வருங்காலத்தில் ருதுபர்ணனிடம் அக்ஷஇருதயம் என்னும் வித்தையைக் கற்றுக்கொண்டபோது அவனைவிட்டு நீங்கியும், வீமன் பதியில் அவனுக்கு வரங்கொடுத்தும்), செய்ததனை-செய்த சகாயத்தை, ஓராது-அறியாமல், (நளன் முகத்தை நோக்கி), சூதாட-நாம் சூதாடுதற்கு, பணயம் யாது என-நீ வைக்கும் பந்தயம் என்ன என்று, இயம்ப-வினவ, மை-கரிய, ஆழியில்-சமுத்திரத்தில், துயிலும்-நித்திரை செய்கின்ற, மால் அனையான்-மகாவிஷ்ணுவை நிகர்த்தவனாகிய நளன், வண்மைபுனை-ஈகை சேர்ந்திருக்கின்ற, கை-தன் கரத்திலணியப் பட்டிருந்த, ஆழி-மோதிரத்தை, கழித்து-கழற்றி, வைத்தான்-பந்தயமாக வைத்தான்; [எ-று.]

புஷ்கரன், முன்னே சூதாட்டத்தில் வெற்றிகொண்ட கர்வத்தால், தான் நளனிடம் ஜெயித்த எல்லாவற்றையும் பந்தயமாக வைத்து, நளனை நோக்கி, 'நீ என்னபணயம் வைக்கின்றாய்' என்று வினவ அவன் தன்விரல் மோதிரத்தைக் கழற்றிவைத்தான். இதில் புஷ்கரன் பந்தயம் வைத்தது கூறப்படாவிடினும் அடுத்த செய்யுளில், "செப்பரிய செல்வத் திரு நகரும் ஒப்பரிய, வன்றானையோடு வளநாடும் வென்றான்" என வருதலால், அவன் நாடுநகரங்களெல்லாவற்றையும் வைத்தானென்பது பெறப்படுமாதலின் இங்கு அவன் அவற்றைப் பந்தயம் வைத்தானென்பது கூட்டியுரைக்கப்பட்டது. இனி, சூதாட்டத்தில் முன்னே வெற்றியடைந்தோர், பின்னரும் தமக்கே ஜெயமுண்டாகுமென்னுஞ் செருக்கால் தாங்கள் ஜெயித்த பொருள்களையெல்லாம் ஒரே ஆட்டத்தில் பணயமாக வைப்பது இயற்கையாதலின், இங்குப் புஷ்கரனும் அங்ஙனமே ஜெயித்தவற்றைப் பந்தயம் வைத்து நளனை நோக்கி, 'நீ என்ன பந்தயம் வைக்கின்றாய்' எனக்கேட்பது இயற்கை; ஆதலின், நளனிடம் பந்தயம் என்னவென்று கேட்டான் என்ற குறிப்பினாலேயே தானும் மேற்கூறியவற்றைப் பந்தயம் வைத்தானென்பது பெறப்படுமெனினுமாம்; கலி, ஆதியில் நளனுக்குத் தீங்கு செய்தானெனினும் பின்னர் நலஞ்செய்ததைப் புஷ்கரன் உணராமல் மறுசூதாடவந்தானாதலின், 'அவன், தீதுதருகலிமுன் செய்ததனை யோராதே யாது பணயமெனவியம்ப' என்றார் புலவர். இங்கே முன் என்றது, இந்த மறுசூது நிகழ்வதற்கு முன் வீமன் பதியிலும், தான்றி மரத்தடி

யிலும் நடந்தவற்றைக் குறித்து நின்றது. இன்னும், முதற் சூதாடுங் காலத்தில் கலி நளன்மீதுள்ள விரோதத்தால் புஷ்கரனுக்குச் சகாயமாயிருந்தான் எனினும், எப்பொழுதும் அப்படி இருப்பானென்பது நிச்சயமில்லை. இப்பொழுதோ அவன் நளனுக்குச் சகாயமாயிருக்கிறான். இவ்வாறிருந்தும் கலி முன்போலவே தனக்குச் சகாயம் செய்வானென்று புஷ்கரன் கருதி வந்தான். இவ்வாறு கருதி வந்ததற்குக் காரணம் முன் கலிசெய்தது இன்னதற்காகச் செய்தானென்பதை யுணராமையே ஆதலின், "தீதுகருகலி முன் செய்ததனையோராதே" என்பதற்கு, "முன்னே தனக்குக் கலி செய்த உதவியைப் பற்றி ஆராய்ந்து, 'இதை ஒரு காரணார்த்தமாகச் செய்தான்; எப்பொழுதும் இப்படியே சகாயம் செய்யமாட்டான்' என்று தெரிந்துகொள்ளாமல்" எனப் பொருளுரைப்பினும் பொருந்தும். திருமால் பள்ளிகொண்டது பாற்கடலிலெனினும் அது கருங்கடலோடு விரவியிருத்தலால் பொதுவாகச் சமுத்திரத்தைக் குறித்து, "மையாழி யிற்றுயிலும்" என்றார் ஆசிரியர்; இனி இதனை உவமைத் தொகையாகக்கொண்டு, இதற்கு, "கரிய கடலைப் போலப் பாற்கடலிற் றுயிலும்" எனப்பொருளுரைப்பினும் அமையும்; திருமால் காத்தற்றொழிலுடையவர்; அரசரும் அத்தொழிற் குரியார்; ஆதலின், நளமகாராஜன் திருமாலுக்கு நிகராகக் கூறப்பட்டான்.

'மால்பராய்' எனவும் பாடபேதமுண்டு; 'அப்பாடத்திற்கு' 'விஷ்ணுவைத்துதித்து' எனப்பொருள் கூறவேண்டும். 'ஓராதே' என்பதில், ஏ-அசை.

நளன் புஷ்கரனைச் சூதில் வெல்லல்.

408. அப்பலகை யொன்றி னருகிருந்தார் தாமதிக்கச்
செப்பரிய செல்வத் திருநகரும்—ஒப்பரிய
வன்றானை யோடு வளநாடும் வஞ்சனையால்
வென்றானை வென்றானவ் வேந்து.

(இ-ள்.) (அவ்வாறு பந்தயம் வைத்தபின்), அவ்வேந்து-அந்த நளமகாராஜன், அருகு இருந்தார்-சமீபத்திலிருந்தவர்கள், மதிக்க-கொண்டாட, அப்பலகை ஒன்றின்-(அவ்வாறு பந்தயம் வைத்தாடத் தொடங்கிய) அச்சொக்கட்டான் பலகையொன்றினாலேயே (அதாவது: அப்பலகையில் ஆடிய ஓரே ஆட்டத்திலேயே), செப்பு அரிய-சொல்லுதற் கருமையாகிய, செல்வம்-ஐசுவரியம் பொருந்திய, திரு-அழகிய, நகரும்-நகரத்தையும், ஒப்பு அரிய-உவமையில்லாத, வல்தானையோடு-வலிமையாகிய சேனையுடனே, வளநாடும்-வளப்பம் பொருந்திய நாட்டையும், வஞ்சனையால் - சூதினாலே,

(முன்பு) வென்றானை - தன்னிடத்தில் ஜயித்த புஷ்கரனிடத்தில், வென்றான்-ஜயித்துக்கொண்டான்; [எ-று.]

நளன், முன்னே தன்னிடத்தில் நாடுநகரங்களையெல்லாம் மோசத்தினாலே ஜயித்துக்கொண்ட புஷ்கரனிடத்தில், இப்போது அவற்றை ஒரே ஆட்டத்தில் ஜெயித்துக்கொண்டான் என்பது இதன் கருத்து; "வஞ்சனையால் வென்றானை வென்றானவ்வேந்து" என்றதனால் புஷ்கரன் மோசமாகச் சூதாடி வென்றானென்பதும், நளன் மோசமின்றி அவ்விளையாட்டில் வென்றானென்பதும் பெறப் படும். நளன் இவ்வாறு வெற்றிகொண்டது நியாயம் பற்றியதாத லானும், அவனுக்குரிய நாடுநகரங்கள் மீண்டும் அவனிடத்திலேயே சேர்ந்ததாலும் அவனுடைய சத்தியத்தைப் பற்றி அவனை எல்லோ ரும் கொண்டாடினார்கள். அதுபற்றியே ஆசிரியர், "அருகிருந் தோர் தாம்மதிக்க" என்று கூறினார்.

'பலகை' யென்பது அதில் ஆடும் ஆட்டத்தை யுணர்த்தி நின் றது. தாம்-அசை. ஓடு எண்ணி நிற்றற் பொருளிற் வந்தது. வென்றானை,வென்றான் என்பன-வினையாலணையும் பெயர்கள். 'அரிய' என்பது இன்மைப் பொருளில் நின்றது.

புஷ்கரன் எல்லாவற்றையும் தோற்றபின்
மாவிந்த நகரத்தைவிட்டுச் செல்லல்.

409. அந்த வளநாடு மவ்வரசு மாங்கொழிய
வந்த படியே வழிக்கொண்டான்—செந்தமிழோர்
நாவேய்ந்த சொல்லா னளனென்று போற்றிசைக்குங்
கோவேந்தற் கெல்லாங் கொடுத்து.

(இ-ள்.) (அவ்வாறு நளன் எல்லாவற்றையும் ஜெயித்துக் கொண்டபின், புஷ்கரன்), அந்த வளநாடும்-அந்தவளப்பம் பொருந் திய நிடதேசமும், அ அரசும்-அந்த அரசாட்சியும், ஆங்கு-அவ் விடத்தே, ஒழிய-தன்னைவிட்டு நீங்க, (அதன்மேல் அங்கிருத்தல் தகுதியன்றென்று கருதி), செந்தமிழோர்-செம்மையாகிய தமிழ் வித் வான்கள், நாஏய்ந்த-நாவிற்பொருந்திய, சொல்லால் - வார்த்தையி னாலே, நளன் என்று-நளன் என்று சொல்லி, போற்று இசைக்கும்- துதிகூறுகின்ற, கோவேந்தற்கு-உயர்ந்த அரசனுக்கு, எல்லாம் கொடுத்து-யாவற்றையும் கொடுத்துவிட்டு, வந்தபடியே-(முன்பு) தான் வந்தவிதமாகவே, (அதாவது: மாவிந்த நகரம் முதலியவை தன்னிடத்திலில்லாமல் வந்தது போலவே), வழிக்கொண்டான்- வழியைப்பற்றிச் சென்றான். [எ-று.]

புஷ்கரன் மேற்கூறியவாறு தோல்வியடைந்தபின், எல்லா ஐசுவரியங்களையும் நளனிடம் கொடுத்துவிட்டு முன்புதான் ஒன்று மில்லாமல் வந்தது போலவே திரும்பித் தன் நகரத்திற்குப் புறப் பட்டுப் போயினன் என்பது இதன் கருத்து. புஷ்கரன் முன்னே சூதாடவரும்போது அங்கே தனக்குச் சொந்தமாக ஒன்றுமில்லா மல் வந்தான். இப்பொழுது திரும்பிச்செல்லுங் காலத்திலும் எல்லாவற்றையு மிழந்துவறிதே சென்றான்; அதனால் அவனை "வந்தபடியே வழிக்கொண்டான்" என்றார் ஆசிரியர். "நாவேய்ந்த சொல்லானளனென்று போற்றிசைக்கும்" என்பதற்கு, "நாவினாலே அழகு பெறச்சேர்த்துத் தொடுக்கப்பட்ட சொற்களாலாகிய செய் யுட்களால்" எனப்பொருளுரைப்பினும் பொருந்தும். வேய்தல்-சூடுதல்-தொடுத்தல்.

ஆங்கு-அசை யெனலுமாம். வழிக்கொள்ளல்-வழியைப் பற்று தல்; அது ஈங்குப் பிரயாணத்தை உணர்த்தி நின்றது. உம்மைகள் எண்ணுப்பொருளன.

நளன் தன் நகரம் புகுதல்.

410. ஏனை முடிவேந்த ரெத்திசையும் போற்றிசைப்பச்
சேனை புடைசூழத் தேரேறி—ஆனபுகழ்ப்
பொன்னகர மெய்தும் புரந்தரனைப் போற்பொலிந்து
நன்னகரம் புக்கா னளன்.

[இ-ள்.] (அவ்வாறு புஷ்கரன் சென்ற பின்பு), நளன்-நளமகா ராஜன், ஏனை முடிவேந்தர்-கிரீடந்தரித்த மற்ற அரசர்கள், எத் திசையும் - எல்லாத்திக்குகளிலும், போற்று இசைப்ப - துதியைச் சொல்ல, சேனை-படைகள், புடை-பக்கங்களில், சூழ-சூழ்ந்துவர, தேர்ஏறி-இரதத்தில் ஏறி, ஆனபுகழ்-பொருந்திய கீர்த்தியுள்ள, பொன்நகரம் எய்தும்-பொன்நகரமாகிய அமராவதியைச் சேர்கின்ற, புரந்தரனைப் போல்-இந்திரனைப்போல, பொலிந்து-விளங்கி, நல் நகரம்-நன்மைபொருந்திய தனது அரசுரிமைக்குரிய மாவிந்த நக ரத்தை, புக்கான்-சென்று அடைந்தான்; [எ-று.]

நளன், எல்லாவற்றையும் ஒரு காலத்தில் இழந்தாலும் சத்தி யந் தவறாதிருந்து மற்றொரு காலத்தில் தன் அரசுரிமையைப் பெற்றுக்கொண்டனனாதலின் அதுபற்றி எல்லாத் திக்குகளிலு முள்ள அரசர்களெல்லோரும் அவனைப் புகழ்ந்தார்கள். நளன், மாவிந்த நகரத்திற் புகுந்தது இந்திரன் அமராவதி நகரத்திற் புகுந்தது போன்றிருந்ததென்க. 'ஆனபுகழ்' என்பதை, 'புகழான' எனமாற்றியும் பொருளுரைக்கலாம். 'ஏனை' என்பது புஷ்கரனை

அகற்றி நின்றது; அவன் கெட்ட குணமுள்ள அற்பனாதலினும் சூதில் தோல்வி பெற்றுச் சென்றானாதலினும் நளனைப் புகழ்ந்திலன்.

'எத்திசையும்' என்பதில்; உம்மை-முற்றுப் பொருளது.

நளன் வரவுகண்ட நகரமாந்தர் களித்தல்.

411. காா்பெற்ற தோகையோ கண்பெற்ற வாண்முகமோ
நீா்பெற் றுயா்ந்த நிறைபுலமோ—பாா்பெற்று
மாதோடு மன்னன் வரக்கண்ட மாநகருக்
கேதோ வுரைப்ப னெதிா்.

(இ-ள்.) (அவ்வாறு) மன்னன்-நளமகாராஜன், பார்பெற்று-பூமி ராஜ்யத்தை அடைந்து, மாதோடு-நாயகியாகிய தமயந்தியுடனே, வரக்கண்ட-வரப்பார்த்த, மா-சிறந்த, நகருக்கு-நகரத்திற்கு, எதிர்-நேர், கார்-மேகத்தை, பெற்ற-முன்னே வரப்பெற்ற, தோகையோ-மயிலோ, கண்பெற்ற-கண்களை அடைந்த, வாள்முகமோ-பிரகாசமுள்ள முகமோ, நீர் பெற்று-தண்ணீர் நிரம்பப்பெற்று, உயர்ந்த-மேன்மையாகிய, நிறை-விளைவு நிறைந்த, புலமோ-வயலோ, (இவற்றுள்) ஏது-எதனை, உரைப்பன்-உபமானமாக எடுத்துச் சொல்லுவேன்; சொல்லமுடியாது; [எ-று.]

நளன், மனைவிமக்களுடனே செல்லக்கண்ட நகரமாந்தர்கள் மிக்க மகிழ்ச்சியடைந்தார்கள் என்பது இதன் கருத்து. மேகத்தைக்கண்ட மயிலும், கண்களைப்பெற்ற முகமும், நீரைப்பெற்ற வயலும் செழித்துயர்ந்து பிரகாசிப்பதுபோல நளனைக்கண்டமாவிந்த நகரம் விளங்கிற்றாதலின், அம்மூன்றையும் அதற்குவமையாகக்கூறி இவற்றுள் எதை அந்நகருக்கீடாகச் சொல்வேன், என்றார் ஆசிரியர்.

தோகையோ, முகமோ, புலமோ, ஏதோ என்பவற்றிலுள்ள ஓகாரங்கள் ஐயப்பொருளன; இந்த ஐயம் உபமானத்திற்குரிமை பற்றியது. பார், நகர் என்பன அதிலுள்ளாரைக் குறித்த இடவாகு பெயர்கள்.

நளவெண்பா மூலமும்-உரையும்

முற்றிற்று.

National Library
Calcutta.